
ஏழாம் உலகம்
ஜெயமோகன்

# ஏழாம் உலகம்

ஜெயமோகன்

மின்னூலாக்கம் : செல்லா

கிழக்கு

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

ஏழாம் உலகம்
Ezham Ulagam
by Jeyamohan ©
Kizhakku First Edition: April 2010
288 Pages, Price Rs. 150
Printed in India.

ISBN 978-81-8493-441-0
Kizhakku - 480

Kizhakku Pathippagam
No.33/15, Eldams Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone : 044 - 42009601/03/04
Fax : 044 - 43009701

Email : support@nhm.in
Website : www.nhm.in

Kizhakku, An imprint of New Horizon Media Pvt. Ltd.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

Author's Email: jeyamohan.writer@gmail.com

Cover Image Shutterstock ©

PRODN / 08 / 08-11

*Publisher*
Badri Seshadri
*Chief Editor*
Pa. Raghavan
*Editors*
Uma Sampath
Marudhan
*Copy Editors*
Mugil
Sa.Na. Kannan
R. Muthukumar
Balu Sathya
*Chief Designer*
T. Kumaran
*Designers*
S. Kathiravan
Muthu Ganesan
E. Anandan

அன்புடன்

ஜெயகாந்தனுக்கு

# மண்ணுக்கு அடியில் வாழ்பவர்கள்

சிலநாட்களுக்கு முன் புகழ்பெற்ற மலையாளத் திரைப்பட இயக்குநர் ஒருவரிடம் உரையாட நேர்ந்தது. 'நான் கடவுள்' படத்துக்காக இயக்குநர் பாலா தேசியவிருது பெற்று சிலநாட்கள் ஆகியிருந்தன. அந்தப்படம் பரவலாக மலையாள இயக்குநர்களை பாதித்த ஒன்று என்றார் அவர். சமகால திரை இயக்குநராக அதில் முக்கியமான ஒரு 'ஹ்யூமன்' அம்சம் இருந்தது என்று சொன்னார். அதை அவரால் சரியான சொற்றொடர்களில் சொல்ல முடியவில்லை. ஆனால் சில காட்சிகளைச் சுட்டிக் காட்டினார். கொடூரமான ஒரு பாதாள உலகில் வாழும் மக்கள், சிதைந்த உடலும் வற்றிய முகங்களும் கொண்டவர்கள், முழுத்திரையையும் ஆக்ரமித்து வாய்விட்டுச் சிரிக்கும் படச்சட்டங்கள் மனத்தை மிகவும் தொந்தரவு செய்தன என்றார் அவர்.

'நான் கடவுள்' திரைப்படத்தின் வசனகர்த்தாவாக 'ஏழாம் உலக'த்தின் சில பகுதிகளை உள்ளே செலுத்தியதனால் விளைந்த பயன்களில் ஒன்று அந்த இருண்ட உலகம் நாடளாவிய கவனத்தைப் பெற்றது என்பதுதான். நம் வாசிப்புப் பழக்கம் காரணமாக நாவல் அந்த அளவுக்குச் சென்றடைய வில்லை என்றாலும் அது ஒரு சிறந்த விஷய மென்றே நினைக்கிறேன். இன்றும் பேருந்துகளில்

ரயில்களில் அவ்வப்போது சகபயணிகள் அந்த உலகைப்பற்றி பேசுவதை என்னை அறிமுகம் செய்யாமல் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

'நான் கடவுள்' இயக்குநரின் கற்பனையில் புதிய திசையில் விரிந்து சென்றிருந்தது என்றபோதிலும் 'ஏழாம்உலக'த்தின் அடிப்படையான ஒரு விஷயம் அந்தப் படத்திலும் மிக வலுவாக பதிவு பெற்றிருந்தது. அதை 'வாழ்தலின் கொண்டாட்டம்' என்று சொல்லலாம். மனிதன் வெறும் மிருகம் அல்ல. அவனுக்குள் பண்பாடு எந்நிலையிலும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே எந்த எல்லைக்குக் கொண்டுசெல்லப்பட்டாலும் அங்கே மனித வாழ்க்கையையே அவன் வாழ்வான் என்று அந்தப் படமும் காட்டியது. உறவுகள் பிரிவுகள் நக்கல்கள் கேலிகள் என்று அதில் இருண்ட உலகம் அங்கே சாத்தியமான ஓர் ஒளியுடன் விரிந்திருந்தது. அந்தப் படத்தை இன்னும் பல காலத்திற்கு இந்தியத் திரைப்படங்களில் நினைக்கப்படும் ஒன்றாக ஆக்கும் அம்சம் அதுவே.

'ஏழாம் உலக'த்தின் மையமாகத் திரண்டு வருவதும் அந்த மானுடக் கொண்டாட்டமே. 'பிச்சைக்காரங்களுக்கும் வேணுமே சாமி' என்ற வரியை நான் இந்நாவலை புரட்டிக்கொண்டிருந்தபோது வாசித்தேன். அந்த வரியிலிருந்து இந்நாவலை என்னால் புதிதாக வாசிக்க முடியும் என்று தோன்றியது. ஆன்மிகம் என்பது மூன்று வேளை உணவுண்ணும் மக்களுக்கு மட்டும் உரியதல்ல. சிரிப்பும் அழுகையும் கனவும் அத்தனை மானுடருக்கும் உரியதே. நாம் ஒரு மனிதனை மிதித்து நம் கால்கீழே செலுத்தும்போது உண்மையில் மானுடம் மீதுதான் நின்றுகொண்டிருக்கிறோம்

இந்நாவலின் மூன்றாவது பதிப்பு வெளிவரும் இவ்வேளையில் இந்நாவலின் முதலிரு பதிப்புகளையும் செம்மைசெய்து வெளியிட்ட 'தமிழினி' வசந்தகுமாரை நன்றியுடன் நினைத்துக்கொள்கிறேன். இயக்குநர் பாலாவுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

அன்புடன்
ஜெயமோகன்

சாவான பாவம் மேலே
    வாழ்வெனக்கு வந்ததடி
நோவான நோவெடுத்து
    நெஞ்செரிஞ்சு வாமுறண்டி

*- ஒரு பண்டாரப் பாட்டு*

(1986ல் திருவண்ணாமலையில் கேட்டது)

# 1

போத்திவேலுப் பண்டாரம் இருட்டுக்குள் தட்டுத் தடுமாறி எழுந்து கட்டிலின் கொசுவலைச் சட்டத்தைப் பிடித்தபடி ஒருகணம் நின்றார். சிறு தலைசுற்றல் சரியான பிறகு வலப்பக்க மாகத் திரும்பி சுவரைத் தொட்டு பிறையில் இருந்த தீப்பெட் டியை எடுப்பதற்குள், தண்ணீர் செம்பில் கால்பட்டு கணகண வென்று உருண்டது.

ஏக்கியம்மை எழுந்து எச்சில் ஊறிய குரலில் 'என்னத்த அங்கிண போட்டு உருட்டுகியோ? சாமம் களிஞ்சு நானாழி தாண்டிப் போட்டு' என்றாள்.

'ஏமிட்டி, இந்த தீப்பெட்டியக் காங்கலியே' என்றார் பண்டாரம்.

'அங்கிணதேன் இருக்கும். ஓடி ஒளிச்சா போவுது. இப்பம் என்னெளவுக்கு தீப்பெட்டி?'

'மணி என்னட்டி இப்பம்?'

'மணி ஆவுது நாலு கொள்ளெ. கெடந்து ஒறங்குதியளா...' ஏக்கியம்மை திரும்பப் படுத்துவிட்டாள்.

பண்டாரம் தீப்பெட்டியை எடுத்து உரசி விளக்கைப் பற்ற வைத்தார். சுடர் எழுந்ததும் அலாரம் கடிகாரத்தின் பச்சை முட் களைக் குனிந்து பார்த்தபோது வேட்டி நழுவியது. இறுக்கிக் கொண்டு 'மூணுல்லா' என்று மீண்டும் வந்து கட்டிலில் அமர்ந் தார். தலையணைக்கடியிலிருந்து பொடி மட்டையை எடுத்து

உள்ளங்கையில் சிறிது கொட்டி சிமிட்டா எடுத்து உதறி மூக்கடி யில் இழுவி நாசியை மேலே தூக்கி சில கணங்கள் மோனத்தி லாழ்ந்து தும்மாமலேயே அதற்குரிய முகபாவனைகளைக் காட்டி மீண்டும் 'முருகா என்னப்பனே' என்றார். 'ஏட்டி, அந்த கம்பளியை இப்படி எடுளா.'

'இப்பம் எங்க? சாமம் ஏறின பிறகு?' என்றாள் ஏக்கியம்மை.

'உறக்கம் வரேல்ல கேட்டியா. ஒம்பது மணிக்கு வாறப்ப வயித் தில கைய வச்சுப் பாத்தேன். நல்ல அனக்கம் உண்டும். அடி யெறங்கி கனத்துப் போச்சு. கொறெ சல ஓட்டமும் உண்டு. இண்ணு வெளுக்கியதுக்குள்ள ஈனும். அதுக்க சகல லட்சண மும் உண்டு.'

'குமரேசன் பெய அங்கதானே கெடக்கான்.'

'அவன் கெடக்கான் சவத்தோளிப் பய. சக்கரை ஊற்ற வெள்ளம் மோந்திப்பிட்டு வந்து கிடந்தாண்ணா பின்ன ஆனை ஈனாலும் அவனெங்க அறியுதான்? வல்ல நாயோ நரியோ குட்டியை கொண்டுபோனாலும் அவனுக்கென்ன போவுது? நீ ஒரு வாய் சுக்கு வெள்ளம் போடுவியா?'

'கூத்துதேன். நான் பெறக் கெடந்தப்பம்கூட இந்த வெப்ராளம் காணல்ல. எம்மோ, மண்டைக்காட்டம்மோ' என்று கையூன்றி ஏக்கியம்மை எழுந்தாள்.

'கரெண்டு ராத்திரி வராதோ?' என்றார் பண்டாரம்.

'ஆரு கண்டா? எளவு கொசுவுல்லா புடுங்கி எடுக்குவு. பாவம் பிள்ளிய. இந்நேற்று சின்னவ மொகத்த நீங்க பாக்கணும். செவந்து புள்ளி புள்ளியாட்டு...'

'அதுக்கிப்பம் என்ன செய்யியது? கரெண்டு கடயிலயா விக்குதான்?'

ஏக்கியம்மை சமையலறைக்குப் போய்விட்டாள். பண்டாரம் பொடிமட்டையை இடுப்பில் செருகினார். சிறிய ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது தெருவில் மங்கலான நாட்டுவெளிச்சம் இருப்பது தெரிந்தது. கனத்த பனி. வேலப்பன் கோயில் திசை நோக்கி கன்னத்தில் போட்டுக் கொண்டு எழுந்து வெளியே போனார். கூடத்தில் அவரது மூன்று பெண்களும்

தனித்தனியாக வேறு வேறு கோணங்களில் படுத்துக் கிடந்தார் கள். சின்னவளுக்கு எப்போதுமே மாராப்பு தங்காது. வாய் திறந்து முன்பற்கள் ஏக்கியம்மையின் பற்கள் மாதிரியே சற்று எடுப்பாகத் தெரிந்தன. 'கோட்டிக்காரக் களுதெ' என்றபடி பண் டாரம் பின்கட்டுக்குப் போனார்.

'பல்லு தேக்குதியளா?'

'பாப்பம். இப்பம்தானே படுத்தேன்' என்றபடி செம்பில் தண் ணீரை மொண்டு முகம் கழுவினார். வாய் கொப்பளித்து குட்டி அங்கணத்தில் நீட்டித் துப்பினார். அங்கிருந்து ஒரு பெருச்சாளி துள்ளி மறைந்தது.

'ஓடையை மூடி வைண்ணா கேக்குறதில்ல' என்றார்.

ஏக்கியம்மை சூடான பித்தளை போணியை முந்தானையில் சுற்றிப் பிடித்துக்கொண்டு வந்தாள். சுக்கு வீச்சம் எழுந்தது. ஒருவாய் குடித்தபடி, 'தைப்பூசத்துக்கு ஒரு வாரம்கூட இல்லை. இது ஈனாட்டி நான் எங்கன்னு பழனிக்குப் போறது. இப்படி ரெண்டும் வந்து பெணைஞ்சுப் போட்டேன்னு நினைச்சு ஒரு மாசமாட்டு சங்கு உறய்க்கல்ல. இண்ணு ஈனிச்சுண்ணு சொன்னா பிடிச்ச மொலை நுணைக்க ஒரு வாரம் ஆயிப் போட்டு, ஆறுதலா போயிட்டு வருவேன்' என்றார்.

'அதுக்கென்ன. முருகன் தொணையிருப்பான்' என்றாள் ஏக்கியம்மை.

'போன பேறில நாலு நாளு இளுத்துப் போட்டு. யாபகமிருக்கா. உருப்படி நல்லா தெவங்கிப் போச்சு. வயறு கொளகொளன் னுட்டு தொங்கிக் கிடக்கு. இனி வலிய ஓட்டம் இருக்காது. கூடிப்போனா இனி ஒரு பேறு. அதுக்கம்பிறவு கஷ்டம்தான். இந்த தைப்பூசம் தப்பிப் போச்சு. அடுத்த பூசத்துல பழனியில வெல பேசிப் போடணும்.'

'என்னத்துக்கு இம்பிடயும் வச்சு தீற்றிப் போற்றணும்? ஒரு பாதி எண்ணத்த வித்து பேங்கில போட்டா மூத்தவளுக்கு ஒரு நல்லது கூடும்பம் கைக்கடுக்க இருக்கும்...'

'நீ என்னத்த கண்டே? விக்கியதுக்கும் வாங்கியதுக்கும் ஒரு நேக்கு உண்டும் பாத்துக்கோ. நம்ம உருப்படிகளிலே பத்துக்கு

எட்டு பவுனு முட்டயாக்கும். வித்துப் போட்டா பின்ன நீ உனக்க ஆமக்கன்மாருக்க மடி சிலய அவுத்தா மாசச்சீட்டு போடுவே.'

'ஆமா, வாறானுவ ஆமக்கன்மாரு... நீட்டிக்கிட்டு. தங்கப் பூணுல்லா...'

'சும்மா சொன்னேமிட்டி...' என்று சிரித்தபடி பண்டாரம் ஏப்பம் விட்டு எழுந்தார். கம்பளி சால்வையைப் போர்த்திக் கொண்டு மப்ளரை காது மறைய சுற்றிக் கட்டினார். கம்பையும் டார்ச் விளக்கையும் எடுத்துக் கொண்டு தெருவிலிறங்கினார். எதிர்வீட்டு நாய் எழுந்து ஊளைக்குரலில் ஒலியெழுப்பி பிறகு மணம் பிடித்து உறுமி அடங்கியது. வானம் மங்கலான ஒளியுடன் இருந்தது. பண்டாரம் 'சிங்காரவேலனே, நீ சிந்தையில் வாராய்' என்று முனகியபடி தெருமுனைக்கு வந்து பலிமண்டபத்தில் ஏறி மறுபக்கம் இறங்கி, கோனரார் தோப்புக்குள் நுழைந்து ஓடைக்குள் இறங்கி ஏறி, வயல்வெளிக்கு வந்தார். வயல்வெளி மேலும் ஒளியுடன் இருந்தது. துணி கட்டித் தொங்க விட்டதுபோல வெண்பனி. அதற்கு அடியில் காற்றில் நெல் ஓலைகள் சலசலத்தன. வரப்பில் புற்களில் பனி ஈரம் கால்களை சிலிர்க்கச் செய்தது. சட்சட்டென்று தவளைகள் தாவி வயல் நீரில் குதித்தன.

வயல்வெளிக்கு அப்பால் யட்சி கோயில் இருள் வடிவமாக. அதற்கு அப்பால் மூங்கில் புதர். கமுகம் தோப்புக்குள் குடிசைத் திண்ணையில் லாந்தர் ஆடியது. திண்ணையில் குமரேசன் கம்பளிக் குவியலாகத் தூங்குவது தெரிந்தது. படி ஏறி கம்பால் அவனருகே தரையில் தட்டி 'லேய்... குமரேசா, பிலேய்' என்றார். அவன் சுருண்டு எதிர்ப்பக்கமாக எழுந்து 'ஆ' என்றான். 'லேய், இது நாந்தாம்பில...'

குமரேசன் எழுந்து கைகளை குளிருக்குக் கட்டியபடி 'உறங்கிப் போட்டன்' என்றான்.

'நல்லா உறங்கினே. உள்ள வல்ல அனக்கமும் உண்டாலே?' என்றார்.

'இல்ல மொலாளி.'

'ஆமா, நீ உறங்குத சீரப் பாத்தா தெரியுமே. அதெப்பிடி உனக்க அப்பன் பொட்டன் சம்முவம் புத்தி உனக்கு இல்லாம போவுமா!'

உள்ளே லாந்தர் விளக்கு தாழ்வாக எரிந்தது. தரையில் விரிக்கப் பட்ட அகலமான பாயில் சிறிய காலசைவுகள்.

முத்தம்மை 'ஆரு... சாமியா?' என்று கேட்டாள்.

'ஆமாட்டி. எப்படி இருக்கே?'

'வய்யா சாமி. எனக்கு வய்யாமே.'

'என்னெட்டி எடுக்குது? எறங்குத மாதிரி இருக்கா?'

'இல்லே சாமியே. எனக்க கையும் காலும் கனக்குது. கை பெருத்துப் போச்சு.'

'அது அப்பிடித்தான் இருக்கும். நீ என்ன பேறு காணாத்தவளா?' என்றபடி பண்டாரம் லாந்தரைத் தூண்டினார்.

முத்தம்மை நிர்வாணமாகக் கிடந்தாள். போர்த்தியிருந்த பெரிய போர்வை ஒரு பக்கமாக சரிந்து சுருங்கி விட்டிருந்தது. ஒரு மிகப்பெரிய வினோதப் பிராணி போலிருந்தாள். ஒரு கையும் ஒரு காலும் பெரிதாக திடமாக இருந்தன. இன்னொரு கையும் காலும் சூம்பி ஒரு வயதுக் குழந்தையின் கைகால்கள் போல. முடியற்ற மிகப் பெரிய தலை ஒரு பக்கமாகச் சப்பியிருந்தது. ஒரே கண்தான். மறு கண்குழியில் ததும்பும் வெறும் சதையுருளை. மூக்குக்குப் பதில் இரு சிறுகுழிகள். பெரிய வாயில் நான்கு பக்கமும் சிதறிப் பரவிய நீண்ட மஞ்சள் பற்கள். வயிறு பெரிதாக உப்பி பளபளப்புடன் சற்று தழைந்து நின்றது. தொப்புள் விரிந்து ஒரு கறைபோல ஆகிவிட்டிருந்தது.

பண்டாரம் அவள் அடிவயிற்றை அழுத்தி மேலே தள்ளினார். அவள் 'ஆ' என்றலறியபடி ஒரு கையை தரையில் அடித்தாள். 'வலி இருக்கு கேட்டியா. அப்பிடியானா குட்டி கீள எறங்கி யாச்சு. குமரேசனை அனுப்பி வயத்தாட்டியெ வருத்து தேன். வெட்டம் வாறதுக்குள்ள வந்திடும்.'

'என்னாலே முடியல்லியே... எனக்க சாகவும் வழியில்லியே...'

'என்னத்துக்கு இப்பம் கெடந்து மோங்குதே? உனக்கு என்ன கொள்ளே? என்னமோ தலைப்புள்ளக்காரி மாதிரி போட்டு அலட்டுதா' என்றபடி பண்டாரம், எழுந்தார். 'ஓடிப்போய் கிளவியை கூட்டிட்டு வாலே' என்றார்.

குமரேசன் போனதும் திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டார். காற்றில் பின்பக்கக் கதவு படாரென்று அறைந்தது.

'எளவெடுத்தவன் தெறந்து போட்டுட்டா உறங்கினான். வல்ல நாயோ நரியோ வந்தா...' என்றபடி போய் அதை மூடிக் கட்டினார்.

'நாயோ நரியோ வாராதா... எனக்க மாதாவே...'

'சீ... வாயை மூடுட்டி, அச்சாணியமா பேசாம.'

'பதினெட்டு பெத்தேனே... எல்லாம் நாயும் நரியும் கொண்டு தானே போச்சு...?'

'என்ன பேச்சு பேசுதே நீ? உனக்ககிட்ட ஆயிரம் மட்டம் சொல்லியிட்டுட்டுண்டு. ஒண்ணும் கொறஞ்சு போவல்ல. அதுகதுக திண்ணும் குடிச்சும் சந்தோசமாட்டு இருக்குதுக. உனக்கு என்னைய நம்பிக்கையில்லையா?'

'அய்யோ எனக்க மாதாவே...'

'என்னட்டி...'

அவள் ஒன்றும் சொல்லவில்லை. விசித்திரமான ஒரு வாசனை எழுந்தது. 'அதுதான். அய்யோட்டி. எளவு, கௌவியயும் காங்கலியே...' என்றார் பண்டாரம்.

'மாதாவே என்னைய கொண்டுபோவியா. எனக்க வய்யாவே. மாதாவே... என்றெ தெய்வமே... எனிக்கு வய்யல்லோ...

மிகவும் வலித்தால் மட்டும்தான் அவள் மலையாளத்தில் கத்துவது என்று அவர் நினைத்துக் கொண்டார். அவளை அவருக்கு இருபத்தொன்பது வருடமாகத் தெரியும். அவளை மாதிரி எல்லாரும் கலவை மொழிதான் பேசுவது.

கிழவி வந்துவிட்டாள். நிதானமாகப் படி ஏறியபடி 'போக்கு உண்டுமா பண்டாரமே?' என்றாள்.

'தொங்கிப்போட்டு. வெரசாட்டு கேறி வா.'

'கோளுதேன். சக்கறம்லா உமக்கு வெளையுது' என்றபடி புகையிலையை பிய்த்துச் சுருட்டி வாயில் செருகினாள். 'இம்பிடு சூடு வெள்ளம்...'

பரமேரசன் வெந்நீர் வைக்க ஓடினான். கிழவி மடியிலிருந்து ஒரு புது பிளேடையும் டெட்டால் குப்பியையும் எடுத்து வைத்தாள். 'ஒரு மணிக்கூறெங்கிலும் ஆகும் கேட்டுதா. இதுமாதிரி சரக்கு களுக்கு சரீரம் ஒரு வகையாக்கும். ஒத்தா ஒத்துவரும்...' என்றாள்.

'பாத்து செய்யி.'

'நீரு எனக்கு பாத்து செய்யும் வேய். போன பிராவசியம் அம்பது ரூவா கேட்டப்பம் வேற பேச்சு பேசினேரு...'

'செரி. சங்கதி நடக்கட்டு.'

'தைப்பூசத்துக்கு போக்கு உண்டா?'

'போவணும். இது ஒதுங்கிக் கிட்டணுமே.'

'இதென்ன... இப்பம் ஆயிடும். ஆவேல்லண்ணா சொல்லும். பிதுக்கி எடுத்துப் போடுதேன். பழனியில நல்ல உருப்படி கிட்டினா எனக்கும் ஒண்ணு பாரும்வே.'

'ஏன் பேறு எடுத்தா போராதா?'

'இப்பம் யாரு கிளவிய விளிக்குதா? எருக்கம் சுள்ளி குத்தி வய்க்க வல்ல அறுதலியும் விளிச்சா உண்டு. அவளுக்க கையில விஷம் வாங்குத காசுதேன் மிச்சமிருக்கும். சும்மா இல்ல ஓய், உள்ளதாக்கும். ஒரு உருப்படி பாரும்.'

முத்தம்மை பயங்கரமாக ஊளையிட்டபடி நெளிந்தாள். 'சும்மா கெட சவமே. வலிய அகத்தம்மையில்லா, ராஜ குமாரனில்லா பெறப்போறா...' என்று கிழவி அவள் காலில் ஓங்கி ஒரு அடி போட்டாள்.

'மாதாவே... எனக்கு ஈ ஜென்மம் வேண்டாயே. என்னெ எடுத்தோளே...'

'மலையாளத்தியாக்கும்' என்றாள் கிழவி.

'இதுகளுக்கு என்ன பாஷை? எல்லாம் கணக்குதான்.'

'நீரு நமக்கு ஒரு பத்து வயசுக்குள்ள ஒரு உருப்படி வாங்கிக் குடும். உண்டானதை குடுத்துப் போடுதேன்.'

'எளசுன்னு சொன்னா வெல ஏறும். இண்ணை தேதிக்கு பத்துக்குக் கொறயாது.'

'பத்துண்ணா?'

'பத்தாயிரம்.'

'யப்போ! வேய் உள்ளதச் சொல்லணும்...'

'நீ வா பழனிக்கு. வெலயக் கேளு. வெளயாட்டுன்னு நெனச்சியா? சக்கறம் கொண்டுள்ள களியில்லா. இப்பப் பஸ்டு பார்ட்டியளாக்கும் கனத்த மடிசீலயுமாயிட்டு எறங்கியுட்டுள்ளது...'

'பத்தாயிரத்துக்கு நல்ல ஜெர்சி பசு கிட்டுமே...'

'ஆமா. அதுக்கு புல்லு போடணும். புண்ணாக்கு போட ணும். லிட்டர் எட்டு ரூபா மேனிக்கு அம்பது ரூபா. லாபம் இருவத்தஞ்சு. பின்ன ஒருவருசம் சினை காக்கும். இது அப்படியா. இஞ்ச பாரு, சாதா உருப்படிகூட ஒரு நாளைக்கு அம்பது ரூபா தேத்தி தந்துபோடும். அஞ்சு ரூபா செலவு. வருசம் முழுக்க. பின்ன திருவிழா தேரூண்ணு வந்தா அது வேற கணக்கு.'

முத்தம்மை அலறினாள்.

'எறங்கிப் போட்டு' என்றாள் கிழவி.

'எடுத்துப் பாரு' என்றார் பண்டாரம். 'எப்படி சரக்கு?'

கிழவி தூக்கிக் காட்டினாள். உதிரத்தில் மூழ்கிய வினோதப் பிராணி. ஒரு கால், சிறு விரல் அளவுகூட இல்லை. ஒரு கை இருக்கவேண்டிய இடத்தில் ஒரு சதைத் துண்டு. உடலைவிட இருமடங்கு பெரிய சப்பிய தலை. ஒற்றை விழி.

'முருகா, ஞானபண்டிதா!' என்றார் பண்டாரம் கும்பிட்டபடி.

'இது ஒரோ தவணயும் அச்சொட்டா வந்து விளுந்துப் போடுதுவேய்' என்றாள் கிழவி. 'கை இருக்க எடத்தில குண்டி இருந்தா உமக்கு காசு...' கிழவி குழந்தையை அடித்தாள். அது ஒருமுறை விக்கி விட்டு அலறி அழுதது. அந்த ஒலியில் முத்தம்மை விழித்துக்கொண்டாள்.

'பிள்ளை எங்கே, பிள்ளை எங்கே ?' என்றாள் ஒரு கையைத் துழாவியபடி பதறிய குரலில்.

'எங்க போவுது. இந்தா கெடக்கு.'

'பிள்ள எப்பிடி இருக்கு?'

'உன்ன மாதிரிதான். நிறைஞ்ச மவராசன், போருமா. சித்திரத் திருநாளுக்கு அனந்தரவன்லா...'

'மாதாவே' என்ற மெல்லிய கேவலுடன் முத்தம்மை அழ ஆரம்பித்தாள்.

'வத்நீ எங்க?' என்றாள் கிழவி. குழந்தை பிடிவாதமாக அழுதது. பண்டாரத்துக்கு அப்போதுதான் சிறுநீர் வந்து முட்டி இருப்பது தெரிந்தது. எழுந்துபோய் முற்றத்து குட்டி தென்னை யின் அடியில் நிம்மதியாக அமர்ந்தார். உடம்பிலிருந்து எல்லா அலைகளும் வெளியே போவது போலிருந்தன. வானத்தில் ஒரேஒரு நட்சத்திரம் தெரிந்தது. அவர் நட்சத்திரத்தையே பார்த்து வெகுநாள் ஆகிறது என்று உணர்ந்தார். ஆச்சரியமாக இருந்தது. இளம்சிவப்பாக மினுமினுவென்று அதிர்ந்தபடி....

பிறகு குடிசைக்கு வந்தபோது அவருக்கு ஒருமாதிரி இருந்தது. யாரோ பார்ப்பதுபோல் இருக்க திரும்பிப் பார்த்தார். அந்த நட்சத்திரம்தான்.

'கொஞ்சம் சொல்லும்வே. எளவு அடமுல்லா பிடிக்கி' என்றாள் கிழவி.

'என்னது?' என்றார் பண்டாரம்.

'பால் குடுக்கமாட்டாளாம்...'

'யமிட்டி?'

'வேண்டாம். அது சாவட்டு... கெடந்து சீரழிய வேண்டாம். அது சாவட்டு...' முத்தம்மை பல்லைக் கிட்டித்துக்கொண்டு சொன்னாள்.

'இஞ்ச பாரு... இதெல்லாம் விதியாக்கும். ஒரோருத்தருக்கு ஒரோ தலையெழுத்து. நீ சொல்லியதக் கேளு...' என்றார் பண்டாரம்.

'கொண்டுபோங்க...' என்று முத்தம்மை இறுகிய மூச்சடைத்த உச்சரிப்பில் சீறினாள்.

'இவளுக்கு இப்பிடி பேசினா தலையில கேறாது' என்றபடி பண்டாரம் முத்தம்மையின் மெல்லிய காலை மிதித்து அழுத்தி னார். அவள் அலறியபடி உடல் துடித்தாள்.

'பாலு குடுக்கேன்... பாலு குடுக்கேன்... அம்மோ மாதாவே' என வீரிட்டாள்.

'குடு' என்றார் பண்டாரம் காலை எடுத்தபடி.

'பால குடுக்கியதுக்கு என்ன கொள்ளே? உனக்க பிள்ளைக்கு தானே குடுக்கே. கறந்து விக்கவா செய்தாவ?' என்றபடி கிழவி புகையிலையை பல்லில் செருகினாள்.

'இது சாவட்டு. இது சாவட்டு... எனக்கு வேண்டாம்.'

'இஞ்சேரு, நீ என் கையாலதான் சாவுதே, பாத்துக்க' என்றார் பண்டாரம்.

'நீரு போவும்வே...' என்றபடி கிழவி குழந்தையை முத்தம்மை அருகே கிடத்தினாள். அவளது ஒரு முலை கனத்து பக்கவாட்டில் சரிந்து கிடந்தது. மறுபக்கம் முலையே இல்லை.

உடல் குலுங்கித் தேம்பி அழுதபடி இருந்த முத்தம்மையின் அருகே குழந்தையைக் கிடத்தி முலைக் காம்பை எடுத்து அதன் வாயில் வைத்தாள். அது சப்பென்று பிடித்துக் கொண்டது.

'கையும் காலும் இல்லேண்ணாலும் வாயிம் வயிறும் இருக்கு பண்டாரமே' என்றாள் கிழவி.

'சவம் மணலில வத்துத மாதிரில்லா இளுத்து மண்டுது...'

முத்தம்மையின் காதுகளில் கண்ணீர் கொட்டியது. அவள் சத்தமேயில்லாமல் குலுங்கி அழுதபடியே இருந்தாள்.

'இதென்ன இந்த அலம்பு அலம்புவு?' என்றாள் கிழவி.

'அது எப்பமும் உள்ள சீருதேன். குறெ நேரம் போவும். நீ களுவி எடுத்து கிடத்து. நான் கோயிலுக்குப் போயி பாத்துட்டு வாறன்' என்றபடி பண்டாரம் தடியை எடுத்தார்.

‘சக்கறம்?’

‘குமரேசனுக்கு கிட்ட குடுத்திட்டுண்டு. கணக்க வையும்பம் பாக்கலாம். வரட்டா.’

வயல்வெளிக்கு வருவதுவரை அவருக்கு முத்தம்மையின் அழுகைதான் நினைவில் நின்றது. ‘எல்லா செம்மங்களுக்கும் சிரியும் கரச்சிலும் வச்சிட்டுண்டு. உடயவனுக்க ஒரோ களிகள்.’

வயல்வெளியில் வெளிச்சம் பரவியிருந்தது. ஆனாலும் வானம் விடியவில்லை. குளிர் காற்றுக்கு கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டார். அனிச்சையாகக் கண்கள் நிமிர்ந்து அந்த நட்சத்திரத்தைப் பார்த்தன. உடனே பார்வையைத் திருப்பிக் கொண்டார். உள்ளூர உருவான அசௌகரிய உணர்வைத் தவிர்க்க ஓங்கித் துப்பினார்.

# 2

சுப்பம்மை தெருவில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். ஈரக்கூந்தல் பின்பக்கம் ஜாக்கெட்டை நனைத்தது. காலில் சாணியின் பச்சை. கோலம் ஒரு பக்கத்திலிருந்து பின்னி விரிய ஆரம்பித்திருந்தது. பண்டாரம் ஓரமாக நடந்து உள்ளே ஏறினார். அவரைப் பார்த்ததும் சுப்பம்மை சம்புடத்துடன் எழுந்தாள். தலைமுடியை ஒதுக்கியபடி 'ஈனிட்டா அப்பா?' என்றாள்.

'பழனியாண்டி அருளாலே ஒண்ணும் பிரச்சினையில்லே.'

'பழனிக்கு போறேளா?'

'முருகன் அருளிருந்தா போறதுதான். அம்மை எங்கட்டி?'

'தோசை சுடுதா.'

உள்ளே கடைக்குட்டி புத்தகங்களைப் பரப்பி ஒரு புத்தகத்தின் மீது குப்புறச் சரிந்து கிடந்தது. 'ஏட்டி பல்லு தேச்சியாட்டி' என்றார்.

'தேச்சேனே.'

'நாராயணன் வாறதா சொன்னான். வந்தானா?'

'நாணு மாமாவுக்க மகன் வந்தான்.'

'என்ன சொன்னான்?'

'அம்மைட்டதான் என்னமோ சொன்னான்.'

சின்னவள் அப்போதும் எழுந்திருக்கவில்லை. கலைந்த உடையும் உலர்ந்த எச்சில் கோடுகளுமாக பப்பரக்கா என்று தூங்கிக்கொண்டிருந்தாள்.

பண்டாரம் கம்பைச் சாத்தி கம்பளியையும் போட்டுவிட்டு ஒருமுறை பொடி போட்டார்.

'ஏமிட்டி சின்னவளே... நாறச் சனியனே, எந்திருட்டி. மூதேவி பிடிச்சவ. உறங்குதத பாரு. அசோகவனத்துல ராச்சஸி மாதிரி. எந்திரிட்டி. வெந்நிய ஊத்திப் போடுவன் பாத்துக்க... ஏட்டி எந்திரிண்ணா...'

வடிவம்மை 'போம்மா... வெடியல்ல, அதுக்குள்ள...' என்றாள்.

'ஆமாட்டி, வெடியல்ல. இப்பிடி உறங்கினா உனக்கு வெடியுது. எந்திரிட்டி எளவெடுத்த மூதேவி... மோரையைப் பாரு...' என்றபடி ஏக்கியம்மை உள்ளே வந்தாள். 'ஈனிட்டுதா?'

பண்டாரம் 'முருகன் அருளாலே' என்றார். 'காலம்பற உனக்க வாயில நல்ல வார்த்தை வராதாட்டி? சனி சனின்னு மந்திரமா செபிக்குதே...?

'பின்ன... கெடக்குத கெடயப் பாத்தேளா. எப்பிடி பிள்ளெ?'

'நல்ல உருப்படி. கிண்ணுன்னு கிடக்கு.'

'எப்பிடியோ... முருகா எம்பிரானே...' என்றாள் ஏக்கியம்மை.

'நான் குளிச்சிட்டு கோயிலுக்குப் போயிட்டு வாரேன். நல்லா வெளுத்துப்போட்டு.'

'நாராயணன் மத்தியான்னமாட்டு வாறானாம். கூட மத்தவனையும் கூட்டிட்டு வாறதா சொல்லிவிட்டான்.'

'செரி.'

கூடத்தில் சின்னவள் மீண்டும் சுருண்டு படுத்துவிட்டாள். கடைக்குட்டி மீனாட்சி 'கரியமிலவாயு கனமானது. இது...' என்ற பிறகு 'குட்டி போட்டுதாய்யா?' என்றாள்.

'ஆமா.'

'எப்பிடி இருக்கு?'

'நண்டு மாதிரி இருக்கு. படிட்டி.'

'நான் பாக்கட்டா?'

'கண்ணு முழிச்சா கோயிலுக்கு வரும். அப்ப பாத்தா போரும். இப்பம் நீ ஏலா கேறி எறங்கண்டாம். சமையிற வயசுல.'

'நான் ஒண்ணும் சமையல்ல.'

பண்டாரம் கொல்லைப்பக்கம் போய் ஒரு பிடி உமிக்கரி அள்ளி பலா இலையில் மடித்துக்கொண்டார். கொல்லை வழியாக இறங்கி சந்துக்குள் நடந்து வடக்குத் தெருவுக்குப் போய் படி யிறங்கி குளத்தை அடைந்தார். சின்னப் படித்துறையில் கூனன் ஆசாரியும் கொச்சு பிள்ளையும் குளித்துக் கொண்டிருந்தார்கள். பண்டாரம் கரையில் நின்று பல் தேய்த்தார்.

கொச்சு பிள்ளை 'ஈனிட்டுதா பண்டாரமே' என்றார்.

'எல்லாம் பழனியாண்டி அருள்... நல்லா இருக்கு.'

'உமக்கென்ன... நல்லா உருப்படி தேறினா ரூபா பத்தாயிரம்லா. பத்தாயிரத்துக்கு நாங்க பத்தெடத்துல நொட்டணும்.'

'முருகா' என்றபடி பண்டாரம் வாய் கொப்பளித்தார். கையை வாய்க்குள் விட்டு ஓங்கரித்து துப்பிவிட்டு பாய்ந்து நீரில் இறங்கினார். மூழ்கி நிமிர்ந்து 'எல்லாம் பழனியாண்டிக்க கணக்கு. கணக்கறிந்தவன் அவன். ஞான பண்டிதன்' என்றார்.

'இந்த கூனன் ஆசாரியையும் சேத்துப்பிடும்வே பண்டாரம். பேசாம பழனிக்கு கொண்டுபோய் வித்துப் போடும். அவனுக் கும் இருந்த எடத்தில சோறு.'

கூனன் ஆசாரி 'ஹெஹெஹெ' என்று சிரித்தார்.

'பேசப்படாது. மகாபாவம். கேட்டேரா கொச்சு பிள்ளை. ஆத்மாவில வலுதும் செறுதும் உண்டு. இப்ப மகாத்மா அப்படீங்கியோம். அது வலிய ஆத்மா. நம்ம ஆத்மா சாதாரண ஆத்மா. நாம நம்மளை மாதிரி இன்னொரு ஆத்மாவ மதிக்கணும். சினேகிக்கணும். நம்மைவிட செறிய ஆத்மாக்களை சம்ரட்சிக் கணும். நல்லது கெட்டது நடத்தி வைக்கணும். இப்பம் இந்த

உருப்படிகளுக்கு நாம இல்லேண்ணா ஆருண்டு? பொது வழியில கிடந்து எரந்து பசிச்சு சாவும். இப்பம் நமக்கு கீழ இருக்கதனால அதுகளுக்கு ஒண்ணும் அறிய வேண்டாம். நேரத்தோடு நேரம் சோறு, வீடு, ரோகமானா மருந்து எல்லாம் உண்டு.' பண்டாரம் மூழ்கி எழுந்தார்.

'இப்பம் நாம ஆடுமாடு வளக்குதோம். கோழி வளக்குதோம். சின்ன ஆத்மாக்களாக்கும்...' என்றபடி மீண்டும் மூழ்கி எழுந்தார்.

கூனன் ஆசாரி சிரித்தபடி 'உள்ளதாக்கும்' என்றார்.

கொச்சுபிள்ளை துவர்த்தைப் பிழிந்தபடி படி ஏறினான். 'வாறன் பண்டாரமே. இண்ணு அப்பு பிள்ளை வீட்டிலயாக்கும் தேங்கா தொலிப்பு' என்றான்.

'என்ன மேனிக்கு போவுது?'

'என்னா, அஞ்சுக்கு திருவனந்தபுரத்துல எடுக்கான். இஞ்ச மூணு மூணரை. வரட்டா.'

பண்டாரம் எழுந்து தலை துவட்டினார். ராமக் கோனாரும் சுப்பிரமணி வாத்தியாரும் வந்தனர். 'ஈனிட்டோ பண்டாரம்?' என்றார் வாத்தியார்.

'முருகனருளாலே' என்றபடி பண்டாரம் துவர்த்தைப் பிழிந்து உதறரென்று உலர்த்தினார்.

'தைப்பூசத்துக்குப் போக்கு உண்டா?' என்றார் கோனார்.

'போணும். எல்லாம் அப்பன் அருள்' என்றார் பண்டாரம்.

கோயில் முகப்பில் சம்புடத்திலிருந்து திருநீறை அள்ளி உடம்பில் பூசிக்கொண்டார். 'என்னப்பனே ஞான பண்டிதா' என்று உள்ளே நுழைந்தார்.

வள்ளிக்கிழவி மண்டபப் படியில் இருந்தது. 'போத்தி வந்தாரா பிள்ளே?' என்றார் பண்டாரம்.

'அப்பமே வந்து போட்டாரு' என்றாள் வள்ளி.

பண்டாரம் சன்னிதி நோக்கி மார்புகள் குலுங்க ஓடினார். பெரிய போத்தி மாதம் ஒருநாள்தான் வருவார். அவருக்கு ரத்த அழுத்தம்

அதிகம். வழக்கமாக வருவது அவரது மருமகன் சுப்பா போத்திதான்.

கருவறைக்குள் பெரிய போத்தி சந்தன முழுக்காப்பு சாத்திக் கொண்டிருந்தார். ஆளுயுர முருகன் சிலைக்கு முழுக்காப்பு சாத்தி முடிக்க இரண்டு மணி நேரம் ஆகும். பழைய காலமென்றால் முழுக்காப்பு சாத்த முழு இரவும் சந்தனம் அரைக்க வேண்டும். இப்போது போத்தியே சந்தனத்தூள் வாங்கிவந்து சப்பாத்தி மாவு மாதிரி பிசைந்து கொள்வார்.

'ஆருடே அது... போத்திவேலுவா?'

'அடியன். தாமசமாயிப் போச்சு.'

'உனக்கென்னடே, நீ மோலாளி. எப்ப வேணுமானாலும் வருவே. போவே. நம்மளை மாதிரியா என்ன?'

'இல்ல. அங்கத்தே...'

'என்னடே நொங்கத்தே. நீயெல்லாம் என்னத்துக்கிடே கோவிலு உத்தியோகம் பாக்குதே. இந்த சில்லிப் பைசா உனக்கு ஒரு மயிரும் விலையில்ல.'

'அதிப்பம் முருகன் பணம்...'

'ஆ அப்பம் அதாக்கும் காரியம். எரப்பாளிகளை வாடகைக்கு விடுயது உனக்கு குறச்சிலு. வெளிய சொன்னா நாத்தம். கோவிலு உத்தியோகம் மரியாதைக்கு, மத்தது பைசாய்க்கு. இல்லியா?'

'அடியன். நான் என்ன சொல்லுயதுக்கு?'

'நீ ஒரு மயிரும் சொல்லண்டாம்' என்றார் போத்தி. 'வள்ளி யாக்கும் இப்பம் இஞ்ச கழகம் இல்லியா. அவ காலம்பற குளிச்சாளான்னு கேட்டுப் பாருடே. இல்ல, கேளு...'

'முருகன் காலடியில இருந்துட்டு நாத்த வர்த்தமானம் சொல்லிலாம். அது நாயம்' என்று தனக்குள் சொன்னார் பண்டாரம்.

'என்னடே நாக்கு தாண்டு போச்சா உனக்கு? சாமி சோறாக்கும். கை தெற்றினா விஷம். நான் சொல்லண்டாம்னு பாக்கேன். எரப்பாளிக்க பைசா மாதிரி இல்ல இது.'

போத்திவேலுப் பண்டாரம் கைகளை மேலும் பவ்யமாக மார்பில் கட்டிக்கொண்டார். 'அது பேசப் போனா நீளும் அங்கத்தே. எரப்பாளிண்ணா ஆராக்கும் இப்பம் எரப்பாளி இல்லை. ஆரிட்ட கையேந்தினா என்ன? இங்க நிண்ணு காவடிக்கும் மொட்டைக்கும் வாறவன்ட்ட நாலு நல்ல வர்த்த மானம் சொல்லி கை நீட்டினாலும் அதும் எரப்பாளித் தனம்தான். மந்திரம் சொல்லி துண்ணூறு வாரிக் கொடுத்து கைய நீட்டி னாலும் கணக்குதேன்... கைய நீட்டாம வாழணுமானா வீட்டில பத்து பத்தாயம் நிறஞ்சிருக்கணும்.'

போத்தி அரண்டு போய்விட்டார். உள்ளே சத்தமே இல்லை.

பண்டாரம் வாயை மடித்துத் தன்னுள் சிரித்தபடி, 'நல்ல புத்தன் தேனு ஒரு குப்பி வந்து பெட்டுது அங்கத்தே. மலைத் தேனு. மீனாச்சிட்ட சொல்லி மடத்துக்கு குடுத்தனுப்புதேன். அம்மியாரு அன்னைக்குக் கேட்டாக. நல்ல தேனு கிட்டுமோ டேண்ணு...'

போத்தி 'உம்' என்றார்.

'ஆராக்கும் வாறது திருவனந்தபுரத்துக்காரங்க?'

போத்தி சட்டென்று திரும்பி 'ஆரு?'

'இல்ல திருவனந்தபுரத்து ஆளுக.'

'உன்கிட்ட ஆருடே சொன்னா?'

'சொல்லலல்ல...'

போத்தி 'உம்ம்' என்று உறுமினார்.

'அப்பம் நான் எறங்குதேன்' என்றார் பண்டாரம். 'சோலி கெடக்கு. நம்ம வலிய உருப்படி ஈனியிருக்கு. நல்ல சரக்காக்கும். ஒரு வழிபாடு வச்சணும். ஏக்கியம்மை வருவா.'

'செரி' என்றார் போத்தி. பண்டாரம் போகிறார் என்ற செய்தியில் அவர் சற்று தணிந்தார்.

'குலசேகரம் வரை ஒண்ணு போவணும். வேலைக கிடக்கு.'

'தைப்பூசத்துக்கு போறேரா?'

'பின்ன போவாம? நம்ம தொழிலுல்லா.'

பண்டாரம் தரையில் விழுந்து கும்பிட்டார். சுற்றி வந்து கந்தர் கலிவெண்பாவைச் சொல்லி எல்லாப் பரிவார தேவதை களுக்கும் கும்பிடு போட்டு விபூதி வாங்கி சேவித்துவிட்டு வெளியே வந்தார். வெயில் சுள்ளென்று அடித்தது. வண்டி மலையும் மாதவப்பெருமாளும் படிகளுக்குக் கீழே நின்றிருந் தனர். மண்டபப் படிகளை துண்டால் தட்டிவிட்டு அமர்ந்தார். ஒருமுறை பொடி போட்டுவிட்டு 'ம்ம்?' என்றார்.

'நாகராஜா கோவிலில ஒரு சின்ன அடியுண்டு' என்றான் மாதவப்பெருமாள்.

'என்னவாக்கும்?'

'நம்ம உருப்படிக்க பாத்திரத்தில ஒரு தெண்டிப் பரதேசி கையிட்டு வாரியிருக்கான். இது கெடந்து அல முறையிட்டிருக்கு. ஒரு அடி வச்சு குடுத்துட்டுப் போனானாம். நான் வய்யும்பம் போனா கலெசன் குறவு. கேட்டா இந்தமாதிரி சொல்லுது. அருவில நம்ம உருப்படி ரெண்டு வேறயும் கெடப்புண்டு. கேட்டா சங்கதி உள்ளதாக்கும். பரதேசியப் பிடிச்சு நாலு சமுட்டு போட்டேன். கிளவனாக்கும்...'

'பரதேசிய பாத்து அடிக்கணும். அவனுவ ஒரு செற்றாக்கும்.'

'இவன் செற்று பரதேசி இல்ல. வரத்தன்.'

'பழனிக்கோ திருச்செந்தூருக்கோ போயி துலைய வேண்டி யதுதானே. இங்க என்ன அத்து விளுதுண்டு வாறானுவ? கலெக்சன் எப்பிடி?'

'கலெசன் மோசம். இப்ப வடிவீஸ்வரம் செற்று ஒண்ணு அங்கிண கிடக்கு. பின்ன ஒரு பாண்டி செற்று. ராமேஸ்வரம் பார்ட்டிக. கலெசன் பொதுவா மோசமாக்கும். ஞாயறாழ்ச்ச மட்டும் ஒப்பேறும்.'

மாதவப்பெருமாள் மடியிலிருந்து அழுக்கு ரூபாய்ச் சுருளை எடுத்து நீட்டினான். பண்டாரம் வாங்கி எண்ணினார். மீண்டும் எண்ணி 'அப்பம் இன்னி நாலாயிரம் நிக்குது' என்றார்.

'தைப்பூசம் முடியட்டு. தீத்துப் போடலாம்.'

'பல தை கண்டாச்சு பாத்துக்க. இவன என்னத்துக்கு கூட்டிட்டு அலையுத?'

'எனக்கு உருப்படியள தூக்கி எறக்க சீவனில்ல. இவன் ஒரு பிடித்தம்.'

'இவனுக இதுக்கு கொள்ளாது. மொரடனுகள்லா?'

வண்டிமலை வேறு யாரையோ பேசுவதுபோல நின்றான்.

'அப்பம் வாறம். வலிய உருப்படி ஈனிட்டுன்னு சொன்னாவ.'

'ஆரு?'

'இருளப்பன பாத்தோம்.'

'இளவு இதிப்பம் லாட்டரி அடிச்ச கோளுண்ணுல்லா சொல்லுதானுவ. ஈனிட்டுடே. நல்ல குட்டியாக்கும். செரி. நீ திங்களாழ்ச்ச வா. தைப்பூசத்துக்கு காரியங்கள் பேசிக்கிடுவோம். இந்த உருப்படிய நேராட்டு தைப்பூசத்துக்கு எறக்கிப் போடுவோம். என்னா.'

'ஆட்டும்' என்றான் மாதவப்பெருமாள். வண்டிமலை கூட நடந்தான்.

பண்டாரம் வீட்டுக்கு வந்தபோது சின்னவள் திண்ணையில் ராணி, தேவி, வாரமலர் எல்லாவற்றையும் பரத்திப் போட்டு உட்கார்ந்திருந்தாள்.

'படிப்பும் பாட்டும் ஒன்றும் இல்லியாட்டி உனக்கு?'

'படிச்சாச்சுப்பா.'

'எப்பம் படிச்சே?'

'இப்பம். மீனாட்ட கேளுங்க. ஏட்டி மீனா...'

'ஆமா. அவ சொல்லுதா. உன்னக் கண்டாலே அவளுக்கு நாக்கு தளரும். அந்த எளவெல்லாம் எங்கேருந்துட்டி வாரிட்டு வாறே?'

'போப்பா' என்றபடி அவள் படிக்க ஆரம்பித்தாள்.

உள்ளே ஏக்கியம்மை சமையல் வேலையைத் தொடங்கியிருந்தாள். 'தோசை திங்குதியளா. குமரேசன் வந்தான். மிளகு போட்டு கஞ்சி குடுத்தனுப்பினேன்.'

தோசையை தட்டில் அடுக்கி சட்டினி பாத்திரத்தில் கரண்டியைப் போட்டு தரையில் வைத்தாள். பண்டாரம் 'என்னப்பனே முருகா' என்று அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார். 'பிள்ளிய தின்னுட்டா?'

'மூத்தவளுக்கு திங்களாழ்ச்ச நோம்புல்லா? சின்னவ இண்ணைக்கு தோச திங்க மாட்டாளாம்.'

'என்னமாம்?'

'அழகாட்டு ஆவணுமாம்.'

'அதுக்கு? தோசயில என்ன அழகு கொறயுது?'

'எண்ண இருக்காம். புஸ்தகத்தில போட்டிருக்காம். ஓரோ கணக்குகள்... காப்பி போடவா?'

'செரி.'

கருப்பட்டி காபியை ஒரு சொம்பு குடித்துவிட்டு உடனே பண்டாரம் கிளம்பினார். அவர் சட்டையைப் போடுவதைக் கண்டதும் ஏக்கியம்மை 'வெப்ராளம் ஆறாம... எங்க?' என்றாள்.

'சோலி கிடக்குட்டி. குலசேகரம் வரை போணும். நாராயணன் வந்தாண்ணா இருக்கச் சொல்லு.'

சட்டையை மாட்டி குடையுடன் கிளம்பியபோது 'அப்பா நம்ம குட்டிய நான் போயி பாக்கட்டா' என்றாள் சின்னவள்.

'ஆமா... குட்டீ... சோலியப் பாருட்டீ.

'இல்லப்பா. இவ சொல்லுதா நண்டு மாதிரி இருக்குண்ணு...'

'எல்லாம் பிறவு பாக்கிலாம்.'

'அப்பா, அழுவுமா அப்பா...'

'போவுட்டி. வச்சு சாத்திப்போடுவேன் பாத்துக்க.'

பண்டாரம் மீண்டும் குடிசைக்கு வந்தபோது நன்றாக வேர்த்துவிட்டிருந்தார். குமரேசன் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். உள்ளே பலவிதமான ஒலிகள் கேட்டன.

'சாப்பிட்டியாலே...'

‘கஞ்சி குடிச்சேன்.’

‘முத்தம்மை?’

‘கஞ்சி குடிச்சா.’

‘செரி’ என்றபடி உள்ளே எட்டிப் பார்த்தார். முத்தம்மையின் மார்பு மீது குழந்தை கிடந்தது. குருத்துக்கால் விரல்களையும் கைவிரல் களையும் சுருக்கி நெளித்தபடி. அதன் சிறுநீர் அவளது துணி சுற்றிய பெரிய வயிறு மீது வழிந்தது. முத்தம்மை ‘எங்க ராசால்லே, எங்க மாராசால்லே, எங்க தேவலோக ராசால்லே...’ என்று குழறிய குரலில் கொஞ்சியபடி பெரிய கைகளால் குழந்தையை மெல்ல தட்டியபடி தலையை உருட்டினாள். ஒற்றைக்கண் மூட மறுகண் தளும்பி அதிர்ந்தது. முகம் முழுக்க நிரம்பியிருந்த பரவசத்தை பண்டாரம் வியப்புடன் கவனித்தார்.

பிறகு திரும்பி ‘பாத்துக்கலே’ என்றார். வெளியில் நடந்து குடையூன்றி வயலில் இறங்கியபோது தன்னையறியாமலேயே அவரது கண் நட்சத்திரத்தை தேடி எழுந்தது. கண்கள் கூச குடையை விரித்துக்கொண்டார்.

# 3

பண்டாரம் விடியற்காலையிலேயே எழுந்து வீட்டிலேயே குளித்து விபூதி பூசி கருப்பட்டிக் காப்பி குடித்து பொடி போட்டுக்கொண்டிருந்தார்.

ஏக்கியம்மை 'ரெண்டு தோசய கெட்டிக் குடுக்கட்டுமா கையில?' என்றாள்.

'ஏட்டி, அறிவுகெட்டத்தனமாட்டு பேசிட்டு. போற எடத்துல நாலு இட்டிலி கிட்டாமயா போவும்? எங்க காட்டுக்கும் மலைக்குமா போறம்?' என்றார் பண்டாரம்.

'அப்பா எனக்கு வளவி' என்று மீனாட்சி கேட்டாள்.

'போயி கெடந்து உறங்குட்டி. பனி கொட்டுது. வளவியும் கிளவியும் ஒக்கெ வந்து பேசலாம்.'

மீனாட்சி தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். அவள் கண்கள் கலங்கியிருக்கும் என்று பண்டாரத்துக்குப் புரிந்தது. 'ஏமிட்டி. கேட்டா வாங்கியாரமாட்டனா? எனக்க கண்ணுல்லாட்டி நீயி' என்றார்.

மீனாட்சி தலையை அசைத்தாள்.

'போயி கெட மக்கா. தலதோசம் பிடிச்சா பின்ன உனக்கு அது மதி...' என்றார் பண்டாரம்.

'எனக்கு ஒரு வாச்சு வேணும்.'

'வாச்சா?'

'ஓடாத்த வாச்சு மதி. பவுனு கணக்காட்டு.'

'செரி. நீ போயி படு.'

'அவ எங்க படுக்கா?' என்றபடி ஏக்கியம்மை வந்தாள். 'எங்க அவ? பெட்டிய மூடியாச்சா?'

'அப்பா, ட்றெங்குப் பெட்டியில போயிலப் பெட்டிய வய்க் கட்டா?'

'எளவெடுத்தவ புத்தியப் பாரு. ஏமிட்டி, புத்தன் துணியில போயில மணக்கியதுக்கா? மஞ்சப் பையில வைட்டி. விபூதி சம்புடம், போயில, கோமணம் மூணும் மஞ்சப் பையில.'

'கோமணத்தில போயில மணக்காதோவ்?'

'ஏமிட்டீ?'

'ஒண்ணுல்ல.'

ஏக்கியம்மை உள்ளே போனாள்.

'நீ சும்மா கெடக்காம மூணு கோவிலுக்கும் ஒரு ரவுண்டு செண்ணு நோட்டம் பாத்துட்டு வா, கேட்டியா? ஒரோ உருப்படிகள் இங்கயும் கிடக்கு நமக்கு. குமரேசனை கூட்டிக்க.'

வாசலில் ஹெட்லைட் வெளிச்சம் சுழன்றது.

'அப்பா காரு வந்திட்டு.'

'அதுக்கெதுக்கு விளிச்சு கூவுதே? உனக்கு சம்பந்தமா வருது காரில?' என்றாள் ஏக்கியம்மை.

'சும்மா நீ பிள்ளியள்ட்ட மல்லுக்கு நிக்காத கேட்டியா. எங்கட்டி சின்னவ?'

'உறங்குதா.'

'அவ உறக்கத்த விடமாட்டா.'

'அப்பா அவளுக்கு காலம்பறதான் நல்ல சொப்பனம் வருதாம். ஆ... நுள்ளுதா.'

பெரியவள் மீனாட்சியைத் தள்ளி, 'உள்ள போட்டி.... வாய நீட்டாம' என்றாள்.

'அவதான் சொன்னா. சொப்பனத்தில...'

'போட்டி உள்ள.'

மாதவப்பெருமாள் இறங்கி 'மோலாளி, வெக்கம் வரணும். தரை வெளுக்கும்பம் நாரோயிலு களியணும்' என்றான்.

'வாரன்டே. எளவு செருப்பையும் காங்கலே.'

'இந்தால்ல கெடக்கு.'

'ஒத்தச் செருப்ப உங்கப்பன் நாணப்பன் போடுவான். சவத்து மிண்டைக்கு தலையில மயக்கின மரச்சீனிக் கெளங்குல்லா...'

'அப்பா இந்தா...'

'எடு எடு...'

'கொடை?'

'கொடையை எடுட்டி' என்றார் பண்டாரம். 'சின்னவ எந்திரிச்சா சொல்லிப்போடு.'

'அப்பா வளவி...'

'வாறன் மக்கா' என்று மீனாட்சியின் கன்னத்தை வழித்து விட்டு பண்டாரம் டெம்போ டிராவலரில் முன் இருக்கையில் ஏறி அமர்ந்தார். 'கண்டிசனாடே வண்டி?'

'கண்டிசன்லாம வண்டி எடுப்பமா மோலாளி?'

'செரி அப்பம்' என்றார் பண்டாரம் வெளியே எட்டிப் பார்த்தபடி.

வண்டி சீறிப் புழுதி பறக்கச் சென்றது. லாந்தர் கம்பங்கள் ஒளி பெற்று பின்னால் பாய்ந்தன. கண் ஒளிர ஒரு நாய் தடுமாறி பக்கவாட்டில் பாய்ந்தது.

குளக்கரை மேடையில் முத்தம்மையும் குமரேசனும் இருந் தார்கள். முத்தம்மை குழந்தையை மார்மீது தூங்க வைத்தி ருந்தாள்.

'லைட்ட போடுடே' என்றபடி பண்டாரம் இறங்கினார். 'ஏம்லே ஒறங்குதியா?'

'இல்ல மோலாளி.'

'அவன் எங்கே ஆறுமுகம்?'

'உருப்படிய இங்க கொண்டு வந்து சேத்துட்டு பைசா வாங்கிட்டு போயிட்டான்.'

'நல்ல கத. வல்ல நாயோ நரியோ வந்தா நீ என்னலே செய்வே? உதிர உடம்பு. கேத்துடே.'

முத்தம்மை 'அய்யோ பிள்ளை' என்றாள்.

'பிள்ளைய நீ பிடிச்சுக்கட்டி. எளவு இன்னி குறெநாள் பிள்ளை பிள்ளைன்னு சாவா.'

குமரேசனும் மாதவப் பெருமாளும் இரு பக்கமாகப் பிடித்து முத்தம்மையை உள்ளே ஏற்றினார்கள். உள்ளே இருக்கைகள் அகற்றப்பட்டிருந்தன. குழந்தை விழித்துக் கொண்டு வீரிட்டது.

'அய்யோயோ லோலோலோ எனக்க தங்கமே, எனக்க ராசாவே, எனக்க முத்தே...'

'பாலக் குடுட்டி' என்றார் பண்டாரம்.

மாதவப்பெருமாள் ஏறிக்கொண்டான். வண்டி கிளம்பியது.

'வண்டிமலை எப்பிடிடே பெருமாளு?' என்றார் பண்டாரம்.

'[illegible] சாறு பார்ட்டி. ராத்திரி மலஞ்சரக்கு மோந்த இருபது ரூபா [illegible]த்துப் போடணும். தலை வெட்ட சொன்னா அப்பம் வெட்டிப்போடுவான்.'

வண்டி குலுங்கிச் சென்றது. பண்டாரம் பொடி போட்டுக் கொண்டார். ஒரு கீறு புகையிலையை வாயில் அதக்கினார். பயணங்களில் அவருக்கு புகையிலை இல்லாமல் முடியாது.

[illegible] ராஜா கோயில் மைதானத்தில் வண்டிமலை கையைக் காட்டினான். வண்டி நின்றது. ஓரமாக உருவங்கள் தரையில் கிடந்தன.

'என்னடே?'

'போலீசுகாரன் பாத்துட்டு எடு எரநூறுன்னான். எஜமான் வரட்டும்னேன். அடிக்க வந்தான். நூத்தம்பது குடுத்தேன்.'

'இவனுவளுக்கு குடுத்தும் கட்டாது. செரி ஏத்து.'

கீழே தரையில் எட்டு ஆண்களும் ஆறு பெண்களும் நான்கு குழந்தைகளும் கிடந்தன. எல்லாமே குறைப் பிறவிகள், சிதைந்த விபரீத உடல்கள். அசையவே முடியாதவை பாதி.

'எஜமான் எல்லாத்துக்கும் எடமிருக்குமா?'

'பின்ன, இதுகளை டூருல்லா கூட்டிட்டு போறம்? வலிய உருப்படிய முதல்ல ஏத்து. அதுக்க மேல சின்னத ஏத்து.'

பெரிய உடல்களை தூக்கித் தூக்கி நெருக்கமாக அடுக்கினார்கள் வண்டிமலையும் மாதவப்பெருமாளும். 'அய்யோ எக்கப்போ...' என்றான் சீங்கண்ணன்.

'என்னலே?'

'இடுப்பு நோவுது மோலாளி.'

'இடுப்புல உனக்கு தங்க அரைஞாணம் சொல்லியிருக்கு. மூடிட்டுக் கெடக்கப் பாத்தியா.'

'அம்மோ! அம்மோ!' என்று குழந்தைகள் சில வீரிட்டன. ஒரு குழந்தைக்கு தலை மிகப் பெரிதாகவும் மொத்த உடலும் அதைவிட சிறிதாகவும் இருந்தது. அது 'ங்குர் ங்க்குர்ர்' என்று ஒலியெழுப்பியது.

'மண்டையன் மோங்குதான். மோலாளி இப்ப ஒண்ணோ ரெண்டோ உண்டு.'

'மூணோ நாலோ ஆனாலும் இனி நேரா சாத்தூரிலதான் நிப்பு.'

'மோலாளி எனக்க பிள்ளெ...' என்றாள் முத்தம்மை.

'சாவாது குட்டி. ஒரு இடியொக்கெ கொண்டா ஒண்ணும் ஆவாது. இவ என்னடெ வலிய சீண்ட்ரமா இருக்கா...'

'மோலாளி இது குட்டி போட்ட பிராணியில்லா. கெறுவம் இருக்கும்.'

'குட்டி இண்ணோ நேத்தோ போடுயதா. குட்டி போட்டு குட்டி போட்டு இப்பம் கோளி முட்டை போடுய கணக்காட்டுல்ல ஆச்சு?' என்றார் டிரைவர்.

'நான் செத்த நேரம் கண்ணசருதேன். சாத்தூரு வந்தா எளுப்பு கேட்டியா.'

'மோலாளி செக் போஸ்ட் இருக்கே.'

'அம்பது ரூபாய குடுடே. இதென்ன கள்ளச் சரக்கா. மனிய னுங்கதானே.'

வண்டி குலுங்கக் குலுங்க பின்னால் இறுகிக் கிடந்தவர்கள் கூவினார்கள். 'மோலாளி சாவப் போறோம்...'

'சும்மா கெடலே' என்றான் சன்னலோரம் தொங்கிய வண்டிமலை.

வண்டிக்குள் மலநாற்றம் எழுந்தது. 'ஆருலே அது?'

'மோலாளி இது மண்டையனாக்கும்.'

'எளவு ஆளப் பாத்தா அரக்கிலோ தேறாது. ஒரு நாளைக்கு ஒம்பது கிலோ எறக்கி வய்க்குதான்.'

'சவத்தெளவுக்கு ஒரு அடி வைடே.'

'அத அடிச்சு பிரயோசனமில்ல வண்டிமலை. அதுக்கு ஆரடிச்சா ஏனடிச்சா ஒண்ணும் தெரியாது. கரைச்சில் தொடங்கினா பிறவு நிறுத்தவும் தெரியாது.'

'பார எளவுதேன்.'

'பைசாயில்லா' என்றது ஒரு குரல்.

'ஆருலே அது?' என்றான் பெருமாள்.

யாரும் குரல் எழுப்பவில்லை.

'ஆருலே அது, மயில்சாமி நீயாலே?'

'நானேஞ் சாமி சொல்றேன்? செவணேண்ணு சுருண்டு கிடக்கேன்.'

'நாக்க நீட்டினா அறுத்துப் போடுவேன் பாத்துக்க.'

'பைசாக் கணக்கு சொன்னா கோவந்தான்.'

'பிலேய் ஆருலே அது? நாப்பத்தெட்டு, நீயாலே?'

'இல்லிங்கய்யா.'

'வண்டிய நிப்பாட்டிப் போட்டு எறங்கி எல்லாத்தையும் சாத்திப் போடுவன் ஆமா... என்னய தெரியும்ல?'

'தெரிந்தது தெரியாதது அறிந்தது அறியாதது அனைத்து மறிவோம்.'

'வண்டிய நிப்பாட்டு. வண்டிய நிப்பாட்டு. இண்ணு இதுக்கு ஒரு கணக்கு அறியணும்.'

வண்டி நின்றது. உள்ளே விளக்கு எரிந்தது. பெருமாள் பின்னால் எட்டிப் பார்த்தான். பலவிதமான விழிகள் அவனைப் பார்த்தன. பிதுங்கியவை, சிவந்தவை, உந்தி வெளியே தெறித்தவை, மினுமினுப்பானவை.

'என்னலே?' என்றார் வாயைத் துடைத்தபடி பண்டாரம்.

'மோலாளி, நக்கல் பண்றானுக...'

'ஆரு?'

'இவனுக...'

'இதுகளா? லேய் அதுகளுக்கு ஆத்மா இல்ல. அறிவும் இல்ல. உனக்கெங்கே போச்சு. அதுகிட்ட வாயக் குடுப்பியா? வண்டிய எடுலே. ஒடனே நிறுத்திப்பிட்டாம் பாரு.'

வண்டி கிளம்பியது.

வண்டி தரையில் இலேசாக முட்டும் தாளம். பிறகு மாங்காண்டி சாமியின் குரல் எழுந்தது.

'நேசம் அறிஞ்சவரே
நெஞ்சம் மறப்பாரோ
பாசம் பிணைஞ்சபின்னே
ஞானத்தங்கமே- பெரும்
பாவம் புரிகுவரோ?'

'சூத்த மூடிட்டு வாறியா இல்லியா?' என்றான் வண்டிமலை. மாங்காண்டி சாமி அதைப் பொருட்படுத்தவில்லை.

'கண்ணீர் மாலையிட்டு
கைமேல கையடிச்சு
பெண்ணெனக்கு சொன்னதெல்லாம்
ஞானத் தங்கமே- வெறும்
பேச்சோ சத்தியமோ?'

அவரது குரல் கணீரென்று இருந்தது. வண்டியின் இயந்திர இரைச்சல் தகர குலுக்கல் எல்லாவற்றையும் தாண்டி காதை நிறைத்து ஒலித்தது.

'ஊணும் எறங்கல்லியே
உறங்கத் தோணலியே
பூணும் அணியெல்லாம்
ஞானத் தங்கமே- சுட்ட
புண்ணாக எரியுதடீ!'

பண்டாரம் டெம்போ விலாவில் தாளமிட ஆரம்பித்தார். வண்டிக்குள் ஒலித்த வலிமுனகல்களும் சாபங்களும் வசைகளும் அடங்கி அந்தப் பாடலே வண்டியை எடுத்துச் செல்வது போலிருந்தது. பண்டாரம் பதினேழு வருடம் முன்பு பழனியில் எட்டு ரூபாய்க்கு மாங்காண்டி சாமியை வாங்கினார். ஒரு கையும் இரண்டு கால்களும் இல்லாத வெறும் உடம்பு. சிறிய தலை. எப்போதும் சிரிப்பது போன்ற முகபாவமும் ஒளிரும் சிறு கண்களும். மாங்காண்டி சாமிதான் பண்டாரத்தின் தொழில் அபிவிருத்திக்குக் காரணம் என்று அவருக்கு உள்ளூர நம்பிக்கை உண்டு. அதற்குமுன் இரண்டு உருப்படி வாங்கினார். ஒன்று செத்துப்போய்விட்டது. ஒன்றை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள். ஏக்கியம்மையின் தாலியை விற்று இதை வாங்கி 'என்னப்பனே முருகா' என்று கண்ணை மூடிக்கொண்டு வேலப்பகோயில் படிகளில் போட்டார். தினம் ஏழு எட்டு ரூபாய் வரை வர ஆரம்பித்தது. கடன்கள் அடைந்தன. வீடு கட்டினார். வேறு உருப்படிகள் வாங்கினார். மாங்காண்டி சாமி முகத்தில் விழித்தால் ஐஸ்வரியம் பெருகும் என்று நம்புகிறவர்கள் உண்டு. தினமும் ஒரு நாணயமாவது சாமிக்கு, கொடுத்தாக வேண்டும்

என்று நினைப்பவர்களும் உண்டு. நாகராஜா கோயிலில் சாமிக்கு தினம் நூறு ரூபாய்க்கு குறையாமல் வசூலாகும். அதற்கென்றே ஒரு ஆளை காவல் போட வேண்டும்.

மாங்காண்டி சாமி விதவிதமாகப் பாடுவது இல்லை. அது பக்திப்பாடல் பாடி பண்டாரம் கேட்டதே இல்லை. கைக்கு வந்தபோது சில குணங்குடியார் பாடல்கள் பாடும். எல்லாமே நாயகி பாவத்தில் விரகதாபப் பாடல்கள். பிறகு அதுவே பாட ஆரம்பித்தது. மீண்டும் மீண்டும் அதேதான். 'என்னை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி சத்தியம் செய்தாய். விட்டுவிட்டுப் போய் விட்டாய். எனக்கு இந்த உலகமே எரிகிறது. எல்லாமே கசக்கிறது. நான் உன்னுடன் வந்து விடுகிறேன். என்னையும் அழைத்து செல். என்மீது இரக்கமில்லையா?' சாமியின் குரலில் நெகிழ்வோ அழுகையோ இருப்பதில்லை. எப்போதும் ஒரே கணீர் மணிக்குரல்தான். ஆனால் அந்தப் பாடல் விரிய விரிய பண்டாரத்திற்கே மனம் முழுக்க துக்கம் நிரம்பி விடும்.

'கண்ணீரில் வச்ச கடன்
காதலிலே நின்ற கடன்
பெண்ணெனக்கு பெரிசல்லோ
ஞானத்தங்கமே- இனி
பேசிப் பயனென்னடீ?'

'பேசிப் பயனென்னடீ?' என்று மீண்டும் மீண்டும் சாமி பாடியது. பிறகு வெகுநேரம் தாளம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. தாளம் நின்றபோது வண்டிக்குள் எல்லா உருப்படிகளும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தன. மூச்சு ஒலிகளின் சீறல்கள் மட்டும் கேட்டன.

பண்டாரம் திரும்பி சாமியைப் பார்த்தார். அது பிற உருப்படி களுக்கு மேலே போடப்பட்டிருந்தாலும் வண்டியசைவில் விழுந்து ராசப்பனின் கால்களுக்கு இடையே கிடந்தது. மணிக் கண்கள் மட்டும் தெரிந்தன. ஏதோ பெரிய வேடிக்கையில் மகிழ்ந்து அப்படியே நிரந்தரமாகிவிட்ட முகம்.

# 4

பழனியில் வண்டி நுழையவே போராட வேண்டியிருந்தது. டிராபிக் போலீஸ் தாறுமாறாக கைகாட்ட ஆட்டோக்களும் ஜீப்புகளும் டிரக்கர்களும் லாரிகளும் மாறி மாறி வீரிட்டலறிய படி புகை கக்கி நின்று அதிர்ந்தன. வெயில் நன்றாகச் சரிந்து விட்டது.

'இக்கணக்கில மலயடிவாரம் போறதுக்கு ராத்திரி ஏறிப் போடும் மோலாளி' என்றான் பெருமாள்.

'பாருடே, வல்ல இண்டும் இடுக்கும் இல்லாமலா இருக் கப்போவுது?'

எல்லா வண்டிகளிலும் பக்தர்கள். சடைமுடிகள், சுருள் முடிகள், தாடிகள். எல்லாம் மலையடிவாரத்தில் குவியப் போகின்றன.

'இந்த முடி அம்பிடயும் வாரி என்னடே பண்ணுதான்?' என்றார் பண்டாரம்.

'மோலாளி, அது வெள்ளக்காரன் திங்குதான்லா?'

'போலே, போக்கத்த பயலே.'

'உம்மாணை மோலாளி. உள்ளதாக்கும். நான் தந்தி பேப்பரில வாசிச்சதாக்கும். முடிய கொண்டுபோயி வெளுக்க வச்சு எறச்சி மாதிரி ஒரு சாதனமா ஆக்கிப்போடுதான். பயங்கர சத்தாக்கும். முண்டாவும் கசரத்தும் எடுக்குத பயில்வானுக திங்கியானுக. அர்னால்டுன்னு ஒருத்தன், கேட்டியளா, இந்தால பத்தாளு சைசு.

கலியுக பீமன். அவன் திங்கியது இதாக்கும்.'

'போனா மனியனையே திம்பான்லேய்.'

'தின்னான்னாக்க நாம வெட்டி பதம் போட்டு கேத்தி அனுப்புவோம். நல்ல கெட்டி எறச்சி. என்னா வண்டிமலை?'

வண்டிமலை சிரித்தான்.

வண்டி சந்துகளில் ஊடுருவி அடிவாரத்தில் ஒரு பழைய கல் மண்டபத்தை நெருங்கியது. 'இங்க இறக்குடே. பிறவு பாக் கலாம்' என்றார் பண்டாரம்.

வண்டியை நிறுத்தியபோது எல்லா உருப்படிகளும் நல்ல தூக்கத்தில் இருந்தன. மலமும் மூத்திரமும் நாறியது. 'சவத் தௌவுக நாறி ஊறிப் போச்சே' என்றான் பெருமாள்.

'பன்னிக மாதிரி' என்றான் வண்டிமலை.

'அதுகளுக்கு என்னலே தெரியும்? ஆத்மா இல்லாத சீவனுக. திங்கும், தூறும். வேற என்ன. எறக்கிப் போடுங்கடே.'

ஒவ்வொருத்தரையாக தட்டி எழுப்பினார்கள். ராமப்பனும், குய்யனும், குருவியும், சந்திரியும் தானாகவே தவழ்ந்து இறங்கி விட்டனர். காக்கா, தொரப்பன், எருக்கு மூன்று பேரும் சிறிய கைத்தாங்கலில் இறங்கிவிட்டனர். மற்றவர்களை தூக்கி வெளியே போடவேண்டியிருந்தது. மாங்காண்டி சாமி விழித் திருந்தது. அது தூங்குவதேயில்லை.

'இறக்கி ஓரமா வையுங்கடே. அது ஆருக்க செற்றுடே பெருமாளு?'

மண்டபத்தில் இருபது இருபத்தைந்து உருப்படிகள் கிடந்தன. காவலுக்கு முண்டாசு கட்டிய ஒருவன் கையில் கம்புடன்.

'ஆருக்க உருப்படிகடோய்?' என்றான் பெருமாள்.

'ஏனு?' என்றான் அவன்.

'உருப்படி எந்த ஊரு?'

'தாவண்கெரே' என்றான் அவன்.

'அவன் மூக்கில வளையத்தைப் பாத்தியா. கன்னடத்துக் காரனாக்கும்.'

'இம்பிடு தூரம் வாரானுக...'

'பின்ன என்னான்னு நினைக்கே? சிலசமயம் நாக்பூர் சரக்கு எறங்கும் பாத்துக்கோ. இதுக்கும் அதுக்குண்டான கணக்குகள் உண்டு.'

'நீ இஞ்ச நின்னுக்கடே. வேய், வண்டிமலை கண்ணு மாறாம பாத்துக்கிடணும், கேட்டேரா. கள்ளனுவ அலையுதானுக.'

வண்டி கிளம்பிச் சென்றது. உருப்படிகள் மண்டபத்தில் பலவிதங்களில் தவழ்ந்து விலகி பரவி அமைந்தன.

மாதவப்பெருமாள் 'வேய் வண்டி, நான் போயி குளிச்சுப் போட்டு ஒரு நாலு இட்டிலி பிச்சுப்போட்டு வாறன். நீரு பிறவுபோய் எரிவெள்ளம் மோந்தலாம். கேட்டேரா' என்றபடி சென்றான்.

அவன் போனதும் உருப்படிகளின் குரல்கள் ஒருசேர எழுந்தன. முத்தம்மை ஒரு மூலையில் குழந்தையுடன் அமர்ந்தவாக்கில் சாய்ந்து பால் கொடுத்தாள்.

'இது ஆருக்க வித்தாக்கும்?' என்றான் குய்யன். 'பாத்தா கிணுகிணுண்ணுல்லா இருக்குவு?'

'இது நம்ம தொரப்பனுக்குள்ளதுல்லா? அவனாக்குமே இவளை அணைஞ்சது. விளி அவனை.'

தொரப்பன் இரு கண்களும் இல்லாத கூனன். முதுகு ஒரு பெரிய வண்டின் மேல்பக்கம்போல வழவழப்பாக இருந்தது.

'லேய், தொரப்பா லேய்...'

'என்ன மாதாவே!'

'மாதா உனக்க மத்தது. வேய் உமக்கு வாரிசு மொளைச் சிருக்குவே...'

தொரப்பன் 'மாதாவே' என்றார்.

‘வக்கப் பிடிச்சாலும் கியா கியா. வளக்கப் பிடிச்சாலும் கியா கியா. பிலேய் உம்ம வித்தாக்கும்.’

‘இவனோ?’ என்றார் ராமப்பன்.

‘பண்டாரத்தாரு ஆளு கிண்ணனாக்குமே. கையும் காலும் நிரப்பா உள்ளவனுங்களை அணைய விடமாட்டாரு. ஏழு வரியமாட்டு அணைஞ்சது மத்தவனாக்கும். சுப்பு பிள்ளை. அவனையில்லா போன வரியம் குருவாயூரில வில குடுத்தது. பிறகு இவன். நல்ல சரீரம்லா...’

குய்யன் சிரித்தான். ‘பின்ன ஈரோயினிய ஈரோ லவ்வு பண்ணும்பம் ஒரு பிரச்சினையும் இல்ல. கண்ணிருந்தா கத வேறயில்லா.’

ராமப்பன் ‘லே தொரப்பு, பெயலுக்கு ஒரு தங்க மோதிரம் போடும்வே’ என்றார்.

தொரப்பு உதடுகளுக்குள் வேகமாக ‘மாதாவே, மாதாவே’ என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

‘பட்டத்து இளவரசரு இப்பம் பாலு குடிச்சுப்போட்டு நல்ல உறக்கமாக்கும். வேய் பாத்தா உம்ம சேலுதான். ஐசரியமுள்ள மொகம். சிரிச்சா உம்ம கலையாக்கும். ஒரு தேஜசு... ஏது? அதாக்கும்...’ குய்யன் சொன்னான்.

‘விடும்வேய்’ என்றார் ராமப்பன். ‘இஞ்ச வல்லதும் திங்க குடுப்பானுவளா, இல்ல ராத்திரிக்கு ராம நாராயணாயதானா? வேய் மல்லரே வேய்...’

‘ஏம்வேய்?’ என்றான் வண்டிமலை.

‘ஒரு நாலு வடயும் கடுங்காப்பியும் வாங்கி வாரும் வேய்.’

‘பைசாய்க்கு எங்க போறது? உம்மட்டே இருக்கா?’

‘பைசா விளையுத மரமிருக்குவே...’

‘குடும்’ என்றான் வண்டிமலை.

‘நீரு அந்தால போவும். பைசா தாறன்.’

வண்டிமலை ரோட்டில் இறங்கி நின்றான். ராமப்பன் தன் தொடையில் இருந்த பெரிய ரணத்தில் பட்டையாக உரிந்து பிளந்து நின்ற தோலுக்கு அடியிலிருந்து மூன்று ஐந்து ரூபாய் நாணயங்களை எடுத்தார். ஈரம்போக அதை நன்றாகத் துடைத்து விட்டு 'வேய் இந்தாரும்' என்றார்.

'எங்கவே வச்சிருந்தேரு?' என்றான் வண்டிமலை.

'ஆ நம்ம ஒடக்கு நாராயணிக்க மணிப் பேர்ஸிலே. பாக்குதீரா வேய், மணிப் பேர்ஸை?'

குய்யன் பயங்கரமாகச் சிரித்தான்.

'அஞ்சு ரூவா நீரு வச்சக்கிடும். நல்லதா நாலு வடை. ரெண்டு கடுஞ்சாயா.'

வண்டிமலை பைசாக்களை வாங்கி முகர்ந்து பார்த்து முகம் சுளித்தபடி போனான். மண்டையன் ஒலியெழுப்ப ஆரம்பித்தது.

'போச்சுடா ராமா. வடை திங்க ஏத்த மணம்' என்றார் ராமப்பன்.

மறுபக்கம் கூட்டத்திலிருந்து ஒரு குரல். 'ராமப்பண்ணா... ஆளு இருக்கேரா?'

'ஆருடே அது?'

'அண்ணா... நானு சிங்கியில்லா.'

'அங்களம் முடிஞ்ச பயலே. எங்கலே போனே?'

'அது ஆச்சு அஞ்சாறு வரியம். ஒரு சுத்து சுத்தி வந்தாச்சு. இப்பம் இவனாக்கும் நம்ம ஓனரு. ஒரு கன்னடக்காரன் ராவு, குங்குமக்குறி போட்டுட்டு வருவான். அத்து முடிஞ்ச பாவி. அர வாயிக் கஞ்சி குடுக்கமாட்டான். இந்தா நிக்கானே இவன் பேரு கவுடா.'

'கெருடனா?' என்றான் குய்யன்.

'கவுடா. கவுத்துப்போடுவான். அப்பிடியாப்பட்ட ஆளு. ஒருவாய் வெள்ளத்துக்கு வழியில்ல.'

'மாத்தாடு பேடா' என்றான் கடுக்கன் ஆசாமி.

'பாத்தியளா? இதான். மாத்தாடு பேடா... மாத்தாடு பேடா. வாங்கிட்டு வாறதில ஒரு வட இப்பிடி தள்ளுங்க பழைய தோசம்னுட்டு.'

'அந்த வெள்ளம் வாங்கி வைடே சிங்கிமுத்தா. அப்படி வருதா வண்டி?'

வண்டிமலை பொட்டலத்துடன் வந்தான். டீயை போணியில் ஊற்றி ராமப்பன் அருகே வைத்தான். ராமப்பன் ஒரு வடையை குய்யனுக்கு தந்துவிட்டு ஒன்றை சிங்கியை நோக்கி எறிந்தார்.

'நாட்டுல பஞ்சம் பெருத்துப் போச்சு அண்ணாச்சி. வடையும் எளச்சுப் போட்டே.'

'உனக்க வாய் எளைக்காதுடே சிங்கி.'

'மாத்தாடு பேடா' என்றான் கடுக்கன்.

'போடா' என்றான் குய்யன்.

'ஏனு?'

'உங்கம்மைக்கு இருவத்தெட்டு.'

'கொத்தில்லா.'

'உன் அப்பன் தெரியுமா?'

'கொத்தில்லா.'

'அப்பிடி போடு. மூஞ்சப் பாத்தா தெரியுதே' என்றார் ராமப்பன்.

குய்யன் உரக்கச் சிரித்தான். வண்டிமலை ஐந்து ரூபாய்க்கு அரிஷ்டம் சாத்திவிட்டு வந்திருந்தான் போல. இருமுறை ஏப்பம் விட்டான்.

இருள் பரவ ஆரம்பித்தது. கொசுக்கள் படைபடையாக எழுந்து மண்டபத்தில் நிரம்பின. பிரம்மாண்டமான யானைக் கால்களை படிகளில் நீட்டி வைத்திருந்த ஒருவன் கன்னடத்தில் ஏதோ பாடினான்.

முத்தம்மையின் குழந்தை விழித்தெழுந்து கதறி அழுதது. அவள் ஒற்றைக்கையால் அதைத் தூக்கி தன்னருகே இறுக்கி 'லூலூலூ...

என் மாராசா... என் மாராசா இல்லே... சக்கர ராசா... பூலோக ராசா...' என்று கொஞ்ச ஆரம்பித்தாள்.

'அண்ணா' என்றான் தொரப்பன். 'அது ஆரு நம்ம குழந்தையா?'

'நம்ம குழந்தை இல்லவே. உம்ம குழந்தை.'

'மாதாவே...'

'அருவில செண்ணு தொட்டுப் பாக்கேரா?'

'வேண்டாம் மாதாவே.'

'வேய், வல்ல விதமும் இளைஞ்சு அருவத்தில போவும். பெத்த பிள்ளையில்லா வேய்.'

'வேண்டாம் மாதாவே.'

'ஏமிட்டி முத்தம்மா, நீ அந்த நண்டுக் குஞ்சை இங்க குடுட்டீ. தந்தையானுக்க கை அதுமேல படட்டு.'

'சீ, கைய மாத்து சீக்குகாரப் பயலே. உனக்க குஷ்டத்த பிள்ள மேல வக்குதியா?'

'ஆமா உனக்க பிள்ள சுந்தர குட்டப்பனுல்லா. எளவுக்கு தலயக் கண்டா பனங்கா மேதிரி இருக்கு. குஷ்டம் மட்டுந்தேன் குறவு. பேசுதா பாரு...'

'நவரும் வேய்' என்றாள் முத்தம்மை.

'வேய் கடிச்சான்னு சொன்னா காக்கிலோ கறிய எடுத்து போடுவா. நவுந்து கெடயும்...' என்றான் மயில்சாமி.

'நமக்கென்னவே. அப்பன் பிள்ளைய தொட்டு பாக்கட்டு எண்ணு நினைச்சேன். அதொரு சொகமாக்கும். நமக்கு பிள்ளைய பிறந்திட்டுண்டு. எலிக்குஞ்சு கணக்கா இருக்கும். ஒரு மணம் உண்டுவே. அத மோந்தவன் செத்தாலும் மறக்கமாட்டான். பட்டிக்குட்டி பூனைக்குட்டி எல்லாத்துக்கும் உண்டு அந்த மணம். அது கெர்ப்ப மணம். அதாக்கும் சொர்க்கத்துக்க மணம். சாவக் கிடக்கும்பம் நம்ம மூக்கில கடேசியாட்டு வாற மணமாக்கும் அது. வேய் தொரப்பு பாரும்வே...' என்றார் ராமப்பன்.

தொரப்பன் 'மாதாவே!' என்றார்.

‘இவனும் இவனுக்க மாதாவும்’ என்றபடி ராமப்பன் மெல்ல காலை நீட்டினார்.

‘நல்ல வெயிலுண்டு கேட்டியாட்டி?’ என்றாள் எருக்கு. குருவி ‘கிக்கிக்’ என்று சிரித்தது. அவளிடம் யார் என்ன பேசினாலும் அவளுக்குச் சிரிப்பு வரும்.

‘போன பூசத்துக்கு சிணுசிணு மழை. இப்பம் கறுத்து காஞ்சு கெடக்கணும்லா தோணுது.’

‘செவப்பு கலரு வாற மருந்துண்டு எருக்குக்குட்டியே. வாங்கி பூசு... சரோஜாதேவி மாதிரி இருப்பே.’

‘ஏன் நாங்க பூசப்படாதோ?’

‘பூசலாமே. இண்ணேற்று கண்டியா ஒரு வெள்ளைப் பன்னி. அது மருந்து பூசின பன்னியாக்கும். அதுக்க பவுறக் கண்டியா?’

மாதவப்பெருமாள் வந்தான். குளித்து ஈரத்தலையுடன் இருந் தான். தெருவிளக்குகள் பனிப்புகை வட்டத்திற்குள் சிவப்பாக எரிந்தன. ஒரு நாய் வந்து சேர்ந்தது. ராமப்பன் கம்பால் அதை அடித்தார். வள்ளென்று விழுந்து ஓடியது.

வண்டிமலை உட்கார்ந்த வாக்கில் குப்புறச் சரிந்திருந்தான். ‘வேய் வண்டிமலை வேய்’ என்று பெருமாள் தட்டினான்.

வண்டிமலை எழுந்து ‘உம்ம்?’ என்றான்.

‘அது செரி. இவனிட்ட ஏதுலே பைசா?’

‘என்னத்துக்கு பைசா?’ என்றான் குய்யன். ‘அவரு செபமுல்லா செய்தாரு?’

‘அடி பின்னிப் போடுவேன் பாத்துக்க.’ பெருமாள் உட் கார்ந்தான்.

‘நாடாரே, நல்ல தோச மணம் வருதே?’ என்றான் குய்யன்.

‘பல மணமும் அப்படி வரும்வே. மோந்து பாக்கேரா?’

‘ஆளுக்கொரு தோச சொல்லும்வே.’

‘ஒருநாள் திங்காட்டி ஆரும் சாவமாட்டாவ. கெடவும்வே.

என்னமோ சேத்து குமிச்சு வச்சிருக்க மாதிரில்லா கேக்கேரு. உறங்குங்க... உம்...'

பெருமாள் தூணில் சாய்ந்து அமர்ந்து ஒரு பெரிய சுருட்டை எடுத்து நுனியைக் கடித்து மென்றான். துப்பிவிட்டு முகர்ந்து பார்த்தான். மெதுவாகப் பற்றவைத்து இழுத்தான். தூரத்தில் சைரன் ஒலி கேட்டது.

'மணி ஒம்பது. பாதி ராத்தரியில படி கேறிப் போடணும். ஒறங்குதவிய ஒறங்குங்க' என்றான் பெருமாள்.

சிங்கி, 'அண்ணோவ் ஒரு சுருட்டு கேட்டு பாரு' என்றான்.

'ஆருலே அது?' என்றான் பெருமாள்.

சிங்கி அமைதியானான்.

'நிம்ம ஊட்ட ஆயித்தா?' என்றான் கடுக்கன்.

'ஆமா.'

'நானு மாட்லில்லா.'

'செரி, போயிட்டு வாரும்.'

'பேக பர்த்தேனே... ஒந்து நிமிஷா.'

அவன் போனதும் கன்னடப் பேரொலி வெடித்துக் கிளம்பியது.

'அடக்கியாடே வச்சிருந்தானுவ? என்னமோ ஆட்டு மந்தை கணக்காட்டுல்ல எரம்புதானுக...'

நல்ல பனி இருந்தது. உருப்படிகள் மெல்ல ஓர் உடலோடு பிறிது உடல் ஒட்டி ஒரே சதைப் பரப்பாக மாறி ஒண்டிக் கொண்டு தூங்கின.

சைக்கிளில் போன ஒரு போலீஸ்காரர் இறங்கி ஸ்டாண்ட் போட்டுவிட்டு லத்தியுடன் வந்தார். பெருமாள் எழுந்து நின்றான்.

'ஆருடா?'

பிச்சைக்காரனுவ.'

'நீரு?'

'நான் கூட்டுக்கு...'

'ஓனரா?'

'இல்ல, காவலுக்கு.'

'உம்' என்றார் அவர். லத்தியை இருமுறை தட்டினார். 'மண்டபங்கள்ல தங்கப்படாது.'

பெருமாள் இருபது ரூபாயை அவரிடம் நீட்டினான்.

'உருப்படி அம்பதுக்கும் மேல இருக்கும் போல இருக்கேடா.'

'அது வேற சார். அவன் இந்தா வாறண்ணுட்டு போனான்.'

அவர் டார்ச் அடித்து உருப்படிகளைத் துழாவினார்.

'எல்லாம் சப்பாணி மொடம் சார்.'

'பயலுக இல்லியாடா?'

'பயக்களாட்டு இல்ல சார். மண்டையன், மாங்காத்தலை இந்தமாதிரி...'

'எழவு, விடு.' டார்ச் ஒளி நின்றது. 'அதாருடா?'

'அது எருக்கு. பெண்ணாக்கும்.'

'அத கூப்புடு. ஏட்டு சார் கேட்டாரு.'

'அதுக்கு காலு இல்ல சார்.'

'காலு என்னத்துக்குடா? தூக்கி கேரியரில வை.'

பெருமாள் உடல்கள் நடுவே சென்று எருக்கை அடித்தான். 'எந்திரிட்டி எந்திரிட்டி' என்றான்.

எருக்கு பயந்துபோய் எழுந்து 'அய்யோ அய்யோ நாயி' என்றாள்.

'எந்திரிட்டி' என்றான் பெருமாள்.

'என்னா ஒடயோரே?'

'ஏமான் விளிக்காரு. நீ ஒரு நடை போயிட்டு வா.'

'ஒடயோரே, எனக்கு தேக சொகமில்லை.'

'சீ... எந்திரிட்டி சவமே.' என்று ஓங்கி உதைத்தான். அவள் கையை ஊன்றி எழுந்து அமர்ந்தாள். அப்படியே தூக்கிக் கொண்டுவந்து சைக்கிளில் உட்கார வைத்தான். 'பிடிச்சுக்கோ' என்றான்.

'மாணிங் ஸ்டேஷனுக்கு வந்து எடுத்திட்டு போடா' என்றார் போலீஸ்காரர் சைக்கிளைத் தள்ளியபடி. 'எதுக்குடா கண்ணகி அழுறா?'

எருக்கு உடனே தேம்பி அழ ஆரம்பித்தாள்.

'ஒண்ணுமில்லட்டி. தைரியமாயிட்டு போ. மனுசங்கதானே? கடிச்சா திங்கப் போறாவ?'

'கெராக்கிப் பார்ட்டின்னு தோணுது' என்றார் போலீஸ்காரர். 'உங்க ஓனரை எஸ்ஐயை பாக்கச் சொல்லு. ....த்த நிப்பாட்டு. என்னா அளுகையும் ஒப்பாரியும். நிப்பாட்டு பிள்ள. இல் லேண்ணா மொகரயில போட்டுருவேன்.'

சைக்கிள் தள்ளாடியபடி சென்றது. பெருமாள் திரும்ப அமர்ந் தான். யாரோ பார்ப்பதுபோல இருந்தது. மாங்காண்டி சாமிதான். அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

# 5

நள்ளிரவு தாண்டி டெம்போ டிராவலர் ஒளியைச் சீற்றியபடி வந்து இரைந்து நின்றது. ஒளிபட்டதும் பெருமாள் எழுந்து நின்றான். பண்டாரம் இறங்கி வந்து தள்ளாடி ஏப்பம் விட்டார். நீளமான சில்க் ஜிப்பாவும் மல்வேட்டியும் அணிந்திருந்தார். வண்டிக்குள் இருட்டு.

'ஏலேய்... பெருமாளு...' என்றபடி வேட்டியை இறுகக் கட்டியபடி வந்தார். பிராந்தி வாசனையும் மல்லிகைப்பூ சென்ட் வாசனையும் எழுந்தன. 'மலை ஏத்திடுவமாடே?'

'மேலாளி போங்க. நான் ஏத்திபுடுதேன். இதுக்காட்டி வரணுமா?'

'வண்டிமலை எங்க?'

'அவன் காலம்பறதான் மோலாளி வருவான். இது ஒரோண்ணா நான் தனியாட்டு ஏத்திப்பிடுவன்.'

'காரு அனுப்புதேன்டே.'

'மோலாளி, போலிசு வந்தான். நூறு ரூபா குடுத்தேன்.'

'நூறு ரூபாயா?'

'மூணு பேருண்டு மோலாளி.'

'எளவெடுத்தவனுக. சீவிக்க விடமாட்டானுக.'

'எருக்க எடுத்துகிட்டு போனாவ...'

பண்டாரம் தெளிந்தார். ஒருகணம் அவருக்கு ஒன்றும் புரிய வில்லை. பிறகு 'எரப்பாளி மவனுக... பிலேய் அது நட்டெல்லு ஒடிஞ்ச குட்டில்லா? எருமைக கேறி எறங்கினா செத்துப் போயிரும்வே.'

'நான் என்ன மோலாளி செய்யியது? அவிய மூணாளு. காலம்பற டேசனுக்கு போவச் சொன்னாவ.'

'ஆரு நானா?'

'ஆமா. எஸ்.ஐ ஏமானைப் பாக்கணுமாம்.'

'சொயம்பு கதை. பிச்சை எடுக்குத பெருமாளு. பிடுங்கி திங்குத அனுமாரு.'

உள்ளேயிருந்து ராமப்பன் 'எலை நக்குத நாயிக்கு, வாயி நக்குத மறுநாயி' என்றார்.

'ராமப்பா, வேண்டாம் கேட்டியா?' என்றான் பெருமாள்.

உருப்படிகள் எழுந்துவிட்டன. குழந்தை வீரிட ஆரம்பித்தது. முத்தம்மை அதை எடுத்து 'ங்க்கு ங்க்கு குடுக்கட்டா என் ராசாக்குட்டிக்கு, இங்கு குடுக்கட்டா...' என்றாள்.

'அப்பம் காரியங்க மொறெ போலே' என்றார் பண்டாரம். வண்டியை நோக்கி அவர் திரும்பியதும் உள்ளே ஒரு பெண் குரல் 'ஒண்ணுக்குப் போணுமே வாத்தியாரே' என்றது.

'இரு குட்டி. உனக்கு ஒண்ணுக்கு பிடிக்கியதுல்லா எனக்க சோலி?' என்றபடி பண்டாரம் கதவைத் திறந்தார். உள்ளே இன்னொரு பெண் கிணுகிணுவென்று சிரித்தாள்.

கார் சீறிப் போயிற்று. பெருமாள் 'நடக்கக்கூடியவிக எந்திரிங்கடே' என்றான்.

ராமப்பனும் குய்யனும் உடனே எழுந்துவிட்டார்கள். 'அப்பம் அதைச் செய்யும் மேஸ்திரி. இங்கன கொசுவில கெடந்து சாவாம. படியில கெடந்தா நாலாளு மொகத்தயாவது பாக்கிலாம்.'

'மொகம் பாக்குத வயசே...' என்றாள் சணப்பி.

'பின்ன உனக்க சப்ப முகத்தயாட்டி பாக்கியது? குட்டி நீ ஒண்ணு நினைச்சுக்கோ. வயசு முத்தி பளுத்தாலும் செரி, சீக்கு வந்து சீரளிஞ்சாலும் செரி, ஆம்பிளை கண்ணுல ஆச எறங்காது. பின்ன இந்த பூமியில வேற என்ன சந்தோசம்ட்டி மனியனுக்கு மிச்சம்? இல்ல சொல்லு.'

'அப்பிடி என்னதான் பாப்பியழளா?'

'மொகம், சுண்டு, நெஞ்சு, வயிறு, காலு, ஏன் காலில உள்ள மண்ணைப் பாக்கப்பிடாதோ? எல்லாம் அளகுதான். பாக்கிற மாதிரி பாக்கணும். மனசில தாகம் இருக்கணும்னுட்டு முந்தி ஒரு பண்டாரம் சொல்லுவான். தாகம் குட்டி. தாகம்னா தண்ணித் தாகம் இல்ல. தொண்டைக்கு உள்ள தாகம் இல்ல...'

'கம்பில உள்ள தாகமாக்கும்...?'

'உனக்ககிட்ட சொன்னேன் பாரு. ஏட்டி இந்த சரீரத்தில் தாகமும் சூடும் எம்பிடு நாள் இருக்கும்ங்கியே? அம்பது தாண்டினா பிறகு சங்கதி மனசிலயாக்கும். மாங்காண்டி சாமி கிட்டே கேளு. ஆத்மாவுக்க தாகம்னு சொல்லுவாரு...'

'சலம்பாம வாறியளாடே?' என்றான் குருவியைத் தூக்கிக் கொண்டு நடந்த பெருமாள்.

'நீரு போவும்வே... பிச்சைக்காரனுக்ககிட்ட வேளம் செல்லிட்டு. போலீஸப் பாத்தா நனைஞ்ச கோளி மாதிரி நின்னீரு...'

'ராமப்பனுக்கு வெரலைப் பாத்தா வில்லு நாணேறும் தெரியுமா குட்டி...' என்றான் குய்யன்.

ராமப்பன் 'ஹெஹெ' என்று சிரித்தார்.

'வெரலையா?'

'ஆமாட்டி. கை வெரலு காலு வெரலு. நல்ல சிப்பி நகமும் செவப்பு நெறமுமா கதளிப் பழக்குலை மாதிரி காலு. வாழைப் பூ எதளு மாதிரி கையி. அதாக்கும் சாமிக்க சிருஷ்டியில டாப்பு. டாப்புண்ணா அதுதான் டாப்பு. நானில்ல... எனக்க சீக்கு வந்த அம்பிடு பேருக்கும் வெரலிலதான் கண்ணு இருக்கும் பாத்துக்கோ' என்றார் ராமப்பன்.

மலைமீது ஏறும் குறுக்கு வழியினூடாக நடந்து சென்றார்கள். பெருமாள் மூச்சு வாங்கினான். ராமப்பன் 'நல்ல பனியாக்கும் கேட்டியா' என்றார்.

'பனியிருந்தா வெயிலும் உறைக்கும்' என்றான் குய்யன்.

கீழே காவடியாட்டம் நடக்கும் ஒலிகள். பெட்ரோமாக்ஸ் விளக்கொளியின் சட்டங்கள் வானில் அசைந்தன. நிழல்களும் மனிதர்களும் கலந்து ஆடுவதை ராமப்பன் நின்று பார்த்தார். 'இந்த பெயக்களுக்கு உறக்கமும் இல்லியா?' என்றார் காறித் துப்பியபடி.

'எப்பிடி உறங்குவானுக? பக்தில்லா குண்டில கிருமி கடிக்குது?'

'வாறியளா இல்லியா' என்றான் பெருமாள்.

'வாறம்வே பெருமாளு. என்னமோ மருத்துவா மலைய தூக்கின குரங்கு கணக்கால்ல பெடயுதீரு? சுட்ட கருவாடு கணக்கா இருக்குதா. அவளை தூக்க இந்தப் பாடு...'

படிகளில் காலியாக இருந்த இடங்களில் ஒவ்வொருவராக அமர்த்தினார்கள். ராமப்பன் போய் ஒரு வளைவில் அமர்ந்து தன் தடியை சரித்து வைத்தார். 'பஸ்டு எடம்டே குய்யா.'

'வெயிலடிக்கும்.'

'வெயிலடிக்காம இருக்கணுமானா நீ வல்ல கொகையிலயும் கேறி இருக்கணும். பிலேய் அங்க பாத்தியா, கைபிடிச் சொவரு? நடந்து மலையேறுத அம்மணிகளில நேர்பாதி அங்க இருக்காம போவ மாட்டாளுக.'

'கோளுதேன்...' என்றான் குய்யன்.

'கழிஞ்ச பூசத்துக்கு ஒரு காலைப் பாத்தேன். வெரலு எப்படிடே, வெரலு? இஞ்ச பாரு, எறாலு மீனை தோலுரிச்சா இருக்கமாதிரி வெரலு. கண்ணாடி மாதிரிடே. எளவு எனக்கானா வெறி கேறிப்போச்சு.'

எதிரே இடம் பிடித்த சணப்பி 'வெறி வந்தா கல்லில முட்டு வீரோ?' என்று சிரித்தாள்.

குய்யன் சொன்னான், 'அய்யோட்டி, இஞ்ச பாரு ராமப் பண்ணனுக்க ஊணுகம்பை பாத்தியா. அத என்னான்னு

நெனைக்கே? இல்ல கேக்குதேன். அத எடுத்து டொக்கு டொக்குன்னு இடிக்கதப் பாத்திருக்கியா? இண்ணேத்து பாரு இடிச்ச இடியில சிம்மென்டு பேந்துபோச்சு.'

பெருமாள் 'சத்தம் போடாம கெடங்கலே' என்றான். துவர்த்தை எடுத்து முகத்தைத் துடைத்தபடி ஊடுவழியில் இறங்கிச் சென்றான்.

ஒவ்வொருவராக அவன் ஏற்றி முடித்தபோது ஓரளவு வெளிச்சம் வந்திருந்தது. ஒரு டீக்கடை திறந்துவிட்டிருந்தது. அரிக்கேன் ஒளியில் பாய்லரிலிருந்து ஆவி பறந்தது.

ஒரு டீக்கு சொல்லிவிட்டு திண்டில் அமர்ந்தான். பெஞ்சில் ஏழெட்டு பக்தர்கள் சடைமுடி தாடியுடன் டீ அருந்தினர்.

'சிங்கிளா?' என்றார் கடைக்காரர்.

'ஆமாம் சாமி' என்றான் பெருமாள். 'வெளுக்கும்பம் இந்த தெருவில எறங்கமுடியும்ணு தோணலியே. எளவு சனம் நெரியல்லா செய்து?'

'அண்ணாச்சி திந்நவேலியா?' என்றது ஒரு சாமி.

'இல்லிங்கண்ணா. நமக்கு சாமித்தோப்பு.'

'எங்க?'

'ஆருவாமொழி தாண்டி. அங்கிண...'

'கன்யாமரியா? அது செரி. என்ன தொழிலெடுக்கியோ?'

'ஏவாரம். மாட்டுத்தரவு உண்டு. உரு விக்கியது, வாங்கியது...'

'அது செரி.'

இனி முத்தம்மை மட்டும் மீதி. அவளைத் தூக்க முடியாது. வண்டிமலை வரவேண்டும். சட்டென்று பெருமாளுக்கு முள் குத்தியதுபோல ஞாபகம் வந்தது. தொரப்பனை மேலே கொண்டுவிடவில்லை. மண்டபத்தில் முத்தம்மை மட்டும்தான் கிடந்தாள்.

'அய்யோ' என்றபடி எழுந்தான்.

'என்னாச்சு?'

'உரு ஒண்ணைக் காணல்ல...' பணம் தந்துவிட்டு ஓட்டமும் நடையுமாக மண்டபத்துக்கு வந்தான். கன்னடக் கும்பல் இல்லை. முத்தம்மை மட்டும் விழித்துக் கிடந்தாள். பெரிய கரங்களின் அடியில் குழந்தையை ஒடுக்கி வைத்திருந்தாள். சற்றுத்தள்ளி ஏழெட்டு நாய்கள் நின்றிருந்தன.

பெருமாள் அதட்டி நாய்களை விலக்கினான். 'ஏமிட்டி தொரப்பன் எங்க?'

'நான் எங்க கண்டன்? நீருதானே சொமந்துட்டு போனேரு?'

'நான் கொண்டு போகல்ல. எளவு மத்தவனுவ வாரிட்டு பெய்யிட்டானுவளா?' பெருமாள் மண்டபத்தின் இரு பக்கங் களிலும் தேடினான். வெளியே ஏதோ குரல் கேட்டது.

'தொரப்பு, வேய்...'

'ஓம் மாதாவே...'

'எங்கவே இருக்கேரு?'

மறுபக்கம் எருக்கம் செடிக்கும்பலின் அடியில் தொரப்பு உட்கார்ந்திருந்தார். போன வேகத்தில் பெருமாள் எட்டி உதைத் தான். அட்டை சுருண்டு உருண்டதுபோல கூனன் உடம்பு உருண்டது.

'வேய், வேய், சொல்லியதக் கேளும்வே...' என்றார் தொரப்பு.

பெருமாள் சுற்றுமுற்றும் பார்த்தான். உடம்பு எகிறிக் கொண் டிருந்தது. ஒரு குச்சி கிடைத்தது. சரசரவென்று பிய்த்துவிட்டு வாய் தெறிக்க வந்த கெட்ட வார்த்தைகளுடன் மாறி மாறி அடிக்க ஆரம்பித்தான்.

தொரப்பு 'மாதாவே! மாதாவே!' என்று உடைந்த குரலில் வீரிட்டுக் கதறினார்.

குச்சி உடைந்ததும் வீசிவிட்டு மூச்சுவாங்க மறுபடியும் மண்ட பத்திற்குள் வந்தான். 'ரெட்சப்பட்டு போறான் குருட்டுத்தாளி. உனக்க ஆமக்கன். ரெண்டும் கல்பிச்சு கொண்ணு பூந்திப் போடுவேன் பாத்துக்க... எரப்பாளி...' என்றான். நிலைகொள்ளா மல் மீண்டும் பின்பக்கம் போனான்.

அவனது காலடியோசை கேட்டதும் தொரப்பு அவன் ஏற்கனவே நின்றிருந்த திசை நோக்கி கைகளை நீட்டியபடி உடம்பு பதற, 'மாதாவே மாதாவே' என்று கதற ஆரம்பித்தார். மார்பெல்லாம் கண்ணீராக இருந்தது.

'அடங்குவே' என்றான் பெருமாள்.

தொரப்பனின் கரங்கள் மட்டும் இயந்திரம்போல ஆடின. விசும்பியபடி அடங்கினார்.

'வேய் தொரப்பு...'

'மாதாவே'

'என்னவே உமக்கு வேணும்?'

'இல்ல மாதாவே. ரெட்சப்பட பாக்க·ல்ல மாதாவே.'

'மாதா உனக்க... பிலே...'

'நானோ கண்ணில்லா கபோதி. உமக்கு கண்ணிருக்கே வேய். நீரு பாக்கப்படாதாவே... நான் எம்பிடு தூரம்வே போவன்? எங்கிண போவன்?'

'பின்ன எங்கவே கிளம்பினீரு?'

தொரப்பு பேசாமல் இருந்தார்.

'சொல்லும்வே.'

'பிள்ளையப் பாக்க' என்றார் தொரப்பு மெல்லிய குரலில்.

'என்னது?'

'பிள்ளைய தொட்டுப் பாக்கலாமுண்ணுட்டு...'

'ஓடப்பில போட. உமக்கென்னவே இந்த ஆச?'

தொரப்பு கண்ணீருடன் புன்னகைத்தார்.

'உமக்கோ ஆத்மா இல்ல. முண்ட சென்மம். இதில பிள்ள ஆசயா? கூனும் குருடும் பெறக்கணுமின்னு உம்ம விட்டு அணைய வைய்க்குதாவ. அது உம்ம தொளிலு. அதுக்காச்சுட்டி பிள்ளை மயிருண்ணு பேசினா விடுவாளா? பிள்ளையப் பாக்க என்ன மயிருக்குவே இந்தால வந்தீரு?'

'வழி தெற்றிப்போச்சு. திரும்பி கேறவும் முடியல்ல. ராத்திரி முழுக்க இங்கிண கெடந்து எளைஞ்சேன்.'

'விளிச்சப்படாதாவே?'

'விளிச்சேல்ல.'

'ஏன்?'

'சிரிப்பாவ.'

'அது கோளு. அப்பம் வெக்கமும் உண்டு. சவம் உமக்கு இண்ணு யோகமாக்கும் கேட்டேரோ. கையில வல்ல தடியும் சிக்கியிருந்தெங்கி இண்ணு உமக்கு கைலாசமாக்கும் பாத்துக் கிடும்.'

'அப்பிடியானா ஒரு வழி தெறந்து கிட்டுமே மாதாவே.'

'உம்ம கொண்ணுப்போட்டு நான் பண்டாரத்தானுக்கு நாலாயிரம் ரூவா கடம் சொல்லணும். சீரு கததேன். மனசில இருப்ப பாரும். கேறி வாரும்வே...'

தொரப்பை தூக்கி மண்டபத்திற்குள் போட்டான் பெருமாள்.

'வேய் பெருமாளு, படியில என்னைய குளந்தை பக்கத்தில போடும்வே. எட்டு நாளெங்கி எட்டு நாள் மனியனா இருந்து சாவுதேன்.'

'சில்லர குடுப்பேரா?'

'உமக்கு வேணுங்கியத எடுத்துக்கிடும்.'

'நீரு குடுத்தா மதியா, உமக்க சோடி குடுக்கணுமே. ஏமிட்டி...?'

முத்தம்மை மெல்லிய குரலில் 'அவ்வோ புள்ளை... அவ்வோ ஆசைதானே' என்றாள்.

'பிள்ளையக் காட்டுவியா?' என்றார் தொரப்பு.

'ஒறங்குதான். பதனமாட்டு அருவில வாருங்க' என்றாள் முத்தம்மை.

தொரப்பு 'இல்லெங்கி பிறவு தொடுதேன்' என்று பின் வாங்கி விட்டார்.

'வாருங்க' என்றாள் முத்தம்மை.

'தொட்டா அவன் கரைய மாட்டானா?'

'பிள்ளைய கரையாம இருக்குமா?'

தொரப்பு மெல்ல கையை நீட்டியபடி சற்று நகர்ந்தார். தயங்கி அமர்ந்துவிட்டார். 'பிறவு பாக்கிலாம்' என்றார்.

முத்தம்மை நாய் குரைப்பதுபோலச் சிரித்தாள்.

'மாதாவே' என்றார் தொரப்பு பரவசமும் பதற்றமுமாக. 'மாதாவே! மாதாவே!'

'எங்கிணையாக்கும் இந்த மாதாவப் பிடிச்சேரு?' என்றாள் முத்தம்மை.

'நம்ம ஊரு வேளாங்கண்ணியில்லா.'

'நீரு வேதமா?'

'பின்ன? நம்ம பேரு சோசப்புண்ணாக்கும்.'

'சோசப்பா. நல்ல பேரு.'

'பேருக்கென்ன?'

'ஆளும் கொள்ளாம் கேட்டுதா?'

'கூனு குருடு...'

'அதுக்கென்ன. உம்ம சிரிப்பில ஒரு ஐசரியம் உண்டும் பாத்துக் கிடும்.'

'உள்ளதா?'

'உம்மாணை.'

தொரப்பு சிரித்தார். சிரிப்பை அடக்க மேலுதட்டை இழுத்தார். உடம்பு குலுங்கியது. 'பெய ஆரு மாதிரியாக்கும்?' என்றார்.

'உம்ம மாதிரியாக்கும்.'

'உள்ளதாட்டா?'

'பின்ன?'

'நான் தொட்டுப் பாக்கட்டா?'

'தொட்டுப் பாரும்வே. படிச்சி படிச்சில்லா சொல்லுதேன்.'

'எங்கிண தொடணும்?'

'குண்டீல.'

'குண்டியிலயா?'

முத்தம்மை பீரிட்டு சிரித்துவிட்டாள். உடம்பு முழுக்க தசைகள் அதிர்ந்தன.

பெருமாள், 'என்னவே அங்க, சிவாஜி பத்மினி லவ்வா?' என்றான்.

'செரியான லூசுவே நீரு' என்றாள் முத்தம்மை. 'நீரு இதுவரை பிள்ளியள தொட்டிட்டில்லா?'

'எங்க? நம்மகிட்ட ஆரு பிள்ளைய குடுக்காவ? ஒருக்கா ராமேஸரத்தில ஒருத்தி பிள்ளய எனக்க அருவில விட்டுட்டு போனா. தொடணும் தொடணும்னு நினைச்சேன். நினைச்சு நினைச்சு நேரம் போச்சு. மூத்திரத்தை தொட்டுப் பாத்தேன். நல்ல மணமுண்டு கேட்டியோ?'

முத்தம்மை மீண்டும் சிரித்தாள். 'நீரு வந்து தொட்டுப் பாரும்வேய். எப்படி வேணுமானாலும் தொடும். பிள்ளை உம்ம பிள்ளையில்லா?'

'பிள்ளைக்கு கண் உண்டுமா?'

'உண்டும்.'

'கூனுண்டா?'

'இல்ல. என்னைய மாதிரியாக்கும்.'

'அது சாரமில்ல. கண் இருக்குல்லா? கண்ணிருந்தா லோகம் உண்டு.'

'வாறீரா.'

'வாறேன்' என்றபடி தொரப்பு சற்று முன்னகர்ந்தார். முத்தம்மை யின் காலைத் தொட்டார். அதற்குள் அழுகை வந்துவிட்டது.

'என்னவே...'

'ஒண்ணுமில்ல. பிள்ளைன்னு சொன்னா சில்லற பாக்கியமா. மாதாவே மாதாவே...'

'அதுக்கு என்னத்துக்கு கரயுதீரு?'

தொரப்புவால் அதற்கு மேல் நகரவே முடியவில்லை. அவருடைய இடதுபக்கம் முழுக்க காற்றில் குழந்தை நிரம்பி யிருந்தது.

'இப்பம் தொடாண்டாம்' என்றார் தொரப்பு. 'பிறவு.'

'உமக்கென்னத்துக்க தீனம்?'

வெளியே டெம்போ வந்து நின்றது. அதைத் தொடர்ந்து ஒரு ஆம்புலன்ஸ் வண்டி. உள்ளிருந்து பண்டாரம் இறங்கி வேட்டியை மடித்துக் கட்டியபடி வந்தார். 'உருப்படிக மலை ஏறியாச்சாடே?'

'ஏறியாச்சு மேலாளி. முத்தம்மை கிடக்கா. வண்டிமலை வந்தா கேத்திப் போடுவேன்.'

'இதாரு தொரப்புவா. இவன் போருமே. உறப்புள்ள ஆளுல்லா.'

ஆம்புலன்சில் இருந்து வெள்ளையுடை தரித்த இருவர் இறங்கினார்கள்.

பண்டாரம், 'நம்மகிட்ட உள்ள உருப்படிகள்ல ஒரு ரோகமும் இல்லாத எட்டெண்ணத்தில ஒண்ணாக்கும் இது. பாருங்க' என்றார்.

அவர்கள் வெளியே தயங்கி நின்றார்கள். 'இளுத்துப் போடு வேய்' என்றார் பண்டாரம்.

பெருமாள் தொரப்பனை இழுத்து வெளியே படிமீது போட்டான். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

'நீங்க ஏத்திட்டுப் போங்க. மிச்சத்த நான் டாக்டர்ட்ட பேசிக்கிடு தேன். உறப்புள்ள சரீரமாக்கும்' என்றார்.

தொரப்பன் குரங்குபோல கைகளை கும்பிட்டவாக்கில் வைத்த படி குந்தி இருந்தார். பெருமாள் அவரைத் தூக்கி ஆம்புலன்சுக் குள் ஏற்றினான். அவர்கள் ஏறிக்கொள்ள ஆம்புலன்ஸ் இருமுறை இருமிவிட்டு பின்னால் நகர்ந்து உறுமி முன்சென்றது.

பண்டாரம் வண்டியில் ஏறிக்கொண்டார்.'இதைக் கொண்டு போய் கிடத்துவே. பிறவு லாட்சுக்கு வா. என்னா? வண்டி மலைய எங்கிணயும் போவப்பிடாதுண்ணு சொல்லு. படியில ஏதுநேரமும் ஆளு வேணும் பாத்துக்க. ஒண்ணு கண்ணசந்தா சாம்பிட்டு போயிடுவானுக.'

'மோலாளி போலீஸ் டேசனுக்கு போணும்லா?'

'ஆமடே பாத்தியா. சவத்தெளவு மறந்துல்லா போனேன்.'

'சரக்கு வெலையா மோலாளி?'

'ஆமடே. நல்ல உருப்படி கேட்டான். பாத்தேன். வச்சிட்டிருந்து என்ன செய்யப்போறோம். இந்த பூசத்தில குறெ சாதனங்களை வித்து கைமாத்திப் போடணும் பாத்துக்க. அந்த ராமப்பனை வித்துப் போடணுமின்னு மூணு வரியமா பாக்கேன். அது இண்ணி கூடுதல் ஓடாது. தீனியும் குறயல்ல. நீ வாகாட்டு வல்ல ஆளும் கிட்டுமாண்ணு பாரு. வெலைண்ணாக்கா உனக்கும் வல்லதும் பாத்து தாறன்' என்றபடி வண்டியில் சாய்ந்து அமர்ந் தார். வண்டி நகர்ந்தது.

# 6

காலையில் வண்டிமலை நன்றாகக் குளித்து விபூதி குங்குமம் போட்டு காதில் வில்வ இலை செருகி வந்து சேர்ந்தான்.

'ஏம்வே, எங்கவே போனீரு?' என்றான் பெருமாள்.

'நீரு போயி குளிச்சிட்டு வாரும்வோய் நாடாரே.'

'குளி... உம்ம அம்மைக்கத் தாலி. வே, இப்பம் வெட்டம் விளுந்தாச்சு. இனிமே எப்பம்வே இதக் கொண்டுட்டு போயி மேல போடுயது?'

'மறந்துபோயிட்டேன்.'

'வாரும்வேய்' என்றான் பெருமாள். ஏற்கனவே முத்தம்மையை தயாரித்துவிட்டிருந்தான். பெரிய கயிறு வலை ஒன்றில் அவளை வைத்து முடிச்சுகள் போட்டபிறகு தலைமாட்டில் பெருமாளும் கால்மாட்டில் வண்டிமலையும் தூக்கிக்கொண்டார்கள்.

'யம்மோ... பிள்ளை பிள்ளை...'

'பிள்ளை கெடக்கெட்டடி... பெரிய ராசகுமாரன். தொண்டயத் திறக்காத.'

பிள்ளையை ஒற்றைக் கையால் எடுத்து முத்தம்மை மீது போட்டான். அது வீல் வீல் வீல் என்று அழுதது. 'ரோரோரோ எனக்க ராசாவே எனக்க பொன்னு ராசாவே... அழுவாதீய ராசாவே' என்றாள் முத்தம்மை, அதை ஒற்றைக்கையால் முலையுடன் இணைத்தபடி.

இருவருமாக தூக்கியபடி நடந்தனர். அடிவாரத்தில் எல்லாம் காவடியாடுபவர்களும் மஞ்சள் ஆடைபோட்ட பக்தர்களும் குழுமிவிட்டிருந்தனர். முத்தம்மையை கடைகளின் இடுக்குச் சந்துகள் வழியாகக் கொண்டுபோக வேண்டியிருந்தது. சாக்கடையும் குட்டையுமான பின்புறச் சந்துகளில் மலம் கழிப்பவர்கள் எழுந்து முத்தம்மையின் பெரிய உடலை பீதியுடன் பார்த்தனர். ஒருவன், 'சத்தியமா ராசண்ணே, பண்ணீன்னு நினைச்சிட்டேன்' என்றான்.

மலை ஏற ஆரம்பித்ததும் முத்தம்மை உடல் வலிக்க அழ ஆரம்பித்தாள். 'எம்மோ. எம்மோ...' என்று அனத்தினாள்.

'சும்மா கெடட்டி, ஊரக் கூட்டாம.'

'வேய், குறெ நேரம் வையும்வே. அய்யோ நான் செத்தேனே... அய்யோ...'

'சும்மா கெட நாயே.'

'அம்மா அம்மா... எக்கம்மா...'

பெருமாள் அவளுடைய குருத்துக் கையை ஒரு சிறு உடை மரத்தில் ஓங்கி மோதினான்.

'அய்யோ என்றம்மோ... என்றம்மோ...'

'பேசாம வாடி நாறப்பண்ணி.'

முத்தம்மை பிறகு ஒலியெழுப்பவில்லை. உடல் மட்டும் அழுகையில் குலுங்கியது. சிலசமயம் ஓரிரு விசும்பல்கள் வெடித்தன.

'எளவு பாறைக் கனமுல்லா' என்றான் பெருமாள்.

'மூணாம் மேட்டில எறக்குவமா?'

'இங்க வச்சா போலீசுகிட்ட அடிவாங்கி சாவணும். போவும் வேய்.'

பாதி தூரம் போனதும் முத்தம்மை மீண்டும் அழத் தொடங்கினாள். 'அய்யோ எனக்கு வலிக்கே... அய்யம்மோ... வயிறு வலிக்கே.'

'கொண்ணு போடுவன் பாத்துக்க.'

'கொல்லும்வே கொல்லும்வே' என்றாள் அவள் வெறி பிடித்தது போல.

'சும்மா கெடட்டி.'

'கொல்லும்வே. கொண்ணா உமக்கு சோறு இல்ல. என்றெ தேவி... எனிக்கு வய்யல்லோ. என்றெ மாதாவே...'

'வண்டிமலை' என்றான் பெருமாள். 'மூச்சு தெவங்குதுவே.'

'எறக்கிப் போடுவமா.'

'வேண்டாம் போவட்டு.'

வண்டிமலை திடீரென்று தன் புஜங்களைப் பார்த்தான். ரத்தம்.

'ஓய்... ரத்தம்.'

'எங்க?'

'இஞ்ச பாரும்.'

பெருமாள் பார்த்தான். கொழுத்த கெட்டி ரத்தம்.

'இது மத்த ரெத்தம்வே. வாலாம ரெத்தம். பெத்து எட்டு நாளாவல்லலா. நீரு போவும்.'

'உருப்பிடி செத்துப்போவும் வே...'

'போவாது. அவ பதினேழு பெத்த பதிவுகாரில்லா. அரக்குடம் ரெத்தம் போனாலும் சாவமாட்டா. எளவு பத்து பன்னிக்க கனமிருக்குமே...'

ஒருவழியாக படிகள் தெரிய ஆரம்பித்தன. முத்தம்மையிட மிருந்து ஒலியே இல்லை.

'மயங்கிப் போட்டாளா' என்றான் பெருமாள்.

'பிள்ளய விட்டுரப் போறா.'

'அவ செத்தாலும் விடமாட்டா. வேய் ஒருக்கா இவ காரிலேருந்து விழுந்திட்டுண்டு. ஓச்சிறப் பூரத்துக்கு டிக்கில போட்டு கொண்டு

போனம். விழுந்து போட்டா. மடியில பிள்ள உண்டு. விழுந்தப் பவும் அவ சரீரம் மண்ணில பெட்டுது. ரண்டெல்லுக்க உட வுண்டு. பிள்ளைக்கு ஒண்ணுமில்லை. அவ செத்தாலும் பிள்ளைக்கு கொசுவு கடிக்காதுவே, அப்படிப் பாத்துக்குவா. ஒருக்கா ராமேஸ்வரத்தில பிள்ளைய எடுக்க வந்த ஒரு நாய்க்க கொரவளையக் கடிச்சு கொண்ணு துப்பிப் போட்டா தெரியுமா.'

படிகளில் ஏற்றினார்கள். ராமப்பனும் குய்யனும் பீடி பிடித்துக்கொண்டிருந்தார்கள். ராமப்பன் குய்யனை தடியால் தொட்டு, 'கொண்டு வந்து ஏத்திப்பிட்டானுவ பாத்தியா?' என்றார். 'நாறாணத்து பிராந்தன் பாறைய மலைமேல ஏத்துற கதைதேன்.'

குய்யன், 'அவளுக்கென்ன ஆகாச போகம்லா' என்றான். 'அய்யா தருமதொரை நிறைஞ்ச மாராசி. பிச்ச போடுங்கய்யா... அய்யா... போறியா போ...'

முத்தம்மையை தரைமீது படுக்க வைத்தான். அவள் நினை வின்றிக் கிடந்தாள். குருட்டுவிழி மட்டும் தாவிக் குதித்தது.

'வெள்ளமிருக்காடே குய்யா?'

'சாமியோ, பச்ச வெள்ளம் குடிப்பேளா.'

'அவனை செள்ளைல நாலு போடு. பிலேய் அந்த வெள்ளத்த எடு...'

தண்ணீர் தெளிக்கப்பட்டதும் முத்தம்மை விழித்து தலையை உருட்டி மறுகணமே 'அய்யோ எக்க பிள்ளை. பிள்ளை' என்று கூவினாள்.

'பிள்ளை இருக்குட்டி' என்றான் பெருமாள். 'பினாத்தாம கெட. பும்லே ராமப்பா நீரு வைஸ்ராய்க்க மச்சினனோ. உமக்கு வாறவனுவ கப்பம் கெட்டுவினுமோ? வாயத் தொறந்து கேட்டா அங்கு சப்பிடுமோ?'

ராமப்பன் சிரித்தார். ஆனால் அப்பகுதி முழுக்க, 'அய்யா சாமி... தருமதொரை... மாலெட்சுமி...' என்று கூட்டுக் குரல் எழுந்தது.

மாங்காண்டி சாமி தண்ணீர் குடத்தில் சாய்ந்து அமர்ந்து வாயை மட்டும் மென்றது.

வண்டிமலை குடிநீரில் கையைவிட்டு ரத்தத்தைக் கழுவினான். 'சவத்தெளவு, ஊத்த நாத்தமுல்லா' என்றான்.

ராமப்பன், 'அம்மை ரெத்தம்' என்றார்.

'என்னாது?'

'சொரைக்காயில உப்பில்லடே வண்டிமலை.'

'சீ நாயே...'

'அடிப்பியோ? இஞ்ச பாரு மேல உள்ளவன் எனக்கு ஒரு அனுக்ரகம் தந்திட்டுண்டு. பூலோகத்தில ஒருத்தனும் தொட்டு அடிக்கமாட்டான்.'

ஒரு பெரும் பக்தர் கூட்டம் பேரொலியுடன் குதித்து ஆர்ப் பாட்டமிட்டு ஏறிவந்தது. அலகு குத்திக் கொண்டவர்கள் மஞ்சள் ஆடையுடன் முகமெங்கும் மஞ்சள் அப்பிக்கொண்டு தாண்டவ மாடி வந்தனர். விழித்த கண்களும் திறந்த வாயில் குத்திய அலகுகளுமாக வெறியுடன் குதித்தனர். பின்புறம் மேளம் பிளிறியது. கையில் மஞ்சள் நீர்க்குடங்கள் ஏந்திய பெண்கள். ஒருவரின் வாயைத் துளைத்த ஆறடி நீள வேலை, இருபக்கமும் இருவர் நின்று தூக்கிப் பிடித்தனர். அதைப் பாதுகாத்த ஒரு கும்பல் 'நவரு, நவரு' என்று கூவியபடி வந்தது. 'யேய் சம்முவம், அந்த பிச்சார தாளிய தூக்கி மாத்துவே' என்றான் ஒருவன். இன்னொருவன் குய்யனை காலால் உந்திப் பின்னால் தள்ளினான். 'எங்க பாத்தாலும் இவனுகதான். காலை கைய நீட்ட முடியுதா பாரு.'

ராமப்பன், 'போறானுக பாரு... பிச்சக்காரப் பயலுக' என்றார்.

குய்யன், 'ராமப்பண்ணோ இவனுக்ளுக்கு என்னத்துக்க தீனம்?' என்றான்.

'பிச்சை எடுக்கானுகடே. சாமிகிட்ட பிச்சை எடுக்கானுக. சும்மா கேட்டா பிச்ச குடுத்திடுவானா? அதுக்காச் சுட்டித்தான் இதெல் லாம்...' என்றார் ராமப்பன். 'நாம இவனுகள்ட்ட பிச்ச எடுக்கம். இவுனுக அங்க மேல உள்ள பிச்சக்கார ஆண்டிக்கிட்ட பிச்ச எடுக்கானுக.'

'எல நக்கி பட்டீ தொ தொ தொ- அதுக்க
வாயி நக்கி பட்டீ தொ தொ தொ'

என்றான் குய்யன் உற்சாகமாக. 'அய்யா சாமீ தருமதொரை மாலெட்சுமி பிச்ச போடுங்கய்யா...' பீடியை ஓர் உதறு உதறி ஆழ இழுத்து அதே குரலில் அதே மழுங்கிய உச்சரிப்பில் 'அய்யா சாமி, தேவிடியா மோனே, மாலெட்சுமி பிச்ச போடுங்கய்யா' என்றான்.

'வச்சு கேற்றப் போறான் பாத்துக்க' என்றான் மயில்சாமி.

'ஆமா கேற்றுதான்.' குய்யன் மிக மோசமான ஒரு சைகை செய்தான். 'அம்மா தாயே மகாலட்சுமி பிச்ச போடுங்கம்மா... எளவு சோதிலெட்சுமி மாதிரி இருக்கா. இவளெயெல்லாம் மாலெட்சுமிங்கோம். நாக்கு புளுக்காம எங்க போவும்?'

'எங்கடே தொரப்புவக் காணல்ல' என்றார் ராமப்பன்.

'ஆமா. கீள வல்ல படியிலயும் போட்டுட்டானா... வேய் வண்டி, எங்கவேய் நம்ம கண்ணழகு கண்ணப்பன்?'

'போலே.'

'அவனுக்ககிட்ட வல்லவனும் தமாசு சொல்லுவானா... அவன் தலைக்குள்ள மத்ததுல்லா இருக்கு.'

'வோய், பெருமாளு ஓடய தம்புரானே, ஏமானே, மகாராசா, கூறுகெட்ட மகராசா, எங்கவே தொரப்பு?'

பெருமாள் பீடியை ஆழ்ந்து இழுத்துவிட்டுச் சொன்னான். 'ஒரு சோலியா ஆசுபத்திரி வரை போயிருக்காரு.'

'ஆசுபத்திரிக்கா...' என்றான் குய்யன். அவனது உற்சாகம் வடிந்து முகம் பிரமித்து நின்றது.

குருவி, 'அய்யோ, எக்கப்போ' என்றாள்.

'சர்க்காராசுபத்திரி இல்லட்டி. பெரிய ஆஸ்பத்திரியாக்கும். நல்ல வெளுத்த பஞ்சு மெத்த தலைகாணி கம்பிளிப் புதப்பு எல்லாம் உண்டு. ஒரு நாளுண்ணா ஒரு நாளு அதில கிடக்கணுமானா சில்லற காரியமா?'

ராமப்பன் கோபத்துடன், 'பீடியை எடும்வே குய்யா. நட்ட கல்லு மாதிரி இருக்காம' என்றார். பீடியை, பழைய பீடியைக் கொண்டே பொருத்தி இழுத்தார். மாங்காண்டி சாமியைப்

பார்த்தார். 'சாமி என்ன பாக்குது? ஆஸ்பத்திரிக்கு போறேரா சாமி?' என்றார். கோபத்துடன் சிரித்தார்.

பெருமாள் 'விளிச்சு கூவுங்கலே' என்றான்.

குய்யன் 'அய்யா சாமி... மாராசி... பிச்ச போடுங்கம்மா' என்று உடைந்த குரலில் கூவினான். 'நெறஞ்ச மாராசி... தரும தொரெ...'

ராமப்பன் காறித் துப்பிவிட்டு, 'இந்நேரம் அவனுக்கு சங்க அறுத்திருப்பானுக' என்றார்.

'சங்க அறுத்து என்னண்ணே பண்ணுவாக?'

'பிலேய்... இந்த உசிருன்னா என்னது? சங்குக்குள்ள இருக்க காத்தாக்கும். அங்க இந்தா இந்த சைசில ஒரு சங்கு மாதிரி குப்பி மாதிரி இருக்கும். அத அப்படியே நைசாட்டு அறுத்து வாய காத்து போகாம பொத்தி எடுப்பாவ. பைய்யெ அத வேற வல்ல துரைக்க சங்குக்க உள்ள வச்சு, அந்தக் காத்த அதுக்குள்ள விட்டுப் போடுவாவ. அவன் பிளைச்சுக்கிருவான். உம்மட்டே ஒண்ணரை லெட்ச ரூவா இருக்காவே. சாவாம கெடப்பீரு.'

'தொரப்பனுக்க சங்கு கூனன் சங்குல்லா.'

'ஆமா. அதனால சீவன் கூனன் சீவனாட்டு மாறுமா? பிலேய் இப்பம் தீ எரியிறது சந்தனக் கட்டைலயும் எரியும். நாத்த குப்பைலயும் எரியும். உணங்கின பீயிலயும் எரியும். எல்லா தீயும் ஒண்ணுதானே மக்கா.'

'ஆமா' என்றான் குய்யன். 'சாமி தருமதொர நெறஞ்ச சோதி லெட்சுமி பிச்ச போடுங்கம்மா தாயே.' பீடியை இழுத்து புகையை விட்டு, 'அப்பம் ஒரு காரியமுண்டே ராமப் பண்ணோ.'

'ஏம்லே...'

'இப்பம் நம்ம தொரப்புக்க காத்து வேற ஒருத்தனுக்குள்ள போனாக்க அவனும் 'மாதாவே மாதாவே'ன்னு பெனாத்து வானே. வல்ல நாலாம் வேதக்காரனுக்கு செஞ்சுப் போட்டா வண்ணா?'

'அதுல காரியமுண்டுலே' என்று ராமப்பன் சிரித்தார்.

குருவி கீச் கீச் என்று கத்திக்கொண்டிருந்தாள்.

'ராமப்பண்ணோ எனக்கொரு ஆச. இந்த சிம்மக் குரலோன் சிவாஜி கணேசனுக்கு நம்ம குருவிக்க காத்த அடிச்சி கேத்தணும் கேட்டேரா.' குய்யன் கீச்சுக் குரலில், 'நாத்து நட்டாயா? களை பறித்தாயா? எங்கள் சாதிப் பெண்டுகளுக்கு மஞ்சள் அரைத் தாயா? மாமனா மச்சானா? மானங்கெட்டவனே' என்றான்.

குருவி ஒரு கல்லை எடுத்து வீச குய்யன் அதைத் தன் தட்டால் தடுத்தான். மயில்சாமியும் சணப்பியும் கூவிச் சிரித்தார்கள்.

'அய்யா சாமி தருமதொரெ மாலெட்சுமி' என்ற பிறகு குய்யன், 'இண்ணு வசூல் குறவாக்கும் அண்ணா' என்றான்.

'பூசத்துக்கு இன்னும் ரெண்டு நாளிருக்குடே. ஒரு வீடி எடு.'

'வீடி எம்பிடு வலிப்பிய?'

'வேய் உனக்கு ஒரு வாயி. எனக்கு வாயும் மூக்கும் எல்லாம் வீடி வலிக்கத் தோதா இருக்கு பாத்துக்க' என்றார் ராமப்பன்.

பெருமாள், 'நான் போயி குளிச்சு நாலு இட்டிலி தின்னுட்டு வாறன்...' என்றான்.

'ஓடயோரே... கண்ணு பாக்கணும். வயிறு காயுது. பிள்ளைக்கு பாலில்லாம போயிடும் ஓடயோரெ' என்றாள் முத்தம்மை.

'இப்பம்தானே கிடக்கே? சக்கறம் சேந்ததும் வண்டிமலைட்ட சொல்லு. வேங்கித் தருவான்.'

வண்டிமலை குந்தி அமர்ந்து, 'ராமப்பா பீடி எடுடே' என்றான்.

ராமப்பன் பீடியையும் தீப்பெட்டியையும் வீசினார்.

படிகளில் கூட்டம் பெருகியது. ஒரு ஆறு. மேலேறும் ஆறு. கால்களினாலான, புடைவைகளால் வேட்டிகளால் பாண்டு களால் செருப்புகளால் ஆன ஆறு.

ராமப்பன் குச்சியைத் தட்டினான். எதிரே சணப்பி 'கெக்கெக்கே' என்று சிரித்தாள். ஆளுக்கொரு குரல் இருந்தது. மூச்சுபோல அது அவர்களிடமிருந்து பிரிந்தது. மேலே சென்று கொண்டிருந்த கண்கள் அவர்கள் மீது படிவதை விலகுவதை அவர்கள் அறியவில்லை.

எந்தக் கண்களையும் அவர்கள் சந்திப்பதில்லை. ஆனால் சிறு குழந்தைகளின் பயமும் ஆச்சர்யமும் கொண்ட பார்வைகள் அவர்களை நேருக்குநேரே தாக்கும். ஒவ்வொருவரும் அதை ஒவ் வொரு விதமாக எதிர் கொண்டனர். யாருமே குழந்தைகளின் பார்வையை உதாசீனம் செய்ய முடியவில்லை. ராமப்பன் வாயை வலித்துக் காட்டுவார். சில சமயம் மூக்கின் மொண்ணை ஓட்டை வழியாக நாக்கை வெளியே விட்டுக் காட்டுவார். குருவியும் மயில்சாமியும் காறித் துப்பவோ வசையுமிழவோ செய்வார்கள். குருவிக்கு குழந்தைகளைக் கண்டாலே வெறி ஏறிவிடும். அவளது குரல் கீச்கீச் என்று ஒலிக்கும்.

வெயிலேறிய பிறகு வண்டிமலை கீழே போய் தோல் ஏறிய இட்டிலிகளை மொத்தமாக வாங்கி வந்தான். சாம்பார், ரசம், பொறியல் கூட்டு என்று முந்தைய நாள் மிஞ்சிய அனைத்தும் கலவையாகப் புளித்து நுரைத்தது. அதில் இட்டிலியை ஊறப் போட்டு பாலீதின் தாள்களில் பரப்பி உண்டார்கள். மயில்சாமி இட்டிலியை வாயில் திணித்தபடியே 'அய்யா பசிக்குதுய்யா. துரையே சாமி பசிக்குதய்யா' என்று தன் குரலை எழுப்பினான்.

சிறிய உடல்கொண்ட ஒரு சாமியார் ராமப்பனின் அருகே வந்தார். வெண்மையான தாடியும் சிவப்புக்காவி ஏறிய நரைத்த தலையும் கந்தல் காவியும் அழுக்கு மூட்டையுமாக தோற்றம். 'ராம் ராம் ராம்' என்றார்.

'என்னவாக்கும் காரியம்?'

'சாமியார்க்கு ஜோர் போடுங்கோ. இட்லி போடுங்கோ. கொள்ம்பு போடுங்கோ.'

'போவும்வே...'

குய்யன், 'ராமப்பண்ணே வாய் நக்கி நாயி பெருத்துப் போச்சு' என்றான்.

'சாமியாருக்கு ஜோர் போடுங்கோ. இட்லி போடுங்கோ. கொள்ம்பு போடுங்கோ...'

'போவும் வேய்' என்று ராமப்பன் கம்பை எடுத்தார்.

சாமியார் நல்ல நிறம். இலேசாக இளநீலம் ஒளிர்ந்த அழகிய கண்கள். மென்மையான விரல்கள். அதே பாட்டை மீண்டும் பாடினார்.

ராமப்பன் 'நாயி போவுதுமில்லியே' என்று குச்சியை ஓங்கினார்.

'ராமப்பா இட்டிலி குடுடே' என்றது மாங்காண்டி சாமி.

'குடுக்கன் சாமி.' ராமப்பன் ஒரு பொட்டலம் இட்டிலியை சிமிட்டி விளிம்புக்கு கீழே பதுக்கி வைத்திருந்தார். அதை நீட்டியதும் சாமியார், 'சாமியார் கும்பிடறான். சாமியார் ஆசி பண்றான். சுக்ரியா' என்றார். கண்களை சிமிட்டியது மாதிரி இருந்தது. பொட்டலத்துடன் நேராக மாங்காண்டி சாமியின் அருகில் போய் அமர்ந்து ஆவேசமாக சாப்பிட ஆரம்பித்தார். பாதியில் விக்கியபோது மாங்காண்டி சாமி தண்ணீர் போணியை நீட்டியது.

தண்ணீரை தாடி நனைய குடித்தபடி சாமியார், 'பீயிங் அன்ட் நத்திங்னெஸ்' என்றார். ஆமாம் என்பதுபோல தலையை அசைத்தார். மீண்டும் வலியுறுத்தி அசைத்தார். சுட்டுவிரலை நீட்டி ஆட்டி 'பீயிங் அன்ட் நத்திங்னெஸ்' என்றார்.

மாங்காண்டி சாமி சிரித்தது. சட்டென்று சாமியாரும் 'கெக் கெக்கே' என்று சிரிக்க ஆரம்பித்தார். சிரிப்பு மூலம் இருவரும் உரையாடுவது போலிருந்தது. நடுவே சாமியார் இட்லியைப் பிய்த்துத் தின்றுகொண்டும் இருந்தார். பொட்டலத்தை சுருட்டிய சாமியார் அங்கே சிதறிக்கிடந்த எல்லாப் பொட்டலங்களையும் பொறுக்கி மொத்தமாகக் கொண்டுபோய் தூரத்திலிருந்த குப்பைக்கூடையில் போட்டார். தாளில் கையைத் துடைத்து விட்டு வந்து மாங்காண்டி சாமியின் முன் அமர்ந்தார்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். மாங்காண்டி சாமி முகத்தில் அதே உறை சிரிப்பு. ஏறிய புருவமும் ஒளிரும் கண்களும். சாமியார் திடீரென்று கடும் கோபம் கொண்டவர்போல முகம் சிவந்தார். விரலை கூடாது என்பது போல ஆட்டினார். தலையை 'ஆமாம் ஆமாம்' என்று ஆட்டினார். மீண்டும் சிரித்தார். இம்முறை சிரிப்பில் ஒருவிதமான ஆங்காரம் இருப்பது போலிருந்தது.

ராமப்பன், 'வந்து மாட்டிப்போட்டு போலிருக்கே. இன்னி விட்டு மாறாது' என்றார்.

மயில்சாமி, 'ராமப்பண்ணோ அவன் பேசினது இங்கிலீஷாக்கும்... அசல் சரக்கு.'

'இங்கிலீசா? போலே மாங்கா.'

'உள்ளதாக்கும்.'

குய்யன், 'ராமேசரத்துல நான் கண்டிட்டு இங்கிலீசு பேசுத சாமியாரை' என்றான்.

'வட்டாக்குமோ?'

'ஆரு கண்டா.'

மாங்காண்டி சாமி சட்டென்று தீப்பெட்டியை தரையில் அடித்து தாளமிட ஆரம்பித்தது. குரல் அனைத்து ஒலிகளையும் மீறி எழுந்தது.

'சித்தம் உலையல்லோ
சீவன் தீயல்லோ
நித்தம் எரியுதடீ- என் கண்ணம்மா
நின்னு கொதிக்குதடீ'

சாமியார் மாங்காண்டி சாமியையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

'எண்ணி வச்சதெல்லாம்
எங்கும் சிதறிடுதே
மண்ணில் கவுந்த பாலை- என் கண்ணம்மா
மாறி அள்ளலாமோ?'

காவடிகள் துள்ளி மறிந்து முரசும் முழவும் ஒலிக்க ஏறிச் சென்றன. பட்டுப்புடவைகள், செருப்புகள். வேறு ஓர் உலகில் அவை அதிர்ந்து கொந்தளித்து கொப்பளித்து ஓடிக்கொண்டிருந்தன. ஓரிருவர் மட்டும் நின்று ஒரு பீடி பற்றவைத்துக்கொண்டு மாங்காண்டி சாமியின் பாட்டைக் கேட்டனர். சிலர் போனபடியே கவனித்து தங்களுக்குள் சில சொற்களைச் சொல்லிக் கொண்டனர். வெயில் உக்கிரமாக மொட்டை மலைமீது பொழிந்து கொண்டிருந்தது.

'ஒண்ணு ரெண்டாகும்
மூணு நாலாகும்
எண்ணும் பொருளெல்லாம்- என் கண்ணம்மா
ஒண்ணில் முளைச்சதுவே...

சட்டென்று எங்கோ முட்டி நின்றதுபோல மாங்காண்டி சாமி தீப்பெட்டியைக் கீழே போட்டது. கண்களை மூடிக் கொண்டது.

சாமியார் தன் மூட்டையை எடுத்துக்கொண்டார். ராமப்பனை நோக்கி, ‘சாமியார் போறான். சுக்ரியா’ என்றார்.

‘போ... போ... தமிழு படிக்காதே. படிச்சே பின்ன சோறு கிட்டாது இங்க’ என்றார் ராமப்பன்.

சாமியார் சிறு துள்ளல்களுடன் படியிறங்கிச் சென்றார். வெயிலில் கற்படிகள் கொதித்து ஒளிவிட்டுக் கிடந்தன.

# 7

விடுதி அறையில் போத்திவேலு பண்டாரம் விழித்துக் கொண்டபோது பின்பக்க கண்ணாடிச் சன்னல் வழியாக வெளிச்சம் உள்ளே வந்து கண் கூசும்படி விரிந்து கிடந்தது. காலடியில் கிடந்த அன்டர்வேரை காலால் எடுத்து போட்டுக் கொண்டு எழுந்து நின்றபோது ஒட்டு மொத்தமாக அறையே ஆடியது. கட்டிலின் கொசுவலைச் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு தள்ளாடினார். கண்களை மூடியபோது பலவிதமான நிறக் கொப்பளிப்புகள்.

மெல்ல நடந்து பாத்ரூமுக்குள் நுழைந்து ஷவரை திருகி விட்டு தூறலில் நின்றார். உடம்பு சற்று உலுக்கிய பிறகு குளிர ஆரம்பித்தது. தலைமயிர்கள் குளிரில் சிலிர்த்து கழுத்து இறுகிய போது போதை இறங்குவதை உணர முடிந்தது. ஷவரில் நின்றபடியே பல் தேய்த்துக் குளித்து ஈரமான டவலை சுற்றி விட்டு வெளியே வந்தார். தலைக்குப் பின்பக்கம் ஒரு அழுத்தல் உணர்வும் மெல்லிய ரீங்காரமும் இருந்தது. ஒரு தயிர்வடை சாப்பிட்டால் சரியாகப் போகும் என்று நினைத்தார்.

பையனைக் கூப்பிட பித்தானை அழுத்தினார். அறை முழுக்க மல்லிகைச் சருகுகள், பிரியாணி பொட்டலக் குப்பைகள், சிகரெட் குச்சிகள், மென்று துப்பிய எலும்புகள், உபயோகப் படுத்தப்பட்ட நிரோத் உறைகள். உறைகளை காலால் எண்ணிப் பார்த்தார். நான்கு இருந்தது. வேறு எவராவது உள்ளே வந்தார் களா? எப்போது தூங்கினேன்?

கதவு தட்டப்பட்டது. புதிய பையன். ஒரு பத்து ரூபாய்த் தாளை நீட்டி 'கிளீன் பண்ணுடே' என்றார்.

'காப்பி ஒணுமா சார்?'

'கிளீன் பண்ணிட்டு கொண்டு வா. தந்தி பேப்பர் ஒண்ணு வாங்கிக்கோ.'

பெட்டியைத் திறந்து சலவை வேட்டியையும் ஜிப்பாவையும் எடுத்து நிதானமாக அணிந்தார். நேற்று வந்தவளில் சின்னவளை இன்று வரச்சொல்லவேண்டும். இன்றிரவு குடிக்கக்கூடாது. நேற்று ஒரு கோமாளியாக அவள் மாற்றி விட்டாள். சிகரெட் பிடித்தபடி புகையை அவர்மீது ஊதி உரக்கச் சிரித்தாள். அவளது குரல்வளை! சின்னவள் வடிவம்மை இந்நேரமும் எழுந்திருக்க மாட்டாள். எத்தனை திட்டினாலும் எருமைமாடு மீது கொசுக் கடிப்பது மாதிரிதான். 'தெண்டச் சனியன்' என்றபடி விபூதியை ஒரு தாளில் கொட்டினார். பெட்டியில் இருந்து ஒரு பசையை எடுத்து விபூதிமீது பிதுக்கி அந்தக் கலவையை மூன்று விரலால் தொட்டு நெற்றி மீது விரிவாகப் பட்டை போட்டார். நடுவே குங்குமம்.

'முருகா என்னப்பனே' என்றபடி பையை எடுத்து பணத்தை எண்ணிப் பார்த்தார். பையன் காபி கொண்டு வந்து வைத்தான். நாற்காலியில் அமர்ந்தபடி செய்திகளை வேகமாகப் பார்த்தார். மடித்து வைத்தபிறகு எழுந்து 'ஞானபண்டிதா' என்றபடி வெளியே கிளம்பினார்.

சாலை சாலையாக இல்லை. மஞ்சளும் காவியுமாக எங்கே பார்த்தாலும் பக்தர்கள். ஒரு காவடிக் கும்பல் இன்னொரு காவடிக் கும்பலை நெட்டிப் பிதுக்கி சந்துகளுக்குள் திணிக்கு மளவு நெரிசல். ஒலிபெருக்கிகள் 'மருத மலை மாமணியே அமுதென்று உருகாதோ உந்தன் தங்கத் தாமரை மலரே' என்று கலந்து ஓலமிட, கீழே எங்கும் நிரம்பிய மேளங்கள் தெரு விலிருந்தும், சுவர்களில் எதிரொலியாகவும் அதிர்ந்தன. டீக்கடைகளில் சாமிகளும் பிறரும் நின்றபடி டீ குடித்தனர். அலகு குத்திய ஒரு சாமிக்கு இன்னொருவர் தினத்தந்தி வாசித்து காட்டிக்கொண்டிருந்தார்.

ஆட்டோ ஒன்றைப் பேசி ஏறி நேராக போலீஸ் ஸ்டேசனுக்குப் போனார். சிறிய ஓட்டுக் கட்டடம். வெளியே பெரிய ஓலைப்

பந்தல் போட்டிருந்தது. வாசல் முழுக்க பலவிதமான கோணங் களில் பைக்குகளும் சிறு வண்டிகளும் நின்றன. பெஞ்சில் முழுச் சீருடையில் துப்பாக்கியுடன் ஒரு போலீஸ் காரர் உட்கார்ந்து உள்ளே பார்த்து சிரித்துப் பேசிக்கொண்டி ருந்தார்.

பண்டாரம் இரு கைகளையும் அபத்தமாகச் சேர்த்து தலைமீது தூக்கி கண்மூடி அவரைக் கும்பிட்டார்.

'என்னடா?'

'எஜமானைப் பாக்கணும் சார்.'

'எதுக்குடா?'

'வரச் சொன்னாவ சார்.'

'என்னடா கேசு?'

'கேசில்ல...'

'பின்ன என்னத்துக்கு'

'நம்ம குழந்தை ஒண்ணு இங்க வந்திருக்கு சார்.'

'குழந்தையா?'

'குட்டி.'

'அந்த சப்பாணியா? ஓய் கோனாரே, இந்தாரும் உம்ம கேசு. அந்தால போடா.'

பண்டாரம் கும்பிட்டபடியே அந்த முதிய போலீஸ்காரரை நோக்கிப் போனார். அவர் சாதாரண சட்டை அணிந்திருந்தாலும் பூட்ஸ் போட்டிருந்தார்.

'அய்யா பண்டாரம்ங்கய்யா.'

'என்னடா பண்டாரம்? நீயா பண்டாரம்?'

'பண்டாரம் நம்ம சாதிங்க. கோயில்ல பூக்கட்டுறது.'

'நல்ல தொழிலு. குட்டி உன்னுதாடா?'

'ஆமா. கூட்டிட்டுப் போலாம்னு...'

'ம். எத்தனை உருப்படி வச்சிருப்ப?'

'உருப்படில்லாம்...'

'...த்த போட்டேன்னா, குண்டி வகுந்திடும்.'

'எட்டு.'

'எட்டா? எட்ட தூக்கிட்டா இத்தன தூரம் வந்தே?'

'கட்டலிங்க சாமி. வித்துடலாம்னு வந்தேன். பிள்ளைக்கு கலியாணம் வச்சிருக்கேன். எல்லாத்தையும் விட்டுட்டு மானமா பொழக்கலாமுண்ணு இருக்கேன்.'

'ஏன் பிள்ளிய எறக்கிவிடுறது. காசுதானே.'

'அய்யா...'

'என்னடா சம்பாத்தியம் இருக்கும்?'

'அய்யா அது...'

'...த்த சூத்துல போடுவேன்.'

'ஐயா ஒரு வீடு.'

'டெரஸா?'

'ஓட்டு வீடு. வாங்கினது.'

'கார் இருக்காடா?'

'இல்லய்யா.'

'நெளிச்சுப்பிடுவன் நாயே.'

'இல்லய்யா, ஞானபண்டிதன் என்னப்பன் மேல ஆணையா.'

'செரி, எவ்வளவு வச்சிருக்க?'

'அய்யா... அஞ்ஞூறு.'

'ஐநூறு உன் அப்பன் சடங்குக்கா? முருகா இந்தாளை குண்டில ஏத்து...'

'அய்யா காசில்லய்யா. உருப்படிக ஒண்ணும் இன்னும் விக்கலை. ஏவாரமும் சூடு ஏறல்ல.'

முருகன் பண்டாரத்தைப் பிடித்து நகர்த்தி சட்டைப் பை, கை மடிப்பு, மடி எல்லாம் தேடினான். பொடி டப்பா, சூரிக்கத்தி தவிர இருநூறு ரூபாய் மட்டும்தான்.

'முருகனை கூட அனுப்புறேன். லாட்ஜில போய் எடுத்துக் குடும்.'

'இல்லய்யா சத்திரத்தில இருக்கேன்.'

'விளைஞ்ச கட்டய்யா நீரு.'

'சார், எஸ்.ஐ' என்றார் வாசல் காவலர்.

உள்ளே விரைப்பு உருவாகியது. வயதான போலீஸ்காரர் மட்டும் எழுவது போன்ற ஒரு சிறு பாவனைக்குப் பிறகு அமர்ந்தார்.

'என்னய்யா கோனாரே, நாராயணன் வந்தானா?'

'இல்லீங்கய்யா.'

'போன்?' என்றபடி உள்ளறைக்குப் போய் எஸ்.ஐ நாற்காலியில் அமர்ந்தார்.

'சி.ஐ. கூப்பிட்டாரு. சி டெவென்ட்டி ஃபோர் பார் ஸி ஃபைல குடுத்தனுப்புன்னாரு.'

'அத யாரு இப்ப தேடி எடுக்கறது?'

'ஆறுமுகம் அதை வச்சிருக்கான்.'

'விடமாட்டீங்க. நோண்டி எடுப்பீங்க. இவன் யாரு?'

'இவன் அந்த சப்பாணிப் பொண்ணோட...'

'அது செரி. வாடா.'

'அய்யா.'

'சீ... தேவடியா மகனே, ஏறி மேல வாடா.'

'அய்யா...'

சட்டென்று எஸ்.ஐ ஓங்கி பண்டாரத்தை அடித்தார். அடி தோளிலும் கன்னத்திலுமாகப் பட்டது.

'அய்யா... அய்யா...' என்று அவர் கை கூப்பினார்.

'என்னடா வச்சிருக்கே?'

'அய்யா எரநூறு ரூவா வச்சிருக்கான்' என்றார் கோனார்.

'மடியைப் பாத்தியா?'

'தரோவா பாத்தாச்சு. எமகாலப் பய. ரெடியா வந்திருக்கான்.'

'அப்பிடீன்னா இவன்கூட வேற ஆள் உண்டு. பணத்தை கண்டிப்பா லாட்ஜ்ல வய்க்கமாட்டானுக. பாரு.'

'பாத்தாச்சுங்கய்யா.'

'டேய் இங்க பாரு, நான் மனுசனா இருக்கறப்ப பாக்குற. வேற மாதிரி ஆனேன்னாக்க பாத்துக்க.'

'அய்யா வசூல் இல்லீங்க.'

எஸ்ஐ எழுந்து ஒரு கெட்ட வார்த்தையுடன் ஓங்கி அடித்தார். பண்டாரம் சுருண்டு அடியை வாங்கினார். 'அய்யா... சாமி... அய்யா...' என்றார்.

எஸ்ஐ திரும்பி லத்தியை எடுத்து 'அடி வாங்கி சாவாதே' என்றார்.

'அய்யா...'

'தேவ்டியா மவனே' என்றபடி எஸ்ஐ லத்தியால் சுழற்றி அடிக்க ஆரம்பித்தார். அடி பண்டாரத்தின் மூட்டுகளில் விழுந்தபோது அவர், 'அய்யோ தெய்வமே, சாமியே அய்யோ அடிக்காதிக அய்யாவே' என்று கதறியபடி சுவரோடு சேர்த்து அமர்ந்தார்.

போன் அடித்தது. எஸ்ஐ போனை எடுத்தபடி எழும்படி சைகை காட்டினார். 'ஆமா. ஆமாமா. ஓகே. ஆக்சுவலி நான் எட்டு மணிக்கு வந்திருந்தேன். நீங்க இல்லை. என்னங்க நீங்க பெரிய வார்த்தை சொல்லிட்டு... அடடா... இல்லீங்க...'

வாயைப் பொத்தி 'ஓய், அவன் கோமணத்த அவுத்துப் பாருய்யா' என்றபிறகு, 'வாறேன் கண்டிப்பா. என்னங்க. நீங்க சொன்னா

அப்புறம் என்னங்க. நான் என்னைக்குமே... ஆமா. ஓகே' என்று போனை வைத்தார்.

கோனார் பண்டாரத்தின் வேட்டியை உரிந்து வீசினார். கட்டம்போட்ட அன்டர்வேரில் பாக்கெட்டுக்குள் இருநூறு ரூபாய் இருந்தது.

'அய்யா இருநூறு வச்சிருக்கான்.'

'உள்ள கோவணத்தப் பாருய்யா.'

'அய்யோ அது ஓதம்ங்க' என்றார் பண்டாரம்.

கோனார் முழங்காலால் பண்டாரத்தின் வயிற்றில் ஓங்கி உதைத்தார். பண்டாரம் அலறியபடி குனிந்தபோது அவரது கோவணத்தை உருவி அண்டர்வேர் வழியாக எடுத்தார். சுருள் சுருளாக ரூபாய் நோட்டுகள் உதிர்ந்தன.

'அடப்பாவி...' என்றபடி கோனார் பண்டாரத்தை குனிந்து அடித்தார்.

'விடும். அதான் கிடைச்சிட்டுதே. எவ்வளவு இருக்கு பாரு.'

'மொத்தம் ஆயிரத்து நானூறு இருக்குய்யா.'

'இப்படி கொண்டாங்க' என்றார் எஸ்.ஐ. 'மிச்சத்த நீங்க வச்சிக்குங்க. டேய் உக்காருடா.'

பண்டாரம் 'அய்யா' என்றார்.

'உக்காருடா... அட...'

பண்டாரம் நாற்காலியில் உட்கார்ந்தார்.

'இத அப்பவே குடுத்திருந்தா இத்தனை பிரச்சினை உண்டா. மயிலேன்னா எறகு போடாது, என்னய்யா.'

'அய்யா... இது உருப்படிகளுக்கு தீனி போட...'

'அந்தக் கத வேணாம். செரி. மறுபடி எப்ப வருவே?'

'அய்யா...'

'உருப்படி எதாவது வித்தா இங்க வந்துட்டு போணும். உருப்படிக்கு ஆயிரம் ரூபா.'

'அய்யா...'

'நீ ஒரு எறும்ப வித்தாக்கூட இங்க தகவல் வந்திடும். நீ எவ்வளவுக்கு வேணாலும் வித்துக்கோ. ஆயிரம் ரூபா இங்க வந்திடணும். இல்லேன்னா...'

'அய்யா...'

'உங்க ஊர்லேருந்து வேற யாரு வந்திருக்காங்க?'

'அய்யா அது தெரியாது.'

'பாத்தியா...'

'இல்லய்யா. நாங்க முத கோஷ்டி. கொல்லங்கோடு மீனாட்சி எப்படியும் வருவா.'

'செரி. அப்ப பாக்கலாம்.'

'அய்யா, நம்ம குட்டி...'

'ஆரு அந்த சப்பாணியா. கோனாரே, எங்கய்யா அது?'

'அய்யா அதுக்கு வலிப்பு வந்து காலைல ஆஸ்பிடல் கொண்டு போயிட்டம்.'

'எங்க...'

'ஜி.எச்சில போயி பாருய்யா. அது சரியான சீக்கு. தொட்டா வலிப்பு.'

'அய்யா அதுக்கு நட்டெல்லில உடவு உண்டு.'

'நல்லா உடச்சுவிட்டா உனக்கு வசூலுக்கு உதவும். போயிப் பாருடா.'

'நல்லது அய்யா. வாறன்' என்றார் பண்டாரம். கும்பிட்டபடியே வெளியே நடந்தார். கழற்றிப் போட்டிருந்த பெரிய கேன்வாஸ் ஷூவை போட்டுக்கொண்டு எதிரேயுள்ள டீக்கடைக்குப் போய் ஒரு டீக்கு சொன்னார். கன்ன எலும்பு வலித்தது. ஒரு கண் வீங்கிச் சிறுத்துவிட்டது. டீயைக் குடித்து விட்டு ஆட்டோ பிடித்து லாட்ஜுக்குப் போனார். டெம்போ வந்திருந்தது. டிரைவர் லாட்ஜின் படியில் பீடியுடன் அமர்ந்திருந்தான்.

‘வண்டிய எடுல’ என்றார் பண்டாரம்.

டெம்போவில் ஏறியதும் டிரைவர், ‘மோலாளி கண்ணு வீங்கி யிருக்கு’ என்றான்.

‘டேசனுக்குப் போனேன்’ என்றார்.

வண்டி கிளம்பியது. ஷூவைக் கழற்றி உள்ளேயிருந்த கரிய தோல்பரப்பை விலக்கி உள்ளிருந்து நோட்டுச் சுருள்களை எடுத்தார்.

‘பணத்து மேல நடக்குதிய மோலாளி.’

‘நீ உன் சோலியப் பாருலே’ என்றார். ஐநூறு ரூபாய் தாள்களாக இருபது இருந்தது. எடுத்துப் பையில் வைத்தபடி ‘பத்து ரெண்டாயிரம் ரூவா பிடுங்கிப் போட்டான். ஒரு புது எஸ்ஐ இருக்கான். அங்களம் முடிஞ்ச பய. அடிவாரத்துக்குப் போ.’

அடிவாரத்தில் வண்டி நெருங்கமுடியாதபடி நெரிசல். ‘பாத்துடே, ஆரனை உடச்சிடுவே போல இருக்கே.’

‘மோலாளி, தைப்பூசத்தில் பழனிக்கு கிறுக்கு பிடிச்சிடும் பாத்துக்கிடுங்க.’

‘இங்க நிப்பாட்டுடே. நம்ம கொச்சன் நாணு இங்கதான் இருப்பான்.’

வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினார். ஒரே லாரி புரோக்கர் கடைகளாக இருந்தன. பலவிதமான காக்கி நிறச் சட்டைகளும் லுங்கிகளும் அணிந்த டிரைவர்கள், கடைத் திண்ணைகளில் தினத்தந்தி, காலி டீ டம்ளர், கழற்றிப் போட்ட டயர் செருப்புகள் சகிதம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். பேருந்து படங்கள் போட்ட தகர போர்டுகள், பயணப் பட்டியல் பலகைகள், போன்கள் கொண்ட மேஜைகளுக்குப் பின்னால் வயிறு சரிந்த முதலாளிகளும், தோளெலும்பு தெரியும் கரிய பெண்களும்.

ஆர்த்தி டிராவல்ஸில் பங்குதாரர் சண்முகக்கண் இருந்தார். ‘வாரும் வாரும்... டேய் பண்டாரத்துக்கு ஒரு சேர் போடுரா.’

போடப்பட்ட பிளாஸ்டிக் சேரில் அமர்ந்தபடி கால்களைத் தளர்த்திக்கொண்டார் பண்டாரம்.

'டீ சாப்டறேரா?'

'வேண்டாம். இப்பதான் குடிச்சன். கொச்சன் வந்தானா?'

'வந்திருக்கான். பின்னால ஷெட்டில இருக்கான். பண்டாரம் நல்ல வேனு ஒண்ணு வந்திருக்கு பாக்கேரா?'

'என்ன மாடல்?'

'மாருதி. எண்பத்தெட்டு.'

'ஆனை வெலை சொல்லுவானே.'

'மையமா பாக்கலாம் ஓய். உம்மகிட்ட இல்லாத பணமா...'

'ஆமா பணம்...' பண்டாரம் கெட்டவார்த்தை சொல்லித் துப்பினார்.

'ஒண்ணரைக்கு பாக்கிறேரா.'

'ஒண்ணுக்குள்ளன்னா...'

'ஒண்ணுக்கு உமக்கு தகர டப்பா கிடைக்கும்.'

'பாரும்' என்றபடி கடைக்குள் புகுந்து பின்புறம் சென்றார். அஸ்பெஸ்டாஸ் கூரை சரிந்த ஷெட்டில் இரும்புக் கட்டிலில் கொச்சன் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் மலையாள நாளிதழ். டீ தம்ளர்.

'நமஸ்காரம் உண்டு அண்ணே. வரணம் வரணம்' என்றார் கொச்சன். அவரது மரக்கால் கட்டிலில் கழற்றி வைக்கப் பட்டிருந்தது.

'எந்தரு காரியங்ஙளு?' என்றார் கொச்சன் உரக்கச் சிரித்தபடி. அவருக்கு பேச்சில் எப்போதும் சிரிப்பு கலந்து ஒலிக்கும்.

'ஸ்டேஷன்ல போயி அடி வாங்கி வாறன்.'

'அதென்ன விசேஷம்? பின்னெந்து...'

'மண்டகப்படி தெற்றப்பிடாதே...'

'கொள்ளாம்' என்றார் கொச்சன்.

'என்னவே அது புஸ்தகம்?'

'படிக்கிறியா? நல்ல புஸ்தகமாக்கும். மூணாம் லோகமும் வேர்ல்ட் பேங்கும்.'

'என்னெளவு?'

'பார்ட்டி புஸ்தகம்.'

'என்ன சொல்லுகான்? வெட்டி மலத்திப் போடுவானாமா?'

'உமக்கெந்தரு அறியாம்? ஓய் பண்டாரம், நம்ம நாட்டுக்கு இப்பம் எவ்ளவு கடன் இருக்கு தெரியுமா. கோடிகள். அம்ப தாயிரம் கோடி. எல்லாம் வேல்டு பேங்குன்னு ஒரு ஸ்தாபனம் குடுக்கிற கடன். கடனும் வட்டியும் சேந்தா உம்ம வித்தாலும் கட்டாது. உமக்க பூர்வீகரை வித்தாலும் கட்டாது.'

'இங்கதான் எங்க பாத்தாலும் மனியனா கெடக்கே. பாதி எண்ணத்த பிடிச்சு வித்து கடனை அடைக்கணும்.'

கொச்சன் உரக்கச் சிரித்து, 'அது நியாயம்' என்றார்.

'கள்ளமில்லவே. வெள்ளைக்காரன் முடிய தீனியா மாத்தறான். கூம்பையும் சங்கயும் விலைக்கு வாங்கிக்கிடுதான். தூக்கி வித்தா நம்ம நாட்டுல ஒரு ஐம்பதாயிரம் கோடிக்கு ஆளு இருக்குமே.'

'அது நல்ல வழியாணு. ஆனா நம்ம ஆளுகளுக்கு அது தெரியலியே. சாய எடுக்கட்டே?'

'சாய இப்பம்தான் குடிச்சேன்.'

'பின்ன விசேஷங்ஙள்...'

'நீரு எம்பிடி உருப்படி கொண்டு வந்தேரு?'

'இங்க நோக்கு பண்டாரம். நம்ம கையில உருப்படிகள் இல்லை. எல்லாம் நம்மை மாதிரி மனுசன். சோரயும் நீரும் உள்ள மனுசன். எல்லாரும் நம்மடெ சகாக்கள்.'

'செரி. எம்பிடு சகாவு?'

'அப்பிடி கேளு.' கொச்சன் உரக்கச் சிரித்து பண்டாரத்தின் தொடையில் ஓங்கித் தட்டினார். 'நூற்றி இருபத்தொம்பது சகாவு அடிவாரத்தில் உண்டு. ஓராள் நேத்து செத்துப் போயி.'

'அடாடா...'

'பழைய கையாணு. மம்முது. அது நான் நினைச்சிருந்தது தான். விற்றுப் போடலாமுன்னு நெனச்சேன். போட்டே.'

'சகாவ சகாவு விக்கலாமா?'

'மக்களே பண்டாரம், பனிக்கட்டி மேல சாயம் தேய்க்காதே கேட்டயா. மனுசனை மனுசன் விக்காம முதலாளித்துவம் உண்டா மக்கா? நீ ஒருத்தனுக்கு ஒரு சோலி செய்து கூலி வாங்கினா என்ன அர்த்தம்? நீ உன் கையை விக்கிறே. சர்க்கார் கிளார்க்கு மூளையை விக்கிறான். நம்ம சர்க்காரு இந்த தேசத்தில் உள்ள அத்தின பேரயும் சேத்து விக்குது. மனுசனை மனுசன் விக்காம பணம் இல்லை. உங்க ராஜ்யத்தில சொல்லுற சொல்லு உண்டல்லோ. நாயி வித்த காசு குரைக்காது. அதான் கதை...'

'நம்மட்டே நாட்டு உருப்படி நாலஞ்சு இருக்கு.'

'வெலையெல்லாம் இப்பம் எறங்குமுகம்.'

'ஆமாமா... சபரிமலையிலே வருஷம்தோறும் கூட்டம் குறையுதுல்லா.'

'மக்கா மக்கா, நேரா பேசு. சபரிமலையில் உள்ள அத்தனை போலீசுக்கும் ஏவாரிதான் வாய்க்கரிசி போடணும்.'

'செரி, அது எங்குமுள்ளதுதானே. எனக்ககிட்ட ஒரு மண்டயன் கிடக்கான். ஆளைப் பாத்தா பைசா விழாம ஒரு கால் அப்படி நகராது.'

'பாப்பம். நீரு ஆனை வெலை குதிரை வெலை சொன்னா எனக்குக் கட்டாது.'

'நீரும் நானும் இன்னைக்கு நேத்து கச்சவடமில்லை. ராமப்பனை வாங்குன காலம் முதல் உள்ள கொள்வினை கொடுப்பினை. இண்ணக்கிவரை ஒரு மோசம் வந்ததில்ல.'

'பாப்பம் பாப்பம். உடனே பாட்டு பாடாதே. தொம்மா...'

தொம்மன் எட்டிப் பார்த்து 'சகாவே' என்றான்.

'ஒந்நு புறத்திறங்ஙணம் கேட்டோ. வண்டி எடுக்கான் பறயூ.'

'செரி' என்று தொம்மன் சென்றான். கொச்சன் தன் மரக்காலை எடுத்து செருகிக்கொண்டு எழுந்து நின்றார். ஆணியில் மாட்டியிருந்த ரத்தச்சிகப்பு மல் சட்டையை எடுத்து மாட்டி ஒரு கைக் குட்டையை மடித்து தோளில் போட்டார். வேட்டியை மடித்துக் கட்டி ஒற்றைக்காலில் ஷூவை அணிந்து 'போகாம்' என்றார்.

'உமக்கு போலீஸ் தொந்தரவு உண்டுமா?'

'நம்மள் பார்ட்டிகாரன்' என்றார் கொச்சன்.

வெளியே வெண்ணிறமான மாருதிவேன் உறுமி நின்றது. அதில் 'ஆல் கேரளா டௌன்ட்ரேடன் பீப்பிள்ஸ் அசோசியேஷன்' என்று எழுதப்பட்டிருந்தது.

'சகாவே, வண்டி எடுக்கூ' என்றபடி கொச்சன் ஏறினார். பண்டாரமும் கூடவே ஏறிக்கொண்டார். வண்டி கிளம்பியது.

'நீரு மலை ஏறுவேரா?'

'சபரிமலையில் ஞான் வருஷம் பதினேழு முறை ஏறுந்நுண்டு.'

'புண்ணியமுண்டு.'

'பின்னெ. கேரளத்தில் உள்ள சகல கோவில்களிலும் ஞான் எல்லா வருஷமும் போகும். நம்மெ ஒரு சாமிக்கும் அறியில்ல. துவாரபாலகர்மார்க்கு அறியாம்.'

'இப்ப எல்லா கம்யூனிஸ்ட்களும் சாமி கும்பிடுறாங்க.'

'கும்பிடறவன் கம்யூனிஸ்ட் இல்லை.'

வண்டி முனகி முனகி நகர்ந்தது. தெருவெங்கும் காவடிக் கொந்தளிப்பு. 'பண்டாரமே, இது ஒரு மாஸ் ஹிஸ்டீரியா வாக்கும். இதே மாதிரி மாஸ் ஹிஸ்டீரியாவாக்கும் போர். புரட்சியும் அப்பிடித்தான். இப்ப அந்த காவடியைப் பாத்து இங்க புரட்சி வராதுன்னு நினைக்காதே. புரட்சி அமெரிக்காவில் வராது. அங்க எல்லாரும் தனியாளு. இங்க புரட்சி வந்தா பெருவெள்ளம் மாதிரி வரும்.'

'வாறப்ப வரட்டும். கொச்சா நம்ம கைச்சரக்கு பலதும் அஞ்சும் ஆறும் வருசம் பழசாக்கும். பாதியெண்ணத்தை வித்து புதிசு வாங்கிப் போடணும். மாசியும் பங்குனியும் சித்திரையும் கொடியேற்றும் கொடயும் படைப்புமா வருது...'

'நம்ம கையில நல்ல அசல் சகாவுமாரு உண்டு. சொன்ன விலைக்கு வாங்க திருவண்ணாமலை சாமியப்பன் ரெடி. நேத்து ஒரு பேச்சு முடிஞ்சிருக்கு.'

'நீ விக்கும்பம் விலை ஏறும்.'

'நம்ம சகாவு சாதாரண ஆளில்லா. பாதாளத்துல இருந்து நேர ஏறி வந்த ஆளாக்கும்.'

வண்டி தயங்கியது. போக்குவரத்துக் காவலர் வண்டியை லத்தியால் அடித்து 'பின்னால போ... பின்னால போ' என்றார்.

கொச்சன் தலையை நீட்டி 'எக்ஸ்யூஸ் மி, மே ஐ நோ வாட்ஸ் த பிராப்ளம்?' என்றார்.

'டிராபிக் சார். ஜாம் சார். டூ மச். வெரி பிக்.'

'ஐ ஸீ. பட் ஐ ஹேவ் டு பி தேர். எனி ஷார்ட் கட் ப்ளீஸ்?'

'இப்பிடி வாங்க... கமான். இந்த கடயாண்ட திரும்பி ரைட்ல ஒடிச்சா படிக்குப் பக்கமா போயிடுவீங்க.'

'தேங்க்யூ. ஸீ, ஐம் ஏ ஹேன்டிகேப்ட் மேன். தேங்க்யூ ஆஃபீசர்.'

வண்டி திரும்பியது.

'பேசாம நானும் கம்யூனிஸ்டாவலாம்னு பாக்கேன்' என்றார் பண்டாரம்.

'நிங்கள்ளாம் செரி வராது. நீரு சாமியார் ஆயிடும். காவி வேட்டி, கமண்டலம், விபூதி. காம்ரேட்னு சொல்லாமல் மை சன் அப்டீன்னு சொன்னா தீந்தது. உதர நிமித்தம் பலவித வேஷம்...'

வண்டி நின்றது. இருவரும் இறங்கி நடந்தார்கள். படிகளில் ஏறிக்கொண்டிருந்த கும்பல் அவர்களைத் தள்ளி கிட்டத்தட்ட சுமந்து சென்றது.

'இது நம்ம சகாவாக்கும். அகமதுகுட்டி. சகாவே பின்னெ எந்துண்டு?'

'இங்ஙனே போணு...'

'வாங்கிறீரா வோய், எட்டாயிரம்.'

'ஆளப் பாத்தா கல்லு மாதிரி இருக்கான்.'

'அயமுட்டி, காட்டுடே நின்றெ சம்பாத்யம்.'

அகமதுகுட்டி தன் வேட்டியை விலக்கினான். விதைகள் இரு மிகப்பெரிய பூசணிக்காய்கள் போல தரையில் இருந்தன. அகமதுகுட்டி அவற்றுக்குப் பின்னால் குட்டி ஸ்டூல் மீது அமர்ந்திருந்தான். ஸ்டூல் அல்ல, ஒரு கள்ளிப் பெட்டி.

'கொள்ளாம்' என்றார் பண்டாரம். 'ஆனாலும் எட்டாயிரம் கூடுதல்.'

'பாத்து சொல்லும்' என்றபடி நடந்தனர்.

'இது ஒதம் மாதிரி இல்லியே.'

'இது ஆனைக்கால். சிலருக்கு காலுக்குப் பதில் இங்க வரும். ஒரு பார்ட்டி இருக்கா. மீனாட்சியம்மை. அவளுக்கு நெஞ்சில யாக்கும். மரத்தில ஒரு ஸ்டேண்ட் போட்டு வச்சிரிக்கும். இப்போள் குருவாயூரில் உண்டு.'

'ஒரு ஆறுக்கு பாத்தா...'

'ஆறு கட்டாது. எட்டுண்ணு சொன்னது உமக்காக. எட்டு நேத்தே சாமியப்பன் சொன்ன விலை.'

'இதொரு ரோகமுல்லா...

'ஆமா. ரோகம் ஆர்க்கும் வரலாம். எதுக்காக இவனுக்கு பைசா போடுறான். பாத்ததும் ஒரு நிமிஷம் அய்யோங்கிறான். மறுநிமிஷம் நமக்கு இப்பிடி இல்லையேங்கிறான். சாமிக்கு நன்றி சொல்லி பைசாவ போடுறான். நோயாளிக்குதான் பைசா கூடுதல். அவன் பக்கம் ஒருநாள் இருந்து பாரும். அயமுட்டி கெட்டிக்காரன். மிடுக்கன். சும்மா காட்டமாட்டான். லேடீஸ்ட்ட காட்டமாட்டான். அய்யேண்ணு ஓடிப்போவாளுக. ஒரு அம்பது அம்பத் தஞ்சு வயசு ஆளைப் பாப்பான். சார்னு கூப்பிடுவான். ரொம்ப சுபாவமா, தீப்பெட்டி கேக்க கூப்பிடுற மாதிரி. அவரும் திரும்பிப் பார்த்ததும் சட்டுன்னு வேட்டியை தூக்கிக் காட்டிட்டு மூடிடுவான். பிறகு ஒரு டெயலாக். அவ்வளவுதான். பைசா விழும்.'

'ஏன்?'

'கேட்டுப் பாரும் அவன்ட்ட. அம்பது வயசுக்காரர்ல பாதிப் பேருக்கு ஹைட்ரோஸில் பிரச்சினை இருக்கும். இதப் பாத்தா

அரண்டு போயிருவான். சபரிமலையில ஒருத்தர் அப்பிடியே மயங்கி விழுந்துட்டார்.'

ராமப்பன் பீடி பிடித்தபடி 'வாறாரு மோலாளி. மோலாளி வணக்கம்' என்றார்.

குருவி சிரித்தாள்.

'என்னட்டி சிரிப்பு? எங்கேலே அவன் பெருமாளு?'

'பீடி வாங்க போனாரு...' என்றான் வண்டிமலை.

'அவன் பீடி வேங்கி செத்தான். இதாக்கும் நான் சொன்ன மண்டையன்.'

'ஒருத்தன் கூடவே வேணும்போல இருக்கே. தானா சோறு சாப்பிடுமா?'

'ஊட்டணும்.'

'ம்ம். இதுமாதிரி கேசுகளுக்கு எப்பமும் மரணம் உண்டு. பிரெய்ன் ஹெமரெஜ்னு சொல்வாங்க.'

'நம்மட்ட வந்து ஆறு வருசம் ஆகுது. ஒரு பிரச்சினையுமில்ல. இந்தக் குருவியும் பத்து வருசமா ஒரு பிரச்சினையுமில்லை.'

'வேய் நாயரே... என்னையும் வாங்குவேய். மலையாளத்துக் குட்டிகளைப் பாத்துட்டு செத்தா மேல போனா நிம்மதியாட்டு இருப்பேன்ல்ல' என்றார் ராமப்பன்.

குய்யன், 'அவருக்கு பேரு ராமப்பன் நாயருண்ணாக்கும்' என்றான்.

'மொத்தமாட்டு ஏழெண்ணம் எடுத்தா பாத்து போட்டு தாறன்' என்றார் பண்டாரம்.

ராமப்பன் 'ஓய் நாயரே, நான் நாயக்கு. நாயக்கும் நாயரும் நாயும் எல்லாம் ஒரு சாதியாக்கும்வே' என்றார்.

'பாப்பம். இப்பம் பைசாய்க்கு பேச்சில்லையே. விலை போட்டு மாத்தினா பிரச்சினையில்ல' என்றார் கொச்சன்.

பெருமாள் வந்தான். 'எளவெடுத்த பயலே... எங்கல போனே?'

'வீடி...'

'வீடி ஒனக்க அப்பனுக்க...' பண்டாரம் திரும்பி முத்தம்மையைப் பார்த்தார்.

'இதாருலே பிள்ளைய அவ அட  காக்க வச்சது? பிடுங்கி வெயிலிலே போடுவே' என்றார்.

முத்தம்மை, 'தம்புரானே ஒடயோரே' என்று வீரிட்டாள்.

'பாத்து கிட்டப்  போ... கடிச்சுப் போடுவா...' என்றார் பண்டாரம்.

பெருமாள் முத்தம்மையின் மெல்லிய சதைக்காலில் மிதித்து அழுத்தினான். அவள் கதறியபடி துடித்து எழும்போது சட்டென்று அவள் கையருகே இருந்த குழந்தையை அதன் ஒரு காலைப்பிடித்து தூக்கிவிட்டான்.

முத்தம்மை ஒரு கையை ஊன்றி ஒரு காலை உதைத்து சக்கரம் போல சுற்றிக் கதறினாள். 'ஒடயோரே ஒடயோரே... எக்க பிள்ள எக்க பிள்ள...'

பிள்ளையை ஒரு பாலிதீன் தாளில் போட்டு வெயிலில் வைத்தான். முத்தம்மை அங்கேயே சுழன்று சுழன்று கூவினாள். பெருமாள் ஒரு துண்டை அருகே விரித்து அது பறக்காமல் இருக்க கற்களை காவல் வைத்தான்.

'பெருமாளு, எருக்கு இப்பம் ஆஸ்பத்திரியிலயாக்கும் இருக்கா. ஒரு நடை போயி கூட்டி வந்திருடே. அங்கண என்ன மருந்து குடுக்கப் போறாவ? இங்க கெடந்தா பத்து சக்கறம் பைசா எங்கிலும் மிஞ்சும்.'

கொச்சன், 'குஷ்டரோகிக்கெல்லாம் இப்பம் ஒண்ணும் வெலையில்லை' என்றார்.

'பாத்துட்டு வாரும்வே. பேசிக்கிடலாம்' என்றபடி படிகளில் ஏறினார் பண்டாரம்.

# 8

பெருமாள் தட்டுகளைக் கொட்டிச் சேகரித்து எண்ணினான். ஆயிரத்து இருநூறு ரூபாய். எல்லாம் சில்லறை. ஐந்து ரூபாய் நாணயங்கள்கூட இருந்தன. 'அஞ்சு ரூவா போடுதவனும் இருக் கான்லே' என்றான்.

'வேய் வண்டி, ஒரு கெட்டு வீடி...' என்றார் ராமப்பன்.

'இந்த கௌட்டுப் பெய சிதைகொள்ளியில்லா வலிக்கான். இரும்வே...' என்றான் பெருமாள். துண்டைச் சுருட்டி எடுத்துக் கொண்டான். 'நான் கீள போயி சில்லறையை மாத்திப்போட்டு ஆஸ்பத்திரிக்குப் பெய்ட்டு வாறன். நீரு சில்லறை தேத்தி யிருப் பேரு. நாறவெள்ளம் ஊத்திப்பிடாதீரு. கண்ணுகுத்தி மாதிரி பாத்துக்கிடணும். ராமப்பனை பாத்துக்கிடும். பெய எப்பிடியும் பைசா கமத்திப் போடுவான்' என்றபடி எழுந்தான். பிளாஸ்டிக் குடத்திலிருந்து நீரை அள்ளி பாலீதீன் தாளில் வெயிலில் கிடந்த குழந்தை மீது தெளித்தான். மயங்கிக் கிடந்திருந்த அது திடுக்கிட்டு விழித்து வீரிட ஆரம்பித்தது. முஷ்டி பிடித்த ஒற்றைக் கரம் ஆடியது. முகம் சிவந்து சிறுத்து காலை உதைத்து ஆங்காரமாக அழுதது.

'பாத்துக்கிடும். அரைமணிக்கூறுக்கு ஒருக்கா வெள்ளம் தெளிச் சணும். கரச்சல் கிர்கிர்னு விட்டுவிட்டு வந்தா பசி கேறியாச் சுண்ணு அர்த்தம். பிள்ளைய அவகிட்ட கொண்டு போவாதேரு. டப்பாவுல கறந்தெடுத்து கொண்டு வந்து குடிக்க வையும்.'

'செரி' என்றான் வண்டிமலை.

'பாத்துக்கிடும்.' பெருமாள் படியிறங்கினான்.

வண்டிமலை உடனே ஒரு டம்ளர் தண்ணீரை மொண்டு குழந்தை மீது மொத்தமாகக் கொட்டிவிட்டு நிழலுக்குப் போய் அமர்ந்து பீடி பற்றவைத்தான். வெயிலில் விசித்திரமான புழு மாதிரி கரிய குழந்தை கிடந்து நெளிந்தது. அதன் துண்டில் பைசாக்கள் ஒளிவிட்டவாறு விழுந்தபடியே இருந்தன. பெண்கள் திரும்பிப் பார்த்து மோவாயில் கை வைத்து ஆச்சரியப்பட்டபடி சென்றனர்.

பெருமாள் அடிவாரத்திற்கு வந்து அர்ப்பணா டிராவல்ஸ் கடைக்குப் போய் சில்லறையைக் கொட்டி நோட்டாக மாற்றிக் கொண்டான். அங்கே பெரிய பிளாஸ்டிக் வாளிகளில் நிரம்ப நிரம்ப சில்லறையை வைத்து நான்கு பேர் தரையில் அமர்ந்து எண்ணிக் கொண்டிருந்தார்கள். நூறு ரூபாய் நூறு ரூபாயாக துணிக் கிழிசல்களில் முடிந்து இன்னொரு சாக்கு மூட்டையில் போட்டனர். முதலாளி சிக்கையநாயக்கர் இரண்டு கால்களிலும் யானைக்கால் இறங்கிய ஆறடி உயர வழுக்கைத்தலை ஆசாமி. சிவந்த நிறம். கடுக்கன், பெரிய அரிவாள் மீசை. ஒரு காலத்தில் அடிவாரத்தை கலக்கிய கேடி என்று கேள்வி. இப்போது ஏழெட்டு வீடு, கார், சின்னவீடு என்று நிலை கொண்டு விட்டார். அவருக்கு படிகளில் நூறு உருப்படிகளாவது உண்டு.

'என்னடா மாதவா, வசூல் எப்படி?'

'போவுது நாயக்கரே.'

'உன் ஓனரை இந்தப் பக்கமா காணமே.'

'விசயா லாட்சில தாமசம். அவருக்கு தைப்பூசமானா மத்திய மான்னமானாலும் மல்லியப் பூமணம் எறங்காது. அதாக்கும் களி...'

'மனுசன் வாழட்டுமே. என்ன நான் சொல்றது? அரிதரிது மானுட ராய் பிறத்தலரிது. மானுடராய் பிறந்தாலும் கூன்குருடு செவிடு நீங்கி பிறத்தலரிது. பிறந்தாச்சு. பின்ன என்ன? மத்தவன் உண்டுண்ணு கேள்விப்பட்டேன், கம்மூனிஸ்டு.'

'ஆமா. இன்னைக்கு உருப்படிகளை வந்து பாத்தாரு.'

'எந்த மேனிக்கு போவுது?'

'அவரு ஏழு எட்டுண்ணுதான் கேப்பாரு. நம்மட்ட ஒரு மண்டையன் உண்டு. அவனுக்கு ஆறுவரை சொல்லிடலாம். நல்ல வரவுள்ள ஐட்டமாக்கும். மத்ததெல்லாம் கணக்கு.'

'ஒரு எருமை உண்டில்லேடே.... அவளை குடுப்பாரா... பத்து வரை போலாம்.

'அதெப்பிடி? அது காமதேனுல்லா. ரெண்டு வரியத்துக்கு ஒரு குட்டி ஈனும். குட்டி எப்பிடியும் பத்து போவும்.'

'அது பேறு பத்து பதினைஞ்சு ஆயிருக்குமே.'

'பதினெட்டு. இன்னும் ஏழெட்டு போவும்.'

'இந்த கம்மூனிஸ்டுப் பய இருக்கானே அவனை நான் குருவாயூர்ல பிச்சைக்காரனா பாத்திருக்கேன். ஒரு தீப்பெட்டில தட்டிட்டு அடித்தொண்டைல குட்டி பிரசங்கம் பண்ணி பிச்ச கேப்பான். 'விதியுடெ பலிமிருகமாணு அய்யோ... கண் துறந்நு நோக்குவின் மகா ஜனங்களே' அப்படீன்னு எடுத்து விட்டான்னா பத்து பேரு கூடி நின்னுடுவாங்க. பிறகு சிந்தாபாத் அடிக்க ஆரம்பிச்சான். எப்ப எப்படி ஏறினான்னு தெரியாது. டேய் சரவணமுத்து, அந்தாளுக்கு குருவாயூர்ல ஒண்ணு சோட்டாணிக் கரைல ஒண்ணுன்னு ரெண்டு லாட்ஜ் இருக்கு தெரியுமாடா?.'

'அதுக்கு ஒரு கொடுப்பினை வேணும் நாய்க்கரே...'

'இங்க பாரு நான் ஒண்ணு சொல்றேன். அடித் தொண்டைல பேசுறான் பாரு அவன் எப்படியும் முன்னுக்கு வந்திடுவான். நான் நாப்பது வருசமா பாத்த கணக்கு இது. கட்சில சேருவான், தரகு பேசுவான். ஒருத்தன் அடித் தொண்டையில நிதானமா பேசினாலே அவன் புத்திசாலின்னு ஜனம் நினைக்கும்.'

'அப்பம் நான் வாறன் நாயக்கரே. ஒரு உருப்படி ஆஸ்பத்திரியில கெடக்கு. போயி பாத்தெடுக்கணும்.'

'அங்க இருளப்பன்னு நம்ம ஆள் ஒருத்தன் உண்டு. கருப்பா குள்ளமா. மூஞ்சில ஒரு மரு உண்டு. அவனைப் பாரு. நேரா டாக்டர்ட்ட போயிடாதே...'

'செரி நாய்க்கரே...'

'பணத்தை பாத்துக்க. நம்ம பழைய பையன்க பிளேடும் கையுமா அலையுறானுக. தைப்பூசத்திலதான் அவனுக கடனை அடைக்கணும்.'

வாசலில் நின்ற இரு ஆண்டிகள் திருவோட்டுடன் சில்லறையை நீட்டினார்கள்.

'ஏலே ஓட்டை நீட்டாதே. ஓடு எடுக்க வச்சிடுவானுக போல இருக்கே...' என்றார் நாயக்கர்.

பெருமாள் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போனபோது வெயில் சற்று தாழ ஆரம்பித்துவிட்டது. அப்போதும் தெருவெங்கும் காவடி ரகளையாக இருந்தது. ஆஸ்பத்திரியின் முன் கும்பல் கும்பலாக கிராமத்து ஜனங்கள். டீத் தூக்குகள். தள்ளுவண்டி வியாபாரம். தாழ்வான கூரை கொண்ட பழைய ஓட்டுக் கட்டிடத்தின் வராண்டா முழுக்க நோயாளிகள். அருகே உறவினர்கள். சட்டை மட்டும் அணிந்த இரு குழந்தைகள் படியில் உட்கார்ந்திருந்தன. பெருமாள் ஒரு வெள்ளைச் சீருடை ஆளிடம் 'இங்க இருளப் பன்னுட்டு...'

'ஆடர்லியா?'

'ஆமா.'

'நேரா போங்க. சி.பிளாக்கு.'

சி. பிளாக்கில் இருளப்பன் ஓர் அறைக்குள் ஸ்டூலில் அமர்ந்து மாத நாவல் படித்துக்கொண்டிருந்தான். அந்த வராந்தா பழனி அடிவாரச்சாலை அளவுக்கு போக்குவரத்துடன் இருந்தது.

'அய்யா வணக்கம்.'

'ஆரு?'

'நாய்க்கரய்யா சொன்னாங்க...'

அவன் எழுந்து 'வாய்யா' என்று ஓரமாகப் போனான். பெரிய இரட்டைத்தூணுக்கு பின்புறம் பல வருட வெற்றிலைச் சாறு உலர்ந்தும் நொதித்தும் புதிய எச்சில் வீச்சத்துடனும் குவிந்து கிடந்தது.

'நம்ப உருப்படி ஒண்ணு இங்க மாட்டிப்போட்டு.'

‘கிளவி...’

‘இல்லை. குட்டியாக்கும். போலீசு கூட்டிப்போயி நடுவ ஒடிச்சுப் போட்டாக. சின்னகுட்டி. இருபத்தஞ்சு இருந்தா கூடுதலு.’

‘சரஸ்வதியா. நேத்து வந்தவ.’

‘அவ இல்லை.’

‘காலு ரெண்டும் இல்லாம?’

‘அவதான். அவ பேரு எருக்குண்ணாக்கும் பொதுவா சொல்லியது.’

‘அவ பின் வார்டுல இருக்கா.’

‘என்ன கண்டிசன்?’

‘மோசம்.’

‘என்ன கொள்ளெ?’

‘முதுகெலும்புல பிராக்சர். எந்திரிச்சு உக்காரமுடியாது. நல்ல வலி இருக்கும்.’

‘அனுப்பமாட்டாவளா.’

‘நல்ல கதை. போயி கேட்டிராதே. போலீசுக்கு போன் செய்திடு வாரு டாக்டர். இங்க வர்ர கேசுகளை சொந்தக்காரங்க கூடத்தான் அனுப்பணுமின்னு சட்டம் போட்டிருக்காரு புதிய டாக்டர். சொந்தக்காரங்க வராட்டி நேரா ஒரு மடத்துக்கு சொல்லி விடுறாரு. கன்யாஸ்த்ரீகள் வந்து கூட்டிட்டு போறாங்க.’

‘புதிய டாக்டர் வேதக்காரனா?’

‘ஆமா. பிரான்ஸிஸ் தேவநாதன்னு. உங்க ஊருப் பக்கம்தான்.’

‘இந்த வேதக்காரனுகளுக்கு இது என்னத்துக்க தீனம்? ஊரில உள்ள அம்பிடு ஆத்மா இல்லாத்த சென்மங்களையும் கொண் டுட்டு போறானுக.’

‘அவங்க ஈரல எடுத்து பதப்படுத்தி அமெரிக்காவுக்கு அனுப்பு றாங்க தெரியுமா?’

'முருகா... உள்ளதாட்டா?'

'பின்னே?' இருளப்பன் குரலைத் தாழ்த்தி, 'இப்பவே உன் ஆளு பாதி மசிஞ்சாச்சி. இனி ரெண்டு நாள் இங்க இருந்தாண்ணா மடத்துக்குத்தான் போவா.'

பெருமாள் கொஞ்ச நேரம் பேசாமல் நின்றான்.

இருளப்பன், 'நைட் டூட்டிக்கு ஒரு டாக்டர் வருவாரு. அவரு கொஞ்சம் மசியிற டைப். கண்டுக்கமாட்டாரு.'

'பைசா வேங்குவாரா?'

'பைசா கேக்கமாட்டாரு. கொஞ்சம் நீக்குபோக்கா பாப்பாரு. ஒரு ஸிஸ்டருக்கு ஒரு அஞ்ஞூறு.'

'இந்த நொண்டிச் சனிக்கா?'

'வருமானம் வருதே?'

'அதுக்காச்சுட்டி. செரி, பெரிய பேச்சு வேண்டாம். நான் மொத்தமாட்டு அஞ்ஞூறு உம்மட்ட தாரேன். பிறகு ஒரு பைசா ஆருக்கும் குடுக்கமாட்டேன்.'

'வேண்டாம் அது போதும்.'

பெருமாள் திரும்பி வெளியே வந்து தெருவின் நெரிசலில் ஊடுருவிச் சென்று பிள்ளையார் கோயில் முன் வளையல் வியாபாரியிடம் ஒரு மஞ்சள் சரடு வாங்கினான். அலுமினியம் கில்ட் முக்கிய ஒரு டாலரும் வாங்கி அதில் கோத்தான். ஆஸ்பத்திரிக்குத் திரும்பி அதை மண்ணில் போட்டுப் புரட்டி கையில் உருட்டி அழுக்காக்கி சுருட்டி இடுப்பில் செருகிக் கொண்டான்.

இருளப்பன் வந்து, 'வேதக்காரன் போயாச்சு. மத்த டாக்டர் இப்ப வந்திடுவார்' என்றான்.

'நர்சுக்கு பணம் குடுத்தாச்சா?'

'எல்லாம் ரெடி. டாக்டர் டிஸ்சார்ஜ் போட்டா எடுத்துட்டுப் போகலாம்.'

'தூக்கிட்டு போகப்பிடாதோ?'

'தூக்க விடமாட்டாங்க. ஒரு ரிக்ஷா வச்சுக்கோ.'

'ரிக்ஷா இந்தக் கூட்டத்தில எப்படி அடிவாரம் வரை வரும்? பொல்லாத பணம் வேற கேப்பான்.'

'சரி. நான் பாத்துக்கிடறேன். நீ வா.'

பெருமாள் பின் வார்டுக்கு நடந்தான். அது அஸ்பெஸ்டாஸ் போட்ட பெரிய கொட்டகை. தரையிலும் கட்டில்களிலும் திண்ணையிலுமாக நெரிந்து பிதுங்கி நோயாளிகள். பெரும் பாலும் பிச்சைக்காரர்கள் அல்லது அவர்களைப் போன்ற பிறர். அழுக்குத் துணிகளும் அலுமினியத் தட்டுகளும் வாந்தியும் எச்சிலுமாக இறைந்து கிடந்த தரையில் கால் வைத்து நடக்க முடியவில்லை.

'நில்லும் ஓய்' என்றான் இருளப்பன். 'அங்க பாரும்.'

இரு கன்னியாஸ்த்ரீகள் எருக்குடன் பேசிக்கொண்டிருந்தனர். ஒருத்தி தரையில் கிடந்த எருக்கு அருகே குந்தி அமர்ந்து பேசிக்கொண்டிருந்தாள். மற்றவள் தோளில் ஒரு பெரிய ஜோல்னாப் பையுடன் நின்றாள்.

'இது மூணாம் தடவ இவிக இவளப் பாக்க வர்ரது' என்றான் இருளப்பன்.

'தேவ்டியாளுவ' என்றான் பெருமாள்.

அவர்கள் நர்ஸிடம் பேசிய பிறகு கிளம்பிச் சென்றனர்.

பெருமாள் நேராக பல உடல்களைத் தாண்டி எருக்கு படுத்திருந்த பாயருகே சென்றான். அவள் அவனைப் பார்த்ததும் பீதியுடன் 'அய்யோ எனக்கம்மோ' என்றாள்.

பெருமாள் குனிந்து மஞ்சள் கயிறை அவள் கழுத்தில் வேகமாகக் கட்டி அவள் சட்டைக்குள் திணித்தபடி 'சத்தம் போட்டே, கொன்னுட்டு போயிடுவன் சவமே' என்றான்.

எருக்கு அப்படியே பிரமித்துக் கிடந்தாள். 'நான் சொல்லுயத எதுத்துப் பேசினே நாயே எந்த மடத்துக்கு நீ போனாலும் அங்க வந்து வெட்டுவேன். வெளையாடுதியா?' என்றபடி எழுந்தான்.

இருளப்பன் நர்ஸ் அருகே நின்றிருந்தான். பெருமாள் கும்பிட்ட படியே நெருங்கினான்.

'நீங்க ஆரு?'

'எனக்க பெஞ்சாதியாக்கும்.'

'என்ன தொழிலு?'

பெருமாள் பேசாமல் நின்றான்.

'பிச்சை எடுக்கிறதா?'

'இல்லை. கூடை முடையிறது, மாலை கெட்டுறது.'

'இப்ப அவளை அசைக்கமுடியாதே. முதுகெலும்பு பிராக்சர் ஆயிருக்கு. அப்படியே பக்கவாதம் வந்தாலும் வந்திடும்.'

பெருமாள் இருளப்பனைப் பார்த்தான்.

'அவங்க கூட்டம் ஊரை விட்டுட்டு போகுது. கூடப் போகல லேன்னா சாதி வெலக்கு போடுவாங்க. அதான்...' என்றான் இருளப்பன்.

நர்ஸ் எழுந்து அங்கிருந்தே, 'ஏண்டி, இந்தாளு உன் புருஷனா?' என்றாள்.

எருக்கு 'ஆமா' என்றாள்.

'இவங்கூடப் போறியா?'

'செரி.'

'மடத்துக்குப் போறேன்னு சொன்னாங்க?'

'இவிக கூட போறேன்.'

'உனக்கு நல்ல வலி இருக்கும். இப்ப கொஞ்சம் சீரியஸ். என்ன சொல்றே?'

'அவிக இஷ்டம்' என்றாள் எருக்கு.

'சரி. கையெழுத்துப் போடுங்க.'

'கைநாட்டாக்கும் அம்மிணி.'

'சரி. அதைப் போடு. சட்டப்படி ரேஷன் கார்டை காட்டாம விடப்படாது. இருளப்பன் சொன்னதால...'

*'சரி அம்மிணி. நூறாயுசு உண்டும்.'*

*இருளப்பன், 'தூக்கிட்டு பின்னால வா. ஒரு வழி செய்திருக்கேன்' என்றான்.*

*பெருமாள் எருக்கை தூக்க அவள் இடுப்பில் கையை வைத்ததும் அவள் 'ஆ...' என்று அலறினாள்.*

*'டேய்... டேய்... எப்படி தூக்கறே. வண்டி இல்லியா?' என்றாள் நர்ஸ்.*

*'வண்டி வெளில நிக்குது மேடம்' என்றான் இருளப்பன்.*

*பெருமாள் ஒரு கையால் எருக்குவின் வாயைப் பொத்தி மறுகையால் இடையை வளைத்துத் தூக்கினான். அவள் உடம்பு வலியில் அதிர்ந்து அவன் கைகளில் துடித்தது. கோழியை கழுத்தை முறுக்கிக் கொல்லும்போது அது துடிப்பதுபோல இருந்தது அவனுக்கு.*

*வார்டுக்குப் பின்பக்கம் காக்கிச் சட்டையும் நிஜாரும் அணிந்த ஒல்லியான ஆள் இரு சக்கர வண்டி ஒன்றுடன் நின்றார். வாயில் குதப்பிய வெற்றிலையை குரங்குபோல பெரிதாக அதக்கி யிருந்தார்.*

*'இதில போடு' என்றான் இருளப்பன் வண்டியைக் காட்டி. அது மல வண்டி. காய்ந்து நொதித்த மலம் ஒட்டியிருந்தது. அதில் எருக்கை போட்டதும் அவள் கழுத்து அறுத்த பன்றி போல் ஊளையிட்டபடி துள்ளினாள். பெருமாள் சுற்றுமுற்றும் பார்த் தான். வண்டியின் கைப்பிடியில் கிடந்த பழைய துணியை எடுத்து அவள் வாய்க்குள் செருகி இறுக்கினான்.*

*'கொஞ்ச நேரம்தான். மாத்திரை குடுத்திருக்கு. தூங்கிடுவா' என்றான் இருளப்பன்.*

*'சாமி இது பொணமில்லை... நான் இல்ல' என்றார் பகடை.*

*'இந்தாளுக்கு ஒரு நூறு ரூவாயக் குடும்' என்றான் இருளப்பன்.*

*'சாமி பெரும்பாவம் சாமி.'*

*'பணம் வச்சுக்கய்யா.'*

‘சாமி வேணாம். பெரும்பாவம்... பெரும் பாவம் சாமி...’

இருளப்பன் பணத்தை பகடையின் காக்கிச் சட்டைப் பையில் வைத்தான். பகடை பதறி விலகி சட்டையையே கழற்றிக் கீழே போட்டுவிட்டார்.

‘சாமி பிள்ள குட்டிக்காரன். மூணு பொண்ணு இருக்கு சாமி. பெரும்பாவம் சாமி.’

‘நீ தள்ளிட்டு போ. நான் இந்தாளைப் பாத்துக்கிடுறேன்’ என்றான் இருளப்பன்.

வண்டி பலமாக அதிர்ந்தது. பெருமாள் சாக்கு ஒன்றை எடுத்து எருக்குமீது நன்றாகப் போட்டு மூடிவிட்டு வெளியே வந்தான். வண்டியைப் பார்த்த எவரும் மறு முறை பார்க்காமல் பதறி விலகினார்கள்.

# 9

சாமபூஜைக்குப் பிறகு, மழை ஓய்வதுபோல படிக்கட்டுகளில் கூட்டம் குறைய ஆரம்பித்தது. கடைசியாக உதிரி வியாபாரிகளும் பூக்காரிகளும் படி இறங்கினர். திடீரென்று பனி கடுமையானது போல குளிர் எங்கும் பரவியது. கற்படிகள் ஈரப் பளபளப்புடன் நியான் விளக்கொளியில் மௌனமாய் பள பளக்க, பாலிதீன் காகிதக் குப்பைகள் காற்றில் தத்தளித்து சுழன்றபடி மடிப்புகளில் ஒட்டி அதிர்ந்தன. தொலைவில் ஒரு நாயின் ஊளை எழுந்தது.

முத்தம்மை குழந்தையை மார்புமீது போட்டு உரத்தகுரலில் வெறி பிடித்தாற்போல் கொஞ்சினாள்.

'ஏம்டி முத்தம்மை, கொறெ நிறுத்தி விளி, கேட்டியா! நீ விளிக்க விளியில ஊரில உள்ள அம்பிடு ராஜாக்கமாரும் இஞ்ச வந்து கூடப்போறானுக' என்றார் ராமப்பன்.

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்றான் குய்யன்.

'அதுக்கும் கொடுப்பினை வேணுமே. அவளுக்கு வரியம் தோறும் மடி நிறையுதே' என்றாள் சணப்பி.

'உனக்கு மடி நிறையணுமானா வல்ல குதிரையும் நினைக்கணும்' என்றார் ராமப்பன்.

'சீ சவத்துப் பயலே' என்று சணப்பி ஒரு கல்லைத் தூக்கி வீசினாள்.

'இஞ்சேரு... நான் உனக்க தந்தியானுக்க பிராயமாக்கும். சிலப்பம் உனக்கு தந்தியானாட்டு இருக்கவும் சான்ஸ் இருக்கு.'

'இஞ்ச வா. தந்தியானா இல்லையான்னு பாக்கேன்.'

முத்தம்மை ஒருக்களித்துச் சரிந்து, 'ராமப்பண்ணோ, பீடி இருக்கோவ்?' என்றாள்.

'குளிரடிச்சா பீடி. கூதலுக்குண்ணா நீ வாடி' என்றான் குய்யன். 'அண்ணோ பாலு குடிக்க பிள்ளய உள்ளவ பீடி பிடிச்சா பிள்ளைக்குக் கெடுதல்ன்னுட்டு ஒரு நா தினத்தந்தில போட்டிருந் தான்.'

'நீ எங்கிடே தினத்தந்தியப் பாத்தே...'

'கிளிஞ்ச பேப்பரு படிக்கப்படாதோவ்? கிளிஞ்ச நோட்டு, கிளிஞ்ச தோசை, கிளிஞ்ச பொண்ணு எல்லாம் நமக்கு வரவாக் கும் கேட்டேரோ?'

முத்தம்மை பீடியைப் பற்றவைக்கவில்லை.

'தீப்பெட்டி இந்தாட்டி.'

'வேண்டாம் அண்ணா.'

'ஏட்டி...'

'வேண்டாம். பிடிக்கல்லே.'

'இந்தப் பரட்டப்பய சொல்லுயதக் கேட்டா வேண்டாம்ங்கியே. இவன் ஊத்த வாயில்லா. நீ வலி குட்டி.'

'வேணாம்ணா.'

'குட்டி உனக்க பிள்ளை இன்னுமட்டும் பத்துமணிக்கூர் வெயிலு காஞ்சாச்சு. இந்த வீடிப் பொகயிலயா அது சாவுது?'

'வேணாம் அண்ணா.'

'உனக்குக் கிறுக்காக்கும் கேட்டியா? நீ பெத்த உருப்பிடி யெல்லாம் எங்கிண கெடக்கோ...'

முத்தம்மை 'அதெல்லாம் ஆண்டவன் பாத்துக்கிடுவான்.'

'ஆண்டவன் மோண்டான். நீ ஒரு கிறுக்கியாப் போயிட்டியே...'

'பின்ன என்ன அண்ணா நினைக்கியது? என்னமாம் நினைக் கணுமே.' முத்தம்மை, பிள்ளையை லேசாகத் தட்டி 'வேண்டாம் வேண்டாம் ராசாவே... பூலோக ராசாவே' என்றாள்.

'தரையில எறும்பிருக்கோவ்?' என்றாள் சணப்பி.

'உதிரம் போறதுல்லா. எறும்பு இருக்கும்' என்றான் குய்யன்.

'அது கொண்டாக்கும் நான் மாரில வச்சிருக்கது' என்றாள் முத்தம்மை.

'கேட்டியாட்டி முத்தம்மை. சபரிமலைல ஒரு யந்திரம் இருக்குவு. பைசா போட்டா ஒரு ஒறை வந்துவிழும். மத்த ஒறை. அத மாதிரியாக்கும் நீயி. வல்லவனையும் பிடிச்சு அணைய வச்சா அடுத்த வரியம் ஒரு சரக்கு ரெடி.'

'இருக்கட்டும் அண்ணோ. இந்த நாறப் பிளப்பில அப்படியெங் கிலும் ஒரு சந்தோஷம் இருக்கே.'

ஏழெட்டு ஆண்டிகள் கூட்டமாகச் சண்டையிட்டபடியே இறங்கிச் சென்றார்கள். எல்லோரும் போதையில் இருந்தார்கள். ஒருவனை இருவர் கட்டிப் பிடித்தபடி இழுத்துச் சென்றார்கள். அது ஒரு கிழப் பண்டாரம். அதன் கால்களில் இருந்து ரத்தம் படிகளில் துளித்துளியாகச் சிதறியது.

'இவுனுவளுக்கு இதாக்கும் ராத்திரி பூரா சோலி. வெட்டு குத்து. இஞ்ச பாருங்க ராமப்பண்ணா, வயசான பண்டாரமானா அடிபெட்டு சாவணும். சில்லறைய மத்தவனுக எடுத்துக்கிடு வானுக...' குய்யன் சொன்னான்.

'சிலவனுக எங்கியாம் பூந்தி வப்பானுக. அதத் தேடி எடுத்துப் போட்டு கொண்ணு போடுகானுவ. திர்ணா மலையில் ஒரு ஆண்டிய எட்டாளு சேர்ந்து தெப்பக் குளத்தில வச்சு முக்கி கொல்லுயத நான் கண்டிட்டுண்டு.'

'நல்ல தணுப்புண்டு' என்றான் குய்யன், கந்தல் போர்வையை உடலெங்கும் சுற்றியபடி. 'பளனீல இந்த தணுப்புண்ணாக்க இந்நேரம் சபரிமலையில எப்பிடி இருக்கும்...'

ராமப்பன் பேப்பர்களைப் பொறுக்கிச் சேர்த்து தீப்பற்ற வைத் தார். அது சுடர் விட்டதும் குய்யன் தவழ்ந்து வந்து அருகே அமர்ந்தான். சணப்பியும் குருவியும் அருகே வந்தனர்.

'குருவி... எனக்க சிட்டுக்குருவியில்ல நீ. ஒரு பாட்டு பாடுட்டி கண்ணு.'

குருவி கீச் கீச் குரலில் திட்டினாள்.

'வா குருவி. வரு குருவீ... வாழைக்கைமேல் இரு குருவீ.'

'வேய் குய்யா, நீ அவளை விட்டுப்போடு.'

குருவி ஒரு பிளாஸ்டிக் பையில் எஞ்சிய இரு வறு கடலைகளை மீட்டு வாயில் போட்டது.

சணப்பி முத்தம்மையிடம் 'பாலா குடுக்கே?' என்றது.

'ஆமா.'

'கடிப்பானா?'

'இதுக்கு பல்லு குருக்க இன்னியும் நாளு கிடக்கு குட்டியே.'

சணப்பியின் முகம் தீயின் தழலில் தகதகத்தது. அதில் ஒரு சிரிப்பும் கூச்சமும். 'எப்பிடிக்கா இருக்கும்? கூசுமா?'

'இஞ்சேரு சணப்பி, நல்ல கெட்டின மூத்திரம் எறங்குத மாதிரி இருக்கும்' என்றான் குய்யன்.

சணப்பி ஒரு கல்லை எடுத்து எறிய குய்யன் 'அம்மோ' என்றான். 'சவமே பொளந்து போடுவேன்.'

'இருடே குய்யா. அதுகளுக்கு அதுக்க சந்தோஷம்.'

'நீ எம்பிடு பெத்தே?' என்றாள் சணப்பி.

'ஆருக்கு கணக்கிருக்கு. எனக்கு மொகம்கூட ஓர்மயில்ல அக்கா. இன்னி ஆரயும் பாத்தாலும் கண்டுபிடிக்க ஒக்காது' என்றாள் முத்தம்மை. 'முதல் குட்டிய மட்டும் நல்ல ஓர்மையிருக்கு அக்கா. அது எனக்கு கேறுமிண்ணு நான் சொப்பனத்திலயும் நெனைக் கல்ல. அப்பம் எனக்கு பதினாறு வயசாக்கும். வயறு கேறி வீக்குயது வரை எனக்கு நம்பிக்கை வரேல்ல. பிறவு ஊணும் இல்ல உறக்கமும் இல்ல. எப்பம் பாத்தாலும் சொப் பனம். பின்ன கரைச்சில் சிரிப்பு. எனக்க அக்கோ, மத்து கேறிப் போச்சுண்ணு சொன்னா போருமே. பத்து மாசம் தரையிலயா நிண்ணேன்?

பிறவு பிள்ளை பெறந்து வயத்தாட்டி தூக்கி காட்டி னப்பம் எனக்க சங்கு பொட்டிப் போச்சு அக்கா.'

'ஏன் உன்னைய மாதிரி இருந்துதோ?'

'எனக்கெங்கிலும் கண்ணு உண்டும். ஒரு கை உண்டும். சோறு இருக்க இடம் பாத்து வாரித்திங்க ஆருக்க சகாயமும் வேண்டாம். அது ஒரு வரத்துல்லா. கண்ணில்ல. கையிலயும் காலிலயும் ஒரோ விரலு மட்டும்தான். கூனுமுண்டு. மாறிலயும் வயித்திலயும் அடிச்சுட்டுல்லா கரைஞ்சேன். பிடிச்சு அமுக்கி கொல்லணு முண்ணு நெனைக்கேன். கொரவளையில கைய வச்சா கை அமுங்காது. அய்யோ, எனக்க மக்களேண்ணு கெடந்து நெலவிளிச்சேன். அப்பூண்ணு ஒருத்தன் இருந்தான். அவன் கம்பி எடுத்து அடிச்சான். இப்பமும் சங்கில நிக்குதக்கா பிள்ளை சரீரம். எம்பிடு மட்டம் தடவித் தடவிப் பாத்தேன். பத்து மட்டம் தடவினா கை வளராதாண்ணு நெனைச்சேன் அக்கா. கண்ணில நிக்குது அக்கா அந்த ஒத்தைக்கை வெரலு...'

'கொல்ல ஒக்குமோ?' என்றாள் சணப்பி.

'பிள்ளைய வெறுக்கமுடியாது அக்கா. வெறுக்கலாம். அது நம்ம முலைக்கண்ணில வாய வச்சா பிறவு வெறுக்க ஒக்காது. முலை குடிக்கும்பம் கடிச்சா வலிக்கும் பாத்துக்கோ. அப்பம் அது நம்மகிட்ட என்னமோ சொல்லுயது மாதிரி இருக்கும். அம்மாண்ணு விளிக்கது மாதிரி. அதுக்கும் பிறவு நாம பிள்ளைய வெறுக்கமுடியாது. எனக்க பொன்னு அக்கோ.'

சணப்பி 'உனக்கு அந்தப் பெயல பாத்தா தெரியுமாட்டி?' என்றாள்.

'அதுக்கு இப்பம் பதினேழு பதினெட்டு வயசிருக்கும்லா. எனக்க கண்ணில நிக்குதது அதுக்க சின்ன சரீரமாக்கும். ஒரு வயசில யில்லா வெலை குடுத்து தூக்கிட்டுப் போனாவ. எனக்க பிள்ளியள ஒண்ணையும் பிறவு நான் கண்ணால பாத்திட்டில்ல. பழெண்ணம் பெண்ணாக்கும். ஒண்ணையும் நான் கண்டிட் டில்ல. ஆனா ஒண்ணு சொல்லுதேன் அக்கா, தொட்டா அப்பம் அறிஞ்சு போடுவேன். எனக்க பிள்ளைய தொட்டா அப்பம் அறிஞ்சு போடுவேன்...'

'உனக்கு நல்ல குட்டி பிறந்திட்டுண்டா?'

'எங்கேண்ணு பிறக்கும்? எப்பமும் வல்ல குருடோ கூனோ தானே அணையவிடுதாக?'

'அதுக்குமொரு யோகம் வேணுமே...'

'எனக்க பிள்ளைய பதினெட்டாக்கும். பதினெட்டு. சபரி மலை படிபோல பதினெட்டு. அதில ஒண்ணெங்கிலும் என்னைய பாத்தா அம்மைண்ணு அறிஞ்சுகிடும். அத நான் தொட்டா அப்பம் அறிஞ்சு போடுவேன். ஒண்ணெங்கிலும் தேடி வரும் அக்கா. எனக்க சங்குக்குள்ள ஒரு வெட்டம் உண்டு. அது சத்தியமாக்கும் கேட்டியளா?'

குருவி அப்படியே தூங்கிவிட்டிருந்தது. ராமப்பன் ஒரு துணியை எடுத்து அவள் மீது மூடிப் போர்த்தினார். 'சவத்துக்கு ஒரு மொறெ உண்டுமா?'

'அண்ணே சில்லறை உண்டுமா.'

'ஏம்லே?'

'நான் படியிறங்கிப் போயி ஒரு ரெண்டு பொகபீடி வாங்கிட்டு வாரேன்.'

'பைசா இருக்கு. ஆனா பெருமாளு இங்கதான் நிக்குதான்.'

'அவன் போறான். நான் பக்குவமாட்டு பெய்ட்டு வாறேன்.'

'அவன் எருக்க கொண்டாந்து கீழ போட்டதப் பாத்தேன். சாயக்கடைல நிப்பான். நீ இந்தால போ.' ராமப்பன் சிமின்ட் இடுக்கிலிருந்து ஏழெட்டு ஐந்து ரூபாய் நாணயங்களை எடுத்துக் கொடுத்தார். 'இஞ்ச பாரு எனக்கு விலையும் கணக்கும் தெரியும் பாத்துக்க.'

'அண்ணா உம்மட்ட கணக்கு பாப்பனா? நீ எனக்க அண்ணன்லா.'

'அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான ஒலகத்திலே...'

குய்யன் கோலை நீட்டி 'அண்ணன் ஒரு கோயிலென்றால் தம்பி அதில் தீபமன்றோ' என்றான்.

'போலே' என்று ராமப்பன் கையை ஓங்கினார்.

குய்யன் படியில் தடுமாறியும் அவ்வப்போது அமர்ந்தும் இறங்கிச் சென்றான்.'பொக வரும்பம் எனக்கும் ஒரு வலி குடுத்துப்போடு அண்ணா' என்றாள் சணப்பி.

'வலிச்சா பின்ன நீ நிக்கமாட்டே...'

இடுப்பில் சுருக்குப் பையைத் தொங்கவிட்டு வாய் நிறைய வெற்றிலையும் தலையில் மல்லிகைப் புதருமாக ஒரு கிராக்கி இறங்கி வந்தது.

'மேல ஆரு இருக்கா? இப்பிடி எறங்கி வாறா... என்றாள் சணப்பி.

'மேலே முருகன் இருக்கான்லா.'

'சீ, நாறப் பேச்சு பேசுதியா...'

'ஏட்டி நீ மேல பாத்திருக்கியா? அங்க எம்பிடு கடை. எம்பிடு ஆளு. அவனுகளும் சீவிக்கணுமே. எனக்க பஞ்சாமிர்தமே. கடைக்கண் பாராயோ...'

'சீ... போ நாயே...'

'நாய்க்கு நானாழி நேரமாக்கும். தாங்கமாட்டே பாத்துக்கோ.'

'சீ... போ...'

'எங்கிண போற... வெளுக்க நேரம் ஆச்சே?'

அவள் வாட்சைப் பார்த்து 'ஒண்ணரை' என்றாள்.

'ஆளு திகையல்லியா?'

'ஒரு கிளவன். அவனுக்கு ஒண்ணும் வரல்ல' என்றபடி அவள் படியில் அமர்ந்தாள்.

'தைப்பூசத்துக்கு இம்பிடு ஆளு கூடுது?'

'இங்க திருவிழா அன்னைக்குதான் கெராக்கி மாட்டாது.'

'சாப்பிட்டியா?'

'எங்க? அஞ்சு ரூவா குடுத்தான். அதக் கொண்டுபோயி போலீசு காரனுக்குக் குடுக்கணும். கீழ போனா அவன் பிடிப் பான்.'

ராமப்பன் ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை எடுத்து அவளிடம் நீட்டி 'இந்தா ஒரு காப்பியோ மற்றோ குடி...' என்றார்.

'வேண்டாம் பெரிசு... நீங்க கஷ்டப்பட்டது...'

'என்னத்தைக் கஷ்டம். ஒண்ணுமில்ல. எப்படியும் இத இங்க செலவளிக்கணும். நம்ம ஓனருமாரு பாத்தா அடிப்பானுக. வச்சுக்கோ. பிள்ளைய உண்டா?'

'ஒரு பையன்.'

'படிக்கானா?'

'ஏழாப்பு படிக்கான். படிப்பெல்லாம் நல்லாதான்.'

'பிடிச்சு வல்ல மோட்டாரு ஆலையில போடு. கஞ்சிக்கு முட்டு வராது. இஞ்ச பாரு, பெயலுக்கு பத்து வயசாச்சுண்ணா பிறவு அவன் இந்த ஊரில இருக்கப் படாது.'

'ஆமாம்' என்றாள் அவள்.

'மதுரையில கொண்டுபோயி விடு. இல்லண்ணா சீரழிஞ்சு போயிடுவான். இந்தா, பெயலுக்கு வல்லதும் வாங்கிக்குடு.'

'வேண்டாம் பெரிசு.'

'வச்சுக்கோ. பின்ன இத வச்சுக்கிட்டு என்ன செய்யியது?'

அவள் பைசாவை செருகியபடி திரும்பி மாங்காண்டி சாமியைப் பார்த்தாள். 'சிரிக்காரு.'

'அது சிரிப்பில்ல. களி.'

'என்னது?'

'ஆனந்தக்களி. கேட்டிருப்பியே. அவரு சித்தராக்கும். மகான்.'

'நிஜம்மாவா?'

'பின்ன? நீ செண்ணு காலில விழுந்து கும்பிட்டுட்டு எறங்கு. சும்மா ஈசல் மாதிரி சூடேறின கிராக்கிகள் வந்து விளும் பாத்துக்க.'

அவள் மீண்டும் சாமியைப் பார்த்தாள். 'மூக்குப்பொடி டப்பா மாதிரி இருக்காரு.'

குய்யன் படிகளில் ஏறி வந்தான். 'அண்ணே அதாரு சொந்தமா?'

'எனக்க சரக்குடே. எப்பிடி சூப்பரா இருக்காளா?'

'அவளுக்க பம்பரு கொள்ளாம்.'

'இவன் குய்யன். பறப்பயலாக்கும்' என்றார் ராமப்பன்.

சணப்பி 'அண்ணே, எனக்கு ஒரு வலி' என்றாள்.

'இரு குட்டி. ஆடு அறுக்காமயா பிடுக்க சுடுயது? எம்பிடு கெட்டுவே கொடுத்தான்?'

'மூணு.'

கஞ்சா பொட்டலங்களைப் பிரித்துக் கசக்கி பீடிக்குள் செருகி சுருட்டிக் கட்டினார் ராமப்பன். மொத்தம் நான்கு பீடிகள். இரண்டை தன் இடுப்பில் செருகினார். தீயில் காட்டிப் பற்ற வைத்துவிட்டு 'தெட்சிணைய சாமிக்கு காட்டிப் போட்டு வாலே' என்றார்.

குய்யன் புகையும் பீடியுடன் போய் மாங்காண்டி சாமியின் வாயில் அதை வைத்துக் கும்பிட்டான். சாமி இழுத்து மூக்கு வழியாக புகை விட்டது. பிறகு அதைக் கொண்டுவந்து ராமப்பனுக்கு கொடுத்தான். ராமப்பன் சணப்பிக்கு, சணப்பி குய்யனுக்கு, கங்கு சுழன்று சுழன்று வந்தது.

'உனக்கு வேணுமாட்டி குட்டி?'

'வேண்டாம் பெரிசு. எனக்கு இது ஒத்துக்கிறதில்ல.'

'பஸ்டு சரக்கு. பூலோகம் தெளியும். மேலோகம் எறங்கி வரும்.'

மேலேயிருந்து ஒரு குரல், 'ஓய் பெரிசு, வீடி இருக்கா ஓய்' என்றது.

'எந்த ஊருவே உமக்கு?'

'திர்ணாமலை.'

'திர்ணாமலையில கொட்டாய் சாமி இப்ப இருக்கா?'

'வடக்க போயிட்டே.'

ராமப்பன் பீடியைப் பற்றவைத்து குய்யனிடம் கொடுத்தனுப்பினார். படிகளில் உயரத்தில் இருந்து ஒரு குரல், 'அது ஆரு ராமப்பண்ணணா?'

'ஆருடே?'

'அண்ணா... சம்முவம்லா.'

'நீ இப்ப எங்கடே?'

'குருவாயூர் ஓனராக்கும்.'

'கம்மூனிஸ்டு நாயரா... எளவெடுத்த பயலாச்சே. காச்சக்கறம் தேறாதே.'

'போவுது வண்டி. ஒரு வலிக்கு குடுத்தனுப்பு அண்ணா.'

பீடிகள் படி ஏறிச் சென்றன.

மேலேயிருந்து ஒருவன் 'ராமப்பண்ணோ, நீங்க மலைமேல போயிருக்கேளா?' என்றான்.

'நீ ஆருடே?'

'நம்ம பேரு சந்திமுத்தன். நாம கண்டிட்டிருக்கோம் சபரிமலையில.'

'செரி கெடக்கட்டு. நீ போயிருக்கியா மேல?'

'இல்லண்ணா.'

'நானும் போனதில்ல.'

'மேல பெரிய கோவிலாக்கும்' என்றான் குய்யன். 'கல்லுல அடிச்ச கோயில். தரை அம்பிடும் சொர்ணம்.'

'போலே போலே...'

'பின்ன? ஆணிப் பொன்னுல்லா.'

'மேல இருக்கிற சாமிக்குப் பளனியாண்டிண்ணாக்கும் பேரு.' வெகு தொலைவில் ஒரு குரல் கேட்டது. 'ஆண்டியக் கும்பிட்டா ஆணிப்பொன் மழை அப்பிடீன்னு சொல்லுவாக.'

'நீ பாத்திருக்கியா?'

'நான் எங்க பாக்கது?'

'இந்தப் படில உள்ளவனுக ஒருத்தனும் பாத்திருக்க மாட்டான். பிலேய், எங்கியாம் ஒரு கோயிலுக்குள்ளயாவது போனவனுக இங்க ஆரெங்கிலும் உண்டா?' என்றார் ராமப்பன்.

படிகளில் யாரும் ஒன்றும் சொல்லவில்லை.

'பின்ன என்ன மயிருக்குடே போட்டு பெனாத்துதீக. சாமிய சாமிக்க சோலி பாக்க விடுங்கடே. ஆணிப் பொன்னு... மயிரு மட்டெ.'

குருவி பயந்தெழுந்து 'நாயி நாயி' என்றாள்.

'என்னட்டி' என்றார் ராமப்பன்.

'நாயி நாயி' என்றாள் கீச் கீச் குரலில்.

ராமப்பன் தடியால் தரையில் ஓங்கி அடித்து 'நாய் ஓடிப் போயாச்சு. அடிச்சாச்சு' என்றார். 'தூங்கு.'

குருவி தலையை பரட்பரட் என்று சொறிந்தாள்.

'தூங்கு. பேயாம தூங்கு' என்று அவளை ராமப்பன் அதட்டினார். அவள் திரும்பப் படுத்துக்கொண்டாள்.

'ராமப்பண்ணோ இந்த சாமிக்கு ரெண்டு பெஞ்சாதில்லோ. பிறவு ஏன் ஆண்டியா நிக்கான்?' என்றான் குய்யன்.

'அவனுக்கு அண்ணன், பெண்ணு கெட்டல்ல இல்லியா? ஒரு ஆறு மாசம் அவன் சோலி பாக்கட்டுன்னு இங்க வந்திருப்பான். இங்க பிடிச்சு சாமியாக்கிபிட்டானுக...'

குய்யன் பயங்கரமாகச் சிரித்தான். அதுவரை வேறு உலகில் இருந்த சணப்பியும் வெடிச்சிரிப்பு சிரித்தாள். மேலேயும் நாலைந்து கஞ்சா சிரிப்புகள் கிளம்பின.

கொக்கிக்காரி எழுந்து 'வறேன் பெரிசு' என்றபடி முந்தானையைச் செருகினாள். சற்றுத் தயங்கியபிறகு நேராகப்போய் மாங்காண்டி சாமியைக் கும்பிட்டாள்.

'குட்டியே நீ ராமப்பண்ணனுக்க தடியை கும்பிடு கேட்டியா? அதுக்க வீரியம் உனக்குத் தெரியாது' என்றான் குய்யன் சிரித்தபடி. 'ராமபாணம்லா.'

மேலேயிருந்து ஒரு குரல் ‘கோதண்டபாணியே’ என்றது.

இன்னொரு குரல் ‘அரோகரா…’

குய்யன் இடுப்பில் கைவைத்து நடனமிட்டபடி ‘வேலுண்டு வினையில்லை. கோலுண்டு காலில்லை. மயிலிருக்கும் இட மென்னடா முருகா. நீயிருக்கும் இடம்தானடா’ என்று பாடினான். பலர் கை தட்டினார்கள். கிராக்கி சிரித்தபடி இறங்கிச் சென்றாள்.

‘கோதண்டபாணித் தெய்வமே…’

‘அரோகரா.’

‘அரகரோகரா.’

ராமப்பன் தன் கோலைத் தூக்கிக் காட்டினார். ஒருவன் மேலே யிருந்து இறங்கி வந்து ஒரு வாடிய சாமந்திப்பூ மாலையை அதற்கு மாட்டினான்.

ராமப்பன் அதை சுழற்றி வீச எங்கும் ஒரே கெக்கலிப்பு ஒலிகளும் சிரிப்பும் ஆர்ப்பாட்டமுமாக இருந்தது. சணப்பி படிகளில் தலைவைத்து ‘நான் போறேனே… நச்சத்திரமே…’ என்றாள்.

‘அண்ணா அவளுக்கு ஒரு வலிவு குடு’ என்றான் ஒருவன்.

ராமப்பன் தன் கோலால் சணப்பியைத் தொட்டார். அவள் ‘அய்யோ நான் போறேனே’ என்றாள்.

‘தொட்டால் பூ மலரும்’ என்று குய்யன் படாரென்று தொடையில் அடித்தான். ஏராளமான சிரிப்பொலிகள் நான்கு பக்கமும் பீரிட்டன. ‘தொடாமல் பீ மலரும்’ என்றது வேறு ஒரு குரல். மீண்டும் சிரிப்புகள் எழுந்தன.

# 10

தைப்பூசம் முடிந்தபிறகும் கலைக்கப்படாத கடைகளும் ஊர் திரும்பாத வியாபாரிகளும் தெருச்சந்துகளில் முழுக்கக் குவிந்த குப்பையுமாக பழனி நாறியது. பண்டாரம் பகல் முழுக்க விடுதியறையில் கிடந்தார். எட்டுநாள் தொடர்ந்து குடித்ததில், குடிக்காதபோதும் புளித்த ஏப்பமும் தலைக்கனமும் இருந்தது. காலையில் சிறுநீர் கழித்தபோது உள்ளே ஏதோ அடைத்தது. முள் போலவோ பழுக்கக் காய்ச்சிய சிறு இரும்புக் குண்டு போலவோ. முக்கியபோது கொதிக்கும் நீர்போல சுட்டபடி வெளியேறியது. வலியில் ஒருகணம் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. 'முருகா' என்று எழுந்து திரும்பி வந்து படுத்துக்கொண்டார். மெத்தை புகை மாதிரி உள்ளே இழுத்து கீழே கொண்டு சென்றபடியே இருந்தது.

மதியம் தாண்டிய பிறகு தொம்மன் தேடி வந்தான். 'சகாவு விளிச்சு' என்றான்.

'எங்க இருக்காரு?'

ாயக்கருடெ கடயிலுண்டு.'

'செரி' என்று எழுந்து அமர்ந்தார். 'செரி நான் வரேன்னு சொல்லு' •ன்றார்.

.அதன் பிறகு குளித்து உடைமாற்றி விபூதி அணிந்து கிளம்பினார். தெருவெங்கும் பலவிதமான குப்பைகள் கூட்டிக் குவிக்கப் பட்டிருந்தன. அவற்றின் மீது பன்றிகள் மோதித் துழாவின. ஒரு

டெம்போ முழுக்க வாழை மரங்களை ஏற்றிக் கொண்டிருந்தனர். குலை இல்லாத வாழை மரங்கள். அலங் காரத்திற்கு நடப் பட்டிருந்தவை. ஒலிபெருக்கிகளில் முருகன் புகழ் ஓய்ந்து 'பனி விழும் மலர்வனம். உன் பார்வை ஒரு வரம்' என்று அடிவயிற்றுக் குரல்.

நாய்க்கர் இருந்தார். கொச்சனைக் காணவில்லை. 'வாங்க வாங்க பண்டாரம்... என்ன இந்தப் பக்கமா காணவேயில்ல. பெரியாளா யிட்டீங்க...'

'ஏங்க. பெரியாளும் சின்னாளும். இந்த நிமிஷம் வரை வேலை. இந்த உருப்படிகளை கெட்டி மேய்க்குததுண்ணா சும்மாவா?'

'உக்காருங்க... என்ன சாப்பிடறீங்க?'

'ஒண்ணும் வேண்டாம். எங்க நாயரு?'

'வருவார். ஒரு சின்ன வேலையா போயிருக்கார்.' நாய்க்கர் குரலைத் தாழ்த்தி, 'அவன் பேச்சில மயங்கிடாதீங்க. ரொக்கம் இவ்வளவு, கைமாத்து இவ்வளவுன்னு பேசி கறாரா முடிக் கணும். சிரிச்சுப் பேசி சகாவேம்பான். கொட்டயக் களவாண்டு கிட்டு போயிடுவான். மலையாளத்துத் தாளி...'

'ஆமாமா. மலையாளத்தான்னா சாக்கிரதயாத்தான் இருக்க வேண்டியிருக்கு.'

'உங்க உருப்படி ஒன்று ஆஸ்பத்திரில கெடந்ததே எப்படி இருக்கு?'

'அதுக்கென்ன? இந்த ரோகமும் மத்ததும் நம்மளுக்குத்தான். இதுகளுக்கு ஒரு இளவும் இல்லை. பாருங்க பள பளான்னு இருக் கான். பாலும் நெய்யுமா திங்குதான். கேட்டா பிரசருங்கியான், ஹார்ட்டுங்கியான். இவனுகளில அப்பிடி வல்லதும் உண்டுமா?'

'எல்லாம் டாக்டர்மாரு பேசி உண்டுபண்றதுதானே. இந்தக் கையால சம்பாதிக்கிறோம். அந்தக் கையால அவனுகளுக்கு குடுக்கிறோம். பழைய காலத்திலே டாக்டர்ன்னா தெய்வம். சைக்கிள்ல போனான்னா சனம் விழுந்து கும்பிடும். பொய் யில்லை. இதே ஊர்ல ரகுநாத ராவ்னு ஒரு டாக்டர் இருந்தார். அவரை சனம் விழுந்து கும்பிடுறதை நான் கண்ணால

பாத்திருக்கேன். அவரு மிதிச்ச மண்ணை வாரி பொட்டலம் கட்டிக் கொண்டு போவாங்க, சீக்கு பிள்ளைக நெத்தியில் போடறதுக்கு. இப்ப உண்டா அதெல்லாம்? பேசப்பிடாது. அய்யா கை வலிக்குதுன்னு உள்ள போ. போயி எக்ஸ்ரே எடு, பிபி பாரு, மயித்த புடுங்கு... கொஞ்சம் அசந்தா வயத்தயோ நெஞ்சயோ கிறிப் போடுவான். கேட்டா உமக்கென்ன தெரியும் ஓய், உம்ம கை வயித்தில இருந்து தொடங்குது தெரியுமாம் பான்.'

'கலிகாலம். கலிகால வைபவம்னு சும்மாவா சொன்னாங்க?' என்றார் பண்டாரம்.

'ஒண்ணுக்கும் நியதி இல்லை. கண்டதே கோலம் கேட்டதே அலங்கோலம். இங்க போகுது பாருங்க. படிக்கிற பிள்ளை மாதிரியா இருக்கு? பிரா என்ன, பவுடர் என்ன, குதிகால் செருப்பு என்ன. என்ன சொல்ல? வானம் கிழியுற நாள் வரப் போவுது போங்க.'

'சொல்லாதீக அண்ணாச்சி. எல்லாம் அப்படி அப்படித்தான். நமக்கும் வீட்டுல மூணு கொமருக இருக்கு. இந்தமாரியா பவுடரும் பாடியுமாட்டு அலையுதுக?'

'மூத்தவளுக்கு தரம் பாக்கிறீங்களா?'

'பாத்திட்டிருக்கேன். ஒரு பி.ஏ. வேணும். சர்க்காரில பத்து காசு சம்பளம். அம்பிடுதான்.'

'என்ன குடுப்பீரு?'

'அம்பது பவுன். கைல ஒரு லெச்சம். பின்ன தட்டு முட்டு செலவுக. நல்ல தரமானா ஒரு கோட்ட வெதப்பாடு.'

'வயல வச்சிட்டு என்ன செய்ய? புஞ்ச இல்லியா.'

'இருக்கு. அது வேணுமானா ஒரேக்கரு. ஆனா சர்க்காரு சோலி வேணும்.'

'சர்க்காரு சோலீன்னு பாத்தா இப்போ காரியங்கள் சரியாகாது ஓய். நல்ல கம்பெனி வேலையின்னாலும் பாரும்.'

'இருந்தாலும் சர்க்காருன்னா அதுக்கு கணக்கு வேறயில்லா.'

கொச்சனின் கார் வந்து நின்றது. அவர் இறங்கி டிரைவரிடம் ஏதோ பேசினார். 'செங்கொடியெல்லாம் ஜோர்தான்' என்றார் நாயக்கர்.

கொச்சன் டொக்டொக் என்று வந்து 'என்ன பண்டாரமும் பரதேசியும் பேசிட்டிருக்கீங்க?' என்றார்.

'சாயா சொல்லட்டா?'

'சொல்லும். எனக்கு வித்தவுட்டு.'

'அதான் தெரியுமே. ஓய், எனக்குத் தெரிஞ்சு சுகர் இல்லாத்த மலையாளத்தான் பூலோகத்தில் இல்லை.'

கொச்சன் அமர்ந்தபடி 'பின்னெ காரியங்க?' என்றார்.

'காரியங்க மொறெபோலே' என்றார் பண்டாரம்.

'பண்டாரம், டாக்டரப் பாத்து ஒரு ஊசி போடும் ஓய். மூத்த ரோகம் கேறியிருக்கு' என்றார்.

பண்டாரம் முகத்தைத் தடவி 'என்ன?' என்றார்.

'மத்தது. பழனி பஞ்சாமிர்தம்... மூத்திரம் எப்பிடிப் போகுது?'

'சூடு. ஊருக்குப் போயி ஒரு மொந்த பயனி குடிச்சா தணியும்.'

'அது சூடில்லய்யா... தீ... பொன்னுருக்கித் தீ... நல்ல டாக்டரைப் பாரு.'

'உறை போட மாட்டியா?' என்றார் நாய்க்கர்.

'என்னத்த ஒறை? மப்பு கேறினாப்ல...'

'உணவு, உடை, உறையுள். அதான் தமிழ் சாஸ்திரம். பழைய காலத்திலே சொல்லியிருக்கே' என்றார் கொச்சன். 'செரி அப்பம் காரியங்கள் பேசிடலாம். சாட்சி நாய்க்கர்.'

'உம்மை எனக்கு இருபது வருஷமா தெரியும். நமக்குள்ள இதெல்லாம் என்னத்துக்கு...'

'அது நியாயம். ஆனா தர்மமே ஆனாலும் ஒரு காவல் இருக்கது நல்லதில்லையா. என்ன நாய்க்கரே...'

'பின்ன. உரலை திருடணுமானாலும் விரலுக்க மறைவாவது வேணும்' என்றார் நாய்க்கர்.

'உம்ம பழைய தொழில் விட்டுப் போகாதே' என்றார் கொச்சன்.

'உம்ம பழைய தொழிலு விட்டுப் போகுமா. எல்லாம் சரிதான்.'

'பேசின கணக்குப்படி எனக்கு ஏழு உருப்படியை நீங்க எடுத்துக்கிடுங்க. உங்களுக்க உருப்படி நாலும் பத்தாயிரம் ரூபாயும் எனக்கு. அம்பிடுதேன்.'

'என்னத்த அம்பிடு. சொன்னா போருமா? கணக்கு வேண்டாமா? உம்ம சரக்கில் மண்டையன் மட்டும்தான் பஸ்ட் ரேட். மத்ததெல்லாம் சராசரி. நான் தாறது எல்லாமே பஸ்டு.'

'ஆரு அந்த சுள்ளிக்கால் கிளவியா? பாத்தா வாளைக் கருவாடு மாதிரி இருக்கா. இருந்த இருப்பில இருபது இட்லி திங்கியா.'

'இப்படி பேசிட்டே போறதில அர்த்தம் இல்லை. நாம ஒரு ரேட்ட போட்டு முடிச்சா அதுக்கு ஒரு உறப்பு இருக்கணும்.'

உபரியாக இரண்டாயிரம் மட்டும் தருவதாக இறுதியில் கொச்சன் ஒப்புக்கொண்டார். பண்டாரம் மனம் கசந்து போனார். ஆனால் வேறு வழியில்லை. மொத்தமாக வசூல் இருபத்தோராயிரம் ரூபாய் வந்திருந்தது. ஒன்பது நாட்களுக்கு அது நல்ல தொகைதான்.

'நம்ம வண்டியிலேயே போலாம்' என்றார் கொச்சன். 'நீரு சரக்குகளை நம்ம சகாவுக்குக் காட்டும். நம்ம சரக்கு லோட் பண்ணும்பம் இதையும் சேர்த்து லோட் பண்ணிடுவான். உம்ம சரக்கை விட்டுட்டுப் போயிடுவான். நீரு கூட்டிட்டுப் போவும்.'

'விக்கிற சரக்குக்கு ஆயிரம் ரூபான்னு போலீசு சொல்லுதான்.'

'ஆமா, இது அவன் நாடு இல்லியா. மக்கா இது சனநாயக நாடு. ஃபார் த பீப்பிள். பை த பீப்பிள். நாம விக்கல்ல. வாங்கல்ல. அப்புறம் என்ன?'

'அது செரியாக்கும்.'

காரில் இருந்த இளைஞனை அறிமுகம் செய்து வைத்தார். 'இது சகாவு ஸ்ரீகண்டன் நாயர். இப்ப நம்ம ஏரியாக்களை இவர்தான் கவனிக்கிறார்.'

பண்டாரம் சற்று மிரண்டுவிட்டார். ஸ்ரீகண்டன் நாயர் மம்முட்டி சாயலில் சிவப்பாக கனத்த மீசையும் சிவந்த உதடுகளும் விளிம்பில்லாத கண்ணாடியுமாக திரைப்பட நடிகர் போல இருந்தான். 'ஹலோ' என்று கை நீட்டினான்.

பண்டாரம் தயங்கியபடி கை நீட்டினார்.

'தமிழ் படிச்சு வருது' என்றான் ஸ்ரீகண்டன் நாயர்.

'கொள்ளாம்' என்றார் பண்டாரம்.

'பண்டாரம் பயப்படாதீரு. இவரு அட்வகேட்டாக்கும். இனிமே நம்ம மருமகன்.'

'அய்யோ உள்ளதா.'

'ஆமா. அட்வகேட் கைல இருக்கிறது எதுக்கும் நல்லது இல்லியா?'

'அது பின்னெ இல்லியா?'

அடிவாரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு பண்டாரமும் கொச்சனும் இறங்கி நடந்தார்கள். பின்னால் ஸ்ரீகண்டன் நாயர் வந்தான்.

'இவன் ஆளு பாக்க ராஜகுமாரன் மாதிரில்லா இருக்கான்?'

'ஒரு கோடி ரூபா பிசினஸாக்கும் பண்டாரமே. பின்ன இருக்கமாட்டானா.'

பண்டாரம் ஒன்றும் சொல்லவில்லை.

'சபரிமலையில தேவஸம்போர்டுக்கு அடுத்தபடியா லாபம் நமக்குத்தான். ஏது?'

'ஆனா ஒரு மூவாயிரம் ரூபா விட்டுக்குடுக்க மாட்டேரு.'

'மக்கா, அப்படி விட்டுக்குடுக்காம இருந்துதானே இது இப்படி ஆச்சு?'

'உம்மட்டே பேச நம்மால முடியாது.'

படிகளில் ஒரு பெரிய போஸ்டர் மீது எருக்கு கிடந்தாள். சற்று தள்ளி மயில்சாமி. படிகளில் கூட்டம் குறைவாக இருந்தது.

'பெருமாளு எங்கட்டி?'

'அவிக சாப்பிடப் போனாக' என்றாள் எருக்கு, பார்வையைத் தாழ்த்தி வெட்கத்துடன்.

'இவ என்னடே இந்த நாணம் பிடிக்கியா?'

'மோலாளி அவ புதுப்பொண்ணுல்லா. கழுத்தைப் பாத்தியளா?'

'அது என்னட்டி?'

எருக்கு முகத்தை கையால் மூடிக்கொண்டாள்.

மயில்சாமி உற்சாகமாக 'பெருமாளு கெட்டினது. ஆசுபத்திரியில இருந்து விட்டு கிட்டியதுக்கு கெட்டியிருக்கான். பெண்ணு அப்பிடியே கேறி பூத்துப் போட்டா. சிரிப்பும் கண்ணீரும். மூணு நாளாட்டு எப்பம் பாத்தாலும் அவிக அவிகன்னு பாட்டு. ஹெஹெஹெ...'

'சவத்து மூதிக' என்றபடி பண்டாரம் முன்னால் நடந்தார்.

பண்டாரம் ஸ்ரீகண்டனிடம் மண்டையனைக் காட்டி 'மண்டை எங்கயும் மோதப்பிடாது. தலையோடு கெட்டியில்ல. பொத்துட்டு வந்திடும்' என்றார்.

உருப்படிகளை ஸ்ரீகண்டன் நாயர் ஒரு சிறு நோட்டில் குறித்துக்கொண்டான். குருவியை அவர்கள் பார்த்ததும் ராமப்பன் 'நாயரே இத வாங்கிப்பிட்டேரா?' என்றார்.

'ஆமா, சகாவே.'

ராமப்பனின் வாய் திறந்தபடி நின்றது. குருவி மாறி மாறிப் பார்த்தாள்.

ராமப்பன் சட்டென்று அவரது இயல்புக்கு மாறான பதறிய குரலில் 'ஓய் நாயரே... என்னையும் வேங்கிக்கிடும்யா. நாயா உளைக்கிறேன்யா...'

'நீரு கிழடுல்லியா நாயக்கே?'

'பிரிச்சுப் போடாதிய நாயரே. பிள்ளயப்போல இருக்கா. ஓய் பண்டாரம், இம்பிடுநாள் உமக்கு நாயா உளைச்சேன் வேய்.'

கீச் என்ற ஒலியுடன் குருவி தவழ்ந்து விழுந்துபோய் ராமப்பனை இறுகக் கட்டிக்கொண்டாள். ராமப்பன் அவள் தலை மயிரை விரலற்ற கரங்களால் வருடினார். பழுத்த கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

பண்டாரம் 'உங்க அயிட்டத்தை பாத்திடுவோம் நாயரே. எதுக்கும் குழப்பம் இருக்கப்படாதுல்லா' என்றார்.

படிகளில் ஏறிச் சென்றபோது கொச்சன் 'அந்த எருமையை வித்தேருண்ணா எனக்கு சொல்லும்வே. விலையை நீரு சொல்லும். நான் வாங்கிக்கிடுதேன்' என்றார்.

'அது இனி அடுத்த வருசம்தான் தேறும். குட்டி போட்டு ஒரு வாரம் ஆகல்ல.'

அகமதுகுட்டி தன் விதைகளின் மீது அமர்ந்திருப்பது போலத் தெரிந்தான். எதிரே ஒரு கால் இல்லாத கிழவி. இருவரும் குதூகலமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

'எந்தரு அயமுட்டி காரியங்ஙள்?'

'ஒந்நுல்ல சகாவே. ஒரு கொச்சு வர்த்தமானம்.'

'நடக்கட்டே. நின்னெ விற்றிட்டுண்டு கேட்டோ...'

'இயாழளா?' என்றான் பண்டாரத்தை ஏறிட்டுப் பார்த்து.

'நல்ல மனுஷ்யனாணு.'

'எனிக்கு சாய, பீடி ரண்டும் ஒரு குறவும் உண்டாகான் பாடில்ல' என்றான் அகமது. 'பின்ன சீத்த வாக்கு, அடி, இம்மாதிரி ஏர்ப்பாடொந்நும் நடக்குல்ல. ஒரு ரூபா தேற்றி போலீஸினு ஒரு கம்ளெயின்ட் அயக்கான் எனக்கறியாம். அல்லங்கி மாத்ருபூமிக்கு ஒரு கத்து. மனசிலாயோ?'

'பெரிய சீண்ட்ரமா இருப்பான் போல இருக்கே.'

'தமிழ் ஆளுகளை மாதிரி இல்லவே மலையாளி. எழுத்து படிச்சவன். பாத்து பதமா நடக்கணும். அவன் கேட்டதக் குடுத்திடு. பைசா ஒரு குறவும் இருக்காது. நித்தம் அறுவடை.'

'பின்னே...' என்று பின்னாலிருந்து கூப்பிட்டான் அகமது. 'திவசமும் காலத்து எனிக்கு மலையாள பேப்பர் வேணும். மாத்ருபூமி, அது கணிசம். பறஞ்ஞில்லந்நு வேண்டா.'

'பஞ்சு மெத்தை கேப்பான் போலிருக்கே...'

'பேப்பர்தானே கேக்கான். குடு. பேப்பர் படிச்சு ஒருத்தனும் இங்க புரட்சிவாதி ஆகிறது இல்லை. பேப்பர் ஒரு மாதிரி கஞ்சாதான்' என்றார் கொச்சன்.

அவரது உருப்படிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது தூரத்திலேயே மாங்காண்டி சாமியின் பாட்டு கேட்டது.

'பெற்ற தாய் உறவோ
　　பெண்ணுக்கு இல்லையடி
உற்ற தந்தை உறவும்
　　உதவாமப் போகுமடி
கற்ற வித்தையெல்லாம்
　　காசுக்கு ஆகாதடி
வற்றாத கண்ணீரல்லோ
　　வாய்ச்ச துணையடியோ'

ராமப்பன் வாய் திறந்திருக்க தடியை ஊன்றியபடி அசையாமல் அமர்ந்திருந்தார். மடியில் குருவி தலை புதைத்துக் கிடந்தாள்.

'ஹூ இஸ் தட் கை?' என்றான் ஸ்ரீகண்டன் நாயர்.

'மை உருப்படி. குட் சாமியார்' என்றார் பண்டாரம்.

'ஹி கன்சிடர் ஹிம் ஆஸ் எ டிவைன் அசெட்' என்றார் கொச்சன்.

'.அது எந்து பாட்டாக்கும்?' என்றான் ஸ்ரீகண்டன் நாயர்.

'அவரு சொந்தமா பாடுயது. அவரு அப்படி பலதும் பாடுவாரு. ஒருநேரம் ரெண்டு இட்டிலி திம்பார், வயது பத்து நூறு இருக்கும்னு சொல்லியதுண்டு. நான் வாங்கி பல வருசம் ஆகுது.'

ஸ்ரீகண்டன் நாயர் பிறகு பேசவில்லை. படிகளில் இறங்கும் போது சட்டென்று 'நீங்க என்ன கேக்கறீங்க?' என்றான்.

'நான் விக்கலை சாமி.'

'விலையை சொல்லுங்க.'

'அது எனக்க ஐசரியமாக்கும்.'

'ட்ரூ. அந்த ஐஸ்வர்யம்தான் இந்த வெலையை தருது. இருபதாயிரம் ரூபா வாங்கிக்கிடுங்க.'

'இருபதா? அதாவது...'

'முப்பது.'

பண்டாரம் தடுமாறினார். ஒருகணம் கழித்து 'பணம் பெரிசில்ல. சாமி எனக்க ஐசரியமாக்கும். சாமியில்லாட்டி...'

'ஐம்பது' என்றான் ஸ்ரீகண்டன் நாயர். 'கடைசி விலை.'

பண்டாரம் பிரமித்து படியில் நின்றார்.

'அறுபதாயிரம் ரூபா. பத்தாயிரம் என் போனஸ். இந்தாங்கோ அட்வான்ஸ்' என்றான்.

பண்டாரத்தின் கையைப் பிடித்து பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டை வைத்தான்.

# 11

பண்டாரம் காலையில் எழுந்ததுமே பாய்ந்துபோய் பெட்டியைத்தான் பார்த்தார். பணம் பத்திரமாக இருந்ததைப் பார்த்த பிறகுதான் மனம் சற்று அடங்கியது. முந்தைய இரவு பணத்துடன் போய் அறையைக் காலி செய்துவிட்டு வேறு விடுதியில் தங்கினார். இரவோடு இரவாக உருப்படிகளை பெருமாளும் வண்டிமலையும் டெம்போவில் ஏற்றி விடியற் காலையில் கிளம்பி விட்டார்கள். அவர்கள் கிளம்பிவிட்ட தகவல் போனில் கேட்ட பிறகுதான் படுக்கவே போனார். பணத்துடன் உருப்படிகளையும் ஏற்றிக்கொண்டு போவதைப் போல ஆபத்து ஏதுமில்லை. அவரிடம் செலவு போக எண்பதாயிரம் ரூபாய் இருந்தது.

குளித்து விபூதி குங்குமம் தரித்து உடனே கிளம்பி விட்டார். பழனியின் அடிவாரப் பக்கமாகவே நடமாடவில்லை. நாயக்கருக்கு இப்போதும் சீடப்பிள்ளைகள் உண்டு என்று அவருக்குத் தெரியும். அவர்கள் கண்டிப்பாக இரவு உருப் படிகளை ஏற்றுவதை கண்காணித்திருப்பார்கள். மாங்காண்டி சாமி விலைபோன விஷயம் தெரிந்ததுமே நாயக்கர் பண்டாரத் திடம் பணம் இருப்பதை ஊகித்துவிடுவார். இந்நேரம் பேருந்து நிலையங்களில் அவரை நாயக்கரின் சிஷ்யர்கள் தேடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு வாசிப்புசாலை கண்ணில் பட்டதும் அதில் ஏறி அமர்ந்து கொண்டார். அந்நேரத்தில் அதிக கூட்டமில்லை. சிலர் செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தனர். பண்டாரத்திற்கு எதையும் படிக்கும் பழக்கம் இல்லை. இருந்தாலும் ஒவ்வொரு இதழாக

எடுத்து பெண்களின் படங்களைப் பார்த்தார். எல்லாப் பெண் களும் தளுக்காகத்தான் இருந்தன. 'வடக்கத்திக் குட்டிகள்' என்று சொல்லிக் கொண்டார். உடனே சிறுநீர் பிரச்சினை ஞாபகம் வந்தது. மறுகணமே சிறுநீர் முட்டி கூடவே வரும் வலியும் ஏற்பட்டது. தொடர்ந்து சின்னவளின் நினைவு. அப்படி ஒரு தடித்தனம் அவளுக்கு. அது அவர் அம்மாவின் குணம். வேலப்பன்கோயிலில் பூக்கட்டுவதுதான் அவளுக்குத் தொழில். அவரது அப்பா சாமியாராக ஊரைவிட்டுப் போய் ஏழு வருடம் கழித்துதான் அவர் பிறந்தார். அவர் பத்மநாபபுரம் பெரிய போத்தியின் மகன் என்றுதான் சொல்லித் தந்தாள். ஆனால் ஊரில் அவருக்கு வேறு பலரின் சாயல்களைக் கண்டு பிடித்தார்கள். வாழ்ந்த நாள் முழுக்க உட்கார்ந்த இடத்தி லிருந்து வெற்றிலை அரைத்து துப்பியதைத் தவிர வேலை என்று எதையும் அவள் செய்தது இல்லை. வெற்றிலையால் புண்ணாகிப்போன உதடுகள். மின்னும் சிறு கண்கள். குண் டணி பண்டாரச்சி என்றுதான் ஊரில் பெயர். ஆசிட்டாச்சி என் றும் சொல்வார்கள். முருகன் கொஞ்சம் முரண்டினால் வள்ளி தெய்வானைகளுக்கே கெட்டபெயர் உருவாக்கிவிடுவாள் என்று பேச்சு உண்டு.

பத்து மணிக்குக் கிளம்பி நேராக ஸ்டேட் பேங்குக்குப் போய் அவரது கணக்கில் பணத்தைப் போட்ட பிறகுதான் சற்று நிம்மதி வந்தது. பிறகு வெளியே இறங்கி பொடி போட்டபடி நடந்து ஆரியபவனுக்குப் போய் ஸ்பெஷல் முறுகலும் டிகிரி காபியும் சொன்னார். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது 'பனிவிழும் மலர்வனம். உன் பார்வை' என்று தன் வாய் முனகுவதை தானே கேட்டு ஒரு கணம் திகைத்து 'முருகா' என்றார். 'காவலுக்கு வேலுண்டு' என்று பாடினாலும் ஊடாக அந்தத் திரைப்படப் பாட்டும் ஓடியது.

எதிரே வந்தமர்ந்தவனை உடனே அடையாளம் கண்டு கொண் டார். கோவில்பட்டி நாயக்கர்களுக்குரிய முகம். அவனைப் பார்த்து சிரித்து 'சௌக்யமா?' என்றார்.

அவன் குழம்பி வேறு பக்கம் திரும்பிவிட்டு 'என்னையா?' என்றான்.

'ஆமா. நாயக்கரய்யாகூட பாத்திருக்கேன்' என்றார். கண்கள் சந்தித்தன. ஒருகணம் நிலைத்த மௌனம்.

பிறகு அவன் சிரித்தபடி 'பேங்கில போட்டுட்டீங்க... பண் டாரம்ன்னா சில்லரை ஆளு இல்லைன்னு அண்ணாச்சி சொல் வாரு' என்றான்.

'ஆமாமா. பழனி எப்பேர்ப்பட்ட ஊருன்னு தெரியாதவிகளா நாம...'

'அப்புறம் எப்ப ஊருக்கு?'

'போகணும். முருகனை இன்னும் சேவிக்கலை. கூட்டம் அடங்கட்டும்னு இருந்தேன். கும்பிட்டுட்டு கிளம்பவேண்டி யதுதான்.'

சாப்பிட்டு முடித்து கைகழுவும்போது அவனும் கூடவே எழுந்தான். 'பில்லு குடுங்க அண்ணாச்சி. காலைல இருந்து உங்க பின்னாடி அலைஞ்சாச்சு. பத்து பைசா இல்லை கையில.'

'எப்படி என்னைய கண்டுபிடிச்சிய?'

'படிப்புசாலையில இருந்து எறங்கி பொடி வாங்கினீகள்லா அப்ப.'

'அது செரி.'

பில்லை கொடுத்துவிட்டு இருவரும் வெளியே வந்தனர். பண்டாரம் பல்லைக் குத்தியபடி 'எனக்கு ஆளு பொறத்தால உண்டுமின்னு தோணிட்டே இருந்தது' என்றார்.

'பொறத்தால வந்து என்னத்துக்கு? ரோடு மைதானம் மாதிரி கிடக்கு. ஒரு ஆளு இல்லை. எளவு, ஒரு டெம்போ லாரி ஊடால வந்திருந்தாலாவது பையப் பிடிச்சிருப்பேன். எவ்வளவு வச்சிருந்தீங்க?'

'அறுபது.'

'அடேங்கப்பா. ச்செ. விட்டுட்டனே அண்ணாச்சி. ஒரு சிகரெட் வாங்கிக் குடுக்கிறது.'

'தைப்பூசத்தில உனக்கு கை வரள்ச்சின்னா நம்ப முடியலியே.'

'ஆலமரம் பழுத்தா காக்காய்க்கு வாய்ப்புண்ணு. கேக்காதீங்க அண்ணாச்சி. தைப்பூசத்துக்குதான் லோக்கல் ஆளுங்களுக்கு

பட்டினி. மதுரையில இருந்து நல்லா மீசையில மணி கட்டின ஆளுக வருவாய்ங்க. சொன்னா நம்பமாட்டீங்க. பொட்லம் கட்டி ஜட்டிக்குள்ளார வச்ச காசை எடுத்துட்டுப் போயிடுவாய்ங்க. தொழில் படிச்ச பயலுக. அவன் கை படாம இருக்கணுமானா அப்பிடியே விழுங்கிடணும். அப்பக்கூட சூத்தால கையவுட்டு எடுத்திட்டுப் போயிடுவாய்ங்க. சுத்தி வந்தா நம்மளைப் பாத்தே அடையாளம் கிடைச்சு ஓடுடா ஓடுடான்னு சத்தம் போடு வானுங்க... என்னத்தச் சொல்ல.'

சிகரெட்டும் பொடியும் வாங்கினார். அவன் ஸ்டைலாக மூக்கு வழியாக புகைவிட்டபடி 'உங்க உருப்படிக ஒண்ணும் சரியில்லை அண்ணாச்சி. எளம் பிள்ளைய வேண்டாமா? தாலி யறுத்தவளுக பாத்தா அழுதுட்டு பைசாவ எறக்கணும்.'

'என்ன செய்யிறது. நாய் படாப் பாடு. சரக்கு அமையணுமே.'

'சரக்கு இருக்கு. பாக்கறீங்களா?'

'உன்கிட்டயா?'

'நம்மகிட்டயா? நம்ம லைன் வேற. நம்ம ஆளு ஒருத்தன் இருக்கான்.'

'தெரியாத ஆள்கிட்ட என்னன்னு பேசறது?'

'நல்ல ஆள்தான் அண்ணாச்சி. போலீஸ் கெடுபிடி இருக்கிற தனால கொஞ்சம் விட்டுப் பிடிக்கிறது.'

'உம் பேரு என்ன?'

'அப்படி போடுங்க. சீதைக்கு ராமன் சிஐடிண்ணாப்ல. நம்ம பேரு ராமானுஜம். கே.ராமானுஜம். நீங்க ராமுன்னு கூப்பிடுங்க.'

'எங்கிட்ட பணம் இல்லியே.'

'அண்ணாச்சி, நாம நெருங்கிட்டோம். நம்மகிட்ட என்ன?'

'இல்ல தம்பி. சத்தியமாட்டு பைசா இல்லை.'

'உருப்படியப் பாருங்க. புடிச்சிருந்தா எதாவது புரட்ட முடியுமா பாருங்க.'

'எப்படி புரட்டுறது?'

'உங்க சிரிப்புக்கே ஆயிரம் வெலையிருக்கே.'

'கள்ள கழுவேறி மவன்டே நீ. தங்கப் பல்லை கண்டு பிடிச்சிட்டியா?'

'அண்ணாச்சி, பக்தன்ட்ட இருந்து சாமி தப்ப முடியுமா? ஆழ்வாரு பிரபந்தம் நம்ம ஊர்ல பாடுவாங்க, சிக்கெனப் பிடித்தேன் அப்டீன்னு. அப்படியே புடிக்க வேண்டியதுதான்.'

'சரக்கு எங்க இருக்கு?'

'ஆட்டோல போகணும்.'

ஆட்டோ குட்டிச் சந்துகளில் பன்றிகளையும் வெளிக்கிறங்கிய குழந்தைகளையும் சிதற அடித்தபடி சென்றது. குழாயடியில் பிளாஸ்டிக் குட வரிசைகளை மாற்றி வழியமைத்துத் தந்தார்கள்.

'குடியிருக்க எடமா இருக்கு?'

'அது அப்பிடித்தானே? குடியிருக்க எடம்தான் இதுக்கு நல்லது.'

ஒரு சிறு வீட்டுக்கு முன் ஆட்டோ நின்றது. 'வாங்க' என்றான் ராமு.

வளையோடு வேயப்பட்ட தாழ்ந்த கூரையும் இடிந்த திண்ணையும் கொண்ட தூசு படிந்த பழைய வீடு. உள்ளே சுரங்கப் பாதை போல கதவுகள். அதில் ஏராளமான குழந்தைகள் இருக்கக்கூடும். குழந்தைகளின் அழுகுரல்களும் பலவகையான பெண்குரல்களும் சேர்ந்து முழக்கமாக ஒலித்தன.

ராமு அந்த வீட்டின் பின்புறம் இருந்த சிறு முற்றத்தில் இறங்கினான். அங்கே உடைந்த இரும்புப் பொருட்கள், பிளாஸ்டிக் குப்பை, பலவிதமான பழந்துணிகள், மட்கிய காகிதங்கள் அனைத்திற்கும் ஊடாக உலராத மலம்.

'இங்கயா...'

'இந்த வீட்டுக்கு அப்படி ஒரு வழி இருக்கு. அந்த வழில பகலில் வரமுடியாது' என்றான் ராமு. இன்னொரு வீட்டின் கதவு தெரிந்தது. மெல்ல தட்டினான். உள்ளே ஏதோ குரல் ஒலித்தது. அவன் பதில் கூறியதும் கதவு திறந்தது.

தாட்டியான ஒரு பெண் தொங்கிய பெரிய முலைகள் நடுவே இழுத்துவிடப்பட்ட முந்தானையுடன் நீட்டிய மஞ்சள் நிறப் பற்களும் சன்னமான மீசையுமாக நின்றாள். பண்டாரத்தை சந்தேகமாகப் பார்த்தாள். 'உள்ள வாங்க' என்றாள்.

உள்ளே தூசியும் மட்கிய துணிகளும் கலந்த வீச்சம் எழுந்தது. அவள் கதவை மூடியதும் அறை இருட்டாகியது. அடுத்த அறைக்கு கூட்டிப் போனான். அங்கு ஒரு தாடிக்காரன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை அவள் காலால் உதைத்து 'த்த்த...' என்றாள். 'ஏந்திரி... யோவ்...'

அவன் எழுந்து அக்குளில் அடர்ந்த மயிரைச் சொறிந்தபடி 'யாரு' என்றான்.

'பார்ட்டி.

அவன் எழுந்து 'உட்காருங்க' என்று இரும்பு நாற்காலியைக் காட்டினான். துருப்பிடித்த இரும்பு நாற்காலி.

அந்த வீட்டின் மறுபக்கம் இருந்த வராண்டா முழுக்க பழைய இரும்பு, துணி, காகிதம் குவிக்கப்பட்டிருந்தது. அங்கி ருந்துதான் அந்த வீச்சம் எழுந்தது.

'சரக்கைக் காட்டுங்க அண்ணே' என்றான் ராமு.

'பலதும் இருக்கு' என்றான் தாடி ஆள். 'ரேட்லாம் நீக்கு போக்கா பாக்கலாம். ஆனா எல்லாம் ரகசியமா இருக்கணும். மூணாம் காதுக்குப் போகக்கூடாது.'

'அதுக்கென்ன' என்றார் பண்டாரம்.

'யோவ், அவரு இதுக்கு இருவது வருஷ சர்வீஸ். காட்டுய்யா.'

'வாங்க' என்று அவன் சொன்னான். பக்கவாட்டு அறையின் கதவைத் திறந்தான். உள்ளே இருட்டில் ஒரு பெரிய பீரோவும் துணிகள் கனத்த கொடியும் தெரிந்தன. தரையில் ஒரு பாயில் நான்கு சிறுவர்களும் ஒரு சிறுமியும் தூங்கிக் கொண்டிருந்தனர்.

'மருந்து குடுத்திருக்கோம்' என்றான் தாடி.

பண்டாரத்துக்கு மனம் உறைந்து நின்றது. 'உருப்படிக எங்க?' என்றார்.

'இதுதாங்க.'

'பிள்ளைகள்லா?' என்றார் பண்டாரம். அவரது கால் வெட வெடவென்று நடுங்க ஆரம்பித்தது.

'அதுக்காக பயப்படாதீங்க. பெத்த அம்மா பாத்தாக் கூட சந்தேகப்படமாட்டா. அப்டி மாத்தியிருக்கோம். நாக்கு வெட்டியிருக்கு...'

இருட்டுக்குக் கண் பழகியபோது பண்டாரம் குழந்தைகளை நன்றாகப் பார்த்தார். அமிலம் ஊற்றப்பட்டு வெந்து உருகிய முகங்கள்; தோள்கள்.

'கண்ணு குத்தியிருக்கம். ஒரு பயமும் இல்லை' என்றான் தாடி. 'இதுவரைக்கும் அம்பதுக்கும் மேல பிடிச்சு வித்திருக்கம். ஒரு பிரச்சினையும் வந்ததில்லை.'

ராமு 'நம்ம கம்மூனிஸ்டு நாயரு ஏழு உருப்படி வாங்கியிருக்கார் இந்தப் பூசத்திலே' என்றான்.

'பாருங்க. ஒண்ணோ ரெண்டோ உங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கிடுங்க. இப்ப வாங்கினா அம்பது அறுபது வருசம் உழைக்கும்.'

'என்ன சொல்றாரு?' என்றாள் அந்தப் பெண்.

'பார்க்கிறேன்கிறாரு.'

'பாக்கவா வந்தான், பரட்டத்தாளி?'

'இல்ல நான், ரேட்டு...'

'ரேட்டு பேசுறது...'

'நான் என் பார்ட்னர்ட்ட ஒரு வார்த்தை கேக்கணும். பெரு மாளுன்னு பேரு. உருப்படியளை ஏத்திட்டுப் போயிட்டான். ஃபோன் போட்டு கேட்டிட்டு...'

.அந்தப் பெண், 'உம்ம்' என்று அழுத்தமாக முனகினாள்.

பண்டாரம் நேராக வாசலை நோக்கிப் போனார். கதவைத் திறந்தால் அங்கே மிகப் பெரிய சாக்கடைக் குட்டை. கொழுத்த சேற்றில் ஏராளமான பன்றிகள்.

'வாசல் இங்க.'

மறுபக்கம் போய் வெளியே வந்தபோது வெயில் முகத்தில் அடித்தது. குமட்டுவது போலிருந்தது.

'போலாமா அண்ணாச்சி.'

'சரி.'

'பயந்துட்டிக போல.'

'இல்லெல்ல. ரிஸ்கு. அதான்.'

'ஒரு ரிஸ்கும் இல்ல. பிள்ளையள பிடிக்கியதுதான் ரிஸ்கு. பிடிச்சு கொண்டு வந்து போட்டா பிறகு ஒண்ணுமில்ல. அப்பிடியே உருக்கி அழிச்சு வேறமாதிரி ஆக்கிப் போடுவம்ல.'

'நான் பெருமாள்ட்ட கேட்டுட்டு சொல்றேன்' என்றார் அவன் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்து. 'ரிஸ்கு கூடுதல். மூணா யிரம்னா பாக்கலாம்.'

ராமு முகம் மலர்ந்தது. 'மூணாயிரம் எந்த மூலைக்கு? பாத்து சொல்லுங்க அண்ணாச்சி. ஒரு தொழில்னா அதுக்குண்ணு ஒரு நியாயம் உண்டு இல்லியா.'

'செரிடே எனக்கு கட்டாண்டாமா? இந்தா இத வச்சுக்க. சாயங்காலம் ஆறு மணிக்கு லாட்ஜண்டை வா.'

'எந்த லாட்ஜ்?'

'சரஸ்வதி விலாசம்.'

'போஸ்டாபீஸுக்கு வடக்க...'

'ஆறு மணிக்குள்ள வந்துரு. செரியா?'

'சரி அண்ணாச்சி.'

'நாய்க்கருகிட்ட போயி சொல்லி வைக்காதே.'

'அத நான்லா சொல்லணும். நீங்க வாய விடாம இருந்தா போதும்.'

'வரட்டா?'

ஆட்டோ பிடித்து நேராக லாட்ஜுக்கு போய் பெட்டியை எடுத்தார். அறையைக் காலி செய்துவிட்டு வெளியேறி அதே ஆட்டோவில் பஸ் ஸ்டாண்டுக்கு விடச் சொன்னார். போகும் வழியெல்லாம் யாரோ துரத்துவது போல உணர்வு இருந்தது.

மதுரை பஸ் கிளம்பி நின்றது. பாய்ந்து ஏறி பையை வைத்து விட்டுச் சாய்ந்தார். மதிய வெக்கை ஏறி அடித்தது. வியர்த்துக் கொட்டியது. குடிநீர் வாங்கியிருக்கலாம் என்று தோன்றியது. பையன்கள் யாரும் இல்லை. கால்களை நீட்டியபடி தளர்ந்தார். ஆனால் கால்கள் தளர்ந்தபோதிலும் தோள்களும் கழுத்தும் கெட்டியாக இறுகித்தான் இருந்தன.

கண்டக்டர், 'டிக்கெட்' என்றதும் உடம்பே தூக்கி உதறிப் போட்டது. இரு கைகளாலும் பையைத் துழாவி பணம் எடுத்து டிக்கெட் வாங்கினார். கண்டக்டர் பின்னால் போவது வரை அவனுடைய முதுகையே பார்த்துக் கொண்டிருந்தார். வண்டி திரும்பி பெரிய சாலைக்கு வந்ததும் குளிர்ந்த காற்று முகத்தில் பட்டது. 'பனி விழும் மலர் வனம்' என்று மனதில் பாட்டு வந்ததுமே அதை பாடி விட்டதுபோல திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார். அருகே யாருமில்லை. வண்டியில் மொத்தமே ஏழெட்டு பேர்தான். கண்களை மூடியபடி சாய்ந்து 'முருகா' என்றார். 'முருகா உன்னைப் பாக்காம போறன்.' மறுகணம் அவரால் கட்டுப்படுத்தமுடியாதபடி அழுகை வந்து உடம்பு உலுக்கியது. அதிரும் கம்பியில் தலை சாய்த்து அழுதபோது மடிமீது கண்ணீர் கொட்டியது.

# 12

கண்டக்டர் 'நாரோயில் நாரோயில்' என்று கூவ பண்டாரம் விழித்துக்கொண்டார். பக்கக் கம்பியில் நன்றாகச் சாய்ந்து தூங்கியபடி இருந்திருப்பது தெரிந்தது. வாயைத் துடைத்துக் கொண்டு பெட்டியுடன் இறங்கினார். தலையில் கம்பியில் முட்டி வீங்கிய இடம் வலித்தது. 'பனிவிழும் மலர்வனம்' என்ற சொல் மனதில் வந்தது. உடனே பரபரவென்று நினைவுகள் எழ கால்கள் தளர்ந்தன. இரவு பத்து மணியாகிவிட்டிருந்தது. சிறுநீர் கழித்து ஒரு டீ சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் இனிப்பும் காரமும் ஆப்பிள்களும் வாங்கிக்கொண்டார்.

திருவனந்தபுரம் பஸ்ஸில் காற்று நன்றாகக் குளிர்ந்தது. என்னவென்றே தெரியாத ஒரு நிலை கொள்ளாமை, பதற்றம் இருந்தபடியே இருந்தது. ஜன்னல் வழியாகக் காறித் துப்பினார். நடுவே அந்த திரைப்படப் பாடல் வரி. 'பனிவிழும் மலர் வனம்.' எவன் எழுதினானோ என்று நினைத்துக்கொண்டார்.

வேலப்பகோவில் விலக்கில் இறங்கியதும் இலேசான நிம்மதியும் உற்சாகமும் கூட வந்தன. ஆட்டோ பேசி இருளில் ஒளிர்ந்து பின்னகரும் வாழைத்தோட்டங்களைப் பார்த்தபடி வந்து கோயில் முற்றத்தில் இறங்கினார். அப்பிராந்தியமே இருளில் மூழ்கிக் கிடந்தது. மின்சாரம் இல்லை. இரவு ஒன்பது மணியானால் அந்தப் பகுதிக்கு மட்டும் மின்சாரம் இல்லாம லாகிவிடும். கேட்டால் எப்போதும் ஒரே பதில்தான். லைன் கட்டாகிவிட்டது.

ஆட்டோவை அனுப்பிவிட்டு படி ஏறி மேற்குவாசல் படிகளில் நின்று கும்பிட்டார். ஒன்றும் சொற்களாகத் தோன்றவில்லை.

'முருகா முருகா முருகா' என்று மட்டும் சொல்லிக் கொண்டார். பெருமூச்சுடன் பையை எடுத்தபோது வேட்டியின் மடிப்பில் கை பட்டது. அங்கே சுருட்டி வைக்கப்பட்டிருந்த ரூபாய்களை எடுத்தார். ஆயிரத்து இருநூறு இருக்கும். இல்லை மேலேயா... அப்படியே உண்டியலில் திணித்து குத்தி இறக்கினார். உண்டியலை இருமுறை தட்டினார். வெகுநேரம் தொண்டையை அடைத்த எதையோ விழுங்கிவிட்ட உணர்வு ஏற்பட்டது.

வீட்டுக் கதவைத் தட்டினார். உள்ளே 'ஆரு?' என்று ஏக்கியம்மை குரல் கேட்டது.

'நாந்தாம்ளா.'

'வாறன்.'

கூந்தலைச் சுருட்டிச் செருகியபடி ஏக்கியம்மை கதவைத் திறந்தாள். வியர்வையும் எச்சிலும் மணத்தன. அவருக்கு அவளைக் கட்டிக்கொள்ளவேண்டும் போல இருந்தது. அவர் அவளைத் தொட்டு பத்து வருடத்திற்கு மேல் இருக்கும்.

'வாருங்க' என்றாள் அவள் பெட்டியை வாங்கியபடி. 'குளியுங்க.'

'குளிக்கேன்.'

'அப்பிடியே வாருங்க. வென்னீரு ஸ்டவ்வில வைக்கேன். சட்டெய களட்டுதேளா?'

ஏக்கியம்மை எப்போதுமே அவர் பயணம் போய் வந்தால் குளித்த பிறகுதான் வீட்டுக்குள் சேர்ப்பாள். பயணம் பற்றி ஒரு வார்த்தை கேட்கவும் மாட்டாள்.

'சட்டெய களட்டுயது...'

'களட்டுதேன்' என்றபடி கழட்டி வென்னீர் அறை மூலையில் போட்டார். வேட்டியையும் கழற்றிவிட்டு துண்டு கட்டிக் கொண்டார்.

'அம்மா, அப்பா வந்திட்டாவளா?' என்றாள் மூத்தவள்.

'ஆமாட்டி. சின்னவள எளுப்பிடாத.'

பெரியவள் எழுந்து வந்து அவரது பெட்டியைத் திறந்து துணிகளை வெளியே எடுத்துப் போட்டாள்.

‘அம்பிடயும் எடுத்து வென்னிமுறியில போடுட்டி.’

‘அப்பா செண்டு மணம் அடிக்குவு...’

ஏக்கியம்மை ‘அத அங்கின வைட்டி’ என்றாள்.

‘திருவிழால்லா குட்டி, உனக்கு மைசூர்பாகு அந்தால பிளாஸ்டிக்ல இருக்கு.’

பெரியவள் பையைப் பார்த்தாள்.

‘அப்பா வந்திட்டாவளா?’ என்றபடி மீனாட்சி சின்னவளைத் தாண்டி ஏறி வந்தாள். ‘அப்பா எப்பம் வந்தியோ?’

‘இப்பம்தான் குட்டி.’

‘எனக்கு வளவி? எங்க வளவி?’ மீனாட்சி நேராக பெட்டியை நோக்கிப் பாய்ந்தாள்.

பண்டாரம் மூத்திரம் வந்து இறுகுவதாக உணர்ந்தார்.

‘குட்டி, நீ வலிச்சு போடாத. உனக்கு ஒண்ணும் இல்ல அதில’ என்றாள் பெரியவள்.

‘அப்பா வளவி?’

‘அதில இல்லியா குட்டி?’

‘இல்லியே.’

‘அப்பம் பெருமாளுக்க பையில மாட்டிகிட்டிருக்கும் குட்டி. நாளைக்கு வாங்கி தாரேன்.’

‘பொய்யி பொய்யி... எனக்கு வளவியும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம். நான் எங்கியாம் போறேன். செத்துப் போறேன்.’

‘இந்தா குட்டி அழப்படாது. சத்தியமா வாங்கிட்டேன். அப்பா உங்கிட்ட பொய் சொல்லுவேனா?’

‘வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். நான் இமயமலைக்குப் போறேன். செத்துப் போறேன்.’

‘இந்தா குட்டி...’

'அவள விடுங்கோ. ஒரு வீட்டுக்கு போயி ஆக்கிப் போட வேண்டிய குட்டி. சிராட்டி சிராட்டி வரிக்களுதையா போச்சு. போயி படுடீ போ.'

மீனாட்சி விசும்பி விசும்பி அழுதபடி தரையில் உட்கார்ந்தாள்.

'மைசூரு பாகு வேணுமாட்டி' என்றாள் பெரியவள்.

'ஒண்ணும் வேண்டாம். நான் செத்துப் போறேன்.'

'வாய தெச்சுப் போடுவன் பாத்துக்க. ராத்திரில அச்சானிய மாட்டு பேசுத பேச்சப் பாரு' என்றபடி ஏக்கியம்மை மூன்று அடுப்புகளிலாகப் போட்டிருந்த வெந்நீரை இறக்கி அண்டாவில் கலந்தாள். 'குளியுங்க.'

பெரியவள் மைசூர்பாகை தின்றுவிட்டு கையைத் துடைத்தபடி வெளியே போய் ஒன்றுக்கு இருந்துவிட்டு வந்து படுத்தாள்.

சின்னவள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். 'இவளுக்கு ஏது நேரமும் உறக்கம்தானா குட்டி?' என்றார் பண்டாரம் பெரியவளிடம்.

'படிச்சா.'

'ஆமா, படிச்சா. இங்க பாருங்க அவளை வளக்க எனக்குக் கட்டாது. ஒரு சோலி செய்யமாட்டா. கேட்டா ஆயிரம் பேச்சு. ஆனை குதிரை அடைக்கா முட்டைன்னுட்டு. ஏது நேரமும் அந்த பாட்டு படிக்குத பெருவட்டான் வீட்டில போயி கெடக்கா. கேட்டாக்க அறுமினியம் படிக்காளாம். அந்த ஒரு கொறவுதான் மூதிக்கு.'

'செரி. நீ கெடந்து மூளாதே...' என்றபடி பண்டாரம் தலை துவட்டி வந்தார். மீனாட்சி தலையணையில் முகம் புதைத்து தூங்குவதுபோலக் கிடந்தாள். தோள்கள் குலுங்கின.

பண்டாரம் அவள் அருகே அமர்ந்து தலையைத் தொட்டு 'சத்தியமா குட்டி... பை மாறிப்போச்சு...' என்றார்.

அவள் அவர் கையை எடுத்து உதறிவிட்டு உடலைக் குறுக்கிப் படுத்தாள்.

'இஞ்ச பாரு குட்டி.'

‘நீங்க வந்து ரெண்டு தோச திம்பியளா?’

‘மாவு இருக்கா?’

‘வருவியன்னுட்டு பெருமாளு சொன்னான். அதனால கொஞ்சம் மாவெடுத்து சுப்பு கடயில ஐஸ் கட்டி வேங்கிப் போட்டு வச்சேன்.’

இருந்தாலும் தோசை சற்றுப் புளித்துதான் இருந்தது.

‘சின்னவ காரியம் சும்மா சொல்லல்ல’ என்றாள் ஏக்கியம்மை அடங்கிய குரலில். ‘அந்தப் பெருவட்டனுக்க மகனுக்க கூட்டுக் காரனுவ மூணு பேரு பைக்கில வாறானுவ, எரும மேல காலன் வாற மாதிரி. எமகிங்கரனுங்க மாதிரி. இவ அவனுக கூடயாக்கும் பல்ல காட்டுதது.’

‘என்ன பல்ல காட்டினா?’

‘வண்டி சத்தம் கேட்டாக்க பவுடரப் பூசிக்கிட்டு ஓடுயது.’

‘நீ சொல்லி வை. வீட்டில இருக்கிற பிள்ளை வல்ல பாட்டோ டான்சோ படிக்க இஷ்டப்படும்.’

‘இருந்தாலும்...’

‘நீ சும்மா பச்சப் பிள்ளயப்பத்தி கண்டமானிக்கு பேசாண்டாம் கேட்டியா.’

ஏக்கியம்மை ‘கருப்பட்டி காப்பி போடட்டா?’ என்றாள்.

‘போடு.’

தன் கட்டிலில் வந்து உட்கார்ந்ததும் பண்டாரத்திற்கு மிகவும் நிம்மதியாக லேசாக இருந்தது. ஏக்கியம்மை பக்கத்தில் இருந் தாலே எதற்கும் பயப்பட வேண்டாம்.

ஏக்கியம்மை காபியை தந்துவிட்டு தரையில் குந்தி அமர்ந்தாள். ‘நாணுக்குட்டன் நாயரு வந்திட்டு போனாரு.’

‘என்ன காரியம்?’

‘ஒருதரம் இருக்கு. பய்யனுக்கு கோவாப்பரேடிங்கில சோலி. சர்க்காரு சோலியாக்கும்...’

‘கோவப்பரேடிவ் சர்க்காருன்னு ஆரு சொன்னா?’

‘சர்க்கார் இல்லியா?’

‘சர்க்காருக்கு உறப்பு உண்டு.’

‘பிறவு என்ன? பையன் கறுப்புதான். படிப்பு வீயே உண்டு.’

‘என்ன கேக்கானுக?’

‘அம்பது கேக்கான் இவன். கைல ஒண்ணரை லட்சம். வயலு.’

‘கோவாப்பரேடிவ்ல சம்பளம் கொறவாக்கும்.’

‘சம்பளம் ஆரு பாக்கா இந்த காலத்தில. மே வரும்படி உண்டுமாம். பின்ன குடும்பம் கொள்ளாம். மூணு பய்யனுங்க. இவன் ரண்டாமத்தவன். எனக்கு கொள்ளாமுண்ணாக்கும் தோணுது. இவளுக்கும் இப்பம் வயசு இருபத்தஞ்சாவுது.’

‘இருபத்தஞ்சுதானே?’

‘இது கூத்தால்ல இருக்கு. பின்ன முப்பத்தஞ்சிலயா கெட்டிக் குடுப்பாவ? நான் உங்கள கெட்டும்பம் எனக்கு பதினெட்டு வயசு.’

‘அந்தக் காலமா இது?’

‘என்னத்துக்குப் பேச்சு? அவனை நான் வரச் சொல்லியிருக்கன். பைசாய்க்கு குறவு உண்டுமா?’

‘பைசா இருக்கு.’

‘பின்ன?’

‘ஒண்ணுமில்ல. வரச்சொல்லு பாப்பம்.’

மாங்காண்டி சாமி விலைபோனதை சொல்லலாமா என்று யோசித்து தவிர்த்தார். ஏக்கியம்மைக்கு மாங்காண்டி சாமி மீது பக்தி உண்டு.

சிறுநீர் கழித்துவிட்டு வந்தபோது மீனாட்சியைப் பார்த்தார். தூங்கிவிட்டிருந்தாள். பக்கத்தில் அமர்ந்து அவள் நெற்றி மயிரை வருடினார். ஒரு சுருளை எடுத்து காதோரம் செருகினார். ‘ஏமிட்டி பிள்ளை கொஞ்சம் மெலிஞ்சு போச்சுண்ணு தோணுது’ என்றார்.

'ஆமா. மாடு மெலியும் கொம்பு கனக்குமாம். வாய நீட்டுற நீட்டுக்கு கொளுப்பு ஏறுமாக்கும். வந்து படுங்க.'

மீனாட்சியின் கன்னம் முழுக்க கண்ணீர் உலர்ந்து உப்போடி இருந்தது.

'ஏளா... சட்டெடய எடு.'

'ஏன் இந்நேரத்தில...

'நாரோயிலுவரை போயிட்டு வாறேன்.'

'என்னத்துக்கு இப்பம்?'

'நீ சட்டெடய எடுட்டி' என்றார். சட்டையைப் போட்டபடி 'நாரோயிலுக்குப் போயி வளவி வேங்கிட்டு வாறேன்.'

'எல்லாம் காலம்பற போனாப் போறும்.'

'நீ உன் சோலியப் பாரு.'

'இது என்னத்துக்க நீக்கம்பு?' என்றபடி ஏக்கியம்மை பின்னால் பதறி வந்தாள்.

வெளியே இறங்கி செருப்பைப் போட்டுக்கொண்டு நடந்தார். ஊரே அடங்கிக் கிடந்தது. சீவிடுகளின் ரீங்காரம் மட்டும்தான். நன்றாகக் குளிர் அடித்தது. சாலையில் குறுக்காக பெருச்சாளி ஒன்று ஓடியது. கைகளை மார்போடு கட்டியபடி வேகமாக நடந்தார். இரு பக்கமும் இருண்ட வாழைத் தோப்புகளில் காற்று இலைகளை அளைந்தபடி ஓலமிட்டது.

நாகர்கோவில் சாலைக்கு வந்தபோது மூச்சு இளைத்தது. மணி பன்னிரெண்டு தாண்டியிருக்கும். இனிமேல் எக்ஸ்பிரஸ் பஸ்கள்தான் உண்டு. கம்பத்தில் சாய்ந்தபடி நின்றார். யாரோ வரும் ஒலி. ஒரு பெரிய பசு குளம்பு அதிரச் சென்றது. லாரிகள் மட்டும் ஒளியை கட்டடங்கள் மீது இறைத்து முழுக்காட்டி அணைந்தபடி ஓலமிட்டுச் சென்றன.

அரைமணி நேரம் கழித்து கன்யாகுமரி எக்ஸ்பிரஸ் வந்தது. கைகாட்டிவிட்டு பின்னால் ஓடினார். வெகுதூரம் தாண்டித்தான் நிறுத்தினான். ஓடி ஏறிக்கொண்டபோது மூச்சு வெகுவாக இரைத் தது. உட்கார்ந்து கால்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

கண்டக்டர் டிக்கெட்டை விரலைச் சுண்டிக் கேட்டார். கேரளத் திமிர். குளிர் நடுக்கி எடுத்தது. நீல ஒளியில் பேருந்து முழுக்க ஆட்கள் சாய்ந்தும் சரிந்தும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

வடசேரியில் இறங்கி திறந்திருந்த ஒரு டீக்கடையில் டீ குடித்து விட்டு ஆட்டோ பேசி மீனாட்சிபுரம் போனார். தட்டான் சண்முகவடிவேலுவின் வீடு ஆசாரிமார் புதுத் தெருவில் சந்து மடிப்புக்குள் இருந்தது. ஆலைகள் முன் நிழல்போல மௌன மாக பலர் அமர்ந்து தரைமண்ணை தேங்காய்நார் பிரஷ்ஷால் கூட்டிக் கொண்டிருந்தார்கள். அவரைப் பார்த்ததும் ஆச்சரியத் துடன் அசைவுகள் நின்றன. சிலர் சிறிய அரிப்பானால் சாக்கடை நீரை அரித்துக் கொண்டிருந்தனர். பரட்டைத் தலைப் பெண்கள், பையன்கள். தெருமுழுக்க கூட்டிச் சேமித்துச் சலித்தாலும் அரைக் கிராம் தேறுமா என்று எண்ணிக்கொண்டார். ஆனால் ஏதோ கிடைக்கிறது. இல்லாவிட்டால் தொடர்ந்து இதைச் செய்ய மாட்டார்கள்.

வேலுவின் வீட்டு முகப்பில் ஒரு சைக்கிள் நின்றது. திண்ணைமீது ஒரு கிழம் பெரிய கம்பளிப் பொட்டலமாகத் தூங்கிக்கொண் டிருந்தது. படி ஏறி மரக்கதவைத் தட்டி 'வேலு வேலு' என்றார்.

உள்ளே 'ஆரு?' என்ற ஒலியுடன் ஒரு பெண் தூங்கி எழுந்தாள்.

'நான் போத்திவேலுப் பண்டாரம். வேலப்பன் கோயில்.'

'ஆரு?' என்றாள்.

'போத்திவேலு. வேலுக்குத் தெரியும்.'

'இஞ்சேருங்க. இஞ்சேருங்க...'

வேலு குழறியபடி எழுவதும் கிசுகிசுப்புகளும் கேட்டன. அவன் சிறிய ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து 'ஆரு?' என்றான்.

'நான் போத்திவேலு. வேலப்பன் கோயில்.'

'நக எடுக்கிறதில்ல. பைசா இல்ல.'

'நக வாங்கணும்.'

'இந்நேரத்திலயா?'

'ஆமா. தெற.'

திறந்து விளக்கைப் போட்டான். 'உள்ள வாங்க... நீங்க வேலப்பன் கோயிலுல்லா.'

'பின்ன நான் இம்பிடு நேரமாட்டு என்னத்த சொன்னேன்? ஒரு ரெண்டு வளவி வேணும் பாத்துக்கோ.'

'செஞ்சு போடலாம்.'

'செய்யியதுக்கு இல்ல. இப்பம் வேணும்.'

'இப்பம்னு சொன்னா. விடிஞ்சா...'

'விடிஞ்சு நான் கிஷன் நாயருக்க கடைல வேங்கமாட்டேனா. இப்பம் வேணும். பைசா தாரேன்.'

'என்னவாக்கும் காரியம்?'

'சின்னக்குட்டிக்கு பழனீல வாங்கிட்டு வாறதாட்டு சொன்னேன். மறந்துபோட்டேன். ஒரே அழுகை. மனசலிஞ்சு போச்சு. காலம்பற அவ முளிக்கும்பம் கொண்டு போயி கைல போடணும்.'

'இப்படி கேட்டியள்னா என்ன செய்யியது. அளவு இருக்கா?'

'எடுக்கல்லியே. பத்து வயசு பிள்ளையாக்கும்.'

'ஒல்லியா?'

'துரும்பு. எளவு வல்லதும் திண்ணாதானே. பாலோ மோரோ ஒரு குறயும் இல்ல. குருவி மாதிரி கொத்திட்டு அலையும்.'

வேலு சிரித்தான். 'கெட்டிக்குடுங்க அண்ணாச்சி. அடுத்த வரிசம் ஆனைக்குட்டி ஆயிப்போடும். அதாக்கும் கணக்கு.' எட்டி மேஜையை இழுத்துப்போட்டு பின்னால் சப்பணமிட்டு அமர்ந்தான். பாயை எடுத்துப் போட்டு விட்டு அவன் மனைவி 'கடுஞ்சாயா எடுக்கட்டுமா?' என்றாள்.

'வேண்டாம்மா . இப்பம்தான் குடிச்சேன்.'

'அண்ணாச்சி, செஞ்சு வச்ச வளவி ரெண்டு இருக்கு. ஓரோண்ணும் ஒண்ணரை பவுன். ஆனா சைசு பெரிசு. தாழக்குடி பார்ட்டி ஆர்டர் பண்ணினது. எடுக்கேளா? அவிகளுக்கு வேற சொல்லிக்கிடுதேன்.'

'சைசு மாத்தணுமே.'

'அது இப்பம் தட்டி எடுக்கேன். ஒரு அரமணிக்கூர்.'

'செரிடே' என்றார். 'இந்த பிச்சைக்காரனுக என்னடே அரிச்சு கூட்டுதானுக?'

'அண்ணாச்சி. பொன்னுல்லா தேடுகானுக.'

'உடைஞ்சு தெறிக்குமா?'

'இல்லண்ணாச்சி. கழுவுறோம்ல அப்பம் கொறெ போவும். பின்ன தட்டும்பம் வாற தூளு.'

'ஒரு கிராம் கிட்டுமா?'

'மேலயே கிட்டும். இதுக்கு என்னா அடிபிடீங்கிய. இந்நேத்து ஒருத்தன் இன்னொருத்தனை கல்லால அடிச்சுப் போட்டான். கிளவனாக்கும். அங்கேயே ஆளு காலி.'

'பிறவு?'

'பிறவென்ன... முனிசிபாலிடி வண்டி வந்து இளுத்து போட்டா னுக. அவன் மடியில் குறெ ரூபா வச்சிருப்பாம் போல. அது எங்கேன்னுட்டு மூணு தோட்டிக இங்க கெடந்து அடிச்சு மறியுதா னுக. அண்ணாச்சி மண்ணும் பெண்ணும் பொன்னும் கடசீவர ஆளவிடாது. என்னங்கிய?'

'அது செரி.'

சிறிது கண்ணசந்திருப்பார். தட் தட் ஒலி கேட்டபடியே தான் இருந்தது. சுத்தியலால் யாரோ ஒரு குழந்தையை அடித்து அடித்துச் சப்பி நீட்டினார்கள். ரயில் ஓடியது.

'அண்ணாச்சி பாக்குதியளா?'

வளையல் நன்றாகவே இருந்தது, சிறிய பூக்களும் விளிம்பில் அலை வளைவுகளுமாக.

'என்ன ரேட்டு?'

'கிராமுக்கு நானூற்றி எட்டு. மொத்தம் பத்தாயிரத்து எரநூறு. சேதாரம் செய்கூலி சேத்து பதினாலாயிரம்.'

'பாத்து போடுடே.'

'என்னண்ணாச்சி உங்ககிட்ட கணக்கு பாப்பமா? உள்ளது சொன்னா குறச்சாக்கும் போட்டிருக்கு.'

'குறைப்பே குறைப்பே. பாத்து போடுடே. லட்சுமி, உறங்கு தவன எளுப்பியாக்கும் விளிக்குது.'

'போட்டு. நம்ம அண்ணாச்சி. அஞ்ஞூறு கொறயுங்க.'

'பதிமூணு இருக்கு. பிறவு பாப்பம்.'

'அண்ணாச்சி...'

'இருக்கட்டும்டே. நீ நம்ம பய. மூத்தவளுக்கு வேற இப்பம் பொன்னுருக்கணும்.'

'உறப்பிச்சாச்சா?'

'அமஞ்சு வருது.'

'வாருங்க அண்ணாச்சி. ஆச்சியக் கூப்பிட்டு வாருங்க. மனம் போல பாத்துக்கிடலாம். மனம்போல மாங்கல்யம்னா பொன்னுக்கும் சேத்து சொன்னதாக்கும் கேட்டேளா?'

'பொன்னு கண்ட தட்டானும் நெல்லு கண்ட கோளியும்னு சும்மாவா சொன்னாக...' என்றபடி பணம் தந்து படியிறங்கினார். நான்கு மணி ஆகிவிட்டிருந்தது.

மீண்டும் பஸ் பிடித்து வேலப்பகோயில் விலக்கில் இறங்கிய போது ஆட்டோக்கள் வந்திருந்தன. உஷத் பூஜை கும்பிட வருபவர்கள் சிலர் இருந்தார்கள். ஏறி நேராக வீட்டருகே போய் இறங்கினார்.

ஏக்கியம்மை கதவைத் திறந்தாள்.

'இது என்னது, வல்ல பேயோ பூதமோ கூடியிட்டுண்டா?' என்றாள்.

'நீ போடி' என்றபடி உள்ளே புகுந்தார்.

மீனாட்சி நமஸ்காரம் செய்வதுபோல் தூங்கிக் கொண்டிருந்தாள். பிருஷ்டம் உயர்ந்து நின்றது.

‘ஏட்டி ஏட்டி’ என்றாள் ஏக்கியம்மை.

‘சும்மாரு’ என்றபடி வளையல்களை அவள் அருகே பிரித்து வைத்தார்.

‘நல்லாருக்கே, காட்டுங்க.’

‘நீ பிறவு பாரு. என் தங்கக்கொடம்லா மொதல்ல பாக்கணும்.’

‘சீராட்டி சீராட்டி...’

‘ஆனை மேல அம்பாரியில ஏத்துவேன். நீ போடி நாறக் களுதை.’

சிறிது நேரம் பார்த்தபடியே நின்றார் பண்டாரம். ‘இது என்னது இப்பிடி உறங்குது?’

‘ஓரோண்ணுக்கு ஓரோ ரீதி. சின்னவளைப் பாருங்க. தாடகை மலை மாரில்லா கெடக்கா.’

‘ஒரு சாயா போடு கடுப்பமா...’

‘கோயிலுக்குப் போறேளா?’

‘போணும்.’

‘வய்யெண்ணா படுத்துட்டு பிறவு போறது...’

# 13

நாகராஜா கோயில் தோரண வாசலருகே அதன் சரிந்த நிழல் விழும் இடத்தில் அமர்ந்து அகமதுகுட்டி கூர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய விதைகள் பெரிய வேட்டி ஒன்றினால் மூடப்பட்டிருந்தன. சற்றுத் தள்ளி வெயிலில் ராமப்பன் தன் கால்களை உலர வைத்தார். குய்யன் புது ஆளான பக்கியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அகமது பேப்பரைத் தாழ்த்தி 'பீடி உண்டோ சேட்டோ?' என்றான்.

'வீடி உண்டும். ஆனா நீ நாலு சொல் தமிழ்லே பேசணும்.'

'தமிழ் பேசும், கன்னடம் பேசும், இங்கிலீசும் பேசும்' என்றான் அகமது.

'கள்ளம். இங்கிலீசுல நாலு வாக்கு பேசு பாப்பம்.'

'எதைப் பத்திப் பேசணும்?' என்ற அகமது பேசி விட்டு 'ஸெரியல்லே?' என்றான்.

'பிலேய் மக்கா நீ இஞ்ச இருக்க வேண்டிய தலை இல்லடே....'

'அதா வருந்ந போலிஸுகாரனெ மடக்கெட்டே?'

'செரி' என்றார் ராமப்பன் கிளர்ச்சி அடைந்து.

போலீஸ்காரர் வயோதிக அலுப்பு நடையுடன் வந்தார். வாசலருகே வெற்றிலைச் சாறைத் துப்பிவிட்டு நாவால் பற்

களைத் துழாவியபடி தொந்தியசைய வந்தார். அகமது ஒரு சலாம் போட்டான். அவர் பொருட்படுத்தவில்லை.

'எக்ஸ்யூஸ் மி செர். குட் யூ டெல் மி வாட்ஸ் த டைம் நௌ?' என்றான் அகமது.

'என்னாது?'

'ஐம் ஸாரி. நோபடி ஹேவ் எ வாட்ச் ஹியர். கென் ஐ நோ தி டைம்?'

போலீஸ்காரர் ராமப்பனைப் பார்த்தார். ராமப்பனின் வாய் திறந்து நின்றது. முகம் முழுக்க பெருமிதம், பரவசம்...

'பத்தரை' என்றபடி அவர் கடுமையான முகத்துடன் முன்னால் நடந்து சென்றார்.

'மக்களே அயமதுட்டி, நீ சில்லரை கள்ளன் இல்லடே. எப்பிடிடே இத ஒப்பிச்சே? மக்கா, எனக்கு குளுரு கோரி இடுதுடே.'

'ஹிந்தியும் பறயும்' என்றான் அகமது.

'எப்பிடிடே?

'ஞான் திருவனந்தபுரம் கிழக்கே கோட்டயில் பத்து கொல்லம் இருந்நிட்டுண்டு.'

'அப்படி வரட்டு. மக்கா குய்யா... லே, கேட்டியா? இந்த திருவந் தரம்னா நீ என்னன்னு நெனக்கே? சரஸதி இருக்க இடமாக்கும்.'

'வீடி எடுங்க மாமா' என்றான் அகமது.

'மக்கா உனக்கு பீடி இல்லடே. இரு. லேய் குய்யா, போயி ஒரு பாக்கெட் வில்ஸ் சிக்ரேட்டு வாங்குவே.'

குய்யன் எழுந்து 'பைசா குடும்வே...' என்றான். ஒடிந்து ஒடிந்து நடந்து போய் பக்கத்துக் கடையிலிருந்து சிகரெட் பாக்கெட் வாங்கி வந்தான்.

அகமது ஒரு சிகரெட்டை எடுத்துவிட்டு பாக்கெட்டை ராமப்ப னுக்கு நீட்டினான்.

'நமக்கு சிகரெட்டா? நல்ல கூத்து. மேல இருக்க சாமியளுக்கு சிரிப்பு வந்துபோடும். நீ பிடி.'

'நான் சிகரெட் பிடிக்கதில்லை மாமா.'

'நீ பிடிச்சணும். சிகரெட்டுதான் பிடிச்சணும். சிகரேட்டு சரஸ்வதிக்க புகையாக்கும். கோணெழுத்து படிச்ச பய பீடி பிடிக்கப்படாது. அதாக்கும் அதுக்க சத்தியம்.' ராமப்பனுக்கு உடலே நடுங்கியது.

'ஞான் புகை வலிக்கில்ல மாமா. சிலப்போள் மூடு போகும்போ ஒரு வலி வலிக்கும். அவ்வளவுதான்.'

'இப்பம் என்னத்துக்கு மூடு போச்சு?'

'இங்க பாருங்க.' அகமது பத்திரிக்கையை கையால் ஓங்கி அடித்தான். 'என்ன போட்டிருக்கான் தெரியுமா? கேரள மண்ணை எடைபோட்டு தூக்கி விக்கிறாங்க. கேவலம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மரகதப் பட்டுடுத்த மலையாள மண்ணை விக்கிறானுங்க. நாயின்ற மோம்மாரு...'

'பாட்டமோ?' என்றார் ராமப்பன் சற்றும் ஆர்வமில்லாமல். ஆனால் செயற்கையான ஒரு தீவிர பாவனையுடன்.

'மாமாவுக்கு ஆரம்பத்தில இருந்து பறயணும். ஏ.டி.பி எந்நு பறஞ்ஞா அறியுமோ?'

'தெரியாது. எடுப்பீண்ணா...' உடுப்பி மாதிரியா என்று கேட்க நினைத்து கேட்கவில்லை.

'ஏஷியன் டெவலப்மென்ட் பேங்க். வெள்ளைக்காரன்டெ பேங்கானு. ஏது வெள்ளைக்காரன்?'

'ஏது?'

'நம்மள் ஓட்டிச்சுவிட்ட வெள்ளைக்காரன்.'

'நம்மளா?'

'நம்மள்ந்நு வச்சா காந்தி,நேரு, ஜின்னா சாகிப், அப்துல் ரஹுமான் சாகிப் எல்லோரும் சேர்ந்நு. அதே வெள்ளைக்காரன் கொள்ளைக்காரன் இப்பம் ஏ.டி.பி. எந்நு ஒரு கோப்பும் உண்டாக்கி வந்திருக்கான். எதுக்கு?'

'என்னத்துக்கு?'

'மலையாள மண்ணை கொள்ளையடிக்க. ஆயிரம் கோடி ரூபாய்க்கு கான்ட்ராக்ட் போட்டிருக்கான் சர்க்கார். அந்தப் பணத்துக்கு அவன் நம்முடெ மண்ணு குளம் தோண்டும். வெட்டுந்ந தேங்ஙா அவன் எடுக்கும். ரப்பர் பால் ஊற்றி எடுக்கும்.' குரலைத் தாழ்த்தி 'காணான் கொள்ளுந்ந பெண்ணுங்களை பிடிச்சு கொண்டு போவும்' என்றான்.

'வெள்ளைக்காரனோ?'

'ஆமாந்நே.'

'அவனுகளுக்க யோகமே' என்றார் ராமப்பன்.

அகமது சற்று அயர்ந்துவிட்டான். மீண்டும் சிரமப்பட்டு வேகம்கொண்டு 'நாடு ஃபரிக்கான் அறியாத்த நாயின்டை மோன். அவனாணு நாயனாரு. கேக்கிறதுக்கு நல்ல உசிருள்ள காங்கிரஸ்காரன் இல்லை. கருணாகரன்றெ பல்லு போயி. ஆன்டனிக்கு பண்டே பல் இல்ல. பின்னெ எந்து செய்யும்? நல்ல உசிருள்ள முஸல்மான்மாரு வரணம். கோயாசாகிப் மாதிரி வீரன்மாரு வேணும். இல்லெங்கில் நாடு போகும். ஆயிரம் கோடி உலுரவ. ஆயிரம் கோடி. த்தூ. ஆயிரம் கோடிய வச்சு என்ன செய்யும்? ஒரு ஆழ்ச்ச அரிசி வாங்கமுடியுமா? இல்ல சோதிக்கிறேன். ஆயிரம் கோடி ஒரு ரூபாயா?'

'அல்லாத பின்னெ?' என்றார் ராமப்பன்.

'உம்மயும் என்னையும் பண்டாரம் வித்து வாங்குறான். எல்லாரையும் சேத்து நாயனாரும் ராஜிவும் விக்கிறான். எல்லாரும் விலைப்பண்டம். ஹோய் ஹோய், எதெடுத்தாலும் ஒரு ரூபா. வை ராஜா வை. சகாய வெலை. போனா வராது. அதாக்கும் கதை.'

ராமப்பன் மகிழ்ந்துபோய் சிரித்தார்.

குய்யன் 'குண்டு போட்டு கொல்லணும் தாயளிய' என்றான்.

'ஆரை?' என்றான் அகமது.

'எம்.ஜி.ஆரை.'

'அவன் போயி வருஷம் நாலாவுதே...'

'அமேரிக்கா போயிட்டானோ?'

'சக்கி பெத்தாண்ணு சொன்னா சக்க வெந்தாண்ணு கேட்ட கதையாட்டுல்லா இருக்கு' என்றான் அகமது.

போலீஸ்காரர் திரும்பி வந்தார். அங்கிருந்தே அகமதைப் பார்த்தபடி வந்தார். அருகே வந்ததும் நின்று பெல்ட்டுடன் பாண்டை தூக்கி போட்டபடி செருமி 'உம் பேரு என்னா?' என்றார்.

'ஐ பெக் த பார்டன்.'

'என்னாது?'

'மனசிலாயில்ல.'

'உன் பேரு எந்நு?'

'அகமது.'

'துலுக்கனோ?'

'முஸல்மான்' என்றான் அகமது. 'தீனில் உறச்ச விஸ்வாசம் உள்ள முஸல்மான்.'

'நீ எப்பிடிடே இந்து கோயில்ல இருக்கே? எந்திரி. ஸ்தலம் காலியாக்கு...'

'பீமாப் பள்ளிக்கு முன்பு எத்ற ஹிந்துக்கள் இருக்குந்நு?'

'சீ... ராஸ்கல், தர்க்கமா செய்தே' என்றபடி போலீஸ்காரர் கையை ஓங்கினார்.

'தாணுபிள்ளே, தொப்பி இருக்காது... ஒரு துண்டு பேப்பர் மதி. ஜஸ்ட் எ பீஸ் ஆஃப் பேப்பர்...'

தாணுபிள்ளை கையை விலக்கிவிட்டார். அதன்பிறகுதான் அவன் தன் பெயர் வில்லையைப் படித்திருக்கலாம் என்ற பிரக்ஞை வந்தது.

'ஸ்டேஷனுக்கு வாடே....' என்றார் தாணுபிள்ளை உடைந்த குரலில்.

'ஐ ஹேவ் லைஸன்ஸ் யூ நோ. லைஸன்ஸ் குடுத்தவன் கேட்டிட்டில்ல ஹிந்துவா கிறிஸ்டியனா முஸ்லீமா எந்நு. நிங்ஙள் எப்பிடி கேக்கும்? ஐ வில் கம்ளெயின்ட். டெஃபனிட்லி ஐ வில் கம்ளெயின்ட். ஆன்ட் ஐ நோ ஹவ் டு மேக் எ கம்ளெயின்ட்.'

தாணுபிள்ளை ராமப்பனைப் பார்த்தார். அவர் கண்களைச் சுருக்கியபடி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். மீண்டும் பெல்ட்டுடன் பேண்டை தூக்கிப் போட்டபடி 'ஸ்டேஷனுக்குப் போயி உன் ஃபைல பாக்கேன். லைஸன்ஸ் இல்லென்னா மவனே, உனக்கு டின்னுதான் பாத்துக்க' என்றபடி நடந்தார்.

ராமப்பன் 'போறான் பாரு' என்றார் குய்யனிடம். 'பாத்தியாடே குய்யா, ஆனைய மடக்குத வித்தையும் உண்டு.'

அகமது 'பயப்பிடப்படாது மாமா. நாம இனி ஆரை பயப்பிடணும்? இதுக்குமேல நம்ம யாரும் ஒண்ணும் செய்ய முடியாது. ஜெயிலில் போடுமா? போடட்டும். கொல்லுமா கொல்லட்டும். பின்னெ எந்து? ஈமான் உள்ளவன் படச்சவனை பயப்படணும். பின்னெ ஒராளையும் பயப்படக்கூடாது. பயப் படுணதுதன்னெ ஹராம் ஆணு.'

'செரியாக்கும்' என்றார் ராமப்பன்.

குய்யன் 'அந்த எருக்கு குட்டிக்கு காச்சலாக்கும். கெடந்து பெனாத்துதா' என்றான்.

'சாய வேங்கி குடும்வே.'

'பைசா?'

'உனக்கு கிட்டுத பைசாய நீ என்னடே செய்தே?'

'எனக்கு ஒளிச்சு வய்க்க தெரியல்ல கேட்டேரோ. நேத்து அஞ்சு ரூவாய மணலில பூந்தி வச்சேன். சொல்லி வச்சது மாதிரி பெருமாளு வந்து எடுத்துப் போட்டான். நீரு எங்கின வய்க்கேரு எப்பிடி எடுக்கேரு ஒரு எளவும் தெரியல்லியே...'

'பிலேய் சும்மா கண்ட எடத்தில வய்க்கப்படாது. அவன் எங்க தேடுவான்னு கெணிக்கணும். தேடாத்த எடத்தில வய்க் கணும்...'

'அவன் எங்க தேடுவான்?'

'உமக்கு அது சொல்லி தெரியாது. விடும். இஞ்சேரும் ஒரு சாய வேங்கி குடும். பன்னு கிட்டினா ஒரு பன்னும் வாங்கும்.'

'காய்ச்சலு உண்டோ?' என்றான் அகமது.

'தீயாக்கும்.'

அகமது செய்தித்தாளின் ஓரத்தைக் கிழித்தான். தன் பையிலிருந்து ஒரு பென்சிலை எடுத்து எழுதினான். 'அந்த மெடிகல் ஷாப்ல போயி இந்த மருந்து கேட்டு வாங்கிட்டு வரூ. குளிகயாணு. பனிக்கு நல்லது.'

'உனக்கு மருந்து தெரியுமோடே?'

'மாத்திரையின்ற பேரு படிச்சு வய்க்கும்' என்றான் அகமது. தன்னிடமிருந்து இரு ஐந்து ரூபாய் நாணயங்களை எடுத்துக் கொடுத்தான்.

குய்யன் போய் டீயும் பன்னும் வாங்கி வந்தான். சுவர் ஓரமாக பழைய சாக்கை போர்த்திக்கொண்டு எருக்கு படுத்துக் கிடந்தாள். குய்யன் 'எருக்கு... ஏம்ட்டீ எருக்கு' என்று கூப்பிட்டான்.

எருக்கு விழித்து முனகினாள்.

'கேட்டயா மக்கா அயமது. இவளுக்கு இப்ப ஒரு கையும் தளந்துபோச்சு' என்றார் ராமப்பன்.

எருக்கு ஆவலுடன் மாத்திரை, பன், டீ எல்லாவற்றையும் விழுங்கினாள். முகத்தைத் துடைத்தபடி 'அவிக வந்தாவளா?' என்றாள்.

'ஆரு?' என்ற குய்யன் உடனே புரிந்துகொண்டு 'அவனுக்கு லெக்கு கெட்டுப் போச்சு குட்டியே. குடிச்சு கூத்தாடீட்டு இல்லா அலையுதான்' என்றான்.

'நாற வெள்ளம் குடுச்சா சங்கு எரிஞ்சுப்போயிடும்னு சொன்னேன். கேக்கமாட்டவ' என்றாள் எருக்கு சற்று சலிப்பு டனும் சிறு வெட்கத்துடனும்.

'வலி உண்டுமா குட்டி?'

'ஓமண்ணா. நல்ல வேதனை உண்டும்.'

'கிடந்துக்கோ. பனி இறங்கும் கேட்டயா?'

எருக்கு மீண்டும் படுத்துக்கொண்டு 'வல்லதும் சாப்பிட் டாவளோ என்னமோ. வெறும் வயித்தில சாராயம் மோந்தினா கொடலுல்லா எரியும்' என்றாள்.

'குட்டி நீ இந்தமாதிரி பேச்ச விடு. இதக் கேட்டா அவனுக்கு வெறயலு கேறுது. கேட்டேயோ அயமதே. பழனில இவ இப்படி நாலு பேச்சு பேச அவன் தூக்கிப் போட்டு சவிட்ட ஆரம்பிச்சான். தாலிய பிடுங்கப் போனான். இது கெடந்து நெலவிளி. தாலிய அறுக்காதியோ தாலிய விட்டுருங்கோ எண்ணு. நான் சொன்னேன், பிலேய் பெருமாளு, கெட்டின தாலிய அறுத்தா உனக்கு பின்ன சீவிதமில்லை. மேல ஒருத்தன் உண்டு. அவனுக்கு ஒரு கணக்கும் உண்டுண்ணுட்டு. விட்டுப் போயிட்டான். பிறவு இவளப் பாத்தாப் போரும் அடிதான். பேசாம கெட குட்டின்னு சொன்னா இவளும் கேக்கமாட்டா. இஞ்சேருங்க இஞ்சேருங்கன்னு சொல்லி விளிச்சு அடி கேட்டு வாங்குவா... ஓரோண்ணுக்க தலையெழுத்து. என்னன்னு சொல்லுதே?'

'இனி அவன் அடிச்சா பேப்பர் எடுக்கணும். இல்லெங்கில் பயப்படமாட்டான்' என்றான் அகமது.

'மாசி ஒடுக்கம் கூட்டாலுமுடு. பிறவு ஆற்றுகால். சோட் டாணிகரை... போன வரியம் சம்முவமணியைப் பாத்தேன்.'

'சம்முவமணியா அண்ணா?'

'உனக்கென்னடா தெரியும். பேயாம கிட.'

'ஆரு அது?'

'நம்ம பழைய லவ்வு. இப்பம் எங்க இருக்காளோ? மத்த பாட்டு ஒண்ணு உண்டுல்லா 'அக்கரையாணு என்றெ மானசம். இக்கரையாணு என்றெ தாமசம்...' அந்தப் பாட்டெ கேட்டா நான் கண்ணீரு விடுவேன் பாத்துக்கோ. சோட்டாணிக்கரையில் போன வரியம் பாத்தப்ப நான் பாடினேன். அவளும் பாடினா. ரெண்டாளும் அளுதோம். கேட்டயோ குய்யா, சேந்து சிரிக்கிற சந்தோஷம் பத்து ரூபாய்ண்ணாக்க சேந்து அளுத சந்தோஷம் நூறு ரூவாய்க்கு சமம். அதெல்லாம் அறிஞ்சவன் அறிவான்.'

அகமது ஒன்றும் சொல்லவில்லை.

'ஏம்மக்கா ஒனக்கு குட்டிக ஒண்ணும் சிக்கலியா?' என்றார் ராமப்பன்.

'எங்க மாமா? இது இருவது வயசுக்குள்ள மலைமாதிரி கேறிப்போடுச்சு. இதப் பாத்தா ஒருத்தி அடுக்கமாட்டா. எளவு, குருடிகள்கூட வேற ஆள்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுகிட்டு அய்யேண்ணு சொல்லுதுங்க. அது விதியாணு. படச்ச தம்புரான் களிக்குற களி. போட்டே.'

'அந்த கடுதாசிய இப்பிடி கொண்டாடே. சரசதி மொகத்த நானும் பாக்கேன்...' என்றார் ராமப்பன்.

தாளை விரித்து பல கோணங்களில் வைத்து கூர்ந்து பார்த்தார். 'கண்ணு பொகயடிக்குது மக்கா... எளவு எறும்பு எறும் பாட்டுல்லா இருக்கு. எப்படி படிக்காலுகளோ?'

மார்பில் பாவாடை கட்டிக் குளிக்கும் பெண்ணைக் கூர்ந்து பார்த்தார். தலை ஆடியது. குய்யனும் எட்டிப் பார்த்தான். 'இது பொம்மையாக்குமோ?'

'மாமா அது அம்பிகா...'

'பொம்பிளையா?'

'ஆமா.'

'என்னெளவுக்கு இப்படி அவுத்துக் காட்டுதா?'

'மாமா பணமுல்லா. பெரும் பணம், பூத்த பணம்.'

'இவளுகளுக்கு வீட்டில தாயி தந்தை இல்லையோ?' என்றான் குய்யன்.

'இருந்தா? பணம் வந்தா ஏன் அவுக்கப்பிடாது?' என்றான் அகமது. 'ஆக்டிங்காக்கும்.'

'வயத்துப் பிழைப்பு பலவிதம்' என்று ராமப்பன் பெருமூச்சு விட்டார். பேப்பரை மடித்துவிட்டு அடுத்ததை எடுத்தார். அதில் ஒரு பெரிய வண்ண ஓவியம் இருந்தது.

'கண்ணு மங்குது மக்கா. மொகமும் உருவமும் தெளியல்ல' என்றார் ராமப்பன்.

‘மாமா அது மாடர்ன் பெயின்டிங். அதில மொகமும் உருவமும் ஒண்ணும் இல்லை.’

‘என்ன சொன்னே?’

‘அழகுக்காக அப்படி வரையுதாங்க.’

‘முண்டையுருக்களை வரைஞ்சா அழகோ?’ என்றபடி ராமப்பன் கூர்ந்து வெகுநேரம் பார்த்தார். வண்ணங்களை கையால் சுரண்டியும் பார்த்தார். ‘ஒரோ தமாசு மனியனுக்கு’ என்றார்.

# 14

நாணுக்குட்டன் நாயர் அதிகாலையிலேயே வந்து விட்டார். அப்போதுதான் ஏக்கியம்மை அடுப்பு பூட்ட ஆரம்பித்திருந்தாள். பண்டாரம் குளிக்கப் போயிருந்தார்.

'வாங்க வாங்க' என்றாள் ஏக்கியம்மை. 'உங்க காரியம் நேத்துகூட சொன்னேன். உக்காருங்க... ஏம்மிட்டி சேரத் தூக்கிப் போடு பாப்பம்...'

நாணுக்குட்டன் நாயர் 'பல சோலி உள்ள ஆளுகளாமாக்கு மேன்னு காலையிலேயே வந்தேன்' என்றபடி சேரில் அமர்ந்து குடையை அதன் கைப்பிடி மீது மாட்டினார். 'சாயா எடுக்கண்டாம். பலகாரம் சாப்பிடும்போ சேர்த்து குடிக்கலாம். இது மூணாமத்தவ இல்லியா?'

'ஆமா. கடைக்குட்டியாக்கும்.'

'எந்திரிக்கல்லியோ' என்று அரங்கை எட்டிப் பார்த்தார்.

'குளிக்கப் போயிருக்காவ.'

'குளத்துக்கா? சில்லுன்னு இருக்குமே. நீர்த்தோஷம் வரும். நமக்கு ஏது வெயில் காலத்திலயும் சூடு வெள்ளம் வேணும். குளியும் குடியும் எல்லாம் சூடு வெள்ளமாக்கும். அது பின்ன வயசும் ஆச்சே' என்றபடி காலை வெடுக் வெடுக் வெடுக் என்று ஆட்டினார்.

சின்னவள் எழுந்து கதவருகே நின்று எட்டிப்பார்த்தாள். 'இது ரண்டாமத்தவளா?'

‘ஆமா.’

‘பேரென்னா?’

அவள் உள்ளிருந்து ‘வடிவம்மை’ என்றாள்.

‘நல்ல பேரு.’

‘ஆமா கிளவி மாதிரி பேரு’ என்றாள் அவள் உள்ளேயிருந்து.

‘அய்யோ பிள்ளே. மேலாங்கோட்டு அம்மை பேராக்குமே’ என்றார் நாயர்.

ஏக்கியம்மை எட்டிப் பார்த்து ‘நாரோயில் வடிவம்மையை நேந்துகிட்டு போட்ட பேரு. பணம் கெட்டி செயஸ்ரீண்ணுட்டு மாத்துண்ணு கெடந்து சாடுதா. என்னத்த செயிச்சாளோ?’ என்றாள்.

‘ஜெயஸ்ரீ. அதும் நல்ல பேராக்கும். ஒரு தரவாடித்தம் உள்ள பேரு. நம்ம பேத்தி பேரு சுபஸ்ரீ. ஸ்ரீண்ணுட்டு வச்சா குடும்பத் துக்கு ஐஸ்வரியம்.’

உள்ளிருந்து வடிவம்மை ‘இங்கதான் பண்டாரம் ஏக்கி பரதேசீன்னு பேரு வக்கிறாவ’ என்றாள்.

‘நீ போ குட்டி. போயி பல்லைத் தேயி. நிண்ணு பிரசங்கிக்காம.’

பண்டாரம் காலை சாக்கில் தேய்த்தபடி படி ஏறி வந்தார். ‘வரணும் வரணும் நாயரே’ என்றார்.

‘பல ஜோலி உள்ள ஆளாக்குமேன்னு காலத்தே வந்ததாக்கும்.’

‘செரி செரி. சாய குடிச்சேளா?’

‘சாய இருக்கட்டும். நம்ம வீடுதானே.’

‘இப்ப வாறேன்’ என்று பண்டாரம் அரங்குக்குப் போய் உடைமாற்றி விபூதி போட்டு முருகா என்று கன்னத்தில் போட்டு கும்பிட்டுவிட்டு வந்து அமர்ந்தார்.

‘காரியங்ஙள் நம்ம வழிக்கு வருது. சுப செய்தி. அதாக்கும் ஓடி வந்தது’ என்றார் நாயர்.

‘என்னது?’

‘பையனுக்கு சம்மதம். பெண்ணை ஒரிக்கல் நேரிட்டு பார்த்தால் பூர்ண சம்மதம். ஒரு தேதி சொன்னா கூட்டிட்டு வந்திடலாம்.’

‘அதுக்கு முன்னால காரியங்கள் பேசி முடிக்கணுமே. இப்பம் என்ன ரேட்ல நிக்காவ?’

‘சொன்னதுதான். அம்பது. கைல ஒண்ணரை. கல்யாண செலவு. பின்ன பாத்திரம் பண்டம். கட்டில் பீரோ. ஒரு கோட்ட வெதப்பாடு இல்லாட்டி ஒரேக்கர். பின்ன பையன் சர்க்காரா பீஸ்ணு சொல்லுயதனால போய்ட்டு வாறதுக்கு...’

‘ஏரோபிளேனா கேக்கான்?’

‘நம்ம மக்கதானே ஏறி சினிமாக்கோ பாட்டு கேக்கவோ போவா. நாம ஆருக்கு செய்றோம்? அன்னியம் அசலுக்கு இல்லியே.’

வாசலில் வந்து நின்ற ஏக்கியம்மை ‘நாயரே லிஸ்டு அனுமனாரு வாலு மாதிரில்லா இருக்கு. சுருட்டி வச்சு கேறி இருப்பான் போல இருக்கே?’

‘அது பின்ன சர்க்காரு சோலி. இப்பம் சொல்லுங்க நாரோயில்ல கட வச்சிருக்க ஜாதகம் இருக்கு. ஒரு டிமான்டு இல்ல. வாடான்னா வருவான். கெட்டுண்ணா கெட்டுவான். இரிண்ணா இருப்பான். கிடண்ணா கிடப்பான். விஷமுள்ள பாம்பு நெளியும். விட்டுர முடியுமா?’

‘அதுக்குன்னீட்டு...’

‘பின்ன நம்மட்டயும் பிரச்சினை உண்டுமே...’

‘என்ன பிரச்சினை?’

நாயர் குரலைத் தாழ்த்தி ‘ஆரோ கேறி கொளுத்திப் போட்டான். நம்ம கச்சவடத்தைப் பற்றி இப்பம் நம்மை காட்டிலும் அவனுக்கு தெரியும்.’

பண்டாரம் சற்று நேரம் வாயடைத்துப் போனார். ‘அதிப்பம் ஒரு ஏவாரம்னாக்க...’

‘ஏவாரம்னா அப்பிடித்தான். கச்ச கபடம் அதான் கச்சவடம். அது ஆருக்கு தெரியாது? ஆனா ஒரு கல்லியாணம்னு வரும்ப பலதும்

வரும். உங்களுக்கு என்ன தெரியும்? மூணு தலை முறைக்கு முன்னால ஒரு எளையம்மை ஈழவன்கூட போனா. இன்னைக்கு சம்பந்தம் பேசும்போ குடு அஞ்சு லெட்சம் எக்ஸ்ட்ராங்கிறான். இப்பம் நடந்த கதை.'

'இல்லை நாயரே, அது நாமளும் பாக்கலாமே. நாங்க அசல் பாண்டி பண்டாரத்தாங்க. அவுங்களுக்கு என்ன எனம்? கப்பள்ளி கலப்பு. அது எப்பிடி?' என்றாள் ஏக்கியம்மை.

'ஆமாமா. அது பேசாம விடமுடியுமா? நான் சொல்லிப் போட்டேன். ஏக்கியம்மை கிடந்து துள்ளுதா. நான்தான் ஒருமாதிரி பேசி நிறுத்தியிருக்கேண்ணு சொன்னேன். அதில அவங்களுக்கும் ஒரு சடவுதான். இப்பம் பிரச்சினை என்னன்னா அங்க ஒரு பார்ட்டி வந்து தைதைன்னு நிக்குது. பெண்ணு கருப்பு. ஆனா ஒத்தைக்கொரு பிள்ளை. மார்த்தாண்டத்தில சுக்கு காபி கடைக்காரன் தகப்பன். சின்னக் கடையானாலும் நல்ல ஓட்டம். நூறு பவுன் போட்டு ஒண்ணரையும் காரும்னு சொல்லுதான்.'

'கோவாப்பரேட்டிவ் சொசைட்டிக்கு காரில ஏறிப் போவானாக்கும்?'

'அது எங்க வேணுமானாலும் போவான். சும்மா வீட்டுக்கு முன்னால நிறுத்தி ரண்டு மட்டம் ஹார்ன் அடிச்சா போராதா? எல்லாம் ஒரு கெம்பீரம்தானே? பின்ன இப்பம் பவுனு நகை எதுக்கு? மணிமணியாட்டு பித்தளை நகை கடையில சீரழியுதே... அதும் ஒரு கெம்பீரம்தான். அதாக்கும்...'

'இது பேசினா பேசிட்டே போலாம். முடிவு இருக்காது. ஸ்கூட்டரு எனக்கு கட்டாது. இப்பம் அம்பதுக்கு குறஞ்சு ஒரு வண்டி எடுக்க முடியாது. கைல ஒண்ணே கால். மத்தது முறை போல. அதாக்கும் என் வாக்கு.'

'இப்பிடி அறுத்து முறிச்சு சொன்னா முடியுமா. எல்லாம் ஒரு நீக்குபோக்கு வேணுமே.'

'நீங்கி நீங்கித்தானே நாயரே இந்தெடம் வரெ வந்தது? எங்கிளுக்கும் ரெண்டு ஜாதகம் வந்திருக்கு. பழனியில. பையன் சர்க்காரிலதான். நாங்களும் பாண்டிதானே? அம்பது பவுன் போட்டு கெட்டிக் குடுத்தா பொன்னே பொருளே அப்டீங்கான் அங்க.'

‘அதுக்காக பிள்ளய கொண்டுபோயி பாண்டிக்காட்டில விட முடியுமா?’

‘அதனாலதான் இத இம்பிடு பாக்குதது. ஒரு வய்யாத்த காலத்தில வெந்நி அனத்தி தர ஆளிருக்குமேண்ணு. மூணும் பொட்டைக. அதனால. இல்லாட்டி இந்த கோவாபரெட்டிவ் கிளாக்குப் பயலுக்கு மூணு லெட்சம்னாக்க சிரிப்பாட்டுல்ல இருக்கு?’

‘அப்ப நான் செரீன்னு சொல்லுதேன்.’

‘இல்ல. நான் ஒரு சில்லி கூட்டமுடியாது. இப்பமே கூடிப் போச்சு.’

ஏக்கியம்மை ‘இந்த வாங்கியை கொஞ்சம் எறக்கி வாங்குதேளா? நல்ல சூடுண்டு’ என்றாள்.

ஏக்கியம்மையின் கண்களைப் பார்த்த பண்டாரம் எழுந்து சமையலறைக்குள் போனார்.

‘ரெண்டு மூணு உருப்படி வித்து துலைச்சாலும் செரி. ஏன் கெடந்து மொரண்டுதியோ?’

‘நீ சும்மா இருட்டி. விட்டுபோனா அடுத்து வரும்பம் ஆனைக்க அண்டி சுட்டுதாண்ணு கேப்பான். பண்டாரப் புத்தி பரதேசிப் புத்தி. விடமாட்டானுக. அந்த கறுவப் பயலுக்கு இதுக்குமேல இந்த நாஞ்சி நாட்டுல குடுக்கானுக!’

‘பாத்துப் பேசுங்க. கையவிட்டு போயிரப்பிடாது. இங்க ஆயிரம் கண்ணாக்கும் எரியியது.’

வெளியே வந்து பண்டாரம் ‘அப்ப நான் சொன்னதுதான். அதுக்கு மேல இல்ல.’

‘ஸ்கூட்டரு இல்லாட்டி ஒரு சின்ன சாதனம் டிவிஎஸ் அம்பது ஒண்ணு போரும். நான் அவங்ககிட்ட போயி வல்லதும் சமாதானம் சொல்லணுமே அதுக்காக...’

‘டிவிஎஸ்னா பாக்கலாம்.’

‘எனக்கு இது தொழில் இல்லை பாருங்கோ. ரெண்டு குடும்பம் ஒண்ணாகுது. ரெண்டும் மரியாதைப்பட்ட குடும்பம். இண்ணைக் கும் வெளியே போய் போத்தி வேலுப் பண்டாரம்னு சொன்னா

முருக பக்தர்லான்னு சொல்லுதான். தாணுப் பண்டாரம்னா அய்யோ பாவம் சூதறியாத மனுஷன்னு சொல்லுவாங்க. அந்த ஒரு இது இருக்கு. ஏது...?'

'ஆமாமா. அவங்க சம்மதிச்சா மாசி முப்பதுக்கு உள்ள ஒருநாள் கூட்டிட்டு வாறேன்.'

'மாசி வேண்டாம். பங்குனி பெறக்கட்டும். பங்குனி பத்துக்கு இங்க பத்தாம் உதயம். அது தவிர மத்தநாள் செரி.'

'அப்பம் காரியங்கள் மொறை போல. ஒரு மங்கள காரியம் ஏற்பாடு செய்யியதுன்னா அது சில்லறப் பாடு இல்ல. வெளிய நின்னு குத்தம் குறை சொல்றவனுக்குத் தெரியாது. நான் இதுவரை நாநூற்று எட்டு கல்யாணம் நடத்தி வச்சிட்டுண்டு, ஒரு குறை இல்லை. எல்லா பிள்ளையளும் அம்மை தம்புராட்டி மாதிரி நெறைஞ்சு வாழுதாங்க. அது நம்ம ஒரு கைராசியாக்கும். நெறஞ்ச மனசு. நம்ம பிள்ளையள மாதிரியாக்கும். அதுகளுக்கு ஒரு கொறையும் வரப்பிடாதுன்னு ஒரு சங்கல்பம்- அது வேணும் மனசில. பின்ன பகவான் குருவாயூரப்பன் அருள். எல்லாம் நடக்கும். அம்மே பகவதி...'

ஏக்கியம்மை ஒரு துளி நெய்விட்டு நிறைய எண்ணையுடன் தோசை வார்த்து நாணு நாயருக்குப் பரிமாறினாள். மெலிந்து ஒடுங்கிய நாணு நாயர் பதினொரு தோசை சாப்பிட்டதை பண்டாரம் ஓரக்கண்ணால் பார்த்தார். பெண்கள் கதவுக்கு அப்பால் நின்று பார்த்து கிளுகிளுத்தனர். சின்னவள் வேண்டு மென்றே அப்பகுதி வழியாக நடந்து மறுபக்கம் போய் 'பதினொன்னு மணிக்கு போகணும்னு சொன்னாவ' என்று சத்தமாக சொன்னாள்.

மீனாட்சியின் கண்களில் சிரிப்பு தெரிந்தது. பண்டாரம் கண் களாலேயே அதட்டினார்.

நாணுக்குட்டன் நாயர் சற்று நேரம் படுத்து இளைப்பாறிவிட்டு நூறு ரூபாய் பணமும் பெற்றுக் கொண்டு கிளம்பிச் சென்றார். அவர் அந்தப் பக்கம் சென்றதும் இந்தப் பக்கம் உண்ணியம்மை ஆச்சி வந்து நுழைந்தாள்.

'ஒரு துடம் நல்லெண்ணை இருந்தா தாயெடியோ ஏக்கியம்மை. பப்படம் காச்சணும்னு எடுத்தா எண்ணெக் குப்பில பாற்றா

விளுந்து கெடக்கு. பப்படமில்லாம அவிகளுக்கு சோறு எறங்குமா? இந்தாபிடி அந்தா பிடிண்ணு அங்க கெடந்து ஆதாளியிடுதாக...'

'நேத்து கடலயெண்ணேல விளுந்த அதே கரப்பாம் பூச்சியா பாட்டி?' என்றாள் வடிவம்மை.

'நீ போடி சிறுக்கி. இந்த பாரு ஏக்கி, இவளை நீ விட்டு பிடிக் காதே. இவ பாட்டும் கூத்தும் ஒண்ணும் செரியில்ல கேட்டியா? பண்டாரச்சிக்கு நாடாப் பயக்ககூட என்ன பேச்சு? இல்ல, கேக்கேன்.'

'எண்ணை இந்தாருங்க ஆச்சி' என்றாள் ஏக்கியம்மை. 'தலை குளிச்சு நாளாச்சு. நான் எறங்கணுமின்னு நிக்கேன்.'

'தலை குளிக்கணும்னுட்டு நானும் எறங்கினேன். அப்பமாக்கும் பப்படத்துக்க ஆதாளி. சங்கதி உறச்சு போட்டோ?'

'என்ன சங்கதி?'

'நாணுக்குட்டன் நாயர் போறம்பம் நல்ல தெளிஞ்சு போனாரே. செரி, அந்த மட்டுக்குப் பகவான் பாக்கியம் இருக்கு. குட்டி நிறஞ்ச குட்டியாக்கும். அதுக்கு என்னப்பன் பழனியாண்டவன் ஒரு குறையும் வைக்கமாட்டான்.' ஆச்சி எண்ணைக் குப்பியுடன் கும்பிட்டாள்.

'ஆச்சி, எண்ணைக்குப்பி விளுந்திடுது' என்றாள் வடிவம்மை.

'நான் கண்ட எண்ணைக்குப்பி நீ கண்டிருக்கமாட்டே மக்கா' என்றாள் ஆச்சி. 'மத்த எடம்தானோ?'

'ஏது எடம். இன்னும் ஒறைக்கல்ல. ஒறைக்காம சொல்லுயது நல்லதில்லல்லா.'

'பின்னே? மூச்சு விடப்பிடாது. அறுதலிக்கண்ணு ஆயிரம் இருக்கு. தாணுப் பண்டாரம் இங்க கோரோயில்ல அந்தக் காலத் தில பூ கெட்டியிருக்காரு. அப்பம் அவரை எல்லாரும் செட்டியா ரேன்னு விளிப்பாவ. அவருக்க அம்மை வழி அதாக்கும். கேட்டிருப்பே... எண்ணைகாரச் செட்டிச்சிண்ணு சொல்லு வாக. நல்ல கறுத்த பூதமாக்கும்.'

'ஊரு பலதும் சொல்லும் ஆச்சி. அப்பம் நான் வரட்டா. தலை குளிக்கல்லன்னா எனக்கு கிறுக்கு பிடிச்சது மாதிரியாக்கும்.'

'தலை குளிக்காதவ வெளங்காதவ. நான் நல்லெண்ணை தேச்சு முங்கி எந்திச்சிருவேன் மக்கா. இந்தப் பெய கறுவலா வதங்கின வாளக்கருவாடு கணக்கா புகையடிச்சில்லா இருப்பான்? நம்ம குட்டி நல்ல நெறம்லா. என்னத்துக்குச் சொல்லுதேன்னா நாளைக்கு ஒரு மனசு கோணல் வந்திடப்படாது. நம்ம அச்சுதன் நாயருக்க மக நல்ல நாரங்கா நெறம். பையன் உளுந்து. கெட்டி ஒரு வருஷம் ஆகல்ல, குட்டி இங்க பய அங்க. எல்லாம் பாத்துதானே செய்யணும். ஜீவிதம்லா.'

'ஆமா. பாத்து செய்யுதேன்' என்றபடி ஏக்கியம்மை வெளியே இறங்கினாள்.

ஆச்சி எண்ணையுடன் பின்னால் போனாள். 'பாத்து எடுத்து செய்யணும் ஏக்கிக் குட்டியே. ஆயிரம் காலப் பயிருண்ணு சொல்லுவாக. பிள்ளைகுட்டியோட பெரு வாழ்வு வாழணும். நாளைக்கு ஒண்ணுக்கு பின்ன ஒண்ணாட்டு ஆயிரப்பிடாது. அதாக்கும் எனக்கு கெடந்து கெதீங்கெதீங்குண்ணு அடிக்குது.'

'வாறேன் ஆச்சி' என்று ஏக்கியம்மை கிட்டத்தட்ட ஓடினாள்.

ஆச்சி பின்னாலே விரைந்தபடி 'என்னட்டி பேசினிய? அம்பது பவுனுக்கு கொறயாம போடுவேள்லா? அந்த தெக்க கண்டமும் குட்டிக்குத்தானே. லெச்சம் கைலயும் குடுப்பிய. பிறவு இந்த வெறுவாக்கொத்த கறுவாதானா கிட்டும்? இந்த மேனிக்கு நல்ல நயம் உருப்படியகிட்டுமே. கிளவி சொல்லுதேன்னு நெனக் காதே. மலையாளத்தானுக மண்ணைப் பொன்னா சொல்லி கேத்திப்போடுவானுக. நம்பமுடியாது குட்டீ, நம்ப முடியாது. கறுவல் உருப்படிய தலையில கெட்டி கமிஷனை வேங்கிட்டு போவானுக. நான் சொல்லுயத சொல்லியாச்சு. பிள்ளை நான் தூக்கி வளத்த பிள்ளைல்லா. நீயும் நானும் இருக்குத இருப்புவசம் அப்பிடி...'

ஏக்கியம்மை மூச்சுவாங்க ஓடினாள். தெருச்சந்து மூலையில் கிழவி ஓடமுடியாமல் நின்றுவிட்டாள்.

# 15

'பங்குனி உத்தரம் வருதுடே' என்றார் பண்டாரம். 'துக்க வெள்ளி வருது. உருப்படியள பிரிச்சி ஏத்திவிடு. இந்த வண்டி மலை ஏம்லே கண்ணுல காங்கலே?'

'மோலாளி அவன் இப்பம் ஆறு மணிக்கு கொடியேத்திப் போடுதான். சொல்லிவையுங்க' என்றான் பெருமாள்.

'மார்ச் பதினஞ்சு குறிக்கணும் பிள்ளேச்சா' என்றான் அகமது.

'மார்ச் பதினஞ்சா? அதென்னடே?' என்று பண்டாரம் பஞ்சாங் கத்தைப் பார்த்தார்.

'பஞ்சாங்கத்தில் இருக்காது. அது அகில உலக ஊனமுற்றோர் தினம். விகலாங்க தினம். மாத்ருபூமி காலண்டரில் உண்டு.'

'அதுக்கு உனக்கென்னடே ஊனம்? உனக்கு சங்கதி கூடுதலுல்லா இருக்குவு?'

'இங்கே பாருங்க மிஸ்டர் பெருமாள், உம்மகிட்டே பேச்சு இல்லை. கடலாசு எடுக்கவேண்டாம்னு பாக்கேன்.'

'விடுடே. இவன் ஒருத்தன் எதுக்கெடுத்தாலும் கடலாசு கடலாசுன்னுட்டு...'

'கடலாசிலேயாக்கும் பவ்வர் இருக்கது. வோய் பெருமாளு, தலையுள்ளவனுக்காக்கும் இப்பம் காலம். அல்லாம தண்டும் தடியும் உள்ளவனுக்கு இல்ல' என்றார் ராமப்பன்.

'நீரு எப்பம்லே வந்தேரு? போயி உம்ம சோலியப் பாரும்' என்றார் பண்டாரம்.

'இப்ப ரெஸ்டு.'

'என்னது?'

'காலம்பற ஆறு மணிக்கு தொடங்கின விளியுல்லா. இன்னி அர மணிக்கூர் ரெஸ்டு' என்றார் ராமப்பன்.

பண்டாரம் அகமதைப் பார்த்தார். பெருமாளைப் பார்த்தார். பெருமாள் முகத்தில் மலச்சிக்கல் போன்ற ஒரு பாவனை.

'செரிடே செரிடே. பாத்துப் போடலாம் செரி...' என்றார். பஞ்சாங்கத்தை புரட்டியபடி 'சித்திரை பெறந்தா பின்ன சோலி நிறைய உண்டு. வண்டிமலையைக் கொண்டு ஒக்காது. நீ நல்ல தாட்டு வேற ரெண்டாளைப் பாரு.'

'தோட்டிய இருக்காவ.'

'தோட்டிய செரிப்பட மாட்டானுகடே. பயந்தாங்குள்ளியோ. சாமி பாவம்லா, சாமி புண்ணியம்லாம்பாவ. காலுறப்புள்ள ஆளு வேணும். ரெண்டும் கல்பிச்சு நிக்கணும். வல்ல அறுதலி பெத்த நாயரும் கிட்டினா பஸ்டாக்கும்...'

சிகரெட் புகைத்தபடி அகமது பேப்பர் படித்தான். காற்றில் அது சடசடத்தது. 'எரப்பாளிப் பய மகனுக' என்றான்.

'மக்காவே நீ தமிளு படிச்சுப்போட்டே பாத்துக்கோ' என்றார் ராமப்பன்.

'நீ ஆருடே அவனுக்க கொட்டயத் தாங்கியா?' என்றார் பண்டாரம். 'எதுக்குப் பாத்தாலும் மக்கா மக்காங்கியே?'

'அதுக்கு காமாவும் தாராசிங்குமில்ல வேணும் உடயோரே, நம்மால ஒக்குமா?'

பண்டாரம் கவனிக்காமல் கணக்கைப் பார்த்து 'ஒண்ணும் செரியில்லடே பெருமாளு. இம்பிடு கீழ போவ ஒரு சான்சும் இல்ல. இவனுவ வல்லதும் ஒளிச்சு கேற்றுதானுகளா? நல்லா பாத்தியா?' என்றார்.

‘மோலாளி மத்தவனுவள சொல்லுங்க. இந்த கொட்டை தூக்கி பயகிட்ட நம்ம வேல நடக்காது. எளுதிப் போடுவேன் எளுதிப் போடுவேன்ங்கியான். நமக்கானா ஆயிரம் சோலி கெடக்கு. தலயெளுத்து செரியில்லாம நாம அலையுதோம்.’

அகமது பேப்பரைத் தாழ்த்தி ‘பிள்ளையே, உம்மக்க சாமியப் பற்றி படமும் வார்த்தயும் உண்டல்லோ’ என்றான்.

‘ஆரு?’

‘மாங்காண்டி சுவாமி. ஆ காலில்லாத்த ஆள்...’

‘பேப்பரிலயா?’ என்று பண்டாரம் பாய்ந்து வந்து பார்த்தார். மாங்காண்டி சாமிதான். சிரித்த முகம். சரிகைத் தொப்பி. சரிகை உடை. மிகப்பெரிய ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தது. சிவப்புநிற பட்டுத்திண்டு வைத்த சிம்மாசனத்தின் இருபுறமும் சட்டை இல்லாத இரு பிராமணர்கள். சாமிக்கு முன் ஒரு பெரிய தட்டில் பழங்கள் மலர்கள், பொன் நாணயங்கள்.

‘முருகா ஞானபண்டிதா என்னப்பனே’ என்றார் பண்டாரம். ‘இதென்ன மாயம்?’

‘நியூஸ் படிக்கட்டுமா?’

‘படி படி.’

‘அதாவது மேலைபன்னிகோடு அக்னிசர்மா எழுதின லேகனம். கட்டுரை. பெரிய கட்டுரையாக்கும். சுருக்கி சொல்றேன். சம்பங்குழிங்கிற சித்தபுருஷரைப் பத்தி எழுதியிருக்காரு.’

‘சம்பங்குழி சாமியா, அதாரு?’

‘அதுதான் இது.’

‘அது செரி.’

‘சாமி தொட்டா தீரா வியாதி தீரும். மாறாத பர்வம் மாறும். சாமி பாடினா துன்பமெல்லாம் பறந்துபோகும். சாமி வேதாந்த கேசரி.’ அகமது கூர்ந்து படித்து ‘திராவிட காவ்ய பரிபாஷா கவி சிம்ஹன்’ என்று கூறி ‘இது எனக்கு மனசிலாயில்லா’ என்றான்.

‘மொத்தத்தில சாமி ரெட்சப்பட்டுப்போட்டு’ என்றார் ராமப்பன். ‘சப்பர மஞ்சத்திலயில்லா கேறி இருக்குவு. பழம் வச்சிருக்கு.

நல்ல ஆப்பிள், ஆரஞ்சு உண்டும். திராட்சை உண்டும். மாம்பழம் காங்கலியே?'

பண்டாரம் பெருமாளைப் பார்த்தார். பெருமாள் 'மோலாளி அவன் சும்மா அம்பிடு ரூபாயக் குடுக்கல்ல. வலிய பிளான் வச்சிருக்கான்' என்றான்.

'அவன் எமகண்ட கிடாரன்லா?' என்றார் பண்டாரம்.

'ஒரு கோரு கோரிப்பிடுவானுக மோலாளி' என்றான் பெருமாள்.

'அவனுக்கு அதுக்கான அறிவும் விபரமும் இருக்குடே. எப்பிடி இங்கிலீஷ் பேசுதான் தெரியுமா. அட்வகேட்டாக்கும்...'

'மோலாளி கல்யாணம் உறச்சாச்சு போல...' என்றார் ராமப்பன்.

'ஆமடே. பங்குனி ஒடுக்கம். கோரோயிலேயே வச்சு நடத்திப் போடலாமின்னு நினைக்கம். எல்லாம் முருகன் அருள்.'

'பையன் என்னெடுக்கான்?'

'கோவாப்பரேட்டிவ்ல கணக்கு எளுதுதான். சர்க்காரு சோலீன்னு பாத்தேன். துகெ கொஞ்சம் கூடுதலுதான். என்னென்னு பாக்க? இப்பம் சர்க்காரு சோலின்னா சில்லறக் காரியமா?'

'கோவப்பரேட்டிவ் சொசைட்டியா' என்றான் அகமது மோவாயைத் தடவியபடி. 'கல்யாணம் உறச்சாச்சா? நிச்சய தாம்பூலம்?'

'ஆச்சு. ஏமிடே?'

'செரி. எல்லாம் சர்க்காருதன்னெ. போட்டே.

'ஏமிடே?' என்றார் பண்டாரம். வயிறு கலங்கி எழுந்தது.

'உத்தியோகம் என்னன்னு பாத்தியளா?'

'நேரில போனேன். பேங்கில கணக்கு எழுதுதயும், பேப்பர் பாக்குததயும் எல்லாம் ரெண்டு கண்ணால பாத்தேன்.'

'போராதே' என்றான் அகமது. பேப்பரை மடித்து தன் மரப் பெட்டியில் வைத்தபடி 'மோளோடெ காரியுமல்லே முதலாளி? நந்நாயி நோக்கண்டே...?'

'இனி என்னடே நோக்க? பேங்கில வேற வல்லவனையும் கேற்றி இருத்துவானா?'

'இது கோவாப்பரேட்டிவ் பேங்கு. அவசியமானா வேலைக்கு ஆள் மாத்தி எடுத்துப் போடுவான். எல்லா இடத்திலயும் உள்ளது தான். அவனுக்கு அங்க ரூரல் கோ ஆர்டினேட்டர்னுட்டு ஒரு தஸ்திக உண்டு. சும்மா பியூன் மாதிரிதான். பியூனை விடவும் சம் பளம் குறவு. ஊர் ஊராட்டு போயி ஆளுகளப் பிடிச்சு கோவாப்ப ரேடிவ் சொசைட்டிக்கு சேக்குத வேலை. சேக்க மட்டும் கம்மீஷன். சம்பளம் கூடிப் போனா ஆயிரத்து அஞ்ஞூறு. சேத்தா ரெண்டாயிரம். இப்பம் இந்த பணி இல்லை. கோவாப்பரேட் டிவ் சொசைட்டியெல்லாம் நஷ்டமும் நடப்பு தீனமுமா ஓடுத காலம். அதனால கிளார்க்குமாரு ரிட்டரானா ஆளு எடுக்குதது இல்லை. அவனுகளுக்கு சம்பளம் கூடுதலாக்கும். அங்க இந்த கோ ஆர்டினேட்டர் மாரை விளிச்சு உக்கார வைக்கிறான். அங்க தண்ணி பிடிச்சு வய்க்கிறவனும் கோ ஆர்டினேட்டர். பணம் கைமாறுதவனும் கோ ஆர்டினேட்டர். எல்லாம் இவன்தான். சுக்கில்லாத்த கஷாயமில்லை. அதுமாதிரியாணு கதை.'

பண்டாரம் எழுந்தார்.

அகமது 'நான் சொல்லியாச்சுண்ணு இல்லை. முதலாளி போயி நோக்கணம். பே ரோல்ன்னு ஒந்நு உண்டு. சம்பள லிஸ்டு. அதில பாக்கணும். தஸ்திக எந்து? சம்பளம் எந்து எந்நு...'

'பாத்தேன்.'

'அப்பம் சரி. நான் ஒரு சம்சயம் கிளப்பினேன். பாத்து செரியா இருந்தா பின்ன ஒண்ணுமில்ல.'

'நான் மேனேஜர்ட்ட கேட்டேன். பய்யனுக்கு என்ன சோலீண்ணு. இப்பம் நீ சொன்ன பேரு சொன்னாரு' என்றார் பண்டாரம். அதற்குள் அவரது கண்கள் நிரம்பி விட்டன.

அகமது பரிதாபத்துடன் 'கோ ஆர்டினேட்டர்னா சொன்னாரு?' என்றான்.

'ஆமடே.'

'ரூரல் கோ ஆர்டினேட்டர்னா?'

'இப்பிடியே மணிமணியா சொன்னானே. டேய் அயமதே, இது ஸ்திரமான சோலியாடே? எனக்கு சங்கு கலங்குதே...'

'ஸ்திரமில்லை முதலாளி. இவன்மாருக்கு எக்ஸ்டென்ஷன் எம்ப்ளாயீஸ்னாக்கும் பேரு. ஸ்திரமில்லை. சும்மா இரிக்கலாம். நஷ்டம் கூடினா போகணும். பலரும் போறது உண்டு. பொதுவே இப்பம் சர்க்காரு ஸ்தாபனங்கள் நஷ்டத்தில போன கால மாக்குமே...'

பண்டாரம் மீண்டும் அமர்ந்தார். கண்களை மூடியபோது அலையலையாகத் தெரிந்தது. 'பனிவிழும் மலர் வனம் உன் பார்வை ஒரு வரம்' என்று ஒரு வரி ஞாபகம் வந்தது. என்ன சனியன் அது? கோபத்துடன் கண் விழித்தார்.

ராமப்பன் 'மோதிரம் மாத்தின காரியம்தானே மோலாளி. இதுக்காச்சுட்டியா இந்தப் பாடு? பேயாம செண்ணு வலிய வனுக நாலாளப் பாத்து பேசி நிறுத்திப் போடணும். நான் பாத்திட்டுண்டு, தங்கம் போலத்த பெண்ணாக்கும்.'

அகமது 'அவரு சொல்லியதில கூறு உண்டும். முதலாளிக்க சாதிக்கு சாதிசங்கம் உண்டோ? என்.எஸ்.எஸ். கரயோகம், ஜமாஅத், இம் மாதிரி?'

'எங்க சாதி ஒரு சாதியே இல்லடே. நாங்க பழனியில கொஞ்சம் பேரு. திருச்செந்தூர்ல கொஞ்சம் பேரு. பின்ன முருகன் கோயில் இருக்க ஊர்கள்ல ரண்டோ மூணோ குடும்பம்.'

'இப்படி பயரப்பிடாது மோலாளி. பயருத காரியம் அவனு களுக்குத் தெரிஞ்சா ஏறி மெரட்டுவானுக. ராவணன் இரணியன் மாதிரி ஒரு வீறோட இருக்கணும். ரெண்டுக்கும் நடுவால உள்ள வலியவனுகள விட்டு பேசச் சொல்லணும். பிள்ளைய கூட்டிட்டுப் போயி வேற வல்ல ஊரிலயும் ஆறுமாசம் விடணும். அதுக்குள்ள நல்ல உறப்புள்ள சோலியுள்ள ஒரு பய்யனைப் பாத்து கெட்டி வய்க்கணும். துணிஞ்சா துக்கமில்ல பாத்துக்கிடுங்க' என்றார் ராமப்பன்.

தூரத்தில் படுத்திருந்த எருக்கு 'ராமப்பண்ணோ, பய்யனுக்கு காலும் கையும் உறப்புண்டு இல்லா? பத்து மாசத்துல பிள்ள உண்டாகுமில்லா? பின்ன என்னத்துக்கு சோலி உண்டா, சூத்திரம் உண்டா எண்ணு பாக்குதது? இஞ்சேருங்க, நீங்க எடுத்து சொல்லுங்க' என்றாள்.

பெருமாள் கடும் கோபத்துடன் 'முண்ட நாயி, வாய மூடுட்டி. வந்தா சவிட்டி கொடல பிதுக்கி எடுத்துப் போடுவேன்' என்றான்.

'இனி மோதலாளி அப்பிடி யோசிச்சா அதும் நியாயமாக்கும். நல்ல பூத்த பைசா குடுப்பீக. அதை வல்ல வட்டிக்கோ குட்டிக்கோ விட்டா வருமானம் வருமில்லா. சேத்து வச்சு இருந்தா என்ன குறவு?' என்றார் ராமப்பன். 'பின்ன மோலாளி நம்ம வயசுக்கு நாம சொல்லுதது இது. இந்த மாதிரி சமயத்தில நமக்கு ஒரு கவலை உண்டு, பயமுண்டு எண்ணு நம்ம பிள்ளைய அறியப்பிடாது. மலைமாதிரி இருந்து போடணும். கல்லு மாதிரி இருந்து போடணும். பிள்ளைய நம்மை நம்பியாக்கும் இருக்கு பாருங்க. அதுகளுக்கு மனசு உடையப்பிடாது... பேரு சொல்ல மோலாளிக்கு பய்யனும் இல்ல.'

'வாறன்டே' என்றார் பண்டாரம். 'பாத்து செய்யுதேன். வாறன்டே அயமதே.'

'ஒத்தய்க்கில்லா போறாரு. நீங்க கூட போங்க. இஞ்சேருங்க' என்றாள் எருக்கு.

'உன்னை இண்ணு கொல்லுவேன். பட்டி தேவடியா, ஏம்டி நீ என்னயப் பாத்துப் பேசாதேன்னு எம்பிடு தடவட்டி சொல்லு தது?' பெருமாள் பாய்ந்துபோய் மளமளவென்று எருக்கை உதைத்தான்.

'அய்யோ அய்யோ... காலமாடன் என்னைக் கொல்லுதானே. காலமாடா... பாவி உனக்கொரு சாவு வராதா... கேக்க ஆளில்லியா?'

'பெருமாளு, பிலேய்' என்றார் ராமப்பன்.

'பெருமாள் நில்லும்வேய்' என்றான் அகமது.

'பெருமாளு, அயமது பாத்திட்டிருக்கான். வல்ல பேப்பரோ மற்றோ எளுதிப் போட்டா உனக்கு எல்லு புளிச்சுப் போயிடும் பாத்துக்க' என்றார் ராமப்பன்.

பெருமாள் தயங்கி அகமதை ஓரக்கண்ணால் பார்த்து விட்டு மறுபக்கமாகப் போனான். அங்கே குய்யன் இட்டிலிப் பொட்

டலத்துடன் வந்துகொண்டிருந்தான். 'அவனுக்க அம்மைக்க இட்டிலி' என்று குய்யனுக்கு கன்னத்தில் ஒரு அடி போட்டான்.

குய்யன் உடலைச் சுருக்கி அதை ஏற்று ஒன்றுமே நடக்காதது போல மெல்ல வந்தான்.

'இனி அவன் கைய வச்சா அவனுக்கு கையும் இருக்காது' என்றான் அகமது.

'நீங்க உங்க சோலியப் பாருங்க. புருசன் பெஞ்சாதிக்குள்ள ஆயிரம் கெடக்கும். மத்தவிய தலையிட்டா செரியாவாது' என்றாள் எருக்கு தலை மயிரை அள்ளி முடிந்தபடி.

குய்யன் இட்டிலிப் பொட்டலத்தை விரித்து வைத்தான். 'ராமப்பண்ணா கறியுண்டு. கறி.'

'என்னடே கறி?'

'எறச்சி.' என்றான் குய்யன். அவனால் நிற்கவே முடியவில்லை. உடம்பு பதறியது. 'அங்க ஒரு தட்டு கடையில பாத்தேன். பிளேட் எட்டு ரூவா. மூணு பிளேட் வாங்கினேன். எறச்சியாக்கும்.'

'என்ன எறச்சி?'

'மாடு... போத்து.'

'சீ... நீ திண்ணு.'

'ஏன் நீங்க திங்கமாட்டியளா?'

'மக்கா டேய் நான் நல்ல கீழ்க்கனரா நாட்டு நாயக்கு. கன்னடம் மறந்துபோச்சு. அது வேற கதை. உடுப்பியில நமக்கு சொந்த மண்ணு இப்பமும் உண்டு. மாட்டிறச்சி திங்க சாதின்னு நெனச்சியா?'

'மாடு ஃபஸ்டு இறச்சி. பண்ணிதான் ஹராம்' என்றான் அகமது.

'ஒரோருத்தருக்கு ஓரோண்ணு அராமத்தா கெடக்கு. குடியான வனுக்கு மாடு அராமத்து. மாடும் குடியானவனும் மேல லோகத் துல அண்ணனும் தம்பியுமாக்கும் பாத்துக்கோ.'

'அப்பம் உங்க பொதிய நான் திங்கேன் ராமப்பண்ணோ...' என்றான் குய்யன் மகிழ்ந்து.

'தின்னுடே. தின்னு வெளங்கு.'

எருக்கு பொட்டலத்தைப் பிரித்தபடி 'அவிக சாப்பிட்டாகளோ இல்லியோ. தேச்சியம் பிடிச்சு சாடிப் போனதில்லா...' என்றாள்.

'இப்பம் இவள நான் கொல்லுவேன் பாத்துக்க. எப்பம் பாத்தாலும் ஒரு அவிக இவிக...' குய்யன் குதித்தான்.

'விடுடே குய்யா. அவளுக்க ஆத்தாம. மனியன் பேசிப் பேசித் தானடே மக்கா ஆத்திக்கிடமுடியும்? இல்லாமப் போனா என்னத் துக்கு இம்பிடு பேசுதானுக? இஞ்ச பாரு எம்பிடு ஆளு போவுது கண்டியா? பேசுதானுக பேசுதானுக அப்பிடி பேசுதானுக. இஞ் சேரு பேப்பரில அச்சடிச்சு பேசுதான். மைக்கு வச்சு பேசுதான். என்னடே பேசுதான்? தொடநடுச் சந்துக்க காரியம் பேசுவான். இனிமையாட்டு பொன்னு பூவு மயிரு மட்டெ எல்லாம் பேசு வான். பின்ன அவனையும் காட்டியும் இவன் கீழ, நான் அவனை யும் காட்டியும் மேல- அதப்பத்தி பேசுதான். அதாக்கும் பேச்சு. பேசல்லண்ணா சீவிதமே குப்பயமாக்கும். எளவு, ஆருக்க இட்டிலிடே இது...'

'செட்டிச்சி.'

'அவளுக்க மனசு கொள்ளாம். அதனால இட்டிலியும் கொள் ளாம். மத்தவன் இருக்கானே சுப்பன்... அவன் இட்டிலிய வச்சு பட்டிய எறியலாம்.' ராமப்பன் பெரு மூச்சு விட்டபடி வெறும் மண்ணில் மல்லாந்து படுத்தார். நல்ல வெயில் ஏறி விட்டிருந் தது. வானம் நீலமாக கண் கூசும்படி இருந்தது. ஆனால் அவருக்கு கண் கூசவில்லை. வானத்தையே வெறித்துப் பார்த்தபடி இருந்தார். பிறகு தனக்குள் ஏதோ சொல்ல ஆரம்பித் தார். பாடுவது போலவோ மன்றாடி அழுவதுபோலவோ தாலாட்டு போலவோ...

குய்யன் சாப்பிட்டு முடித்து 'அயமது ஒரு துண்டு தாரும்வே. ஏமிட்டி ஒரு துண்டு தாடீ' என்று கெஞ்ச ஆரம்பித்தான்.

'இஞ்சேரும்... தின்னு நிறயும்' என்று எருக்கு பாதியை தூக்கிக் கொடுத்துவிட்டாள்.

குய்யன் அள்ளித் திணிக்க ஆரம்பித்தான்.

'பய்யெ தின்னும் வேய். விக்கி சாவப் போறீரு.'

'நான் எப்பமும் வாரிக்கேற்றித்தான் திம்பேன். ஒரு நாளும் இருந்து திண்ணதில்லை. இருந்து திண்ணா அப்பம் பீ வந்து போடும். அப்பிடியாக்கும் பளக்கம்.'

'உம்ம அம்மை சோறு தந்திட்டுண்டா?' என்றாள் எருக்கு.

'அம்மை உண்டும். அம்மைக்கு ரெண்டு காலும் இல்ல. முத்தம்மை மாதிரியாக்கும். அமறுவா. மத்தமாதிரி பேச்சு இல்ல.'

'அகமது நீ உனக்க இட்டிலிய இந்த பயலுக்கு குடுக்காதே. பிறவு அப்பிடி பழகிப்போடுவான்' என்றார். ஏப்பம் விட்டபடி பீடியைப் பற்ற வைத்தார்.

'பாவம்லா. பாத்தா சின்னப்பிள்ளை மாதிரி இருக்காரு' என்றபடி எருக்கு சிரித்தாள்.

குய்யன் புது உற்சாகம் பெற்று உரக்க 'அய்யா தர்ம தொர, அம்மா, மாலெட்சுமி, தாயே கண் பாரும்மா அய்யா' என்று கணீர் குரலில் பாடினான். அப்பகுதியில் யாரும் போகவில்லை.

'இப்பம் ஆருக்கிட்டவே எரக்கீரு?' என்றாள் எருக்கு.

'தொண்ட எளகணும்லா?' என்றான் குய்யன். 'நான் ராத்திரி உறங்கி எந்திரிச்சாகூட ஒருக்கா இப்பிடி பாடிப் பாப்பேன்.'

தூரத்தில் 'அய்யோ எக்கம்மோ எக்கம்மோ' என்ற ஊளையும் அழுகையொலியும் கேட்டன. தள்ளாடியபடி பெருமாள் வந்தான். உடம்பும் முகமும் எங்கும் மண்ணும் சிராய்ப்பும் நிரம்பியிருந்தன. 'அய்யோ அய்யோ' என்றபடி தள்ளாடி நின்று பின்னால் திரும்பி 'போடா டேய் தள்ளேய...' என்று தொடங்கி கெட்ட வார்த்தைகளைக் கொட்டினான்.

'அய்யோ, இஞ்சேருங்க... என்ன காரியம்...? இஞ்சேருங்க...' என்று எருக்கு பதறினாள்.

பெருமாள் உடம்பில் அடிகள் விழுந்த தடயங்கள் இருந்தன. முகம் வீங்கியிருந்தது. நல்ல போதை வேறு. தள்ளாடி நடந்து

கோபுர முகப்பு வாசல்வரை வந்தவன் அப்படியே உட்கார்ந்து கேவிக்கேவி அழுதான்.

'என்ன ஓய்?' என்றான் அகமது.

'பைசாவப் பிடுங்கிட்டு அடிச்சுப் போட்டாவ' என்று கூறுமுன் மீண்டும் அழுகை வெடித்தது.

மூன்று பண்டாரங்கள் காவியும் கமண்டலமுமாக வந்தன. கட்டுமஸ்தான பண்டாரங்கள். ஒருவன் கையில் பெரிய அன்னக்காவடி இருந்தது. அவர்களைப் பார்த்ததும் பெருமாள் எழ முயன்றான். போதை அவனைக் கீழே வீழ்த்தியது.

எருக்கு 'அய்யோ வந்திட்டானுகளே. குலமுடிவானுக வந்திட்டானுகளே... அய்யோ...' என்று கூவினாள்.

அன்னக்காவடி பண்டாரம் தவிர மற்ற இருவரும் நேராக பெருமாளை அணுகி அவனை மூர்க்கமாக அடிக்க ஆரம்பித்தார்கள். அவன், நாய் அடிபடும்போது ஊளையிடுவதுபோல ஒலியெழுப்பி மண்ணில் புரண்டான். அவனுடைய கால் நடுவே மீண்டும் மீண்டும் உதைத்தார்கள். மறுபக்கம் கடைகளில் இருந்தவர்களும் இந்தப் பக்கம் கோயில் திண்ணையில் இருந்தவர்களும் ஓரிரு கோயில் ஊழியர்களும் தள்ளி நின்று அமைதியாக வேடிக்கை பார்த்தார்கள். ராமப்பனும் குய்யனும் அகமதுவும் அமைதியாகப் பார்த்தபடி இருந்தனர்.

அன்னக்காவடிப் பண்டாரம் மட்டும் சற்று பதற்றத்தோடு 'வேண்டாம் சாமி... வேண்டாம் சாமி' என்றது. எருக்கு மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறியபடி மண்ணில் விழுந்து, தவழ்ந்துவர முயன்று, புழுதியில் புரண்டாள்.

பெருமாளை புரட்டிப்போட்டு அவன் வேட்டியையும் உள்ளாடையையும் கிழித்து உருவி அவன் கோவணத்துடன் சேர்த்துக் கட்டியிருந்த சுருக்குப்பையை எடுத்துக் கொண்டனர். அன்னக்காவடி பண்டாரம் 'வாங்க சாமி, போலாம் சாமீ' என்றார். அவர்கள் மறுபடியும் பெருமாளுக்கு ஓங்கி ஓர் உதை விட்டனர். அவன் உடலில் உயிர் இருப்பது போலவே தெரியவில்லை.

எருக்கு 'பாவி மட்டயளா? உங்கள பாம்பு பிடுங்கணும். உங்க கண்ணில குருவு கௌம்பணும். உங்களுக்கு ஒரு பேதி வராதா?'

என்று வெறியும் ஆங்காரமுமாகக் கூவினாள். மண்ணை வாரி வீசினாள். ஒரு பண்டாரம் ஓடிச் சென்று அவளை ஓங்கி வயிற்றில் உதைத்தான். காது கூசும்படி அலறிய அவள் புழுதியில் குப்புற விழுந்தாள். ஒன்றும் நடக்காதது மாதிரி மூவரும் சாலை நோக்கி நடந்து சென்றார்கள். ஒருவன் உரக்க 'வடிவேல் முருகனுக்கு!' என்றான். மற்றவன் 'அரகரோகரா...' என்று கூவினான்.

# 16

பண்டாரம் சாயங்காலம்தான் குலசேகரம் போய் இறங்கினார். அங்கிருந்து ஆட்டோவில் சுப்ரமணியபுரம் போய் கோயிலை விசாரித்துப் போனார். பழைய கோயில்தான். ஆனால் மிகச்சிறியது. இடிந்துபோன சுதைக் கோபுரம். சன்னிதி முன் எட்டு வீடுகள் கொண்ட அக்ரஹாரத்தில் எட்டு வீடுகளுமே இடிந்து கிடந்தன. சந்துக்குள் ஒரு பச்சை கேட் போட்ட சிறிய ஓட்டுவீடுதான் தாணுப் பண்டாரத்திற்கு. கேட்டில் பிடித்தபடி ஒரு கணம் நின்றார். திரும்பிவிடுவோமா என்று எண்ணினார். நாகராஜா கோவிலில் இருந்து அடிவயிற்று ஆவேசத்துடன் பஸ்ஸில் ஏறியபோது நேராகப் போய் இறங்கி அவர்களைப் பார்த்து நாக்கைப் பிடுங்கிக்கொள்வது போல கேட்கவேண்டிய கேள்விகள் மனதில் கொப்பளித்தபடி இருந்தன. பஸ் ஓட ஓட மனம் அடங்கியது. இன்னதென்று தெரியாத பதற்றம்; உடம்பு முழுக்க சிறு பரபரப்பு. திடீரென்று ஒரு கணம் 'எனக்க பொன்னு மக்கா' என்று மூத்தவளை நினைத்து மனம் குமுறி விட்டது. பிறகு துக்கம்தான். அழுகையை அடக்க முயல முயல தொண்டையில் நெல்லிக்காய் துவர்ப்புபோல அடைப்பு ஏறியது. குலசேகரத்தில் பஸ் இறங்கி ஆட்டோவில் வரவர என்ன செய்யப்போகிறோம் என்று தெரியாமல் ஒருவிதமான திகில் மட்டும் வயிற்றுக்குள் கசந்து குமுறியது.

'வாருங்க வாருங்க' என்றபடி தாணுப் பண்டாரம் இறங்கி ஓடிவந்தார். 'சொல்லேல்லியே... விளக்கு வைக்கும்பம் விருந்து வந்திருக்கியோ...' என்றார். 'குட்டி அந்த சேரை எடுத்துப் போடுட்டீ.'

பையனின் சின்னம்மை மகள் அது. கறுவலாக இருந்தது. 'கெட்டிக் குடுக்கியதுக்குள்ள பெத்தவன் சோலி தீந்துபோகும்' என்று நினைத்தபடி பண்டாரம் உட்கார்ந்தார்.

'வாருங்க' என்று கதவுக்கு அப்பால் சம்பந்தி வீட்டம்மாளின் ரகசியக் குரல் கேட்டது. அவளை அவர் இது வரைக்கும் பார்த்ததே இல்லை. எப்போதும் கதவிடுக்கு குரல்தான். கட்டைக்குரல். 'எப்பம் கிளம்பினிய? காப்பி எடுக்கட்டா?'

'வேண்டாம். இப்பம்தான்...' என்றார் பண்டாரம் வேறு பக்கம் பார்த்தபடி.

'நல்ல கூத்தால்ல இருக்கு. வீட்டுக்கு வந்துப்போட்டு வாய் நனைக்க வேண்டாமா? காப்பி எடுக்கேன். பச். ப்சு...'

பண்டாரம் என்ன என்பதுபோல பார்க்க தாணுப் பண்டாரம் சும்மா உட்கார்ந்திருந்தார். பண்டாரம் புரிந்துகொண்டு தாணுப் பண்டாரத்திடம் 'விளிக்காவ' என்றார்.

'வறேன்' என்று அவர் உள்ளே போனார். உள்ளே பலவிதமான பேச்சுகள் முனகல்கள். வந்திருக்கக்கூடாது என்று பண்டா ரத்திற்குத் தோன்றியது. வந்தாலும் உட்கார்ந்திருக்கக்கூடாது. உட்கார்ந்ததுமே கதை மாறிவிட்டது. இனி சில விஷயங்களைப் பேசவே முடியாது.

தாணுப்பண்டாரம் வெளியே வந்து உட்கார்ந்து சிரித்தபடி 'பய வாறதுக்கு எட்டு மணியாவும். பத்து பதினஞ்சு லட்ச முல்லா இவன் கைல கெடந்து அளியுது. பத்து ரூபாய்க்கு கணக்கு வய்க்கணுமானா நாம கெடந்து மூச்சு பிடிக்கம். பத்து லெட்சம்னா அதுக்க கத ஏது...' என்றார்.

பண்டாரத்தின் மூச்சு ஒரு கெட்டியான உலோகமாக மாறியது. 'பய்யனுக்க வேலய பத்திக் கேட்டேன்...'

தாணுப் பண்டாரத்தின் முகம் மாறியது. ஆனால், 'கேட்கணுமே. நாலும் கேட்டுத்தானே செய்யணும்' என்றார்.

உள்ளிருந்து அவர் மனைவி 'பொறாமைக்காரங்க நாலும் சொல்லுவா. நம்ம மனசுக்க சத்தியம்லா நமக்கு?' என்றாள்.

'பய்யனுக்கு என்ன வேல?'

'கோவபரேடிவ்...'

'அது செரி. அங்க என்னவாக்கும் வேல?'

சிறிது நேரம் அமைதி நிலவியது. உள்ளிருந்து அவள் 'இப்பம் உங்களுக்கு என்ன அறியணும்?' என்றாள்.

'பய்யனுக்கு ஸ்திரம் வேலையிண்ணு சொன்னிய. ஸ்திரம் வேல இல்ல. ஆயிரத்தஞ்ஞூறு ரூவா சம்பளமாக்கும்.'

உள்ளிருந்து அந்தப் பெண் போட்ட சத்தம் பண்டாரத்தை பகீரிட வைத்தது. 'எந்த அறுதலி பெத்தவன் சொன்னான்?'

'நான் பேங்கில போயி பாத்தேன். அம்பிடுதான் சம்பளம்.'

'ஆமா, மாசம் அஞ்ஞூறு கம்மீஷன் கிட்டுதது தேவ்டியா மவனுவளுக்க கண்ணில பெடேல்லியோ?' என்றாள் அவள்.

'செரி ரெண்டாயிரம். நீங்க சொன்னது எட்டாயிரம்னாக்குமே.'

'நான் உம்மட்ட சொன்னேனாவோய்? உம்மட்ட சொன்னே னாவோய்?' என்றபடி அந்த அம்மாள் வெளியே வந்தாள். முந்தானையை சுழற்றி இடுப்பில் செருகினாள். தாட்டியான கரிய உருவம் மடிப்பு மடிப்பாக தடித்த அடிமரம் போன்ற கழுத்து. பிதுங்கிய புஜங்கள்.

'தரகனாரு...

'தரகன்மாரு பலதும் சொல்லுவானுக. உம்ம கெட்டினவள வேலிக்கு பொறத்தால போறவன் மலத்தி கெடத்தினான்னு சொன்னாவ. உள்ளதாவோய்?'

பண்டாரம் உறைந்து அமிழ்ந்துவிட்டார். அந்தம்மாள் தரகனை வைய ஆரம்பித்தாள். ஒரு பெண் அப்படி ஒரு சொல் மழையைப் பெய்து பண்டாரம் கேட்டது இல்லை. முன்பு அம்மிணி என்று ஒரு உருப்படி அவரிடம் இருந்தாள். அவளுக்கு நாள் முழுக்க வாயில் அழுகிய சொற்கள் பொங்கும். ஆனால் இத்தனை மூர்க்கமான துல்லிய உச்சரிப்புடன் இத்தனை வசைச் சொற்களை அவர் கேட்டதேயில்லை.

பண்டாரம் எழுந்து பையை எடுத்துக்கொண்டார். 'நான் வாறேன். இது செரியாகாது. பிள்ளையளுக்க ஜீவிதமாக்கும்.'

'ஓய் இரும். பேசலாம்' என்றார் தாணுப் பண்டாரம்.

'நீரு உன் சோலியப் பாருவே தொட்டித் தாயளி' என்றாள் அவள் கணவனிடம். பண்டாரத்திடம் திரும்பி, 'உம்ம பெட்டைகளுக்கு பல ஜீவிதம் உண்டுவே. அது அறிஞ்சுதான் நானும் இருந்தேன். பழனிக்கும் திருச்செந்தூருக்கும் பிள்ளையள கூட்டிட்டுப் போயி சம்பாதிச்சுட்டு வாற பைசாதானேல உனக்கு? எரப்பாளிப் பயலே? பின்ன நீ கோவிலில பூக்கெட்டியா லெச்சம் லெச்சமா சம்பாதிச்சே? போ, கலியாணத்தை நிறுத்திப்போடுவம். எனக்கும் ஊருகாரனுவளுக்கு நாலு நல்ல வாக்கு சொல்லுயதுக் குண்டு. நாயிக்க மோனே... வீடு கேறி வந்து பாவம் பிள்ளையப் பத்தி பரதூஷணமா சொல்லுதே? எனக்க பய மானமா பெழைக்குதவனாக்கும். சோலி செய்து திங்குதவனாக்கும். அம்மையையும் கெட்னவளையும் வித்து திங்குத எம்போக்கி இல்லை. பெத்த பிள்ளைய வித்து திங்குத நாறத் தேவ்டியா மகன் இல்லை. எரப்பாளிகளுக்கு புண்ணு நக்குத கூதறப் பய இல்லை...'

பண்டாரம் இறங்கி கேட்டை நோக்கிப் போனார். அந்தப் பெண் பின்னால் வந்து, 'ஓடுதியா? ஓடு. எங்கனடே ஓடுவே? கூட்டிக் குடுக்குத கூதறப் பயலே...' என்று குதித்து கைவீசி கெட்ட வார்த்தை பொழிந்தாள்.

சாலையை அடைந்தபோது அவருக்கு கால்கைகள் உதறிக் கொண்டிருந்தன. விழுந்துவிடுவோம் என்று பட்டது. வேறு ஒரு ஊடுவழியினூடாக தாணுப் பண்டாரம் ஓடிவந்தார்.

'ஓய் நில்லும். ஓய்...' என்றார்.

தாணுப் பண்டாரத்தைப் பார்த்ததும் பண்டாரத்திற்கு அடி வயிற்றிலிருந்து வேகம் எழுந்தது. 'குலம் கெடுத்த பாவி, நீ வெளங்குவியா... நீ நல்லாருப்பியா?'

'இரும்வே இரும்வே. என்ன வேணுமானாலும் பேசும். நான் இப்பம் பேசுயது உம்ம நல்லதுக்காக்கும். நீரு போற வேகம் சரியில்ல. நீரு இப்பம் போயி கல்லியாணத்தை நிறுத்தினா இந்த சண்டாளி விட்டுப்போடுவாளா? இவ உதிரம் குடிக்க ஏக்கி யாக்கும். விடமாட்டா. நம்ம சாதியானா எண்ணிச் சுட்ட பண்ணியப்பம் மாதிரி இருக்கு. வேய் அம்பது போஸ்டு கார்டு வாங்கினா உம்ம மவள ஊரறிய உலகறிய் நாத்திப் போடலாம்

பாத்துக்கிடும். பின்ன உம்ம குடும்பத்தில ஒரு கொமரு வெளிய எறங்காது.'

பண்டாரம் கால் தளர்ந்து அப்பபடியே ஒரு குத்துக்கல்லில் அமர்ந்துவிட்டார்.

'இவ மூளி எசக்கி. ஆனா எனக்க பய தங்கமாக்கும் பாத்துகிடும். அவன நீரு நம்பி மகள குடுக்கிலாம்.'

'இந்தப் பாவி எனக்க மொவளை கடிச்சு ரெத்தம் குடிச்சுப் போடுவாளே...

'ஒக்கெ செரியாவும் வோய். ஒரு ஆறு மாசம். பின்ன பயலுக்கு காதும் காதும் வச்சது மாதிரி நீரு வல்ல கொல்லங்கோட்டுக்கோ தாமரைகுளத்துக்கோ ஒரு மாத்தலை வேங்கிப்போடும். பய பிள்ளையக் கூட்டிக்கிட்டு அங்கிண போயி இருப்பான். பின்ன பொண்ணு கெட்டினா அவளுக்க சூடும் மணமும் உண்டானா பயலை மயக்கிப் போட முடியாதா?'

'வோய் கிளிபோல வளத்தம்வே. ஒரு சுடுசொல்லு பேயாத பிள்ளைவேய்.'

'இஞ்ச பாரும் ஓரோண்ணுக்கு ஓரோ தலையெழுத்து உண்டு. எல்லாம் நல்லதாட்டு நடக்கும்வோய். இஞ்ச பாரும் மாமியாரு பேயி. செரி. ஆனா மாப்பிள்ளை பாவம்வே. மாறி மாப்பிள்ளை பஞ்சகாலண்ணாக்க என்ன செய்வேரு? பெண்ணை தாலியறுத்து கூட்டிட்டுப் போவேரா? அறுத்துக் கெட்டுவேரா?'

பண்டாரம் சட்டென்று குமுறி அழ ஆரம்பித்தார்.

'எல்லாம் எறங்கி அமரும் பாத்துக்கிடும். பிள்ளைட்ட சொல் லும். இப்பிடியாக்கும் சங்கதீன்னு. பதமாட்டு நடந்தா ஒரு ஆறு மாசத்துக்குள்ள பய்யனைக் கூப்பீட்டு வேற ஊரு போவ லாம்வே. இஞ்ச பாரும் வேற வழி இல்ல. வேற ஒரு மார்க்கமும் இல்லவே. நம்ம சாதியில காப்பு கட்டின பிறவு மாத்தி கெட்டுத சடங்கு இல்ல. காப்பு கெட்டினா தாலி கெட்டின கதைதேன்.'

பண்டாரம் மூக்கைப் பிழிந்து, 'வேய் அப்பிடிப்பட்ட பிள்ளை யாக்கும். பச்ச வெள்ளம் சவச்சு குடிப்பா. பிள்ளை குரலை தெரு கேட்டிருக்காது. அப்பபடியாப்பட்ட பிள்ளை. அணிலு கத்தினா அய்யோன்னு விளிப்பா. அப்பிடிப் பட்டவ.'

'செரி. அதுக்கென்ன இப்பம். நான் இருக்கேன்வே. உம்ம மவ எனக்க மவ. போருமா?'

பண்டாரம் விடைபெற்றுக்கொண்டு பஸ் ஏறி குலசேகரத்தில் இறங்கினார். வீட்டுக்குப் போவதை நினைத்தாலே கால் தயங்கியது. அவருக்குத் தோன்றியதெல்லாம் நேராக பழனிக் குப் போகவேண்டும் என்றுதான்.

இரவுவரை குலசேகரத்திலேயே அலைந்து திரிந்தபிறகு பஸ் ஏறி ஊருக்குத் திரும்பினார். ஊர் அடங்கிவிட்டிருந்தது. ஒடுக்கத்திய வெள்ளி தவிர எப்போதும் ஒன்பது மணிக்குமேல் பக்தர்கள் இருப்பது இல்லை. படிகளில் முத்தம்மை கிடந்தாள். பக்கத்தில் பிள்ளை கிடந்தது. ஒற்றைக் கையை வேகமாக ஆட்டி 'ங்குர்ர் ஙங்குர்ர்' என்று ஒலியெழுப்பியது. ஒற்றைக்காலை தட் தட் என்று அடித்து மகிழ்ந்து சிரித்தது. வாயிலிருந்து கொழகொழவென்று வழிந்தது. வயிறு நிரம்பியிருக்க வேண்டும்.

'வாருங்க ஒடயோரே' என்றாள் முத்தம்மை.

'ஏம்டி, வசூல் கொள்ளாமா?'

'அது இப்பம் வந்து குமரேசன் வாரிக்கிட்டு போனானே?'

குழந்தையை குனிந்து பார்த்தார். ஒற்றைக் கண்களை விழித்து பயல் சிரித்து ஒரு காலை உதைத்து குண்டியை தூக்கி 'ங்குர்ர் ங்குர்' என்று எழுந்து வர முயன்றான். 'சிரிக்கானே?' என்றார் பண்டாரம்.

'வெயிலு சூடு அடங்கினா பிறவு சிரிப்புதேன்' என்றாள் முத்தம்மை. 'ரசனிகாந்து. எலெய் ரசனிகாந்து.'

'என்ன பேரு?'

முத்தம்மை வெட்கி 'ரசனிகாந்து' என்றாள்.

'கிளிஞ்சது போ...' என்றார் பண்டாரம். 'முன்ன ராசாண்ணு தானே வப்பே? முத்துராசா தங்கராசான்னு. இப்பம் என்ன புத்தன் சீரு?'

'இது அந்த படத்தில உள்ள ராசாவாக்கும்' என்று முத்தம்மை எதிர்க்கடை முகப்பில் உள்ள 'தங்கமகன்' போஸ்டரைக் காட்டினாள். 'ரசனி ராசால்ல. அதாக்கும்.'

ரஜனிகாந்துக்கு சிறுநீர் வந்துவிட்டது. சிரிப்பு மாறி முகம் சுளித்தது. 'ங்குர் ங்குர்' என்று சிணுங்கினான். முத்தம்மை அவன் காலைப் பிடித்து மேலே தள்ளிப் போட்டுவிட்டு மூத்திரத்தை தன் சேலையால் துடைத்தாள். ரஜனிகாந்த் தன் ஒற்றைக் கையை முகத்தில் பல இடங்களில் மோதி கடைசியில் வாயைக் கண்டு பிடித்து மொத்த கரத்தையும் வாய்க்குள் போட முயன்று முடியாமல் எச்சிலுடன் சேர்த்து மொழமொழவென்று உதடு களை போட்டு நசுக்கினான்.

'வாறன்' என்று பண்டாரம் கோயிலுக்குள் போனார். யாரு மில்லை. கருவறைக்குள் பெரிய முருகன் சிலை மாலை களும் சந்தனக் காப்பு முகமுமாக ஒளியில் நின்றது. பண்டாரம் கொடிமரத்தடியில் விழுந்து வணங்கினார். 'அப்பனே முருகா பழனியாண்டவா...' என்று கூவினார்.

சட்டையைக் கழற்றி கையில் போட்டுக்கொண்டு 'கந்தா கடம்பா கதிர்வேலா என்னப்பனே செந்திலாண்டவா மருத மலை முருகா' என்றபடி கோயிலைச் சுற்றி வந்தார். பிறகு நேராக சன்னிதிமுன் வந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டார். 'பனிவிழும் மலர்வனம் உன் பார்வை ஒரு வரம்.' பண்டாரத்திற்கு அவமான மாக இருந்தது. 'இந்த எளவு வரி என்னமோ ஏவல் மாதிரில்லா இருக்கு. என்ன அர்த்தமோ?' என்றார். பிடிவாதமாக 'கந்தா கடம்பா கதிர்வேலா' என்று மீண்டும் ஆரம்பித்தார். என்ன செய் வது என ஒன்றும் புரியவில்லையே முருகா. வளர்ந்த பிள்ளை. இனிமேலும் வீட்டில் வைத்திருக்க முடியாது. பெண்ணடி வாழ்க்கையை அழிப்பதை ஏதோ குலக்கடமை மாதிரி முழுமூச்சாக இறங்கி செய்து முடிப்பார்கள். பிறகு ஆளாளுக்கு அனுதாபப்பட்டு மோவாயில் கைவைத்து ஆயிரம் வார்த்தை பேசுவார்கள். எங்கு பார்த்தாலும் பேய்கள் ஒளிந்திருப்பதுபோல இருக்கிறதே. முருகா கந்தா கடம்பா கதிர்வேலா... பழனியில் அந்தப் பெண். அவள் சிகரெட் மட்டும் பிடிக்காமல் இருக்கலாம். அதைச் சொன்னபோது 'போடா டேய்' என்றாள். அவரை மதிக்கவேயில்லை. 'உனக்கு ஏதுடா மரியாதை. முடிஞ்சதச் செய்டா. தொப்பையும் குச்சியுமா... தாளி முடிச்சிட்டு எந்திரிடா.'

'ஆராக்கும் பண்டாரமா... கோயிலுக்கும் வாறது உண்டா?' என்று போத்தி குரல் கேட்டு விழித்தார்.

'இப்பம்தான் வந்தேன். ஒரு சோலியா போனேன்.'

'நடை அடைக்கணும்' என்றார் போத்தி. கையில் ஒரு குடம் தண்ணீர்.

'இப்பம் என்னத்துக்க அபிஷேகம்?'

'அபிஷேகம் இல்லடே. உள்ள குறெ வெத்தில துப்பல் கெடக்கு. வெள்ளம் ஊத்திவிட்டா அலம்பிக்கிட்டு போவும்' என்றபடி உள்ளே போனார்.

'உள்ளயா துப்புவிக?' என்றார் பண்டாரம்.

'பின்ன துப்பாம? வாயில வெத்தில இல்லாம எம்பிடு நேரம் இருக்கமுடியும்? அதுக்காக பத்து நிமிஷத்துக்கு ஒருக்கா துப்பதுக்கு வெளிய வரமுடியுமா? நீ திருவந்தரத்தில பாக்கணும். வைகுண்ட ஏதாதசிக்கு எட்டு போத்திமாராக்கும் உள்ள. ராத்திரி பகலுண்ணு இல்ல. பத்து நிமிஷம் வெளியே போனா பத்து முந்நூறுரூபா கைவிட்டு போயிடும். உள்ள சாமிக்க காலடியில வெத்திலச் சண்டி மலை மாதிரி குமிஞ்சு கிடக்கும் பாத்துக்கோ...'

'தோஷம் இல்லியோ?'

'என்னடே தோஷம்? இத்தாம் பெரிய கோயிலு. துப்பதுக்கு ஒரு எடமுண்டா? மூத்திரம் போவ எடமுண்டா? சொல்லு. வாறவனுக அடக்கிக்கிட்டு வெளியே போவானுக. இங்க கிடந்து சாவுதவனுக? மடப்பள்ளியிலதான் பாதிபேரு ஒண்ணுக்கு இருக்கது. இல்லாம திருவிழா நாளில இதுக்காட்டு எறங்கி ஏழு தெருவு தாண்டி வீட்டுக்கா ஓடமுடியும்?'

உள்ளே போய் தண்ணீர் ஊற்றிவிட்டு போத்தி வெளியே வந்தார். 'என்னடே பண்டாரம் மொகம் சடஞ்சு கெடக்கு?'

'ஒண்ணுமில்ல.'

'சொல்லணுமானா சொல்லு. நான் ஒருத்தனுக்கும் துரோகம் நெனைக்காதவன் பாத்துக்கோ. ஒருத்தனையும் ஏமாத்தினதும் இல்லை. அதனால இண்ணைக்குவரை சாமி கும்பிட்டதும் இல்லை.'

'முருகனை?' என்றார் பண்டாரம்.

‘ஆரு நம்ம கோனாரு முருகனா? நான் கண்டிட்டுள்ள முருகன் அவன்தான்.’

பண்டாரத்துக்கு சட்டென்று சிரிப்பு வந்தது.

‘இங்க பாருடெ பண்டாரம், இது ஆறடிக் கல்லு. பத்து நானூறு வரிசமாட்டு பலரும் கழுவி சந்தனம் போட்டு பூ போட்டு கும்பிடுதானுக. நமக்கு இது தொளிலு. உனக்கு முத்தம்மை, எனக்கு இது. அது சதை, இது கல்லு. அது அளியும், இது இன்னும் ஆயிரம் வருசம் இருக்கும்.’

பண்டாரத்திற்கு போத்தியின் பேச்சில் சற்று அபசுருதி தட்டியது. அவர் வந்து மண்டபத்தில் படுத்துக்கொண்டார். ‘இன்னைக்கு கூட்டம் இல்லடே பண்டாரம்’ என்றார்.

பக்கத்தில் பார்த்ததும் பண்டாரத்திற்கு புரிந்துவிட்டது. போத்தி யின் வாயில் ஒரு இறுக்கம். கண்களில் ஒரு சிவப்பு. ஆனால் குரலில் குழறல் இல்லை. போத்திக்கும் புரிந்து விட்டது. ‘ஆமடே பண்டாரம். ஒரு கட்டிங் அடிச்சேன். இப்பம் நல்ல உறக்கம் இல்லை பாத்துக்கோ. குறெ காலமாச்சு தொடங்கி. ராத்திரில உறக்கம் வாறதுக்கு முன்னால ஒரு லார்ஜ் ஏத்துவேன். இப்பம் ரெண்டு நாளாட்டு ஒரு கட்டிங் இங்கயும் உண்டு.’

பண்டாரம் புன்னகை புரிந்தார்.

‘என்னடே உனக்க பிரச்சினை?’

பண்டாரம் விஷயத்தைச் சொன்னார். போத்தி, ‘எனக்க ஐடியா கேட்டேண்ணா பேசாம கலியாணத்தை நடத்திப் போடு’ என்றார்.

‘பயலுக்க சோலி...’

‘சோலி, மயிரு. எனக்கு என்ன சம்பளம் தெரியுமா? மாசம் எண்பது ரூபா. எனக்க பெஞ்சாதி தினம் முப்பது ரூபாய்க்கு மல்லியப் பூ வாங்குவா. ஒரு கொளுத்து வேணும் அவ்வளவு தான். வெளிய சொல்ல ஒரு அடையாளம். உள்ள சம்பாத்தியம் எப்பவுமே வெளியே தெரியாமத்தான் நடக்கும். பணத்துக்க ரீதி அதாக்கும், அத விடு. அந்த மாமியாருகாரி பிரச்சினையாக்கும். அவள நீரு ஒண்ணும் செய்யமுடியாது. ஆன உம்ம ஆளுக நினைச்சா...’

பண்டாரத்தின் மனதிலிருந்து ஒரு பாறாங்கல் அகன்றது.

'அந்த வண்டிமலைட்ட சொல்லி மண்டைல ஒரு தட்டு தட்டி கெடத்துடே பண்டாரம். இதுக்கா கெடந்து அனத்துதே?'

'அது காரியமாக்கும்' என்றார் பண்டாரம். 'பாத்தியளா... பிராமணன் புத்தியிலயாக்கும் இந்த வழி வருது.'

'பின்ன என்ன நினைச்சே? இல்ல கேக்கேன். பழங்காலம் முதல் பிராமணன் சொல்லுவான், வைசியன் பணம் குடுப்பான். சத்திரியன் ஏறி அடிப்பான். அதாக்கும் வளமொறை.'

பண்டாரம் சிரித்தார்.

போத்தியின் குரல் தழைந்தது. 'வாசப்படியில கெடக்காளே. அவ என்னடே ரேட்டு?'

'அது காமதேனுல்லா போத்தியங்கத்தே. வாங்குதியளா. முப்பதாயிரம் குடுத்திடுங்க.'

'முப்பதாயிரமா? ஆனையாடே?' என்றார். பேரத்தி 'செர்ரியான ஏழாம் லோகத்து ஜென்மம். கேட்டிருக்கியா ஏழாமத்த லோகம்?'

'இல்ல.'

'கேட்டுக்கோ. புராணப் பிரகாரம் நாம நிக்குத மண்ணுக்கு கீழ ஏழு லோகம் உண்டு. அதலம், விதலம், நிதலம், கபஸ்திமல், மகாதலம், சுதலம், பாதாளம். அதலத்தில் பாம்புகள் இருக்கு. விதலத்தில் மீன்கள். நிதலத்தில் நண்டுகள். கபஸ்திமலில் புழுக் கள். மகாதலத்திலே கிருமிகள். சுதலத்திலே பேய்கள். ஏழாமத்த உலகம் பாதாளம். அங்கே இருக்குததெல்லாம் வேதாளங்கள். சும்மா ஒரு கோபுரத்த நிமுந்து பாரு தெரியும். எல்லா பயங்கர வடிவங்களையும் செதுக்கி வச்சிருக்கான். பழனிக்கு படியேறி போறவன் ஏழு பாதாள லோகத்தையும் பாத்துட்டுதான் பழனியாண்டியப் பாக்கான். என்ன சொல்லுதே?'

பண்டாரம் குரலைத் தாழ்த்தி 'இந்த ஏழு லோகமும் சத்தியமாட்டு உண்டோ?' என்றார்.

'உண்டுடே உண்டு.'

'முருகா ஞானபண்டிதா...'

'ஆனா காலுக்கு கீழ இல்ல. நம்மை சுத்தியாக்கும். நான் நினைக்கேன், ஒரு அதுக்காச்சுட்டி அப்பிடி சொல்லி வச்சிருப் பாங்க நம்ம மூதாதைகள்ன்னுட்டு. இந்த ஏழு பாதாளத்துக்க மீதயாக்கும் நாம நின்னுகிட்டிருக்கோம். நாம குடிக்கப்பட்ட வெள்ளம் நாம திங்கப்பட்ட தானியம் எல்லாம் அங்கேருந் தாக்கும் வாறது...' போத்தி குரலை மிகத் தாழ்த்தி 'உனக்க கிட்ட ஒரு காரியம் கேக்கணும்டே பண்டாரம்' என்றார்.

'என்னது?'

'இந்த இவளை, ஒருக்கா நான் முழுசா பாக்கணும்டே.'

'ஆரை?'

போத்தி மூச்சுத்திணறி பிறகு கோணலாகச் சிரித்து 'இந்த முத்தம்மையை...'

'அய்யே. இவ...'

'செரிடே. ஆனா எனக்கு அதொரு ஆசை. இவ இங்க வந்து ஒம்பது வருசமாவுது. நான் எண்ணைக்கும் பாக்கிற ஆளு. முதல்ல பாத்தப்ப வாந்தி வந்துப்போட்டு. ஒரு நிமிஷம் கண்ணை அவமேல நிறுத்த என்னால முடியாது. பிறவு பழகிப் போட்டு. பின்ன தினமும் வாறப்பம் ஒரு வாக்கு பேசுவேன். என்னைப் பாக்கிறப்ப கையக் கால அனக்கி ஒரு ஒதுக்கம் காட்டுவா'பாரு, அது எனக்கு மனசுக்குப் பிடிச்சுப்போட்டு பாத்துக்கோ. அவ சிரிச்சா ஒரு அந்தஸ் உண்டுடே பண்டாரம்...

'குமரேசனிட்ட சொல்லி...'

'சீ... நாறடிச்சுப் போடுவேபோல இருக்கே. இந்த காரியம் மூணாம் செவி அறியப்படாது. நமக்குள்ள இருக்கணும் கேட்டியா?'

'செரி' என்றபோது பண்டாரத்துக்கு சிரிப்பு வந்து விட்டது.

போத்தி எழுந்தபடி 'செரி வா. நடயச் சாத்தலாம். மணி பத்து பதினொண்ணு தாண்டியிருக்கும்' என்றார்.

வெளியே போய் கோயில் நடையைச் சாத்தும்போது முத்தம் மையைப் பார்த்தார். அவள் மார்பு மீது ரஜனிகாந்த் குப்புறத்

தூங்கிக்கொண்டிருந்தான். அவளும் வாயைத் திறந்து தூங்கினாள்.

'இல்லாட்டி வேண்டாம். நான் சொன்னதை மறந்திடுடே பண்டாரம். ஒரு நெனப்பு. அம்பிடுதேன். மனுசன் மனசாக்குமே. விட்டுப்போடு. நான் அதைச் சொல்லல்ல, நீ கேட்கல்ல.'

'செரி' என்றபடி குளிர் பரவிய படிகளில் இறங்கினார்கள்.

போத்தி 'நான் அவளைப்பத்தி நினைக்கல்லடே பண்டாரம். நம்மளப் பத்தி அவளுக்கு ஒரு நல்ல அபிப்ராயம் இருக்கு பாத்துக்கோ. அதை நாம களையப்பிடாது. அவ நாளைக்கு சீண்ணு ஒரு சொல்லு சொல்லிப் போட்டா பிறவு நாம சீவிச்சு காரியமில்ல.'

பண்டாரத்திற்கு ஒன்றும் புரியவில்லை. ஓரக் கண்ணால் போத்தியின் முகத்தைப் பார்த்தார்.

'நீ இவகிட்ட சொல்லிடப்பிடாது' என்றார் போத்தி.

'நான் அவகிட்ட பேசுத வழக்கமே இல்ல.'

'செரி. வாறேன்.'

போத்தி தன் வீடு திரும்பும் சந்தில் நுழைந்ததும் பண்டாரம் வாயை மூடியபடி குலுங்கிச் சிரித்தார். சிரித்தபடியே வீட்டுக்குப் போனார்.

# 17

காலையில் பண்டாரம் கோயிலுக்கு வந்தபோது ரஜனிகாந்த் சோர்ந்து படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். முத்தம்மை பண்டாரத்தைப் பார்த்ததும் பேசாமல் கண்ணை மூடிக்கொண்டாள்.

பண்டாரம் கோயிலுக்குள் போனதும் வள்ளி புகையிலையை கல்தூண் இடுக்கில் துப்பிவிட்டு சிரித்தபடி, 'நேத்து மொவ வந்து விளிச்சாண்ணு ஏழு மணிக்கு போனேன் ஒடயோரே' என்றாள்.

'உம். உனக்க காரியங்கள் தெரியாம இல்ல. முன்னூறு ரூபாய்க்கு இங்க முடிஞ்சு எனக்க வீட்டிலயும் வந்து சோலி செய்ய ஆளிருக்கு பாத்துக்கோ.'

வள்ளி மேலும் இளித்தாள்.

'போத்தி வந்தாச்சா?'

'அப்பமே வந்தாச்சு.'

'என்னட்டி இந்த உரு இப்பிடி கெடக்கு?'

'அவ பிள்ளைக்கு காச்சலாம். ஆரோ கண்ணு வச்சுப் பிட்டாவன்னு ஆதாளி செய்யுதா. வள்ளியக்கோ ஒரு ரூவாய்க்கு உப்பும் மொளகும் வாங்கிட்டு வருவியா, சூடம் வாங்கிட்டு வருவியா, திஷ்ட்டி சுத்தி போடணும்னுட்டு சொல்லுதா. சும்மா கெடசவமே. நீயும் உனக்க பிள்ளையும்னு சொன்னதுக்கு என்னைய இன்னி ஒரு சொல்லு சொல்லுயதுக்கில்ல. கோவிலு நாறிப் போச்சு பாத்துக்கோ.'

‘செரி. அதுக்காட்டு பிள்ளைய இப்பிடி துணியில சுத்தி வச்சா என்ன பிரிஞ்சு கிட்டும்? கொமரேசன் வருவான். பிள்ளைய பிடுங்கி நாலாளு கூடுத எடத்தில போடச் சொல்லு.’

‘பனி இருக்கு. வெயிலில போட்டா...

‘இஞ்ச பாரு. உருவுண்ணா அது வெயிலிலதான் கெடக்கணும். மரமும் செடியும் வெயிலிலதான் நிக்குது, காஞ்சா போவுது? வெயிலாக்கும் அதுகளுக்கு சக்தி பாத்துக்கோ. சும்மாவா பிராமணனுங்க சூரிய நமஸ்காரம் செய்யுதானுவ? நீ சொன்ன சோலியப் பாரு.’

உள்ளே போத்தி மலர் அலங்காரம் செய்து கொண்டிருந்தார். பண்டாரம் போய் நின்று கும்பிட்டார். ‘முருகா ஞானபண்டிதா என்னப்பனே.’

‘ஏம்டே பண்டாரம் வெயிலு மூத்தாதான் வருவியா? என்னடே சிரிப்பு? பீ கண்ட நாய் மாதிரி?’ என்று போத்தி சீறினார்.

பண்டாரத்திற்கு சற்று ஏமாற்றமாக இருந்தது. இது வேறு போத்தி. இரவில் இருந்த போத்தி அருள் பெற்ற ஆத்மா.

‘என்னடே முழிக்கே? இங்க பாரு நான் சொல்லல்லேண்ணு வேண்டாம். இந்த கிளட்டு முண்டைய இன்னி சகிக்க முடியாது பாத்துக்கோ. கோவில ஒருக்கா சுத்திப் பாருடே. எப்பிடி கூட்டியிருக்கா பாரு. தொடப்பத்த வச்சு கோலம் போடுதா. மணல்ல வரியிழுத்து வச்சா சோலி தீந்து. காக்கிலோ புகை யிலைய கோரி வாயில அடச்சா பிறவு பூலோகமாவது மேலோ கமாவது.’

உள்ளே மூன்று பேர் வந்தனர். ஒரு நடுத்தர வயது அம்மாள். இரு கிழவர்கள். அவர்களுடைய சலவை செய்யப்பட்ட சருமம் பெரியவீட்டுப் பிறப்பைக் காட்டியது. போத்தி அப்படியே மலர்ந்து சாந்தமான கம்பீரக் குரலில் அதே ஓசையுடன் நிறுத்தாமல் தொடர்ந்து, ‘அதாக்கும் பிரசன்னம். மூர்த்திக்கு தேஜஸ் உண்டானா அந்த இடத்துக்கு பிரசன்னம் இருக்கும். மனசு சுத்தமா இருக்கணும். வாங்கோ... வாங்கோ... எந்த ஊரு?’

‘மேட்டுரை’ என்றார் முன்னால் நின்ற கிழவர்.

‘மதுரையா? திவ்விய தேசம்.’ போத்தி அந்த அம்மாளிடம் ‘நின்ற திருக்கோலம். ஒன்பதடி உயர விஸ்வரூபம். திரேதா யுகத்தில்

வசிஷ்டர் பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம். அகஸ்தியரும் சீடர்களும் இங்கே பூஜை செய்திருக்காக. முதலாம் ராஜேந்திர சோழன் திருப்பணி செய்து கட்டின கோயில். பிறகு மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் கற்றளி எழுப்பினாங்க. வீர மார்த்தாண்ட கேரள வர்மா காலத்தில் சுதைக் கோபுரம் கெட்டியிருக்கு. தென் கேரளத்தில் மிகப்பெரிய சுப்ரஹ்மணிய ஸ்வாமி க்ஷேத்ரம் இதுதான்' என்றார்.

மூவரும் ஆர்வமற்ற பாவனையில் கல் தூண்களைப் பார்த்தனர்.

'ஐ ஜஸ்ட் லவ் த ஆயில் ஸ்மெல் நிம்மி' என்றார் கிழவர்.

'டிஸ்கஸ்டிங்க்' என்றார் இன்னொருவர்.

'இப்பதான் உஷத் கால பூஜை முடிஞ்சது. இருந்தாலும் திவ்யமான ஆத்மாக்கள் சிலர் வந்திருக்கிறதாலே ஒரு ஆராதனை பண்ணிடலாம்னு நேக்கு படுது...'

'பண்ணுங்கோ.'

போத்தி உள்ளே போய் தூப ஆராதனை காட்டினார். அவர்களில் இருவர் மட்டுமே கும்பிட்டனர். மூன்றாமவர் மேலே இருந்த யாளியைப் பார்த்தார்.

'நிம்மி வாட்ஸ் த அனிமல்? ட்ராகன்?'

'நோ. இட் இஸ் யாளி. யாளி இஸ் என் ஆர்னமென்டல் ஃபிகர் யூ நோ.'

'ஐ ஸீ...'

போத்தி உள்ளிருந்தே 'உங்க நட்சத்திரம் பேரு சொல்லுங்கம்மா' என்றார்.

'நிர்மலா. பூரட்டாதி.'

'நிர்மலாஸ்ய பூரட்டாதிஸ்ய...' என்றார் போத்தி கம்பீரக் குரலில்.

'என்ன குடுக்கணும்' என்றார் கிழவர் நிர்மலாவிடம் குரலைத் தாழ்த்தி.

'பத்து ரூபா எதிர்பார்ப்பார்.'

'பத்து ரூபாயா? இந்தமாதிரி கோயில்களில் ஒரு ரூபாவே அதிகம். பத்து ரூபாய்ன்னா ஷாக் ஆயிடப் போறார்.'

'ஒரு ரூபாயா? வாட் யூ ஆர் டாக்கிங் ஐ ஸே? ஒரு ரூபாய்க்கு ஒரு பீடாகூட கெடைக்காது.'

போத்தி தூபத்துடன் வெளியே வந்தார். அவர்கள் இருவரும் தூபத்தைத் தொட்டுக் கண்களில் ஏற்றினர். வாழை இலையில் பிரசாதம் வைத்து நிர்மலாவிடம் நீட்டுகையில் போத்தி 'தீஸிஸ் சப்மிட் பண்ணியிருக்கேள். கஷ்டமான தீஸிஸ். பல வருஷ உழைப்பு. ஆனா முருகனருள் உண்டு. சரியான எடத்துக்கு வந்திருக்கேள். எல்லாம் மங்களகரமா முடியும்' என்றார்.

கிழவர் மற்றவரைப் பாத்தபிறகு வாய்க்குள் 'இன்ட்ரஸ்ட்டிங்' என்றார்.

நிர்மலா அதை வாங்கியபடி 'ஹவ் டூ யூ நோ?' என்றாள்.

'சன்னதில நின்னா எல்லாம் தெரியும். நாம சாமானிய மனுசன். ஒரு சக்தியும் இல்லை. தலைவலிச்சா ஸாரிடான் தேடி ஓடற ஆள். ஆனா உள்ள இருக்கது ஞானபண்டிதன். அவன் பக்கத்தில நின்னா எல்லாம் தெரியும். எகனாமிக்ஸ் தானே சப்ஜக்ட்?'

'ஆமா' என்றாள் நிர்மலா பணிவுடன்.

'ஒரு தோஷமும் இல்லாத ரிசர்ச். அதுக்கு உண்டான பலன் உண்டு. ஞானபண்டிதன் துணையிருப்பான். ஓம். தத் சத்.'

நிர்மலா இரண்டு நூறு ரூபாய் தாள்களை போத்தியின் தட்டில் போட்டாள். பயபக்தியுடன் விபூதியை எடுத்தாள்.

இன்னொரு குடும்பம் உள்ளே நுழைந்தது. கீழ்நடுத்தர வர்க்கம், கரிய உடம்பு.

போத்தி சத்தமாக 'சட்டெய கழட்டணும். சட்டை கழட்டாம உள்ள வரப்பிடாதுண்ணு எழுதியிருக்கே' என்றார்.

'பாக்கல்லை' என்றபடி அவன் சட்டையை கழற்றினான். பெண் குழந்தை அம்மா மீது ஒண்டியது.

போத்தி உள்ளே போனார். உயர்குடியினர் மூவரும் பக்க வாட்டில் விலகி சுற்றி நடந்தார்கள். ஒருவர் சற்றுப் பின்னால் வந்து பண்டாரத்திடம் ஒரு ரூபாய் நாணயத்தை நீட்டினார். பண்டாரம் வாங்கி கண்ணில் ஒற்றிக்கொண்டு மடியில் கட்டினார்.

அந்தக் கரிய குடும்பம் சாமி கும்பிட்டது. போத்தி உள்ளிருந்து தட்டுடன் வந்து விபூதியை அள்ளி அவனிடம் போட்டு விட்டு பண்டாரத்திடம் 'வள்ளி இனிமே வாய நீட்டினாண்ணா பின்ன நீதான்டே பொறுப்பு பண்டாரம்' என்றார்.

அந்தப் பெண்ணும் குழந்தையும் கையை நீட்டினார்கள். போத்தி அப்பக்கமாக கண்களையே திருப்பவில்லை. தந்தையின் கையில் இருந்து விபூதி எடுத்துப் போட்டுக் கொண்டார்கள். அவன் ஐந்து ரூபாயைத் தட்டில் போட்டதை மட்டும் போத்தி ஓரக்கண்ணால் பார்த்தார்.

அவர்கள் நகர்ந்ததும் பண்டாரம் 'ஞானதிருஷ்டில பாத்தேளா?' என்றார்.

'நீ உன் சோலியப் பாருடே...'

பண்டாரம் நே[illegible] எதிரில் தெரிந்த கண்ணாடியைப் பார்த்து புன்னகை புரிந்தார். அது எதிர்த்திசையில் வந்தால் முருகனைப் பார்க்கும்படி அமைக்கப்பட்டது. ஆனால் கருவறை வாசலில் நின்றால் பக்கவாட்டில் உள்ள வாசலும் கீழே நிற்கும் வெண்ணிற மாருதி வேனும் தெரிந்தது. 'தி எக்கனாமிக் சர்வே ஆஃப் இந்தியா' என்று சிவப்பாக விலாவில் எழுதியிருந்தது.

'படிப்பு காரியம் எப்பிடி சொன்னீரு?' என்றார் பண்டாரம்.

'இம்மாதிரி ஆளுகளுக்கு எப்பமும் ஒரு பேப்பர் எங்கியாம் பெண்டிங்ல இருக்கும்டே பண்டாரம். இந்த சோலிய நான் தொடங்கி முப்பது வருசம் ஆச்சு. பாத்துக்கோ.'

பண்டாரம் படிகளில் வந்தார். ரஜனிகாந்த் தகிக்கும் வெயிலில் கன்றிப்போய் தூங்கிக்கொண்டிருந்தான். குமரேசன் உட்கார்ந் திருந்தான்.

'என்னவே...'

'மோலாளி, நாருகோவிலில ஒரு அடி. பெருமாளை பண்டாரங்க அடிச்சுப்போட்டு பைசாவ எடுத்துக்கிட்டு போயிட்டானுக...'

'அவன் அப்பிடி பலதும் சொல்லுவான். பைசா பைசாதான். பண்டாரம் கொண்டுபோனாலும் செரி, பட்டி கொண்டு போனாலும் செரி.'

'இல்ல மோலாளி. உள்ளதாட்டும் அடிதான். ஆஸ்பத்திரில கெடக்கான்.'

'சாவானா?'

'கொட்டயில வீக்கமுண்டு.'

'செரி அப்பம் வண்டிமலைய ஏற்பாடு செய்யுதேன். நீயும் நாரோயிலுக்குப் போ. இங்க இத உனக்க பெஞ்சாதி பாத்துக் கிடட்டு.'

'செரி.'

'இதுக்கு எடைக்கெடைக்கு மேல வெள்ளம் விடணும்டே. காஞ்சு போயிடும்.'

'மோலாளி, காச்சலுல்லா?'

'காச்சலுக்கு வெள்ளம் விடுயது நல்லதுடே. ஆஸ்பத்திரில நெத்தியில பஞ்சு வச்சு வெள்ளம் விடுதானுக, பாத்திருக்கியா?'

பண்டாரம் வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு உடை மாற்றிக் கிளம்பினார்.

ஏக்கியம்மை 'தேதி கொண்டுட்டு வருயதுக்கு கேட்டாவ' என்றாள்.

'திங்களாழ்ச்ச வரட்டு. சித்திரைல ஒக்காது. சித்திரை முழுக்க திருவிழாவா கெடக்கு. உருப்படியள ஏத்தி கொண்டு போய் இடணும். பெருமாளுக்கு சொகமில்ல. வைகாசி ஒடுக்கம் வச்சுக்கிடலாம். நாயரு வந்தா சொல்லு.'

'நாயருக்கு பைசா குடுக்கணுமே?'

'இவன் கல்யாணம் முடியியதுக்குள்ள கொட்டய பிச்சிக்கிட்டு போயிடுவான்னுல்லா தோணுது...'

'பய்யெ பேசுங்க. சமஞ்ச பொட்டைக உள்ள வீடாக்கும். பேசுத பேச்சும்...'

'செரி. சலம்பாம கெட.'

'பொன்னுருக்கணும். துணியெடுக்கணும்.'

‘செரி. நான் வாரேன்.’

நாகர்கோவில் நாகராஜா கோயில் முகப்பில் போலீஸ்காரர் தாணு பிள்ளையும் அகமதும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

பண்டாரம் போலீஸ்காரர் அருகே போய் நின்றார்.

‘என்னவே பண்டாரம்?’ தாணு பிள்ளை மீசையை நீவியபடி கேட்டார்.

‘நமஸ்காரமுண்டு’ என்றார் பண்டாரம்.

‘செரி. உனக்க உருப்படி இவன் பெரிய ஆளுடே... இங்கிலீஷ்ல மன்னன்லா.’

பண்டாரம் கோணலாகச் சிரித்தார்.

அகமது ‘முதலாளி நேத்து இங்க ஒரு மர்டர்’ என்றான்.

‘என்னது?’

‘கொலை?’

‘ஆரு? பெருமாளு செத்துப் போயிட்டானா?’

‘அவன் நல்லாருக்கான். கொட்டை மட்டும் இப்பம் நம்ம சைசுல இருக்குன்னு சொன்னாங்க. ஒரு பண்டாரத்த குளத்தில போட்டு அமுக்கி கொன்னு போட்டான்.’

‘ஆரு?’

‘வேற ஆரு? நம்ம வண்டிமலைதான்.’

பண்டாரம் தாணு பிள்ளையிடம் ‘கேசு உண்டா? என்றார்.

‘என்னத்த கேசு? பரதேசி செத்ததுக்கெல்லாம் கேசெடுத்தா நாடு உருப்படுமா? ஒரு காரியம் குறிச்சுக்கோ. ஓட்டு உள்ளவன் செத்தாதான் அது கொலக் கேசு. மத்ததெல்லாம் முனிசிப் பாலிட்டி கேசு. அதுதான் இந்தியன் பீனல்கோடு சட்டம்’ என்றார் தாணு பிள்ளை. ‘செரியாடே அயமதே?’

‘அம்மாதிரி சட்டம் இல்லை. ஆனா அதுதான் நடைமுறை. லா அன்ட் புரொசீஜர்ன்னு சொல்லுவாங்க. இங்க லா வேற. புரொசீஜர் வேற. அல்லாவுக்க கோர்ட்டில மட்டும்தான் லாவும் புரொசீஜரும் ஒண்ணு.’

'அப்பிடியா?' என்றார் தாணு பிள்ளை. 'இவன் நமக்கு ஒரு மெமோ ரிப்பிளை எழுதிக் குடுத்தான் பண்டாரமே. ஒண்ணாந் தரம்! அசல் லாப்பாயிண்டு. எஸ்ஐ மூக்கு சப்பிப் போட்டார். இவன் இந்த பூசணிக்காயை வெட்டிப் போட்டு எறங்கினா வக்கிலுமாரு பறபறப்பான்...'

'இது மந்து தாணு பிள்ளை சார். வெட்டமுடியாது. வெட்டினா சோலி தீந்துபோடும்' என்றான் அகமது.

ராமப்பன் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தார். 'அவனுக்கு என்னடே தீனம்?' என்றார் பண்டாரம்.

'சொகமில்ல' என்றார் ராமப்பன்.

குய்யன் சிரித்தபடி 'அண்ணனுக்கு அடியப் பாத்தா பனி வரும்' என்றான். உற்சாகமாக 'நேத்து பயங்கர அடி. டிஷூம் டிஷூம் அடி. பெருமாளை பண்டாரங்க போட்டு அடிச்சானுக. சாயங் காலம் தேவரு வந்து என்னான்னு கேட்டு போனாரு. ராத்திரியில பாத்தா ஒரு பண்டாரத்த அடிச்சு இளுத்துட்டு வாறாரு. பண்டாரம் 'அய்யோ அய்யோ முருகா முருகா'ங் கியான். சவிட்டுண்ணா சவிட்டு அப்பிடி ஒரு சவிட்டு. நேர கொண்டுட்டு போயி குளத்தில ஒரு அமுக்கு. இஞ்சேருங்க... குமிளி குமிளியா யிட்டு வருது.' குய்யனுக்கு குதூகலத்தில் நிற்க முடியவில்லை. 'வெள்ளம் திளைக்குமே அதுமாதிரி. தேவரு கேறி வந்து முகம் கழுவிட்டு துணி எடுத்து முகத்தத் துடச்சிட்டு போறாரு. அவன ஆளுக் காங்கலே. காலம்பற பாத்தா தேங்கா மிதக்குறது மாதிரி மிதந்து கிடக்கான்.' குய்யன் குப்புற மிதப்பதுபோல சைகை காட்டினான். 'இப்பிடி கெடக்கான். தோட்டிய வந்து இளுத்துப் போட்டாக. முனிசிபாலிட்டி வண்டில ஏத்தி கொண்டு போனாக. நாயி வண்டி இருக்கே நாயி வண்டி அது...' குய்யன் குரலைத் தாழ்த்தினான். 'பண்டாரத் துக்கு இடுப்பில இஞ்சேருங்க இந்தா தண்டியில ஒரு செயினு. வாயில ஒரு தங்கப்பல்லு. போலீசு செயின எடுத்துக்கிட்டாக. முனிசிபாலிட்டி ஆபிசரு பல்ல எடுத்துக்கிட்டான். ரெண்டு கடுக்கனை தோட்டிக எடுத்து கிட்டாக. நல்ல கோளாக்கும் எல்லா ருக்கும். இன்ஸ்பெக்டரு எனக்ககிட்ட கேட்டாரு- ஓய் மத்த பண்டாரம்லாம் எங்கண்ணு தெரியுமா? நான் சொன்னேன். ஏமானே எனக்க பேரு குய்யன் இல்ல. எனக்க பேரு முனியசாமி. முனியசாமின்னு கூப்பிடுங்க. எனக்கு ஒரு காரியமும் தெரியாது. நான் நிரபராதியாக்கும்.

நிரபராதி. கேட்டியளா? நிரபராதி.' குய்யனுக்கு அந்த வார்த்தை மிகவும் பிடித்திருந்தது. 'நிரபராதியள போலீஸ் அடிக்கப்படாது. நிரபராதி அவனுக்க ஜோலியப் பாத்துக்கிட்டு வல்ல ஊத்த இட்டிலியோ மாட்டுக்கறியோ திண்ணுட்டு செவனேண்ணு கெடப்பான். நிரபராதிக்கு சர்க்கார் பயம் இல்லை. போலீசு பயமும் இல்லை. சாமி பயமும் இல்லை. ஒரு மயிரானும் ஒண்ணும் ஆட்டிக்கிட முடியாது. நிரபராதியாட்டு இருக்கதால சொல்லுதேன்'

'வண்டிமலை எங்கே?'

'செருப்புக்கடையில இருக்காரு.'

பண்டாரம் நடந்தார்.

'ஒடயோரே இந்தப் பிள்ளை இப்பிடி கெடக்காளே. பெருமாள ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனம்பிறவு ஒரு வாயி வெள்ளம் குடிச்சாளில்லை. ராப்பகலா கெடந்து அனத்துதா' என்றான் மயில்சாமி.

'உனக்கு என்னட்டி தீனம்?'

'மோலாளி என்னையும் அவிக கிட்ட கொண்டு போவச் சொல்லுங்க மோலாளி. அவிகளுக்கு என்னண்ணு தெரியல்ல. எனக்கு ஒரு சமாதானமும் இல்ல மோலாளி. நான் செத்துப் போயிருவேன்.'

'சவத்துக்கு கிறுக்கு. ஏம்டி நீ ஆஸ்பத்திரில போயி என்ன செய்யப்போறே? எந்திருச்சி இருக்கவும் தெம்பில்ல உனக்கு...'

'எனக்க ராஜாவே எனக்க ராஜாவே உன்ன நெனச்சு எனக்கு ஆறல்லியே...'

ஒரு வெள்ளைக்காரத் துரையும் துரைசானியும் தழுவிய நிலையில் வந்தனர்.

குய்யன் உத்வேகம்கொண்டு 'அய்யா பிச்ச போடுங்கய்யா மாராசி' என்றான்.

அவர்கள் திரும்பிப் பார்த்து 'ஓ' என்று ஒதுங்கிப் போனார்கள்.

'செம்பன்னி அய்யா... நரயன் தொரை... சாணித்தல மவராசீ... பிச்ச போடு தாயீ...'

'இப்பம் பாரு' என்றான் அகமது. 'எக்ஸ்யூஸ் மி, ஆர் யூ இன்ட்ரஸ்ட்டட் இன் வாட்டர் மெலொன்ஸ்?'

'பார்டன்?' என்றார் துரை.

மறுகணம் துரைசானி 'ஜீஸஸ்!' என்று கிரீச்சிட்டாள். துரை 'புரூட்ஸ். ஓ மை!' என்று வீரிட்டபடி ஓடினார். பின்னால் குதி உயர் செருப்பு தடுக்க துரைசானி ஓடினாள். தாணு பிள்ளை 'ஹெக்ஹெக்ஹெக்' என்று சிரித்து கண்ணீரைத் துடைத்தார்.

செருப்பு வைக்கும் இடத்தருகே தரையில் வண்டிமலை உட்கார்ந்து பீடி பிடித்துக்கொண்டிருந்தான். வெறித்த பார்வை. பண்டாரத்தைப் பார்த்ததும் புன்னகை புரிந்தான்.

'எப்பிடிடே இருக்கான் பெருமாளு?'

'ஒரு வாரம் ஆயிடும்.'

'இந்த உருப்படியள ஏத்தி எறக்கணுமே. கொமரேசன் வய்யும்பம் வருவான்.'

'ராத்திரி கூட இருந்தா போதும்.'

பண்டாரம் அருகே திண்ணையில் அமர்ந்தார். 'நீயாடே கொண்ணே?'

வண்டிமலை ஏறிட்டுப் பார்த்து, 'ஆமாம். அதற்கென்ன' என்ற பாவம் காட்டினான்.

'செரி. வேண்டியதுதான். ஒரு பயம் வேணுமில்லா. எப்படி ஆளைக் கண்டுபிடிச்சே?'

'அன்னக்காவடி வச்சிருந்தான்.' வண்டிமலை குரலைத் தாழ்த்தி 'அது முத்து தியேட்டர் சாக்கடைச் சந்தில இருக்கு எடுக்கிறீயளா?'

'அடப்பாவி. அத எதுக்குடே எடுத்தே? செர்ரியான கூமுட்டயா இருப்பான் போல இருக்கே. ஏண்டா டேய் அன்னக் காவடிய விக்கமுடியுமா? எவனாவது வாங்குவானா? விக்கப் போனா போலீசு உன்னை விடுமா?'

மெதுவாக வண்டிமலைக்கு விடிந்தது. இன்னொரு பீடியை எடுத்தபடி 'நீரு அம்பது ரூபா தாரும்.'

'வசூலிலே உன் பங்குக்கு மேல அம்பது எடுத்துக்கோ. என்னத் துக்கு?'

'பெருமாளுக்க டாக்டர்க்கு குடுக்கணும்.'

'அதுக்கா? அது ஒரு நூறாட்டு குடு. அம்பது குடுத்தா எடுக்க மாட்டாவ. கம்பவுண்டர்மாருக்கு ஆளுக்கு அம்பது குடு. பெய தேறி வரட்டு.' பண்டாரம் ரகசியமாக 'எனக்கு ஒரு ஆளை தட்டணும்டே. பணம் தந்து போடுதேன்' என்றார். ஐம்பதாயிரம் ஆனாலும் சரி, இனி கிழவியை விடக்கூடாது என்று முடிவெடுத் திருந்தார். இரவெல்லாம் அவளது கெட்ட வார்த்தைகள்தான் அவர் மூளைக்குள் ஒலித்துக்கொண்டிருந்தன.

'செரி.'

'பெண்ணாக்கும். நம்ம பிள்ளைக்க மாமியாரு. சித்திரை போகட்டு. வைகாசி ஒடுக்கம் கல்யாணம். ஆனி மாசமா ஒரு தட்டு தட்டிப்போடு. என்ன கேக்கே?'

வண்டிமலையின் கண்கள் சிந்தனையில் மங்கின. மீசையை வருடியபடி தலைகுனிந்து ஆழமாக யோசிக்க ஆரம்பித்தான். விரலால் மண்ணில் இரண்டு வட்டம் போட்டான். தலையைத் தூக்கி, 'ஒரு பேச்சுதான். பணம் குறைக்க முடியாது.'

'பாத்து சொல்லுடே. கட்டும்ணாக்க தாரேன். போட்டு குடுக்கப் பிடாது.'

'நான் தேவன். துண்டு துண்டா வெட்டினாலும் என் வாய் தொறக்காது.'

'அது தெரியாதா? ஒரு பேச்சுக்குச் சொன்னேன். செரி எம்பிடு கேக்கே?'

'அஞ்ஞூறு ரூவா. ஒரு பைசா குறயாது.'

பண்டாரம் சிரிப்பை அடக்க முகத்தை இறுக்கியபடி அரச மரத்தைப் பார்த்தார். பிறகு 'செரி. அப்பம் நான் சொல்லுதேன்' என்றார்.

# 18

*பண்டாரம் வீட்டுக்கு வந்தபோது உள்ளே ஒரே சிரிப்பும் கூத்துமாக அமளிப்பட்டுக்கொண்டிருந்தது. யார் வந்திருக்கி றார்கள் என்று தெரியாமல் அவர் வாசலில் ஒருகணம் நின்று செவி கூர்ந்தார். சின்னவளின் குரல்தான் ஒரேயடியாகக் கேட்டது. அப்படியானால் வேறு யாரும் இல்லை. 'ஏட்டி ஏட்டி' என்றார்.*

*ஏக்கியம்மை கதவைத் திறந்தாள். 'வாருங்க.'*

*'என்னட்டி அங்க சத்தம்?'*

*'அந்த உருவ எடுத்துக்கிட்டு வந்து போட்டு வெளையாடு தாளுக.'*

*'எதை?' என்றபடி உள்ளே போனால் கூடத்து சிமிண்ட்டுத் தரையில் ரஜனிகாந்த் குப்புறப் படுத்திருந்தான். அவளைச் சுற்றி மீனாட்சி, வடிவம்மை, சுப்பம்மை பக்கத்துவீட்டு லெஷ்மிக் குட்டி, பாகீரதி எல்லாரும் நின்றனர். ரஜனிகாந்த் தொப்பையை மையமாக்கி ஒற்றைக் காலையும் ஒற்றைக் கையையும் தரையில் அடித்து நீந்த முயன்றான்.*

*'அப்பா இப்பம் பாருங்க' என்றபடி மீனாட்சி ஒரு ஸ்பூனை அவன் அருகே வைத்தாள். பயல் ஒரு கையை நீட்ட கால் மறு பக்கமாக உதைக்க கடிகாரமுள் போல ஒரு வட்டம் சுற்றி வந்தான். அத்தனை பேரும் கெக்கலியிட்டுச் சிரித்தார்கள்.*

*'பயங்கர வட்டம் போடுது அப்பா. என்னா உசிருங்கியோ?' மீனாட்சி அவனது சதைக்கண்ணின் பக்கத்தில் ஸ்பூனைப் போட்டாள்.*

அவன் தன் சப்பிய கோணல் மண்டையை விசித்திரமாகத் திருப்பி காலை உதைத்து விபரீதமாக ஒரு வட்டம் போட்டு முடித்தபோது ஸ்பூனருகே அவனது கால் இருந்தது. குழந்தைக்குப் புரிய வில்லை. கையை அடித்து 'ஆங் ஆங்' என்றான்.

பாகீரதி கைகொட்டி 'பா பா' என்று கூப்பிட்டாள். அவன் வாயில் எச்சில் கொட்ட சிரித்தபடி அவளைப் பார்த்து கையையும் காலையும் உதைத்து வேகமாகச் சறுக்கி பின்னால் போனான். ஸ்பூன் வயிற்றில் உரசியது. ஸ்பூனை எடுக்க முயன்று மீண்டும் வட்டம்.

பண்டாரம் அரங்கு அறைக்குப் போய் சட்டையைக் கழற்றினார். ஏக்கியம்மை காப்பி கொண்டு வந்தாள்.

'பப்பனாவனைப் பாத்தியளா?' என்றாள்.

'பாத்தேன். அவனுக்கு தேதி செரி வராது. அவனுக்கு அனந்தர வன் ஒருத்தன் இருக்கான். சதாசிவண்ணு. அவனுக்கு அட் வான்ஸ் குடுத்தேன்.'

'அவன் எப்படிப்பட்டவனோ? முகூர்த்த மாசம்னா மண்ணு கிளைக்குதவனும் அரிவய்ப்புகாரன் ஆயிடுவான்லா?'

'பின்னெ என்னெங்கியே... ஆளு கிட்டாண்டாமா?'

'விசாரிச்சு பாப்பம். நல்ல ஆளுண்ணா செரி. இல்லாட்டி அட்வான்ஸோட போச்சு. இது என்னட்டி கூத்து? உருப்படி யல்லாம் வீட்டுக்குள்ள கொண்டு வந்துட்டு...'

'நான் சொன்னா கேக்குதாவளா? சின்னவ போயி தூக்கிட்டு வந்தா. ஒரே பெகளம். என்ன சொல்லுயதுக்கு.'

'அது தூறி எடுத்து வச்சா இவ கழுவுதாளா? நல்ல கூத்தாட்டு இல்ல இருக்கு?'

'விளிச்சு கேளுங்க. செல்லம் பிளிகிக்கிட்டுல்லா பெட்டைய வளருது. நாளை ஒரு வீட்டில செண்ணு வாழ வேண்டிய குட்டிய. ஒரு அடக்கம் ஒடுக்கம் உண்டா?'

'செரி செரி விடு.'

குமரேசன் வந்து 'அங்க அதுக்க அம்மை கெடந்து தீனம் விளிக்கா. எடுத்து வித்துப் போட்டாவள்ன்னு சொல்லுதா.

படியில உருண்டு விழுந்து நெத்தியும் காலும் புண்ணு. ரெத்தக் கொளமாக்கும்' என்றான்.

'எடுத்திட்டுப் போடே' என்றபடி ஏக்கியம்மை ரஜனிகாந்தை ஒரு கையைப் பற்றி தூக்கினாள். 'எளவு என்னா கனம் கனக்குது. என்னதான் குடுக்காளோ. நாம மருந்தும் மந்திரவாதமும் பாத்து வய்க்க பிள்ளிய தேவாங்கு கணக்காட்டு இருக்குதுக.'

'அது பின்னெ குப்பயிலு குருத்த செடிக்கல்லேடீ ஊற்றம் கூடுதல்?' என்றாள் பார்க்கவி.

குமரேசன் ரஜனிகாந்த்தை தூக்கிக்கொண்டான்.

'ரசனீகாந்து டாட்டா' என்றாள் மீனாட்சி.

பயல் எம்பி எம்பிக் குதித்தான். வாய் திறந்து ஒரு சிறு பல் தெரியச் சிரித்தான்.

'அய்யடி சிரிப்பும் அதுவும். சக்கப்பழம் பிளந்து வச்சது மாதிரி' என்றாள் பார்க்கவி.

'ஏன் சிரிக்கப்பிடாதோ?' மீனாட்சி சொன்னாள்.

'சிரிச்சா நல்ல அழகுண்டுல்லா? உனக்கு இந்தமாதிரி ஒரு பய்யனைப் பாக்கணும்.'

'போ' என்றாள் மீனாட்சி.

பெரியவள் வந்து எட்டிப்பார்த்து 'அப்பா நகைக்கு சொன்னியளா?' என்றாள்.

'சொல்லியிருக்குட்டி.'

'டிசைனு பாக்கணுமே.'

'தட்டானை வரச் சொல்லட்டா?' என்றார் பண்டாரம்.

'போரும் போரும். இது எத்தனை டிசைன் மாத்தியாச்சு. அளிச்சு அளிச்சு உருக்கி இப்பம் அதில தங்கமிருக்கோ செம்பிருக்கோ. போட்டி உள்ள.' ஏக்கியம்மை அவர் அருகே தரையில் உட்கார்ந்து 'எப்போ முருகா. எனக்கு நடக்க முடியல்ல. மூட்டு வலி. எப்பம்டா இதொக்க செரியாயி பெண்ணு எறங்கிப் போவா எண்ணு இருக்கு.'

‘எறக்கிவிட்டுட்டு நீ மஞ்சக்குளிப்பியாக்கும்? போடி, பேச்சு பேசுதா பாரு.’

‘பய்யனுக்கு சொபாவம் கேட்டியளா?’

‘கல்லியாணம் தேதி வச்சாச்சு. பொன்னு உருக்கியாச்சு. இன்னி போயி சொபாவம் கேக்கணுமா?’

‘எனக்கு ஒரு நிம்மதி இல்ல. வயித்தில ஒரு வெப்ராளம். கிடந்தா உறக்கம் இல்லை. பாத்து பாத்து வளத்த குட்டி. பாலும் வெள்ளமும் தெரியாத்த பாவமாக்கும்.’

‘எல்லாம் பாத்துக்கிடலாம். முருகன் இருக்கான்.’

‘எனக்கும் அதுதான் ஒரு சமாதானம். நாம ஆருக்கும் ஒரு துரோகம் செய்திட்டில்ல. ஆரயும் வஞ்சிக்கவோ, சதிக்கவோ, அன்னியன் முதலு பிடிச்சு பறிக்கவோ செய்தது இல்லை. முருகனுக்குப் பயந்துதான் நம்ம காலம் ஓடுது. பின்ன எல்லாம் அவனுக்க மனசளவு மாதிரி. இங்கேருங்க, கல்லியாணம் முடிஞ்சம்பிறவு ஒருக்கா திருத்தணி வரை போவணும்.’

‘ஏமிட்டி, நீ அண்ணைக்கே ஆறுபடை வீட்டுக்கும் போறதா வேண்டியாச்சு. பிறகென்ன. திருத்தணி அதுல ஒண்ணுதானே.’

‘ஆமால்லா...’

‘அய்ய, வாயும் அவளும்...’

‘வாயப் பாத்துதானே கெட்டினீய.’

‘வாய ஆரு பாத்தா...’

‘போரும் போரும். மூத்து நரச்சாச்சு’ என்றபடி ஏக்கியம்மை எழுந்துகொண்டாள்.

பண்டாரம் சற்று படுத்து ஓய்வு எடுத்துக்கொண்டார். நினைத்த போது மலைப்பாக இருந்தது. ஒன்றுமே முடிய வில்லை. ஆயிரம் வேலைகள். எதைச் செய்ய, எதை விட? படுக்கமுடியவில்லை. எழுந்து தாளை எடுத்துக் குறிக்க ஆரம் பித்துவிட்டார். எழுத எழுத எல்லாம் எளிதாக மாறி விட்டது போலிருந்தது. ஒரு நிம்மதி வந்தது.

வெயில் அடங்கியதும் துண்டை எடுத்துக்கொண்டு குளிக்கக் கிளம்பினார். குளத்தில் நல்ல கூட்டம். ஓரமாகப் போய் மறுகால் பாயுமிடத்தில் இறங்கினார். அங்கே கூனன் ஆசாரியும் ஞானப் பிரகாசமும் குளித்துக் கொண்டிருந்தனர். ஞானப்பிரகாசம் 'வாங்க பண்டாரம்பிள்ளே. என்ன மூர்த்தம் அடுக்குதோ?' என்றார்.

'ஆமடே' என்றபடி பண்டாரம் நீரில் இறங்கினார். முழங்கால் வரைத்தான் தண்ணீர் ஓடியது. பாசிமணம் கொண்ட தண்ணீர். வைகாசி மாதம் மறுகால் ஓட நீர் இருக்கும் ஒரே குளம் இதுதான். காக்கா அடைந்த மரம் போல ஒரே கூக்குரல் ஒலிகள்.

'உருப்படியும் பட்டும் எடுத்தாச்சா?'

'உருப்படி செய்யக் குடுத்தாச்சு. பட்டு ஒருநாள் பின்னே சவுரியமாட்டு எடுக்கணும்.'

'எல்லாம் முற போல பாத்து செய்யும். வீட்டில முத விசே ஷம்லா. ரெண்டாம் விசேஷம் சுளுவாட்டு போவும்... பிறவு மூணாம் விசேஷம் பாத்தாப் போருமே. அதுக்கு பத்து வரியம் போவும்.'

பண்டாரத்துக்கு திக் என்றது. என்ன பேச்சு பேசுகிறான். 'என்னடே பேசுகே?'

'இல்ல, கூனன் ஆசாரி சொல்லுகாரு ரண்டாமத்தவளுக்கு சில்லற செலவில்லாத்த கெட்டாக்கும் எண்ணு.'

'ஏன்' என்றார் கறுத்த முகத்துடன்.

'பெருவட்டனுக்கு எப்படியும் பந்தலு போட்டு கெட்டிக்குடுக்க மாட்டிய. பின்ன அவனுக்கு இது மூணாம் கெட்டு. சொல்லிக்கிட தொழிலும் இல்ல.'

பண்டாரம் பரபரவென்று எழுந்து அருகே போனார். 'எரப்பாளிப் பயலே, சவிட்டி எல்லப் பிளந்து போடுவேன் பாத்துக்க. என்னலே நினைச்சே?'

'போவும் வோய். போய் கேட்டுப் பாரும்.'

பண்டாரம் துண்டை எடுத்தார். தலையைத்துவட்டியபடி மெல்ல 'இஞ்ச பாரு மக்கா. உனக்கு மத்த பண்டாரத்த தெரியாது.

உன்னை துண்டு துண்டாக்கி மணக்காட்டு கடலில கலக்கணு மானா எனக்கு ஒரு நாளு போரும் பாத்துக்க...' என்றார்.

ஞானப்பிரகாசம் பயந்துவிட்டான். 'உம்மாணவோய் உம்ம கிட்ட சொல்லணும் என்னு சொன்னதாக்கும். ஊரு நாறுது. உம்ம மேல உள்ள பிரியத்தால சொன்னேன்.'

பண்டாரம் வீட்டுக்கு போன நடை வேகம் பிடித்தபடியே வந்தது. வென்னீர் அறையில் சின்னவள் 'ராணி' படித்துக் கொண்டிருந் தாள். போன வேகத்தில் பண்டாரம் அவளை ஓங்கி உதைத்தார். அவள் அப்படியே சிதறி சுவரில் முட்டி விழுந்தாள். பண்டாரம் ஒரு விறகுக் கட்டையைக் கையில் எடுத்து 'சாவுடீ சாவுடீ' என்று தாறுமாறாக அடித்தார். அவள் 'அய்யோ அப்பா! அய்யோ அப்பா!' என்று வீரிட்டாள்.

ஏக்கியம்மை ஓடிவந்து 'என்ன நீக்கம்பு இது? நில்லுங்க' என்று பிடித்தாள்.

'போயி சாவுடீ, நாயே. பிள்ள வளக்கா பிள்ள' என்று ஏக்கி யம்மைக்கு நான்கு அடி வீரினார்.

'அய்யோ அக்கா அய்யோ அக்கா' என்று மீனாட்சி கத்தினாள். 'அப்பா வேண்டாம். அப்பா வேண்டாம்' என்று பெரியவள் கதறினாள்.

பண்டாரத்திற்கு எப்போதும் உணர்ச்சி மிகும்போது இருமல் கிளம்பிவிடும். இருமி முடித்தபோது வெறியை மீட்டுக்கொள்ள முடியவில்லை. எனவே தன்னிரக்கம் ஏற்பட்டது. 'நான் போயி சாவுதேன். எல்லாரும் இஷ்டத்துக்கு போயி ஆடுங்கட்டி.... நான் போறேன்...' என்று தழுதழுத்தபடி உள்ளே போய் கட்டிலில் அமர்ந்தார். மூச்சு வாங்கியது.

மெல்ல வெறியும் வேகமும் அடங்கியதும் பொடி போட வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. பொடி போட்டதும் மாங்காண்டி சாமியின் நினைவு வந்தது. பெருமூச்சு விட்டார்.

'இப்பிடியா அடிப்பிய? பிள்ளை துரும்பு மாதிரி இருக்கு?' என்றாள் ஏக்கியம்மை அறைவாசலில் நின்று.

'சாவட்டு சனியன்...'

சரசரவென்று உண்ணியம்மை ஆச்சி உள்ளே நுழைந்தாள். 'என்னட்டி இங்க கரச்சிலும் பெகளமும்? அய்யோ மக்கா... தெணத்துப் போட்டே... ஆருட்டீ அடிச்சா?'

'ஆச்சி நீங்க வீட்டுக்குப் போங்க' என்றாள் ஏக்கியம்மை.

'பிள்ளைய அடிச்சா கேக்கமாட்டாவளா? நல்லோரு குட்டி.'

'நீங்க உங்க வீட்டுக்குப் போங்க. பிறவு பேசலாம். போங்க...'

'என்னமோ எனக்கென்ன? அடியுங்க சாவுங்க. குட்டி நல்ல குட்டி. சாதிவிட்டு சாதி ஒரு பேச்சு உண்டுமானா அதைப் பேசித் தீக்கணும். வயசும் பக்குவமும் உள்ள ஆளுக இல்லாமலா போனம்? அதுக்காச்சுட்டி குட்டிய போட்டு அடிச்சா? நாட்டில நாறுயதுக்கா? இல்ல கேக்கேன். எனக்கும் கேக்கியதுக்கு ஒரு லைசென்ஸ் உண்டுமே. நான் தூக்கி வளத்த பெட்டயில்லா...'

'ஆச்சி நீங்க போறியளா?'

'போவாம பின்ன இங்க சீராடவா வந்தாவ? ஏமிட்டி நீ என்னத்துக்கு கரயுதே? குளி தெற்றினா அதுக்கும் மருந்து உண்டு பாத்துக்கோ' என்றாள் ஆச்சி.

'சீ, எரணம் கெட்ட மூதேவி, எறங்குடி நாயே' என்று ஏக்கி யம்மை கையை ஓங்கியபடி பாய்ந்தாள்.

ஆச்சி அரண்டுவிட்டாள். திறந்த வாயும் சுருங்கிய கண்ணுமாக உறைந்து நின்றுவிட்டு 'அய்யோடா' என்று கையை ஆட்டிக் காட்டி விரைந்து வெளியே போனாள்.

'கதவை கொண்டி போடுடீ. கண்ட பொறுக்கி நாயும் கேறி வாரதுக்கு...'

'அவளை ஏன் சொல்லுதே? உனக்க மகளை கூப்பிட்டுக் கேளு. குளி இருக்கா, தெற்றியிட்டுண்டா எண்ணு.'

'வாய மூடுங்க' என்றாள் ஏக்கியம்மை உக்கிரமாக.

பண்டாரம் தணிந்தார். 'குளிக்கப் போன எடத்தில ஒருத்தன் சொல்லுதான் காரியங்க. நான் கேட்டுப்போட்டு சாவாம வந்து இருக்கேன். அப்பம் நாண்டுகிட்டு சாவா்ம வந்து இந்தா கல்லு மாதிரி இருக்கேன்.'

ஏக்கியம்மை ஒன்றும் சொல்லவில்லை.

'ஆரு அந்த பெருவெட்டப் பய?'

'லாரன்சுன்னு சொன்னாக.'

'நல்ல பயலா?'

ஏக்கியம்மை 'அதுக்கு இப்பம் என்ன? கெட்டியா குடுக்கப் போறிய?' என்றாள்.

'இல்ல... கேக்கேன்.'

'வேற ரெண்டு பெஞ்சாதி உண்டுமாம். பெய வலிய ரவுடி யாக்கும். ரெண்டு தடவ செயிலுக்கும் போயிட்டு வந்தவன்.'

'என்ன தொழிலு?'

'கொலெரம் சந்தையில...

'சந்தயில?'

'சந்தயில நிப்பானாம்.'

'மாமூலு வாங்கியது. இல்லியா?'

ஏக்கியம்மை 'நான் என்ன கண்டேன்?' என்றாள்.

'நீ ஒண்ணும் காணமாட்டே. சாளமீன் புளிமுளம் நல்லா வப்பே.'

ஏக்கியம்மை கோபத்துடன் 'நான் எம்பிடு தடவ சொல்லி யிருக்கேன். அவளை வெலக்கியிருக்கேன். இந்த வீட்டில எனக்க பேச்சுக்கு என்னவாக்கும் வெலை? அப்பனும் பிள்ளை யளும் சேந்துபோடுவீக. நான் பரட்ட கிளவி. ஊரு தெரியாம உலகம் தெரியாம உள்ளுக்குள்ள கெடந்து பொக குடிக்கேன்.'

'செரி செரி நீட்டாத. இந்த பெய இங்க வாறதுண்டா?'

'வருவான். இவ அங்க போயி பாப்பா போல இருக்கு. பலரும் கண்டிருக்காவ.'

'என்ன சொல்லுதா?'

'ஒரு காரியமும் இல்ல. சும்மா பேசுவம். வேற ஒண்ணும் இல்லங்கியா.'

'நீ நல்லா கேட்டியா?'

'நல்லா கேட்டேன். வல்லதும் உண்டுன்னா சொல்லு. ஏர்ப்பாடு செய்யலாம்ண்ணுட்டு கூட கேட்டேன். அப்பா மேல ஆணையா முருகன் மேல ஆணையா இல்லேங்கியா.'

'செரி ஒருவேள அப்பிடியும் இருக்குமோ?'

'என்னது?'

'சும்மா பேசியிருப்பா.'

'சும்மா பேசினா ஊரு நாறுமா?'

'ஊருக்கென்ன. இங்க அடுப்பு எரியுதோ இல்லியோ வயிறு எரியுது எல்லாவனுக்கும். குட்டிய நீ இஞ்ச விளி.'

இளையவள் வந்து வாசலில் நின்றாள். பண்டாரம் அவள் முகத்தைப் பார்த்தார். கன்னம் சிவந்து தடித்திருந்தது. கலங்கித் தடித்த கண்கள்.

'மக்கா வடிவு...' என்றார் பண்டாரம்.

'உம்.'

'நோவுதா மக்கா?'

அவள் கண்களில் கண்ணீர் உருண்டு வந்தது.

'கரயாத மக்கா. அப்பா உன்னய தூக்கி வளத்தவம்லா. ஒரு கோவத்தில அடிச்சிப் போட்டன். செரி போட்டு...'

'ம்'

'உனக்கு கோவமா?'

'இல்ல.'

'குளிக்கப்போன எடத்தில ஒரு செருக்கிப் பயபுள்ள வாயில வந்ததப் பேசிப்பிட்டான் மக்கா. அதாக்கும் ஓடி வந்தேன்.'

அவள் அசையவில்லை. முகம் செப்பு மாதிரி இருந்தது.

'உனக்கு அந்த லாரன்சு பயகூட என்னவாக்கும்?'

‘ஒண்ணுமில்ல.’

‘இங்க பாரு. அப்பாவப் பாரு. எனக்க மொகத்தப் பாத்து சொல்லு.’

அவள் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். தெளிவான கண்கள். தெளிந்த முகம். தாழ்ந்த குரலில் ‘உங்க மேல ஆணையா, முருகன் மேல ஆணையா ஒண்ணுமில்ல அப்பா’ என்றாள்.

பண்டாரத்தின் மனதில் பாரம் விலகியது. ‘உன்ன எனக்குத் தெரியும் மக்கா. இருந்தாலும் ஊருகாரனுக சொல்லியதனால நானும் எளகிப்போட்டேன்...’ என்றார் பண்டாரம் கையை நீட்டி ‘இங்க வா’ என்றார்.

அவள் அருகே வரவில்லை.

‘அவன் பெரிய கேடியாக்கும் தெரியுமா? கொலசேகரம் சந்தயில அவனுக்கு அடிபிடியாக்கும் தொழிலு. செயிலுக்குப் போன பய.’

‘அவன் நல்லா பாட்டு பாடுவான் அப்பா. சினிமாக் கதை சொல்லுவான்.’

‘செரி. அதுக்காக நீ அவனுக்க சினிமாக்கதை கேட்டா நடக்குமா குட்டி. நீ சமஞ்ச குட்டியில்லா? நாளைக்கு ஒருத்தனுக்க கூட பொறுக்கப் போறவள்லா. ஒரு பேச்சு வந்தா பிறவு அழிக்கமுடியுமா?’

‘செரிப்பா.’

‘செரி போ. போயி வெளையாடு.’

‘அப்பனும் பிள்ளையும் கொஞ்சியாச்சா. தட்டான் வாரான்’ என்றாள் ஏக்கியம்மை.

பண்டாரம் உற்சாகமாக எழுந்தார். ‘நீ நல்லதா ஒரு காபி போடுட்டி. வயிறு எரயுது’ என்றார்.

மீனாட்சி ‘அப்பா நான் உங்ககூட சண்டை’ என்றாள்.

‘ஏம்டி?’

‘சண்டை.’

'எதுக்கு குட்டி?'

'நீ எதுக்கு அக்காவ அடிச்சே?'

'இனிம அடிக்கமாட்டன்.'

'இப்பம் ஏன் அடிச்சே?'

'வாங்க வாங்க... ஆசாரியாரே.'

'உருப்படி ரெடியாயிட்டுது. கொண்டு வந்து குடுத்துப் போடலாமுண்ணு வந்தேன். இனி அந்த நெக்லேஸும் எட்டு வளையும் இருக்கு. அது அடுத்த ஞாயறாழ்ச்ச ரெடியாயிடும்.'

'நெக்லஸு ஸ்டைலு மாத்தணுமுண்ணு சொன்னா.'

'ஒண்ணும் மாத்தவேண்டாம். இருக்க ஸ்டைலு மதி' என்றாள் ஏக்கியம்மை.

'உருப்படியள பாத்து எடுங்க. பிள்ளைய போட்டுக்கிட ஆசப் படும். அதுக்காக்கும் முன்ன கொண்டு வந்தது.'

'வந்து பாருட்டி' என்றார் பண்டாரம்.

சுப்பம்மை வந்து பெட்டியை வாங்கித் திறந்தாள். தனித் தனியாக சிவப்புத் தாள்களில் பொதியப்பட்ட நகைகள் புதுப்பொன் சிவப்புடன் இருந்தன.

'எம்பிடுட்டி இருக்கு?'

'எட்டு வளை. செயினு கம்மலு. சரப்பொளி.'

'தூக்கிப் பாருங்க. நல்ல ஆசாரியாப் பாத்து உரச்சும் பாருங்க' என்றார் ஆசாரி.

'அதுக்கொண்ணும் காரியமில்லை. நம்ம பழக்கம் இண்ணைக்கு நேத்தா?'

'இருந்தாலும் பவுனு பவுனுதான். அதுக்க கணக்கு வேற யாக்கும்.'

உள்ளே நகையை பரிசீலிக்கும் பேச்சுகள். பிடுங்க முயலும் சண்டைகள்.

'அப்பா அக்கா அடிக்கா.'

'ஏம்டீ?'

'நகைய பிடுங்குதா அப்பா...'

'ஏட்டி பிடுங்காதே. பொட்டிப்போனா பிறவு ஆருக்கிட்ட சொல்லுயது?'

'பிடுங்கினா ஒண்ணும் பொட்டாது' என்றார் ஆசாரி சிரித்தபடி.

காப்பி வந்தது. ஆசாரி குடித்தபடி 'நெக்லஸில இப்பம் ஆரும் கல்லு வய்க்கமாட்டாக. உருக்கினா நட்டமாக்கும்' என்றார்.

'சொன்னா ஆரு கேக்கா?'

'உருக்கியதுக்கா நெக்லஸ் செய்யுவா? போட்டா களுத்து நிறைஞ்சு தெரியவேண்டாமா? மலையாளத்துச் சவங்கதான் கல்லும் இல்லாம பூவும் இல்லாம உருட்டி உருட்டி போடும்ங்க. நெக்லஸ்ன்னா எரியண்டாமா? கல்லில்லேண்ணா அணைஞ் சுல்லா கெடக்கும்?'

'அவிகளுக்கு தெரியாத்தது இவ சொல்லிக் குடுப்பா' என்றார் பண்டாரம்.

'அப்பா நல்லாருக்கா?' என்றாள் பெரியவள். உடம்பெங்கும் நகைகள். பண்டாரத்திற்கு அவள் வேறு யாரோ போல இருப்பதாகத் தோன்றியது.

'மகாலெச்சுமி மாதிரி இருக்கே அம்மா' என்றார் ஆசாரி.

'மகாலெட்சுமிய நீங்க பாத்திட்டுண்டா?' என்றாள் மீனாட்சி.

'நம்ம தொழிலு பின்ன என்னாண்ணு நெனைக்கே? பெட்ட குட்டியள மகாலெச்சுமிகளா மாத்துத தொழிலாக்கும்...'

'சுத்திப்போடுட்டி' என்றார் பண்டாரம். 'பெத்தவிக கண்ணு பெரும்கண்ணு.'

'ஒரு மாலைய சின்னவளுக்கும் போடுங்க அம்மிணி.'

'ம்ம். அவளுக்கா செய்திருக்கு?' என்றாள் சுப்பம்மை கடும் கோபத்துடன்.

'உங்களுத்தான். கல்யாணம் நடக்க இன்னும் பத்து நாள் இருக்கில்லா? ரெண்டுக்கும் ஒரோண்ணு குடுங்க.'

'குடுக்கமுடியாது. எனக்க நகெ.'

'உனக்க நகை எனக்கு வேண்டாம் போ. நகையா அது? தெங்கு மரத்துக்க வேரு மாதிரி இருக்கு' என்றாள் மீனாட்சி.

'அது அப்படிப்பட்ட சரக்காக்கும். ஒரு சாமான் விட்டு குடுக்காது' என்றார் பண்டாரம்.

'பெட்டக்குட்டிய எங்கும் ஒண்ணு மாதிரித்தான். எனக்கும் உண்டு ரெண்டண்ணம். பெட்டைக இருந்தாதான் வீடு நெறயும். என்ன சொல்றீரு? அதுகளுக்கு போட்டு நிறயாது. நமக்கு செய்து குடுத்தும் நிறயாது...'

'உம்ம தொழிலுக்கு குறவும் இல்ல.'

'அதுபின்ன மகாலெட்சுமி சேவையில்லா?' என்றபடி ஆசாரி எழுந்தார். 'வரட்டா?'

பண்டாரம் நிரம்பி வழிந்த மனத்துடன் அன்று மாலை கோயிலுக்குப் போனார். போத்தி இல்லை. அவரது மருமகன் தான். கோயில் அர்த்த மண்டபத்தின் கீழே அரைமணி நேரம் சும்மா உட்கார்ந்திருந்தார். 'முருகா ஞானபண்டிதா என்னப்பனே. என் மனசு நிறைஞ்சிருக்கே முருகா...' என்று மனம் அரற்றியது.

இரவுக்கு ஏக்கியம்மை மீன் குழம்பு வைத்திருந்தாள். வழக்கத்துக்கு மாறாக அவர் பிள்ளைகளை பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு குழம்பு சேர்த்து பிசைந்து உருட்டி ஆளுக்கு ஒரு கவளம் வீதம் கொடுத்தார்.

பின்னவள் உம்மென்றே இருந்தாள். அவள் புஜங்களைத் தொட்டு 'வலிக்கா குட்டி?' என்றார்.

'ம் ம்.'

'போட்டும். அப்பாதானே குட்டி. எம்பிடு முத்தம் குடுத்திருப்பன்? அதுக்கு சமானமா இருக்கட்டும்...'

'அப்பம் எனக்கும் அடி உண்டா?' என்றாள் மீனாட்சி.

‘உனக்க கையிருப்புக்கு டபிள் அடி உண்டு.’

‘நான் திருப்பி அடிப்பேன்.’

‘ஏட்டி வாய நீட்டாதே’ என்றாள் ஏக்கியம்மை.

‘அவ விஜயலலிதால்லா. எகிறி அடிப்பா’ என்றார் பண்டாரம்.

‘ஏட்டி நகெயெ கழட்டுடி…’

‘போட்டுட்டு படுக்கட்டுமே’ என்றார் பண்டாரம்.

‘கருக்கு அழிஞ்சுபோடும்லா.’

‘கழட்டுதேன்.’

‘கொஞ்சம் கஷ்டம்தான்’ என்றாள் ஏக்கியம்மை. ‘குட்டி நினைக்கா இனி இந்த நகையெ எப்பமும் போடலாமுண்ணு.’

‘ஏன் போடப்படாதோ?’ என்றாள் சுப்பம்மை.

‘அம்பது பவுன் நகையெ போட்டுட்டு அரி வய்ப்பாளா?’

‘ஏன் வய்க்கப்படாதா?’

‘போட்டீ கழுத’ என்றாள் ஏக்கியம்மை.

அன்று சாப்பாட்டுக்குப் பிறகு அந்த நாளைக் கொண்டாட பண்டாரம் முடிவு செய்தார். பெட்டியைத் திறந்து பட்டு துணிகளுக்கும் சொத்து பத்திரங்களுக்கும் அடியில் இருந்து விஸ்கி புட்டியை எடுத்தார். அங்கே அதை வைத்து சில மாதங்கள் ஆகிறது. ஏக்கியம்மை வாசலை மூடினாள்.

‘பிள்ளிய உறங்கியாச்சே…’

‘உறங்கியாச்சு. ஆனா குட்டி எப்பம் எந்திரிக்கும்னு சொல்ல முடியாது.’

‘நீ குடிக்கியாட்டி ஒரு வாயி?’

‘அய்யோ… நாற எளவே…’

‘ஏட்டி அமிர்தமாக்கும் கேட்டியா? உடம்புக்கு நல்லது. சூடு கேறும்.’

அவர் குடிப்பதை ஏக்கியம்மை சற்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'செரி படுங்கோ. இல்லேண்ணா பாட்டும் கூத்தும் எளகி வரும்' என்றாள் ஏக்கியம்மை.

படுத்ததும் பண்டாரத்திற்கு தலை கனத்து அழுந்தியது. மாங் காண்டி சாமியின் ஞாபகம் வந்தது. அவரது பாட்டு கேட்பது போல.

ஏக்கியம்மை உலுக்கியபோதுதான் விழித்துக் கொண்டார். 'எந்திரிங்க. தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டு போயிட்டா...'

'ஆரு? ஆரு...?'

'உங்க மகதான். நான் வெடிகாலம்பற எந்திரிச்சா கதவு சாரியிருக்கு. பாத்தா சின்னவ இல்லை. ஓடிப்போயி அவ முறியில துணிகளை பாத்தேன். துணி இல்ல. பாவி மக மோசம் செஞ்சுப் போட்டா.'

'நகெயப் பாத்தியா?' என்றார் பண்டாரம் பாய்ந்து எழுந்தபடி. 'பெட்டியப் பாரு... பெட்டியப் பாரு...'

பெட்டி திறந்து கிடந்தது. நகைகள், அறுபதாயிரம் ரூபாய் பணம், பட்டுப்புடவை, வெள்ளிக் குத்துவிளக்கு, வெள்ளித் தட்டு... எதுவும் இல்லை.

# 19

பண்டாரம் 'வீட்ட பூட்டிக்கிடுங்கட்டி.. ஆரு வந்தாலும் தெறக்காதீய' என்று கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாக கோயிலுக்கு வந்தார். போத்தி வந்திருந்தார். 'அங்கத்தே ஒண்ணு தனிச்சு காணணுமே...'

'என்னடே?' என்றார் போத்தி. மறுகணமே மெல்ல 'குட்டி போயிட்டாளா?' என்றார்.

'ஆமா அங்கத்தே... ரொக்கம் நகெ ஒண்ணும் இல்ல.'

'அப்பம் இவ பிளான் பண்ணி இருந்திருக்காடே. நகயும் பணமும் வாறதுவரை காத்திருந்திருக்கா.'

'எனக்கப் பிள்ளைய சதிச்சதாக்கும் போத்தியே. எனக்க பிள்ளய ஏமாத்திட்டான்.'

'ஒண்ணும் செய்யமுடியாது. நீ வா. ரெண்டாளுமா போயி போலீஸ்ல ஒரு எளுத்து குடுப்பம்.'

'ஊரு நாறுமே.'

'ஊரு இனிமேதான் நாறணுமோ. வாடே, சட்டையப் போட்டுட்டு வாறன்.'

போத்தி போய் சட்டையைப் போட்டார். ஒரு வாழை இலையில் கோயில் பிரசாதம் பொதிந்து எடுத்துக் கொண்டார்.

ஸ்டேஷனில் எஸ்ஐ இல்லை. ஏட்டு நயினார் பிள்ளையை

போத்தி வணங்கினார். 'வணக்கம் பிள்ளை சார். கண்டிட்டுண்டா?'

'வேலப்பகோயில் சாமியில்லா?'

'ஆமா. சார் பிள்ளைய எப்பிடி, சுகமா?'

'இரியுங்க. இதாரு?'

'இது பண்டாரம். போத்திவேலுண்ணு பேரு. பூ கெட்டுத தொழிலு.'

'என்ன காரியம்?'

போத்தி விரிவாகச் சொன்னார். நயினார் பிள்ளை மீசையை வருடியபடி எல்லாவற்றையும் கேட்டார். 'கொஞ்சம் வெளிய வாறியளா?' என்றார். 'குரிசப்பா டேய்... போன் வந்தா எளுதி வைடே' என்றபடி நடந்தார்.

மணிகண்ட விலாசத்தில் இரண்டு டீக்கு சொன்னார்கள். போத்தி ஒரு நேந்திரம் பழம் சாப்பிட்டார். 'காரியங்களுக்க கிடப்பு மோசம். அந்தப் பய மகா அழுக்கு பார்ட்டி. கைல தொடக் கொள்ளாது. இதே ஸ்டேஷன்ல அவனுக்க சகல ரெக்கார்டும் உண்டு. நான் பிடிச்சு பூசியிட்டுண்டு அவனை. இல்ல போத்திவாள், நமக்கு ஒண்ணு மனசிலாகேல்ல. பய கள்ளன். பாத்தா குள்ளன். ஒரு தரமும் இல்ல. ஆனா வரியத்துக்கு ஒரு பிள்ளை இவனுக்ககூட எறங்கி வருது. என்னெங்கிய?'

'பிள்ளையளுக்கு லவ்வாக்குமே' என்றார் போத்தி. 'கள்வனின் காதலி அப்படீன்னு ஒரு கத உண்டும்... இந்தப் பிள்ளைய வீட்டுக் குள்ள வளருத குட்டியளாக்கும். உலகம் தெரியாது. அவிய பாக்குத ஆம்பிளை பெத்த அப்பன் மட்டும். அப்பனானா இவனை மாதிரி. அங்க போவாத, இங்க போவாத, மக்கா... மக்கா... இதத் தவிர ஒண்ணும் பேசமாட்டான். அப்பம் இவன் வருதான். பாடுகான். பேசுகான். சினிமாங்கான். சர்க்கஸுங் கான். அடிபிடி போலீஸ் ஸ்டேஷன் தின்னவேலி மதுரெ எல்லாம் பேசுகான். விளுந்துபோடும்... அம்பிடுதான் கதெ.'

'இருந்தாலும் வங்கொடும. இது நான் அறிஞ்ச மூணாமத்த கேஸாக்கும்.'

'அவன் பிள்ளைய கெட்டுவானோ?'

'கெட்டியிருப்பான் இந்நேரம். வல்ல கோவிலிலயும் கூட்டீட்டு போயி தாலிய கெட்டுவான். நேரா கன்னியா குமரிக்கோ திருச்செந்தூருக்கோ கூட்டீட்டு போவான். பத்து நாளு பெருமாறுவான். பிறவு இங்க ஒரு வீடு எடுத்து தங்க வைப்பான். பைசா தீரும்பம் சோலியப் பாத்துட்டு போவான். பிள்ளைக்கு வயித்துல ஒண்ணு இருக்கும்.'

பண்டாரம் திடீரென்று விசும்பி அழுதார்.

'இனி என்ன செய்ய?'

'ஒண்ணும் செய்யமுடியாது. கம்ப்ளைண்ட் குடுக்கதில பிரச்சினை இருக்கு. நான் பயக்ககிட்ட சொல்லி தேடுகேன். பய நகெய வேங்கிக்கிட்டு பிள்ளைய விட்டான்னா உம்ம லக்கு.'

போத்தி ஒரு முந்நூறு ரூபாய் எடுத்து வாழையிலையில் வைத்து பிரசாதத்துடன் நயினார் பிள்ளைக்குக் கொடுத்தார்.

'அய்யோ இது எதுக்கு?'

'தட்சிணை மாதிரி இருக்கட்டும்.'

'செரி.'

'வல்ல தகவலும் கிட்டினா நம்ம பஞ்சாயத்து மெம்பர் வீட்டில போன் உண்டு. இருபத்திரெண்டு முப்பத்தெட்டு- விளிச்சா போரும். ஓடிவாறம்.'

கிளம்பும்போது நயினார் சற்று பின்னடைந்து பண்டாரத்திடம் 'நீரு மத்த உருப்படிப் பண்டாரம்லாவே?'

'ஆமா.'

'உம்ம தொளிலு போத்தியங்கத்தைக்கு தெரியுமா?'

'தெரியாது.'

'நல்ல வெளையாட்டுவே. பெரியவரு சொல்லுகாரு. பாக்கேன்' என்றார்.

போத்தி திரும்பி வரும்போது 'பாத்து சொல்லுவான். இல்லாட்டி எஸ்பிகிட்ட சொல்லுவோம். பயப்படாதீரு. எப்பிடியோ தண்ணி தலைக்கு மேல. இனி சாண் என்ன மொழம் என்ன?' என்றார்.

வீட்டில் வாசற்படியில் உண்ணியம்மை ஆச்சி உட்கார்ந்திருந் தாள். 'வா பண்டாரமே. இது என்ன மக்கா? மூணு பேரும் கதவத் திறக்கமாட்டாளுக. வல்லதும் சொகமில்லயா? வடி வம்மை எங்க?' என்றாள்.

பண்டாரம் கிழவியைப் பார்த்தார். 'அவ ஓடிப் போயிட்டா' என்றார்.

கிழவியின் வாய் திறந்தது.

'போருமா? போ. போயி ஊரெல்லாம் தப்புக் கொட்டு, பாடு.'

'நான் என்னத்துக்கு பாடுகேன்...'

'போடி தேவடியா. சவிட்டி குடலை எடுத்துப் போடுவேன்.'

கிழவி வெளியே எட்டிப்பார்த்த ஏக்கியம்மையிடம் 'எனக்க மக்கா, ஒனக்க கதி இப்படி ஆயிப்போச்சே. எனக்க சங்கு நோவுதே' என்று ஆரம்பித்தாள்.

'கதவத் திற குட்டி' என்றார் பண்டாரம். 'போத்திவேலு, டேய் மக்கா' என்றபடி கிழவியும் உள்ளே புக முயன்றாள். பண்டாரம் கிழவியைப் பிடித்து வெளியே தள்ளி உள்ளே கதவைத் தாழிட்டார்.

வெளியே சத்தமில்லை.

'வல்லதும் சாப்பிட்டாளா குட்டி?'

மீனாட்சி 'இல்ல அப்பா' என்றாள்.

'எனக்க மக்கா எங்கே? எனக்க பிள்ளை எங்கே?'

'அவ இனி வரமாட்டா. அவளுக்கு இப்பம் தாலி கேறி யிருக்கும்.' பண்டாரத்திற்கு ஏனோ அபத்தமாக சிரிப்பு வந்தது. 'மாங்கல்ய பாக்கியம் உள்ள குட்டியாக்கும்... ஹெ ஹெ ஹெ...' பயங்கரமாகச் சிரித்தார். கண்களில் நீர் வழிந்தது.

'என்னெங்கியோ? இதென்ன நீக்கம்பு...?' என்றாள் ஏக்கி யம்மை.

'அவ போயாச்சு குட்டி. பெத்த அப்பனும் அம்மையும் அவ ளுக்கு குண்டி மயிருக்கு சமம். தெரியுமா?'

ஏக்கியம்மை ஒரு மூலையில் அமர்ந்து 'எனக்க மக்கோ' என்று தலையிலடித்து அழுதாள்.

போத்திவேலுப் பண்டாரம் அரங்குக்குப் போய் கட்டிலில் அமர்ந்தார். வெகுநேரம் மனம் அர்த்தமின்றிக் கொந்தளித்தது. பிறகு மெல்லத் தணிந்து ஒருமுறை பொடி போட்டார்.

'அக்கா எங்க குட்டி?'

'அறயில இருக்கா.'

'என்ன பண்ணுதா?'

'கெடக்கா.'

'நீ வல்லதும் குடிச்சியாட்டி?'

'காப்பி குடிச்சன்?'

'காப்பி ஆரு போட்டது?'

'நான் போட்டன்.'

பண்டாரம் உலையைப் பார்த்தார். ஒரு பெரிய குண்டான் நிறைய காப்பி இருந்தது. பேப்பரைப் பற்ற வைத்து அடுப்பை மூட்டினார்.

'ஏம்ட்டி இம்பிடு காப்பி போட்டே?'

'வெள்ளம் கூடிப்போச்சு அப்பா. பிறவு நிறைய கருப்பட்டி போட்டேன். பிறவு காப்பி பொடி. பிறவு கருப்பட்டி...'

'செரி செரி.'

சூடான காப்பியை எடுத்து 'அம்மைக்கு கொண்டு போய் குடு குட்டி' என்றார்.

'அம்மை குடிக்கமாட்டா.'

'குடிப்பா. கொண்டுபோயி பக்கத்தில வையி. அக்காவுக்கும் குடு.'

பண்டாரம் குண்டான் நிறைய கஞ்சி காய்ச்சினார். ஹார்லிக்ஸ் புட்டி நிறைய ஊறுகாய் இருந்தது.

'குட்டி, கஞ்சி குடி என்ன. அம்மைக்கும் குடு. ஆரு வந்தாலும் கதவு திறக்கப்பிடாது. கேட்டியா?'

வீட்டை வெளியே பூட்டிக்கொண்டு நேராக நாகர் கோவிலுக்குப் போனார். அகமதும் ராமப்பனும் குய்யனும் கொல்லங் கோட்டுக்குக் கொண்டு போகப்பட்டிருந்தார்கள். நாகராஜா கோயில் முகப்பில் பெருமாள் மட்டும்தான் இருந் தான்.

'பெருமாளு நான் ஓரிடத்துக்கும் வரமுடியாதுடே. எல்லாம் உனக்க ஏற்பாடு' என்றார் பண்டாரம்.

'என்ன மோலாளி?'

பண்டாரம் விஷயத்தைச் சொன்னார். ஒருமுறை விரிவாக எல்லாவற்றையும் சொன்னபோது அவருக்கு ஒரு நிம்மதி ஏற் பட்டது. எல்லாம் ஒரு கதையாக மாறிவிட்டதைப் போலி ருந்தது. அந்தக் கதை ஒருவிதமான தெளிவுடனும் தர்க்கத் துடனும் இருந்தது.

'மோலாளி அவளை இனி விளிச்சுக்கிட முடியாது. ஒரு ஆணாப் பொறந்தவனை நம்பிப் போட்டா. இனி அடியும் சவிட்டும் கொண்டாலும் சீரழிஞ்சாலும் திரும்பி வர மாட்டா' என்றாள் எருக்கு.

பண்டாரம் பெருமூச்சு விட்டார். பகல் முழுக்க நாக ராஜா கோயில் முகப்பில் உட்கார்ந்திருந்தார். ஒரு முறை சாமி கும்பிட வந்த நினைவு தோன்றியது. மீனாட்சிக்கு காது குத்திய மறுநாள். குழந்தை சிணுங்கியபடியே இருந்தது. பெரியவர்கள் இருவருக் கும் முதல் பட்டுப் பாவாடைகள் தைத்த நாள். இருவருக்கும் சுழன்று சுழன்று திருப்தி வரவில்லை. தன்னுடைய பாவா டையை விட மற்ற பாவாடை கூடுதல் தரமானதா என்று ஓயாத சந்தேகம். மாறி மாறி பிடித்துப் பிடித்துப் பார்த்தார்கள். ஓடி னார்கள். 'ஏட்டி ஓடாத. ஓடாதட்டீ...' என்று ஏக்கியம்மை கத்திக் கொண்டே இருந்தாள்.

பண்டாரத்தின் மனம் கரைந்து கண்ணீர் கொட்டியபடியே இருந்தது. தூணில் சாய்ந்து விசும்பி விசும்பி அழுதார். அந்த நாட்கள் எல்லாம் உண்மையிலேயே இருந்தனவா, கனவுதானா? திரும்பி அந்த நாட்களுக்குப் போகமுடியுமா? ஒரு கவலையும் இல்லை. கை நிறையப் பணம். குதூகலமான பிள்ளைகள்.

பண்டாரத்திற்கு ஒன்று தோன்றியது. எந்த மனிதன் ஆனாலும் அவனுக்கு வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான காலம் குழந்தைகள் வளர்ந்து வரும் காலகட்டம்தான். பிறகுதான் பிரச்சினைகள் சிக்கல்கள்.

பெருமூச்சுடன் எழுந்தார். அந்த நாளை சின்னவள் நினைவு கூர்வாளா? 'பாவி பாவி பாவி' என்று மனம் அரற்றியது. உள்ளே போய் சாமி கும்பிடவும் தோன்றவில்லை. நேராக ஆட்டோ பிடித்து பஸ் ஸ்டாண்ட் போனார். பஸ் பிடித்து கோயில் விலக்கில் இறங்கி நடந்தே போனார்.

எதிரே வந்த அச்சுதன்குட்டி 'எந்தா பண்டாரமே விசேஷம்?' என்றான். 'மகளைப் பற்றிக் கேட்டு...'

பண்டாரம் தலையைக் குனிந்து ஒன்றும் பேசாமல் நடந்தார். கிருபாகரன் தம்பி எதிரே வந்தார். சண்முகக்கண் நாடார் விசாரித்தார். யார் என்ன கேட்கிறார்கள் என்பதே காதில் விழவில்லை.

குளத்தின் அருகே வந்து நின்றார். நீல நீர் நிரம்பிய விரிவின் மீது காற்று சுழன்று வந்து உடம்பைத் தொட்டது. மென்மையான குளிர்ந்த காற்று. ஒரு கொக்கு நீர்ப்பரப்பின் மீது பறந்து சென்றதைப் பார்த்தபோது ஒரு கணம் அவர் மனமும் அதனுடன் இணைய, அபூர்வமான ஒரு நிம்மதி ஏற்பட்டது. ஒன்றுமே இல்லை என்று பட்டது. எதற்காக இது? ஒன்றுமில்லை. அவளுக்குப் பிடித்ததுபோல வாழ அவள் போகிறாள். அவளு டைய வாழ்க்கை. சிறகு முளைத்த பறவை பறந்து போகிறது.

வீட்டு வாசலில் உண்ணியம்மை ஆச்சி உட்கார்ந்திருந்தாள்.

'வாடே போத்திவேலு. உள்ள போட்டு பூட்டிட்டாடே போவ? என்னடே செயிலா? இம்பிடு சாம்பாரு கொண்டு வந்து குடுக்கலாமின்னு வந்தேன்.'

பண்டாரம் கதவைத் திறந்ததும் கிழவி 'ஏக்கியம்மோ மக்கா' என்று கூவியபடி உள்ளே நுழைய முயன்றாள். அவளைத் தள்ளி கதவை மூடினார். அவள் வெளியே நின்று கதவைத் தட்டி 'என்னம்பா அக்குறும்பா இருக்கு? ஏம்டே போத்திவேலு, மூத்தவளயும் காங்கலியே? அவளும் சேந்து போயிட்டாளா? இப்பளத்த காலமுல்லா? குட்டிக எவன் கிட்டுவான்னுல்லா அலையுது?' என்றாள்.

பண்டாரம் பெருமூச்சுடன் சட்டையைக் கழற்றினார்.

'பண்டாரம், நீ பைசாவ வேங்கிட்டு குட்டிய ஏறக்கி விட்டேண்ணாக்கும் ஊரில பேச்சு பாத்துக்கோ. உருவ விக்குத பய பெத்த பிள்ளைய வித்துட்டாண்ணு சொல்லுகா. நான் சொன்னேன், நாம ஒரு அநியாயம் சொல்லப்பிடாது. ஆருக்கும் சங்கு நோகுத பேச்சு நாம பேசப்பிடாது. அப்பிடி வித்தா அவனுக்க பாடு. அவன் பெத்த பிள்ளை, அவன் விப்பான், நாம கேக்குயதுக்கு ஆரு?'

பண்டாரம் கோபத்துடன் கதவைத் திறக்கப் போனார். கட்டுப்படுத்திக்கொண்டார்.

மீனாட்சி வந்தாள்.

'அம்மா எங்க குட்டி?'

'கெடக்கா.'

'கஞ்சி குடிச்சாளா?'

'குடிச்சா.'

'செரி. நீ எனக்கு குறெ காப்பி எடு.'

சட்டையைக் கழற்றிக்கொண்டிருந்தபோது வெளியே யாரோ தட்டும் ஒலி. இடுக்கு வழியாகப் பார்த்தார். தரகன் நாயர்.

தயங்கியபடி கதவைத் திறந்தார். நாயர் குடையைத் தூக்கிக் கொண்டு தலைகுனிந்து நின்றார்.

'உள்ள வாரும்வேய்.'

பேசாமல் வந்து அமர்ந்து ஒருகணம் பெருமூச்சு விட்டார். குடையை நாற்காலி கையில் மெதுவாக மாட்டினார்.

பண்டாரம் பேசாமல் அமர்ந்திருந்தார்.

'அவங்களுக்கு வலிய துக்கம்' என்றார் நாயர் சட்டென்று, சாதாரணமாக. 'அங்க ஒரே பெகளம். கிளவி நிக்குத நிலை சில்லரையில்ல.'

'ம்ம்.'

'என்னவாக்கும் சங்கதி?'

'நீங்க கேட்டதுதான்.'

'உள்ளதா?'

'ஆமா.'

'போலீஸில சொல்லி குட்டிய கூட்டிட்டு வர வேண்டாமா?'

'போலீசுக்கு வேற வேலயில்லியா? குட்டி எங்க இருக்காண்ணு ஆருக்கு தெரியும்? செத்த பிணம் மூணாம் நாளு மேல வரும்...'

'அப்பிடியெல்லாம் சொல்லப்பிடாது. என்ன இருந்தாலும் ஒரு மங்கள காரியம். பழைய காலத்தில்கூட கந்தர்வ விவாகம் உண்டே. செரி. அவனும் சத்திரியன். நடந்தது நடந்து போச்சு. போட்டு.'

'ம்ம்.'

'அவங்களுக்கு ஒரு சம்மல். இப்படி ஆயிப்போச்சே எண்ணு. மூத்தவ எப்பிடி மரியாதைக்காரியா எண்ணு என்கிட்ட முப்பதஞ்சு தடவ கேட்டாச்சு.'

'இனி ஆரும் என்னமும் சொல்லலாமே எனக்க பிள்ளயப் பத்தி.'

'பண்டாரம், எல்லாருக்கும் பிள்ளை இருக்குவே. எல்லாருக்கும் விதின்னு ஒண்ணு இருக்கு.'

'முருகன் விட்ட வழி.'

'அது நியாயம். சும்மா பாரத்த தூக்கி அப்பிடியே அவன் மேல போட்டிடணும். மனசு ஒடையப்பிடாது.'

'கல்லியாணத்தில ஒரு பிரச்சினையும் இல்லல்லா?' என்றாள் ஏக்கியம்மை எட்டிப்பார்த்தபடி.

'பிரச்சினை இல்லேன்னு சொல்லப்பிடாது.''

'என்ன பிரச்சினை?'

'அவிகளுக்கு இப்பம் பெரிய இஷ்டம் இல்லை. பிறவு யோசிக்கலாம்னு ஒரு நினைப்பு. வேற ஒரு ஆலோசனையும் உண்டு.'

'நாயரே நாங்க போயி காலு பிடிக்கம். இந்த நேரத்தில இது முடங்கினா எங்கிளுக்கு அரமுழம் கயிறாக்கும் கெதி' என்றாள் ஏக்கியம்மை.

'நான் நல்லவிதமா பேசினேன். மசியமாட்டாவ. பின்ன ஒரு வழி உண்டு. தெளிச்சு சொல்லுதேன். அந்தப் பெண்ணாப் பிறந்தவ தனி. பணப்பிசாசு. பணம்னா பிணமா வாய தொறப்பா. பேசாம ஒரு லெச்சம் கூட்டி பேசிப் பாக்கலாம்.'

'ஒரு லெச்சமா?' என்றார் பண்டாரம்.

'இல்ல, ஒரு பேச்சுக்கு சொல்லுதேன். எப்பிடியும் நீங்க சின்னவளுக்கு அவளுக்கு உண்டானதை செய்யணுமே. இப்பம் அது மிச்சம்தானே? அந்தக் கணக்கு இங்க தீரட்டும். பின்ன கல்யாணம் இனிமே பெரிசா செய்ய முடியாது. திர்ப்பரப்பு கோயிலிலே எளுப்பமா முடிப்பம். அதில மிச்சம் வாற பைசா ஒரு முப்பதாயிரம். அதையும் கையிலே குடுத்துப்போடுவம்...'

'ஒரு காரியம் நாயரே' என்றார் பண்டாரம். 'இது நீரு சொல்லு யதா, இல்ல அவா சொல்லி அனுப்பினதா?'

நாயர் 'நான்...' என்றார்.

'உள்ளத சொல்லணும்.'

'சரி. அவா சொல்லி அனுப்பினதுதான்.'

'அந்தப் பயல் என்ன சொன்னான்?'

'அவன் வாயில்லா பிள்ளை.'

'தரமுடியாது. கல்லியாணம் நடக்கவேண்டாம். நட்டெல்லு இல்லாத்த தாயளிக்கு பெண்ணு குடுக்க முடியாது, போய் சொல்லும்.' பண்டாரம் எழுந்தார்.

'இருங்க நாயரே' என்றாள் ஏக்கியம்மை. 'ஒண்ணே கால் லெட்சமுண்ணா அப்பிடி நாங்க குடுக்கம். கல்லியாணம் தேதி மாறப்பிடாது.'

'ஏக்கியம்மை...' என்றார் பண்டாரம்.

'சும்மா கெடக்கேளா? நானும் எனக்க பிள்ளையளும் கயிறில தொங்கணுமா?'

பண்டாரம் பேசாமல் நின்றார்.

நாயர் 'அப்பம் கதை அப்பிடி' என்றார். 'இனிமே நான் செரியாக்கு வேன். ஒரு கவலயும் படாம இருங்கோ. சாய உண்டா?' என்றார்.

'பால் இல்ல.'

'அதும் செரிதான். இப்பம் இருட்டியாச்சு. இதுக்கு மேல எங்க காப்பியும் சாயயும். சாப்பிட்டுட்டு படுக்க நேரம்.'

'கஞ்சிதான் இருக்கு' என்றாள் மீனாட்சி. 'அப்பா வச்சது.'

'கஞ்சி சரீரத்துக்கு பஸ்டாக்கும்' என்றார் நாயர். 'நான் ராத்திரியானா கஞ்சிதான் குடிக்கது. மாங்கா இல்லெங்கில் நாரங்கா ஊறுகா உண்டுமானா அமிர்தமாக்கும்.'

குண்டானில் எஞ்சிய கஞ்சியை முழுக்கக் குடித்துவிட்டு இருநூறு ரூபாய் படித்தரமும் வாங்கி நாயர் கிளம்பிப் போனார்.

வாசலைச் சாத்தப்போகும்போது 'மக்கா ஒரு காரியம்' என்று உண்ணியம்மை ஆச்சி ஓடி வந்தாள்.

பண்டாரம் கதவைத் சாத்தவில்லை. 'வாருங்க ஆச்சி.'

'ஏக்கியம்மை... எனக்க மக்கா. என் சங்கு எரியுதுட்டீ. ஒனக்கு இந்த கெதி வந்துப்போட்டே. போட்டும் மக்கா. நீ கரயாதே. நாங்கல்லாம் உண்டுல்லா? இந்தக் கல்லியாணம் முடங்கினா போவுது. பிள்ளை நம்மகிட்ட இருக்கே. பிள்ளை தங்க நிறம்லா? நல்ல பையனாப் பாத்து கெட்டிக் குடுக்கலாம். செரி, நடந்த கதை நடக்கட்டு. இன்னி ஒரு நொண்டியோ முடமோ ஒண்ணும் பாக்க வேண்டாம். பாத்து கெட்டிக் குடுக்கலாம். இதுக்கா கரயுதே?' குரலைத் தாழ்த்தி 'வல்லதும் பற்றியிட்டுண்டுண்ணா சொல்லுட்டி. ஆளிருக்கு' என்றாள்.

ஏக்கியம்மை புன்னகைத்தாள் 'கல்லியாணம் வைகாசி ஒடுக்கம் தான் ஆச்சி. திர்ப்பரப்பு மகாதேவர் கோயில்ணாக்க அவிகளுக்கு சவுரியம்னு சொன்னாக...' என்றாள். தலைமயிரை சுற்றிக் கட்டியபடி 'அடுப்பில வெள்ளம் கேற்றுட்டி... இருட்டியாச் சுல்லா' என்றாள்.

'அவிகளுக்கு காரியம் தெரியாதோ?' என்றாள் கிழவி குழப்பமாக.

'தெரியாம! நீங்கள்லாம் என்னத்துக்கு இருக்கியோ?'

கிழவி வாயடைத்து நின்றாள். முகவாயில் கை ஏறி விட்டது.

'ஏக்கி, நான் கோயிலு வரெ போயிட்டு வாறேன்' என்றார் பண்டாரம்.

'தட்டானைப் போயி பாத்துட்டு வாருங்க. காலம்பற வந்தா டிசைன குடுத்துப் போடலாம்.'

'நீ என்னம்பா பேசுகே? நான் இண்ணி தேதிவரை ஒருத்தருக்கு ஒரு கெடுதல் நினைச்சிட்டில்ல. உன்னாணை ஏக்கி... நான் ஒரு ஆளிட்ட கெடுத்து ஒரு சொல்லு சொன்னதா நீ கேட்டேண்ணாக்க என்னைய, இப்பிடி- இப்பிடி கூப்பிடு.'

பண்டாரம் சிரித்தபடி படியிறங்கினார்.

# 20

*ப*ண்டாரத்தின் உருப்படிகள் ஆற்றிங்ஙல், கொல்லங்கோடு, கூட்டாலுமூடு என்று சிதறிக்கிடந்தன. கொல்லங் கோட்டில் கொடி இறங்கிய பிறகு அனைத்தையும் திரட்டி ஆற்றிங்ஙலுக்கு கொண்டுவர வேண்டும். கொல்லங் கோட்டில் குமரேசனும் அவன் மனைவியும். கூட்டாலு மூட்டில் வண்டி மலை. ஆற்றிங்ஙலுக்கு பெருமாள் வந்தபோது துணைக்கு ஆள் இல்லை. இரண்டாம் நாள் பீடி வாங்க உதவிய சிண்டன் நாயர் அவனுடன் இணைந்து கொண்டான். 'கிரியத்து நாயராணே' என்று தன் பெயரை சொன்னதன் தொடர்ச்சியாகச் சொன்னான். ஒருகால் ஊனம், ஒரு கை கோணல். மொத்த உடலே குடை சாய்ந்திருக்கும். ஆனால் உடம்பெங்கும் எலும்பான, அசாதா ரணமான பலமுள்ள ஆசாமி. எதையும் செய்யக் கூடியவன் என்று பெருமாள் புரிந்துகொண்டான். பழக்கடைக்காரனிடமிருந்து விழுந்து சாக்கடைக்குப் போன ஆப்பிளை எடுத்து குழாய் நீரில் கழுவி அவன் சாப்பிட ஆரம்பித்ததைப் பார்த்ததுமே பெருமாள் கணக்குப் போட்டு விட்டான்.

பெருமாள் முதல்நாள் வேலையாக எருக்கை மலம் கழிக்க உதவச் சொன்னான். சிண்டனுக்கு யோசனையே இல்லை. சட்டென்று அவளைத் தூக்கி கீழே ஒரு தாளை விரித்து தன்மீது சாற்றி உட்கார வைத்தான். எருக்கு அவனைத் திட்டி நொறுக்கினாள். அவளைப் பிற ஆண்கள் தொடுவதை, அதுவும் பெருமாள் முன் தொடுவதை அவளால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. 'எரணம் கெட்டவனே, நீயெல்லாம் ஒரு மனியனா? கெட்டினவளை ஒருத்தன் தொட்டு பிடிக்கான்...

பீடியா பிடிக்கே பீடி? நீ நாசமத்துப் போவா. பேதில போவா. எட்டு காலிலே போவா...' என்று சொல்லி 'தூவ்' என்று துப்பினாள்.

பெருமாள் 'நீ இப்ப வேங்குவே' என்று மகிழ்ந்து சொன்னான்.

சிண்டன் அதைப் பொட்டலம் கட்டி இன்னொரு தாளில் பொட்டலத்தை மீண்டும் கட்டி சாலையோரமாகப் போட்டு விட்டு வந்தான். 'வல்லவரும் எடுத்தோண்டு போட்டே சேட்டா' என்றான்.

'தொடச்சு விடுடே' என்று பெருமாள் நக்கலாகச் சொல்ல சிண்டன் யதார்த்தமாக எருக்கை அணுக அவள் வெறிகொண்டு கெட்ட வார்த்தைகளை இறைத்தபடி மண்ணை வாரித் தூற்றி னாள்.

சிண்டன் மண்ணைத் துடைத்தபடி 'சவத்தினு பிராந்தாணே' என்றான்.

ஆற்றிங்ஙலில் பெருமாளுக்குரியதாக பதினேழு உருப்படிகள் கிடந்தன. முத்தம்மையும் குழந்தையும்தான் முதலில். வசூலில் ரஜனிகாந்த்தான் முதலிடம். 'அது பின்ன சூப்பர் ஸ்டாராக்குமே' என்றான் பெருமாள்.

ரஜனிகாந்த் சக்கரவட்டம் போடும் ஸ்டைல் பரவலாக ரசிக்கப்பட்டது. பயல் தொப்பையும் ஒற்றை புஜமும் ஒற்றைத் தொடையுமாக பயங்கரமாகக் கொழுத்து, மடிப்புகளுடன் கெட்டியாக இருந்தான். தன்னருகே போகும் கால்களைப் பார்த்து 'ங்கேய், ங்கேய்' என்று கூப்பிட்டான். வாயில் மேலும் கீழும் சிறு பற்கள் வந்துவிட்டன. பக்கத்தில் இருந்த மயில்சாமி தன் கம்பை நீட்டி அதன் நுனியை ரஜனிகாந்த் வாயில் வைப்பான். அதில் உள்ள மண் ருசி பயலுக்குப் பிடிக்கும். கறம்பி நக்கி வெளுக்க வைத்துவிடுவான். வாய்க்குள் எந்நேரமும் கூழாங்கல் இருக்கும்.

இடும்பி நாராயணி முத்தம்மையிடம் சொன்னாள். 'நின்ற செறுக்கனு ஒரு பிரஸ்னமும் இல்ல முத்தம்மே, அவன் கல்லும் மண்ணும் திந்நு ஜீவிச்சோளும்.'

'எண்ணெண்ணு சொல்ல அக்கா. பயலாலே ஒரு வேளை நிம்மதியா உறங்கமுடியல்ல. எந்நேரமும் ஆதாளி. இம்பிடு

கண்ணை மூடினா உடனே அய்யோ அப்போன்னு நெலவிளி. ஒண்ணும் சொல்லாண்டாம்' என்றாள் முத்தம்மை அலுப்புடனும் பெருமிதத்துடனும்.

'சொடியுள்ள பயலாக்கும்' என்றான் மயில்சாமி. 'கிண்ணனுல்லா. பிலேய் ரசனீகாந்து... பிலேய் மாக்ரிக் கண்ணா...'

'மாக்ரிக்கண்ணன் உனக்க மத்தவன். ஓய் வயசாளீன்னு பாக்கமாட்டேன்' என்றாள் முத்தம்மை சீற்றத்துடன்.

'சும்மா விளிக்கேம்டி...'

'பல தடவ உம்மட்ட சொல்லியாச்சு. பயலுக்கு பேரு இருக்குல்லா நல்ல மாராசாப் பேரு... கேட்டியா அக்கா. என்ன பேரு போட்டாலும் இந்த பேதீல போற பிச்சக்கார கபோதிய வேற பேரு போட்டு விளிக்கானுவ. பிறவு விளிப்பேரு நிக்கும். நல்லபேரு பெத்த அம்மைக்கே மறந்துபோயிரும்.'

'விளிக்கியதுக்கு ஒரு பேரு வேணும். அம்பிடுதானே.'

'நான் உம்மை வேறு பேரு சொல்லி விளிக்கட்டா வோய்' என்று முத்தம்மை பெண் உறுப்பின் பேரைச் சொன்னாள்.

'விளி விளி. அப்பிடியெங்கிலும் ஒரு யோனிப் பிரசாதம் இருக்கட்டு' என்று மயில்சாமி குலுங்கிச் சிரித்தான்.

'சாவமாட்டேரா?' என்றாள் முத்தம்மை.

ரஜனிகாந்துக்கு சிவப்பு நிறச் சேலைகள் பிடிக்கும். அவை வெயிலில் ஒளிவிட்டபடி கடந்து சென்றால் 'ஆய்ங்' என்று அடிவயிறால் ஒலியெழுப்பியபடி பாய்வான். அவன் கையில் ஒரு புடவை சிக்கியது. அதை இழுத்து வாய்க்கு கொண்டுபோக முயல அந்தப் பெண் பதறி 'அய்யோ' என்று விலக ரஜனிகாந்தும் கூடவே போனான். 'அய்யோ இவிடெ நோக்கே...' என்று அந்தப்பெண் கூக்குரலிட அவள் கணவன் ரஜனிகாந்தை உதைத்தான். பயல் வீரிட்டலறியபடி வட்டமாக சுழன்று வந்து விழுந்தான்.

'இவிடெ சோதிக்காணும் பறயாணும் ஆளில்லே? ஆளுகள்க்கு வழி நடக்கண்டே? கண்ட பரட்ட தமிழம்மாரே கொண்டுவந்து கெடத்தியிட்டு...' என்றான் அவன்.

‘போ சாறே, கொச்சு பிள்ளதானே?’ என்றாள் முத்தம்மை.

‘வரு. நமக்கு போகாம்’ என்றாள் அந்தப் பெண்.

‘சாறே, ஞான் மலையாளியாணே. நம்பூரிச்சியாணே. தர்மம் தரணே’ என்றாள் இடும்பி.

அந்த ஆள் நேராக போலீஸிடம் போய் ஏதோ கத்தினான். அந்தப் பெண் இழுத்தாள்.

ரஜனிகாந்தின் வாயில் கைத்தடி திணிக்கப்பட்டதும் அவன் உற்சாகமடைந்து காலை ஓங்கி உதைத்தான்.

‘அங்களம் முடிஞ்ச பாவி’ என்றாள் முத்தம்மை. ‘பிள்ளய சவிட்டுதானே.’

‘அவனுக்கு அவன் பிள்ளைதான் பிள்ளை’ என்றாள் இடும்பி. ‘எனிக்கு வெளுத்த பிள்ளையப் பாத்தா பிள்ளை மாதிரி இல்லடீ. முட்டாயிப் பொம்மை மாதிரி...’

ரஜனிகாந்த் காலை ஓங்கி உதைத்து பிருஷ்டத்தை அந்தரத்தில் எழுப்பி குப்புற வந்து புழுதியில் நீந்தி பக்கத்து எலும்பனின் திருவோடை நோக்கிப் போனான்.

‘பயலுக்கு நல்ல கொலுசு வாங்கணும் அக்கா. நான் பைசா வச்சிருக்கேன். அலுமினியம் கொலுசு அஞ்சு ரூபாய்க்கு கிட்டுமா?’

‘இப்பம் வாங்காத. ஆனை வெலை சொல்லுவான். திருவிழா முடியட்டு. அப்பம் தணிஞ்சு வருவான்.’

‘இப்பம் போட்டா நாலாளு பாப்பாங்க.’

‘உனக்க பிள்ளை எப்பமும் படியிலதானே கிடக்கு’ என்றான் மயில்சாமி.

‘இப்பம் திருவிழால்லா?’

‘எலெய் மாக்ரிக்கண்ணா ஒனக்கு கொலுசு வேணுமாடே?’

‘மாக்ரிக்கண்ணன் உனக்க... கிழட்டு மண்டயா.’

அதற்குள் எலும்பனின் திருவோடு சில்லறைகளுடன் சரிந்தது. ரஜனிகாந்த் வெற்றிக்குரல் எழுப்பினான். அப்படியே திருவோட்டைத் தூக்கிச் சுழற்றினான்.

'அய்யோ... என்ற பைசா...'

'இரிடே எலும்பா பெறக்கி தாறேன். கெடந்து கீறாதே...'

'முத்தம்மே நின்ற மகன் பிடிச்சு பறிக்காரனாணு. கொள்ளைக் காரன்.'

'அவன் வீரப்பன்லா?' என்றான் மயில்சாமி.

இடும்பி பயலின் வாயில் கையைவிட்டு ஒரு பைசாவை எடுத்து வெளியே போட்டாள். பயல் அதை சற்றும் விரும்பாமல் 'கியேவ்' என்று அழ மயில்சாமி தன் ஊன்றுகோலை அவன் வாயில் திணித்தான். அதைப் பிடித்துத் தள்ளிவிட்டு கதறினான். மயில்சாமி குச்சியை மண்ணில் இருமுறை தேய்த்து விட்டு பயலின் வாய்க்குள் செருக அவன் உதடுகளை நீட்டி சப்புக் கொட்டினான்.

முத்தம்மை கையை நீட்டி பயலின் கால்களை வருடினாள். 'எனக்க பய எம்மே பீயேக்காரனாக்கும். காலு வளியா டவுசரு இட்டுக்கிட்டு போறவனாக்கும். கண்ணாடி வச்சுக்கிட்டு குடயும் வச்சுக்கிட்டு போறவனாக்கும்' என்றாள்.

மயில்சாமி 'பீயேக்காரா, எம்மேக்காரா, எரப்பாளிப் பயலே, டவுசருகாரா, கண்ணாடிக்காரா, உவ்வுவ்வே' என்று பயலைக் கொஞ்சினான்.

'நல்ல லெச்சணமுள்ள சிரிப்பு கேட்டயா முத்தம்மே' என்றான் பக்கத்து வரிசை சண்முகம். 'பய ஐசரியம் உள்ளவனாக்கும்.'

முத்தம்மை மகிழ்ந்து உடல் குலுங்கச் சிரித்து 'அய்யோ கண்ணு வச்சிட்டியா? என் ராசாவ கண்ணு வச்சிட்டியா?' என்றாள்.

சிண்டன் நாயர் கையில் டீத்தம்ளர்களுடன் குடை சாய்ந்து போனான். யாரோ ஒரு பிச்சைக்காரன் 'ஆட்டுக் குட்டி முட்டை யிட்டு கோழிக்குட்டி வந்ததிண்ணு ஆனைக் குஞ்சு சொல்ல கேட்டு...' என்று பாடினான்.

'நின்றம்மேட தேங்ஙா' என்றான் நாயர் காற்றில் ஊசலாடிச் சென்றபடியே.

பெருமாள் 'கொண்டு வாடே. மயிரு நடயில்லா நடக்கான்' என்றான்.

'தா வர்ம்பூ. சரசதியே சாய வேணுமோடீ?'

'சீ போலே. பட்டிப் பரநாறி' என்றாள் எருக்கு.

'உனக்கு என்னத்துக்கு தீனம்? அவன் உன்னைப் பாத்தா எளகுதானே' என்றாள் பாப்பம்மை.

'அவனும் அவனுக்க சிரியும். தீட்டம் கண்ட பட்டி மாதிரில்லா சிரிக்கான்.'

'உனக்கு கெறுவு.'

'அவிகளை ஒருக்கா ஒத்து கிட்டட்டு. ஒரு நல்ல வாக்கு சொல்லிப்போடுதேன். பின்ன இந்தப் பெய இங்க இருக்க மாட்டான். நொண்டிக் கழுவேறிட மோன். தூ...'

சாயா குடித்துக்கொண்டிருக்கும்போது பண்டாரம் வந்தார். அக்குளில் தோல் பை. 'என்னடே பெருமாளு. எப்பிடி ஓடுது?'

'குறவில்ல மோலாளி. கொள்ளாம்.'

'எப்பிடி?'

'மொத்தம் பதினெட்டாயிரம் வசூலுண்டு. செலவு போக' என்றான் பெருமாள்.

பண்டாரம் தன் குறிப்பு நோட்டை விரித்து குறித்துக் கொண்டார்.

'ஆறு நாளுக்கு பதினெட்டாயிரம்ணாக்க அம்பிடு கோளு இல்ல கேட்டியோ.'

'கூட்டம் இன்னிதானே கேறும். பயல் நல்ல கலெக்சனாக்கும். கூட்டாலுமூட்டில எப்பிடி?'

'போவுது. ஒண்ணு ரெண்டு உருப்படிகளை விக்கணுமிடே.'

'என்னவாக்கும் இப்பம்? கலெக்சன் கேறிவார நேரம். ஆடியிலல்லா அம்மன் கோயில் கலெக்சன்?'

'செரிடே. எனக்கு பணமில்லாம முடியாது. கலியாணத்துக்கு இனி எட்டு நாளாக்கும் கெடக்கு. ஒண்ணும் திகயல்ல. போட் ட்து போட்ட மாதிரி கெடக்கு.'

'மோலாளி, மோலாளிக்க மகளுக்க காரியம் ஒண்ணு கேட்டேனே. குட்டி இப்பம் இங்கதான் இருக்கா.'

பண்டாரம் குபுக்கென்று பொங்கி வந்த கண்ணீரை அடக்கப் பாடுபட்டார். மூக்கு விரிந்து விரிந்து அடங்கியது.

'பாறசாலை மகாதேவர் கோயிலுக்கு வடக்கால. ஒரு பெரிய புளிமரம் உண்டு. அடியில ஒரு அடிபம்பு. அதுக்கு மூணாமத்த வீடு. பச்சை பெயிண்ட் அடிச்ச ஓலைக்கூரை வீடு' என்றான் பெருமாள். 'நான் பாக்கல்ல. நம்ம எரயும்மன் பாத்தான்.'

'செரி போட்டு. நம்ம கச்சவடத்துக்கு என்னமாம் வழியுண்டா?'

'இஞ்ச மத்த உருப்படிய விக்கமுடியாது. முத்தம்மைக்கும் குட்டிக்கும் விலயுண்டு. இருவத்தஞ்சு வரை போவும்.'

'மயில்சாமி போவுமாடே?'

'கிழட்டு சரக்குல்லா. அஞ்சு போனா அதிகம்.'

'ஒரு அம்பது தேறணும்டே. அங்க நாலு கெடக்கு. பாரு. மேலைக்கல் கேசவன் வந்தானா?'

'நேத்து வந்தான். இப்பம் அவன்லா அடிச்சு கேறுதான். ஆற்றுகால் பள்ளியில எட்டு போட்டிருக்கான். இங்க முப்பது உருப்படி.'

'நேத்து டவுசரு போட்டுக்கிட்டு வறுகடல வித்தவன்டே. இப்பம் கூலிங்கிளாசும் சார்மினார் சிகரெட்டும் தோல் செருப்பும்... மனுசனுக்கு யோகம் அப்பிடி வரணும்.'

'பைசாக்க காரியம் அப்படியாக்கும். வரும் போவும். நேத்து பிச்சக்காரன் இண்ணைக்கு மாராசா. என்னங்குதீய.'

'இவன் எப்பிடிடே?' என்றார் பண்டாரம், சிண்டன் நாயரைப் பற்றி.

'கிண்ணன்லா. வண்டிமலை மாதிரி இல்ல, மனசு நைலக்ஸ் சாரியில தீ பிடிக்க மாதிரியாக்கும்.'

'நாயம்மாரை ரொம்ப ஏறவிடப்படாது. பாத்து அவனுக்க எடத்தில வைக்கணும் கேட்டியா?'

'இவன் நாயரில்ல மோலாளி. வாயெடுத்தா நான் நாயரு நான் நாயருங்கியான். அவனுக்கு அம்மைக்க இடுப்ப பரிசோதிச்சா பாக்கப்போறம்?'

நாயர் வந்து 'முதலாளி நமஸ்தே' என்றான். 'முதலாளிய கண்டால் நல்ல ஐசரியாமாணு. ஒரு நிறவு. திருநீறும் குங்குமம் ஒக்கெயாயி...'

பண்டாரம் மகிழ்ந்து 'மனசில பக்தி இருந்தா முகத்தில அது தெரியும்டே' என்றார்.

'பழனிக்கு போகுமோ?'

'பின்ன? நான் பழனிக்குப் போக ஆரம்பிச்சு இப்ப வருஷம் நாப்பதாகுது. ஞானபண்டிதான்னு நான் விளிச்சா மறுவிளி உண்டும் கேட்டுக்கோ.'

'பின்ன அது கண்டா தெரியாதா? மொதலாளி ஒரு காரியம் ஞான் பறயாம். பக்தன் முகம் கனிஞ்ஞ பழம் போலயாணு. ஒரு மதுரம், இனிப்பு உண்டாகும்.'

'சும்மா விபூதியும் குங்குமமும் பூசினா போராது கேட்டியா?'

'பின்னெ?'

'நிஷ்டை வேணும் நிஷ்டை.'

பண்டாரம் திரும்பி 'இவன் ஆளு கொள்ளாமே' என்றார்.

பெருமாளு 'வோய் நாயரே, கேசவன் வைத்தியர் இருக்கா ரான்னு பாத்திட்டு வாடே' என்றான்.

'இருக்காரு.'

'எப்பிடிடே சொல்லுதே.'

'முதலாளி வருந்நது ஞான் கண்டு. உடனே வைத்தியர் உண்டோ எந்நு நோக்கி. உண்டு. முதலாளி எப்பிடியும் வைத்தியரை காணுமல்லோ. பிஸினஸ் அல்லே.'

'இவன் ஆளு கொள்ளாமிடே' என்றார் பண்டாரம். 'செரி நான் போயி பாத்திட்டு போறன். வல்லதும் ஒப்பினா சொல்லு.'

இருவரும் போகும்போது நாயர் 'முதலாளி இனி பழனி போகும்போள் எனிக்கு பிரசாதம் கொண்டு வரணும்' என்றான்.

'உனக்கு எதுக்குடே?'

'மன சமாதானம் இல்ல முதலாளி. ஜீவிதம் ஒரு மரு பூமிபோல உண்டு. முதலாளியக் காணும்போ ஒரு திருப்தி. முதலாளி கைகொண்டு பிரசாதம் வாங்கினா ஒரு நிறவு உண்டாகும்.'

'செரிடே. பாக்கேன்...'

'முதலாளி ஞான் வரட்டே. பல ஜோலி உண்டு. பெருமாள் சேட்டனுக்கு நடக்கமுடியாது. எல்லா ஜோலியும் ஞான் செய்யும்.'

'செரி போ...'

'முதலாளி தொட்டு அனுக்கிரஹிக்கணும்' என்று நாயர் கும்பிட்டான்.

பண்டாரம் அவன் தலையில் தொட்டு 'தீர்க்காயுஷ் மான் பவஹ' என்றார்.

ஸ்ரீ நாராயண ஆயுர்வேத வைத்யசாலாவில் கேசவன் இருந்தான். உள்ளே ஒரு பையன் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். சுவர் முழுக்க பலவிதமான குப்பிகளில் தைலங்கள். பச்சிலைகள். நாராயணகுருவின் பெரிய படம் மாலையிடப்பட்டு விளக்கு எரிய இருந்தது.

வைத்தியர் 'வரணம் வரணம்' என்றார். 'வருந்மெநு பறஞ்ஞு.'

பண்டாரம் வந்து அமர்ந்தார். 'டீ எடுக்கட்டா? மாதவா...'

'வேண்டாம். இப்பம்தான் குடிச்சேன். பின்ன எப்பிடி போவுது உங்க சங்க விஷயங்கள்?'

'அது முடிவில்லாமெ போகும் பிள்ளைசார். இந்த எஸ்.என். டி.பி காரியம் கறக்கு கம்பெனி வித்தயாணு. எப்படியும் போகும், எவிடெயும் போகும். மண்ணில் சாய்ந்து நிண்ணவன் பெண்ணையும் கொண்டு போகும்...'

'இப்பம் நீதானே சிகரெட்டரி?'

'அது செரி. இப்ப என் பிளான் குறெகூடி வலுது. பணம் இறங்குந்ந களியாணு. பெரும்பணம்.'

'லெட்சமோ?'

'லெட்சங்ஙள்.'

'பணமிறக்கி களியா? சாமி கும்பிடவா?'

'அதும் ஒரு ஏவாரம் பிள்ளை சார். அது உங்களுக்கு மனசிலாயில்லா. பின்னெ எந்து காரியங்ஙள்?'

'மகள் கல்லியாணம்' என்றார் பண்டாரம் பையைத் திறந்து அழைப்பிதழை எடுத்தபடி. 'செறிய தரத்திலாணு.'

'ஏன், முதல் மகள்தானே?'

பண்டாரம் 'செரி. கெடக்கட்டு என்ன செய்ய?' என்றார். 'கொஞ்சம் பணம் தட்டு. அதாக்கும் ஒரு ரெண்டு மூணு உருப்படிய கைமாத்தலாம்னு நெனச்சேன்.'

'உருப்படிகள் இப்பம் போக்கு குறவாணு பிள்ளை சார்.'

'செரி. நமக்குத் தெரியுமே கச்சவடக் காரியம். வைத்தியர் ஒரு ரெண்டெண்ணம் எடுக்கணும்.'

'அந்த முத்தம்மையையும் செறுக்கனையும் எடுக்காம். ரொக்கம் இருபது. போருமா?'

'அய்யோ. அது என் ஐசரியமாக்கும்.'

'இப்பம் கலெக்சனில் அதாணு ஸ்டார். மற்றதெல்லாம் சும்மா.'

'ஆனா...'

'வேற ஒந்நும் வேண்டா.'

'செரி அப்ப ஒண்ணு செய்யலாம். பிள்ளையோ தள்ளையோ ஒண்ணை எடுத்துக்கிடுங்க.'

'எந்து வேணும்?'

'பதினஞ்சு.'

‘ஒரு சரக்கினோ? இதெந்தாடே ஆனையா?’

‘பதினஞ்சு குறயில்ல வைத்தியரே.’

‘கேட்டோடா மாதவா, நின்னெ விற்றால் எந்து கிட்டும்? பத்து ரூபாய்க்கு வக உண்டாவுமோடே? இத கண்டா கையில்ல காலில்ல. ரூபா பதினஞ்சு...’

‘பதினஞ்சுண்ணாக்க பேசுவம்.’

‘எனக்கு அந்த பிள்ளைய தந்தா மதி. பத்து தராம்.’

பேசி முடித்தபோது பதிமூனுக்கு வைத்தியர் ஒப்புக் கொண் டான். இருபதில் தொடங்கியிருக்கலாமோ என்று நினைத்தார் பண்டாரம்.

‘செரி. அப்பம் நான் எறங்குதேன்.’

‘செக்கு வாங்குமா?’

‘செக்குண்ணா பிரச்சினையாக்கும்.’

மயில்சாமிக்கும் அடுப்புகட்டிக்கும் சேர்த்து இருபத்து ஐந் தாயிரம் பேசி பணத்தைப் பெற்றுக்கொண்டார் பண்டாரம்.

‘குட்டியெத் தூக்கி பெருமாளு கொண்டுவந்து தருவான். ராத்திரியிலதான் முடியும். நேரா கொண்டு போயிடுங்க’ என்றார் பண்டாரம். ‘எங்க குருவாயூருக்கா?’

‘இது சிவகிரிக்கு. இப்பம் அங்க நல்ல கூட்டமாக்கும்.’

பெருமாளிடம் விஷயத்தைச் சொன்னார் பண்டாரம்.

அவன் ‘மோலாளி பதிமூனு குறவாக்கும். சும்மா கெடக்க சப்பாணிகளுக்கே பத்து போவுது. இது குட்டியில்லா. கேறி வருமே. பாருங்க அடுத்த வரியம் பய இத வச்சுகிட்டு முப்பது முப்பத்தஞ்சிண்ணுட்டு கேப்பான்’ என்றான்.

‘போட்டும்டே பெருமாளு. முருகன் நமக்கு விதிச்சதுதான் நம்ம கைக்கு வரும். அவன் அளக்காத ஒரு நாழி நம்ம பற்றில கேறாது பாத்துக்கோ. ஏம்டே நாயரே...’

'மொதலாளியிட நெறஞ்ஞ மனசினு ஒரு குறயும் உண்டா வூல்ல...'

'டேய், நீ போய் உருக்கள் நல்லா விளிச்சு கூவுதா எண்ணு பாரு' என்றான் பெருமாள்.

'நல்ல பயலாக்கும்' பண்டாரம் சொன்னார். 'நல்ல வக திருவு உண்டு' என்றபடி எழுந்தார். 'செரி நான் வாறேன்.'

'மோலாளி, மவளப் பாக்கப் போகல்லியா?'

'அவளுக்கு நான் எள்ளும் நீரும் எறச்சாச்சு பாத்துக்கோ. அப்பிடி ஒருத்தியெ நான் பெறல்லே. எனக்க சங்கில குத்தியிட்டாக்கும் அவ போனது' பண்டாரத்தின் தொண்டை அடைத்தது.

ஆட்டோ பிடித்து தம்பானூர் பஸ் ஸ்டாண்ட் வந்து பஸ்ஸில் ஏறி அமர்வது வரை அவருக்கு மனம் பொருமியபடியே இருந்தது. நாகர்கோவில் பஸ்ஸில் கூட்டமே இல்லை. ஆனால் அவர் ஏறி அமர்ந்த சில நிமிடங்களுக்குள் நிரம்பிவிட்டது. லாட்டரி விற்பவன், சீப்பு சோப்பு ஊக்கு விற்பவன், மலையாளம் இங்கிலீஷ் பாட புத்தகம் விற்பவன் என்று வரிசையாக ஏறி செயற்கை உச்சரிப்பில் பேசிக் கூவி இறங்கினார்கள். பண்டாரத்தின் கையை யாரோ தொட்டார்கள். பரட்டைத் தலையும் கிழிசல் உடையுமாக ஒரு இளம்பெண். கையில் குழந்தை தூங்கி சரிந்து நின்றது. சப்தமின்றி 'அய்யா' என்றாள்.

பண்டாரம் பையைத் தொட்டுப் பார்த்தார். ஒரு ரூபாய் இல்லை. ஐந்து ரூபாய் நாணயம் இருந்தது. அதை எடுத்துப் போட்டார். அவள் மறு பக்கமாக நகர்ந்தாள். டிரைவர் வந்து வண்டியை எடுத்தார். காற்று கலைந்தபோது பண்டாரம் பெருமூச்சு விட்டார். அவர் போட்ட முதல் பிச்சை அது என்று எண்ணிக் கொண்டார். வண்டியில் பாட்டு போட ஆரம்பித்தார்கள். பண்டாரம் கண்களை மூடிக்கொண்டு பின்னுக்குச் சாய்ந்தார். இந்த இரைச்சலில் யார் என்ன கேட்கமுடியும்? எதற்காக இதைப் போடுகிறான். 'சிலையெடுத்தான் ஒரு சின்னப் பெண்ணுக்கு...' பண்டாரம் சற்று தூங்கிவிட்டார்.

பிறகு விழித்தபோது வண்டி நெய்யாற்றங்கரையைத் தாண்டி விட்டிருந்தது. பாறசாலையில் இறங்கப் போகிறோம் என்பது அத்தனை நிச்சயமாகத் தெரிந்திருந்தது. தவறவே முடியாது.

பெருமாள் வழி சொன்னபோதே அந்த சந்தை வீட்டை அவர் மனக்கண்ணால் பார்த்துவிட்டார். அவளைப் பார்க்கப் போகிறார். சின்னவளுக்கு சிறு வயதில் பல் சற்று எத்து. அதற்காக வாயை மூடி மூடி வைப்பாள். மேலுதட்டை இழுத்து இழுத்து வைப்பாள். அதுவே அவளது முக அசைவாகிவிட்டது. பருவம் வந்ததும் கன்னம் தடித்து வாய் சரியாகிவிட்டாலும் அவளது வாயசைவு மாறவில்லை. 'ராத்திரி பகலாட்டு உறங்குவாளேட்டி' என்று எண்ணிக் கொண்டார். ஒரு சில கணங்களில் கற்பனை பறக்க ஆரம்பித்தது. அவள் அவரைப் பார்த்ததும் ஓடி வருகிறாள். தோளில் முகம் வைத்து கதறுகிறாள். 'தெரியாமப் பண்ணிப்போட்டேம்பா. தெரியாமப் பண்ணிப்போட்டேம்ப்பா.' அவர் தலையை வருடி 'செரி குட்டி. தெற்று ஆருக்கும் வரும். செரி விடு. அப்பாக்கு உன்மேல ஒரு கோபமும் இல்ல. நீ எனக்க செல்லக் குட்டில்லா. அப்பா உன்னை மறந்து ஒருநாள் இருந்ததில்ல குட்டி. எப்பமும் உன் நினைவுதான் குட்டி' என்றார். அவள் அவருடனே வந்துவிட்டாள். வீட்டுக்கு கொண்டு போகிறார். ஏக்கியம்மை 'எனக்க குட்டியே' என்று பாய்ந்து வருகிறாள்.

பண்டாரம் அழுகையை அடக்க உதட்டை இறுக்கினார். ஆனால் அவள் வருவாளா? அவன் என்ன அவன்? பெரிய கொம்பனா? ஆளை விட்டால் கழுத்திலே தலை இருக்குமோ? சட்டப்படி தாலியா கட்டியிருக்கிறான்? ஏதோ கோயிலில் வைத்து தாலியைக் கட்டினால் சரியாகி விடுமா? நீ கிறிஸ்தவன். உனக்கு ஏற்கனவே இரு பெண்சாதி. நீ எப்படி இவளை உன் பெஞ்சாதி என்று சொல்லுவாய்? உனக்கு பண்டாரத்தைத் தெரியாது. பண்டாரம் பார்க்கத்தான் சாது. சகல வித்தைகளும் தெரிந்துதான் வந்திருக்கிறேன்.

பாறசாலையில் இறங்கி விசாரித்து நடந்துபோனார். அந்த அடி குழாய் அருகே ஒரு சிறு பீடிக்கடை. அதில் ஒரு நடுத்தர வயதுப்பெண். பண்டாரம் அவளிடம் ஒரு டப்பி மூக்குப்பொடி வாங்கினார். பச்சை பெயின்ட் அடித்த வீட்டைத் தாண்டிப் போனார். வாசலில் ஒரு யெஸ்டி பைக் நின்றது. பைக்கா அது, எருமை மாடு. உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. மறுபக்கம் ஒரு பெரிய அயனிமரம். அதனடியில் போய் நின்றார்.

அரைமணி நேரம் கழித்து ஒரு பெண் வெளியே வந்தாள். நைட்டி அணிந்திருந்தாள். பண்டாரம் அதை போத்திவீட்டு பெண்கள்

அணிந்து பார்த்தது உண்டு. 'அதென்னதுடீ அது நாதசுரத்துக்கும் தவுலுக்கும் ஒற போட்டதுமாதிரி' என்று கூற சின்னவள் 'நைட்டிப்பா இப்பம் அதாக்கும் ஃபேஷன்' என்றாள். 'பேஷனும் அம்மைக்க தாலியும்' என்றார் பண்டாரம்.

சின்னவள்தான். பண்டாரம் வயிற்றில் கனம் குளிராக உருளும் பதற்றத்துடன் அப்படியே நின்றார். அவர் மனம் உரக்க 'வடிவூ வடிவூ...' என்று ஓலமிட்டது. சம்பந்தமின்றி 'சிலையெடுத்தான் ஒரு சின்னப் பெண்ணுக்கு' என்று மனம் பாடியது.

வடிவம்மை முற்றத்தில் ஏதோ குப்பையைப் போட்டு விட்டுத் திரும்பியவள் அவரைப் பார்த்துவிட்டாள். ஒரு கணம் அவள் அசையாமல் நின்றது தெரிந்தது. பிறகு சரசரவென்று போய்விட்டாள்.

பண்டாரம் மார்பில் கையை வைத்தார். விழுந்து விடுவோம் என்று தோன்றியது. அயனி மரத்தைப் பற்றினார். அதன் மேல் கரையான் ஏறியிருந்தது. அதை தட்டிவிட்டு கையை உதறினார். வடிவம்மையை எப்படி கூப்பிடுவது? வாசலில் தட்டி மக்கா மக்கா...

உள்ளே சிரிப்புகள். ஒலிகள். இன்னொரு பைக் வந்து நின்றது. அதில் வந்த இருவர் உள்ளே போனார்கள்.

அங்கே நிற்பது சரியல்ல என்று தோன்றவே பண்டாரம் அவ் வழியே மேலும் நடந்தார். அரைமணி நேரம் நடந்து வந்து ஒரு டீக்கடையில் ஒரு டீ குடித்தார். அவள் கைகாரி. இந்த ரவுடி களைப் பயப்படுகிறாள். இவர்கள் போனால் வந்து விடுவாள். 'சிலையெடுத்தான் ஒரு சின்னப் பெண்ணுக்கு... அப்பனே முருகா... ஞானபண்டிதா...'

மீண்டும் அயனி மரத்தடியில் வந்து நின்றார். இருட்டு மெதுவாகப் படர்ந்து வந்தது. தோப்புகள் நன்றாக இருண்டன. அவருக்கு சற்றுத்தள்ளி ஒரு மின்விளக்கு ஓரிருமுறை மின்னி பின் எரிய ஆரம்பித்து.

வடிவம்மை மீண்டும் வந்து எதையோ போட்டுவிட்டு அவரைப் பார்த்து உள்ளே போனாள்.

சற்று நேரம் கழித்து உள்ளிருந்து ஒரு ,நடுத்தர வயதுப் பெண்ணும் மூன்று இளைஞர்களும் வந்து பைக்குகளில் ஏறிக்

கொண்டனர். அந்தப் பெண் மிட்டாய் நிற புடவையும் ஏராளமான பூவும் வைத்திருந்தாள். வண்டிகளில் அவர்கள் பாய்ந்து சீறிக் கிளம்பினார்கள். வடிவம்மை வந்து வாசலில் நின்றாள். அவரைத் திரும்ப பார்த்தாள். அவர்கள் போனதும் படார் படார் என்று கதவுகளை மூடினாள்.

அந்த ஓசை பண்டாரத்தின் மனசை அறைந்தது. 'ஏட்டி வடிவு வடிவு' என்று அவர் தனக்குள் கூப்பிட்டார். கொசுக்கள் பிடுங்கி எடுத்தன. நன்றாக இருட்டிவிட்டது. போய் கதவைத் தட்டி கூப்பிடலாம். அவள் அவருடைய மகள்தான். அந்த உறவு எப்படியும் அறுபடாது. சுடலை வரை உள்ள உறவு.

ஆனால் அவரால் நகரமுடியவில்லை. பின்பு மெல்ல கால்களை நகர்த்தி வைத்து அந்த வீட்டைத் தாண்டி நடந்தார். உள்ளே டி.வி ஓடும் வெளிச்சம் அசைந்தது. சற்று நேரம் போன பிறகு மீண்டும் வந்தார். அதே அயனி மரத்தடியில் நின்றார்.

வடிவம்மை ஒரு துடைப்பத்துடன் வந்தாள். வெளியே சற்று கூட்டிவிட்டு அவர் இருக்கும் திசையை நோக்கி 'பட்டி வீடு கேறியில்லா வருது? ஓடு... ஓடு நாயே... போ...' என்றாள்.

மீண்டும் உள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டாள். இரவுக்குரிய ரீங்காரம் எழுந்தது. ஒரு பஸ் ஒலியுடனும் ஒளியு டனும் சென்றது. பண்டாரம் கனத்த கால்களுடன் அந்த வீட்டைத் தாண்டிச் சென்றார்.

அந்தக் கடையில் ஒரு பெண் இருந்தாள். பண்டாரம் மீண்டும் மூக்குப்பொடி வாங்கினார்.

'அச்சனாணு இல்லே?' என்றாள் அவள்.

'ஆமா.' பண்டாரம் சற்று திடுக்கிட்டார்.

'தமிழோ?'

'ஆமா.'

'அவள் இனி வரமாட்டா. சும்மா வந்து காவலு கிடக்க வேண்டாம்.'

பண்டாரம் ஒன்றும் சொல்லவில்லை.

'அவளுக்கு இப்பம் நல்ல ஜாலியாணு. திவசமும் எம்பிடு பேர் வாறானுக. போன ஆளைப் பாத்தியா? அதாக்கும் பாறசாலை சரோஜம். பேரு கேட்ட பொம்பிளை.'

'அப்பிடியா?'

'ராத்திரி முழுக்க கூத்தென்ன பாட்டென்ன? அம்பாசிடர் காரு. மாருதி காரு... அந்த வீட்டில இல்லாத சாமான் இல்லை. டி.வி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின் எல்லாம் உண்டு. கரண்டில் வேவும் அடுப்பும் உண்டு. டிவி மாதிரி உள்ள அடுப்பு.'

பண்டாரம் பெருமூச்சு விட்டார். பொடி டப்பாவுடன் நடந்தார்.

# 21

அதிகாலையில் காரில் ஏக்கியம்மையும் கல்யாணப் பெண்ணும் ஏழெட்டு ஊர்ப்பெண்களும் கிளம்பிச் சென்றார்கள். இரண்டாவது காரில் ஆண்கள் கோஷ்டி. பண்டாரம் வண்டியில் ஏறவில்லை. நகையும் பட்டும் மற்ற பொருட்களும் எல்லாம் வீட்டில் இருந்தன. அவற்றுடன் காரில் நெருக்கியடித்துச் செல்லமுடியாது.

ஆறுமணிக்கு முதல் டாக்சி திரும்பி வந்தது. பண்டாரம் எல்லாவற்றையும் அவரே எடுத்து உள்ளே வைத்தார். பொருட்களையெல்லாம் சரி பார்த்தார். குமரேசனின் மனைவிதான் வீட்டுக்குப் பொறுப்பு. வீட்டுக்கு வரக் கூடியவர்கள் அதிகமில்லை. ஆனாலும் கல்யாண வீடு. பூட்டிப்போட முடியாது.

காரில் ஏறும் சமயம் குமரேசன் வந்தான். 'ஏம்லே காலம்பற காணமே?' என்றார் பண்டாரம்.

'மோலாளி, இந்த உருப்படி சொன்ன பேச்சு கேக்கல்லியே. சாவல்லா கெடக்கா?'

'ஏம்டே?'

'அவ ஒருவாய் வெள்ளம் உள்ள எறக்கி இப்பம் ஏழுநாள் ஆவுது மோலாளி. எந்திரிக்கவும் முடியல்ல. பெனாத்துதா. கிட்டக்கப் போனா கடிக்க வாறா...'

'பிள்ளையப் பிரிஞ்ச கெறுவில்லா... ஒருவாரம் இருக்கும். பதிவுள்ள காரியம்தானே.'

‘மோலாளி, அதிப்பம் ஏழு நாள் ஆச்சில்லா?’

‘பயராதடே. ஒண்ணும் சாவாது. நீ எண்ணைக்கும் நல்ல சூடுள்ள சாயயும் இட்டிலியும் சட்டினியும் சோறும் வாங்கி பக்கத்தில வை, கேட்டியா. நேரத்தோடு நேரம் சாப்பாட்ட மாத்தணும். தின்னாலும் சரி, தின்னாட்டியும் செரி. எம்பிடு நாள் கெடப் பாடே? இன்னும் ஒரு ரெண்டு நாள் கெடப்பா. நாலு வரியம் முன்ன ஒம்பது நாள் கெடந்தா.’

‘பெனாத்தல் உண்டு மோலாளி.’

‘இறங்கிப் போடும். நீ அங்க நிண்ணுக்கோ. வாய் அருக போயிடாதே. கடிச்சா நாழி எறச்சி போயிடும். ஊனக்க கெட்டி னவ இங்க நிக்கட்டு.’

கார் திற்பரப்பு கோயிலுக்கு ஆறரைக்குப் போய் சேர்ந்தது. கோயிலில் கூட்டமே இல்லை. ஒரு கல்யாணம் மாதிரியே இல்லை. மொத்தமே பதினெட்டு பேர்தான் பெண்வீடு. பண்டா ரத்துக்கு அதைப் பார்க்க வயிற்றை என்னவோ செய்தது.

மாலையும் பெட்டியும் எல்லாம் அறைக்குள் சென்றன. பண்டாரம் அங்கவஸ்திரத்தால் வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

‘பண்டாரம் மக்கா, சுளுவில முடிச்சிட்டே கேட்டியா. பாயசம் உண்டுமாடே, இல்ல ஒரு துண்டு சர்க்கரையை குடுத்து நக்கிக்கோண்ணு சொல்லிப் போடுவியா?’ ராமன் பிள்ளை பாட்டா பொக்கை வாய் சிரித்துக் கேட்டார்.

‘உம்ம கட்டைல ஏத்தும்பம் நான் அடியந்தரம் வைக்கேன் ஓய்’ என்று எண்ணியபடி பண்டாரம் சிரித்து வைத்தார்.

‘பய்யனுக்க ஆளுகளை சம்மதிக்கணும் கேட்டயா? இந்தக் காலத்துல இப்பிடி உண்டுமா?’

‘அது அவனுக்க இஷ்டம்லா? அந்த வீட்டில இதக் காட்டிலும் வலிய வல்லதும் காணும்.’

‘குண்டிய வித்து கோமணத்த வாங்குத காலம்லா.’

பண்டாரம் பேச்சுகளைக் கேட்காமலிருக்க முயன்றார்.

நாதஸ்வரமும் தவிலும் ஒலித்துக்கொண்டிருந்தன. கோயில் மண்டபத்தில் பெண்கள் உட்கார்ந்திருக்க மூலையில் ஒடுங்கிய படி சுப்பம்மை. பண்டாரத்தைப் பார்த்ததும் ஏக்கியம்மை எழுந்து வந்தாள். 'என்னது?'

'மூர்த்தம் அணையுது. நீ ஒரு காரியத்துக்கும் வாய விடாதே.'

'நான் என்ன செய்யியது? ஓரோருத்திய ஆளுக்கு நாளு காரமுள்ளாக்கும் கொண்டு வந்திருக்காளுக...'

'அது பின்ன காளைக்குப் புண்ணு வந்தா காக்கைகளுக்கு ஜாளியில்லா.'

'என்னடே பண்டாரம், சின்னவளுக்க கத வல்லதும் தெரியுமா?' என்றாள் மீனாட்சி கிழவி.

'தெரிஞ்சி சொல்லுகேன் பாட்டி. சுப்பிரமணி இப்பம் எப்படி இருக்கான்?'

'நல்லாயிருக்கான்' என்றாள் கிழவி சுரத்து இழந்து. சுப்பிரமணி அவள் பேரன். ஒரு நாற்பது வயது பிராமணப் பெண்ணுடன் ஊரைவிட்டு ஓடி, அருமனையில் குடியிருந்தான்.

'வாறாளுக...' என்றாள் ஏக்கியம்மை கடுப்புடன்.

பாட்டி விலகிப்போய் வலிப்பு காட்டினாள்.

போத்தி வந்தார். 'பண்டாரம் நீ இப்பிடி நின்னா எப்படி? நல்லுவாதி பார்ட்டி கிளம்பியாச்சு. இப்பம் வருவாவ...'

'எனக்கு ஒரு நிலை கிட்டல்ல போத்தி.'

'நீ ஒரு மயிரும் நிக்கண்டாம். நான் பாத்துக்கிடுதேன். நீ பேசாம கூட நிண்ணுக்கோ.' போத்தி அவர் தோளை அமுக்கினார். 'என்னடே பண்டாரம் ஓட்டப்பானை மாதிரி ஆயிட்டு மனசு? துணிஞ்சு நில்லு. பேசுதவன் பேசுவான். நீ துணிஞ்சா பிறவு அவனுக்கு என்ன பேச வாயிருக்கு?'

'முள்ளு வச்சில்லா குத்துகான்?'

'நீ பேசாம இரு. இங்க பாரு. இங்க வந்திருக்க அம்பிடு பேருக்க காரியமும் எனக்கு தெரியும். யோக்கிய சிகாமணிகள்லா? பேசாம வாடே.'

நாயர்தான் முதலில் வந்தார். 'பண்டாரமே. வெள்ளித் தா பாளம் இருக்கில்லா.'

'எதுக்கு?'

'நல்லா கேட்டடே. பின்ன பித்தளை தாம்பாளத்திலயாடே விளக்கும் பூவும் வப்பாக? அவிக கேக்காண்டாம்.'

'அவிக பஸ்டு வெள்ளித் தட்டுல இல்லா பேண்டாவ? டேய் நாயரே, நீயாக்கும் இதில நம்பர் ஒண் விஷம். நம்ம தாணுப் பண்டாரம் தானேடே? பூக்காரி சுப்பம்மைக்க மகன்? அவன் கண்ட வெள்ளி நானும் குறெ கண்டிட்டுண்டு' என்றார் போத்தி.

நாயர் குடையை கை மாற்றியபடி 'நம்ப சோலி தூது சொல்லுயது. சொல்லியாச்சு. பிறவு என்ன?' என்று சிரித்தார்.

எல்லாம் போத்திதான் நடத்தினார். 'நல்லுவாதிப் பார்ட்டி வந்தாச்சு. பெட்டய எந்திரிங்கட்டி' என்று நாணம்மைப் பாட்டி சொன்னாள்.

'அந்தப் பய இம்பிடு கறுவலாட்டு இருக்கான்?'

'இருக்கட்டுமெடியே. பெண்ணு சிவப்புல்லா. கறுப்பும் சிவப்பும்தான் இப்பம் ஆட்சி...' என்றார் சுப்பையா பாட்டா.

போத்தியின் பின்னாலேயே நடந்தார் பண்டாரம். அவர் அருகே இல்லாத நேரத்தில் மனம் பதறியது. அவர் சொன்னதை யெல்லாம் செய்தார். எந்தக் கணத்திலும் ஏதோ ஆகப்போகிறது என்று தோன்றியபடியே இருந்தது. எத்தனை சடங்குகள். மாமன் சடங்கு, மருமக்கள் சடங்கு. எல்லாம் முடிந்து பெண் கழுத்தில் தாலி ஏறினால் போதும். தாலியும் பட்டுப்புடவையும் காத்தி ருந்தன. பண்டாரத்திற்கு தவிலின் ஓசை பம்பம்பம்... என்று வயிற்றிலேயே அதிர்ந்தது.

மேளம் வலுத்தது. பண்டாரம் தாலியைத் தவிர எதையுமே பார்க்காமல் நின்றார். தாலி உலவி வந்தது. மணவறைக்கு போனது. தாலியை பையன் எடுத்து பெண்ணின் கழுத்தில் கட்டினான். குலவை ஒலிகள். மேளம்.

பண்டாரம் போத்தியின் தோளைப் பற்றிக்கொண்டார். கையும் உள்ளங்காலும் வியர்த்து பிடியும் நிலையும் நிற்கவில்லை. அப்படியே உட்கார்ந்துவிட்டார்.

'செரி செரி. ஒரு தளர்ச்சையாக்கும். ஒண்ணுமில்ல. செரியாச்சு' என்றார் போத்தி.

சூடாக ஒரு டம்ளர் காப்பி சாப்பிட்டதும் பண்டாரம் எழுந்து அமர்ந்தார். அருகே பரமன் மட்டும் நின்றான்.

'பந்தி நடக்குதாடே?'

'ஆமாம் மாமா. நல்லுவாதிப் பந்தி.'

'அவ மாமியாக்காரி சாப்பிடுதாளா?'

'இருந்தாச்சு.'

ஒன்றும் நடக்கவில்லை. முருகா ஞானபண்டிதா. இந்த மட்டும் என்னை காப்பாற்றினாய்.

ஏக்கியம்மை வந்தாள். 'எந்திரிச்சியளா?' என்றாள். 'இப்பம்தான் என் சீவன் எனக்கு மிஞ்சி கிட்டிச்சி. யப்பா ஆட்டம்லா போடுதா?'

'ஆரு?'

'அவதான் மாமியாக்காரி. பட்டு வில குறவுண்ணு ஒரு பாட்டு. வெள்ளி பாத்திரம் சின்னதுன்னு ஒரு பாட்டு. போத்தியக் கண்டா அப்படியே அடங்குதா. பந்தியில இருந்தப்பம் புளிசேரி நல்லா இல்லேன்னு நாலு வர்த்த மானம் தொடங்கினா. போத்தி வந்து, செரிடீ உனக்க புளி சேரிக்க கதை எனக்குத் தெரியும். திண்ணுட்டு போறியாண்ணார். அப்படியே அடங்கிப் போனா. போத்தி இல்லாட்டி இங்க இப்பம் வெட்டும் குத்தும் ஆயிருக்கும்.'

ராமன்பிள்ளை பாட்டா வந்தார். ஏக்கியம்மை கிசுகிசுப்பாக சொன்னாள். 'நல்லுவாதி பார்ட்டிகூட நெருக்கியெடுத்து கேறி வாரி வலிச்சு திண்ணுட்டு வருது. எம்மோ என்னமா எரை எடுக்குது கிழட்டு மூதி. நானாழி அரி சோறு இப்பம்ணுட்டு உள்ள போச்சு...'

'பண்டாரம் எனக்க சீவிதத்தில சேம்பு இல்லாத சாம்பார் இப்பம்தான்டே சாப்பிட்டேன். கொள்ளாம். நாக்கு செத்த நாயி திங்கும். கலிகாலம். பின்ன என்ன சொல்ல?'

'செரி பாட்டா. கொஞ்சம் படுங்க.'

'பக்கத்தில வல்ல சாயாக்கடயோ மற்றோ உண்டோடே? எனக்கு வயறு நெறயாம கிடக்கமுடியாது கேட்டியோ? இந்த அரிவப்புகாரன் நாயரா, வெளுத்தேடனா? எல்லா கறியிலயும் எளவு சோப்புக் காரம்லா வாரிப் போட்டிருக்கான்.' பாட்டா திண்ணையில் நீட்டிப் படுத்தார். 'எக்கப்போ பத்மநாபா. வாயி கசக்கே' என்றார்.

பண்டாரம் வாசலுக்குப் போனார். முதலில் சாப்பிட்டவர்கள் பற்களைக் குத்திக்கொண்டிருந்தனர்.

சண்முகம் பிள்ளை ஏப்பம் விட்டபடி 'ஒரு காரியம் சொல்லுகேன் பண்டாரம். பாயசத்துக்கு என்னைக்குமே கறுப்பு வெல்லம்தான். சிவப்பு வெல்லம் போட்டாக்கா ஒரு எலச்ச ருசி வரும் பாத்துக்க' என்று மீண்டும் ஏப்பம் விட்டு 'தேட்டி தேட்டி வருது…' என்றார்.

'சுளுவிலே முடிச்சிட்டேடே பண்டாரம்' என்றார் கூனன் ஆசாரி. 'சொல்பேச்சு கேக்காத பிள்ளையளாலே அப்படியும் ஒரு குணம் உண்டும். ஹெ ஹெ ஹெ…'

மணமகன் வீட்டுக் கிழவர் ஒருவர் கூனல் முதுகும், கூர்ந்த பார்வையும் அக்குளில் நரைத்த குடையுமாக வந்தார். 'நீயாடே பெண்ணுக்க தந்தியான்?'

'ஆமா.'

'பெண்ணுக்கு ஒரு பிள்ளை அழிச்சிட்டுண்டுண்ணு சொல்லுகானுவ?'

'ஒண்ணு இல்ல பாட்டா, ரெண்டு.'

'ஆங்' என்றார் கிழவர் புரியாமல்.

'இப்பம் என்ன செய்யச் சொல்லுதியோ?'

'கலிகாலம்.'

'கலிகாலம்லா? போயி இரிங்க. வாழப்பழம் தரச் சொல்லு கேன்.'

இரண்டாம் பந்தி நடந்துகொண்டிருந்தது. பண்டாரம் கோயில் மேனேஜரிடம் 'எம்பிடு எலை விளுந்திருக்கு?' என்றார்.

‘அம்பது சொன்னிய. இப்பம் முப்பது விளுந்திருக்கு’ என்றார்.

‘இனி கூடிப்போனா ஒரு பத்து கேறும். மிச்சத்தை கெட்டிக் குடுத்துப் போடுங்க. நமக்கு குறெ ஆளுக உண்டு. சோலிக் காரனுக. அவனுக திம்பானுக.’

ஏக்கியம்மை வந்து ‘இங்க வாங்க’ என்றாள்.

‘என்ன குட்டி?’

‘பெண்ணு எடஞ்சு நிக்கா.’

‘ஆரு?’

‘சுப்பம்மை. நீங்க வாருங்க.’

‘என்ன?’ என்றபடி பண்டாரம் கூடப் போனார்.

‘அவளுக்கு மாங்கா நெக்லஸ் வேணுமாம்.’

‘என்னதுக்கு?’

‘அவளுக்கு செய்த மாங்கா நெக்லஸ்லா சின்னவ எடுத்துகிட்டுப் போனா. அது இவளுக்கும் வேணுமாம். இப்பம் கேக்கா.’

‘இவளுக்கு அதைக்காட்டி பத்து பவுன் கூடுதலுல்லா போட்டிருக்கு?’

‘அதைச் சொன்னா அவ எங்க கேக்கா? நீங்க சொல்லுங்க. கரயுதா பிழியுதா...’

மண்டப ஓரத்தில் சுப்பம்மை படுத்துக்கிடந்தாள். அருகே பலவிதமான பைகள் பொட்டலங்கள்.

‘மக்கா வேய். என்னடே இது?’ என்றார் பண்டாரம். ‘உனக்கு நீ கேட்ட நகெ செய்திருக்குல்லா...’

‘எனக்க மாங்கா நெக்லஸ் அவ எடுத்தா.’

‘செரி, அதுக்கு உனக்கு அரசில நெக்லஸ் செய்திருக்குல்லா.’

‘இது பழைய டிசைன். அதுதான் புதிசு.’

‘செரி குட்டி, டிசைன் மாறும். அதுக்கா...’

'ஒண்ணும் பேசவேண்டாம். உங்களுக்கு அவதான் வேணும். ஊரு நாற ஓடிப்போனாலும் அவளைப் போயி பாப்பிய. என்னைய ஆருக்கும் ஒரு வகையில்ல. எனக்கு ஒரு விலையும் இல்ல. அடுப்படியில கெடந்து நாறுயது என் தலையெழுத்து.'

'குட்டி இது என்ன பேச்சு பேசுகே? உனக்குத்தானே இம்பிடு செய்திருக்கு?'

'ஓடிப்போனவளுக்கு அம்பது பவுன். எனக்கும் அம்பது பவுன். ஒண்ணும் வேண்டாம். நான் அவிகவிட்ட பேசி எல்லாத்தையும் களட்டி தாறேன். இதையும் கொண்டுட்டு போயி அந்த ஊருபட்ட பலபட்டறைக்கு குடுங்க.'

'இஞ்ச பாரு வாய நீட்டாதே.'

'கொல்லுங்க. கொண்ணு போட்டுட்டு எல்லாத்தயும் அவளுக்கு குடுங்க...'

'செரி குட்டி, இப்பம் உனக்கு மாங்கா நெக்லஸ்தானே வேணும். அப்பா ஆறு மாசத்தில செய்து தாறன்.'

'எனக்கு ஆருக்க ஓஸியும் வேண்டாம். நான் போறன்.'

'செரி குட்டி. செய்து தாறன் குட்டி.'

'உண்ணியம்மை வாறா' என்றாள் ஏக்கியம்மை. 'சவம் அதுக்க வாயில ஒரு குட்ட பீயை கோரி இடணும்.'

உண்ணியம்மை ஆச்சி வேகுவேகுன்னு ஓடிவந்து 'என்ன வாக்கும் குட்டி அளுதா? என்ன குட்டி? எனக்க மக்கா இல்ல? அப்படி பலதும் இருக்கும் குட்டி. நாமளாக்கும் தாங்கி ஏந்தி பாலீஷா போணும். ஆம்பிளையளுக்க காரியம்லா. அதில கணக்கு பாத்தா நாறாம என்ன செய்யும்?'

'ஆச்சி, நீங்க உன் சோலியப் பாருங்க' என்றாள் ஏக்கியம்மை.

போத்தி அங்கிருந்து 'டே பண்டாரம், என்னடே பண்ணுதே' என்றார்.

'இந்தா வந்திட்டேன்.'

'மாப்பிள்ளைக்க ஆபீஸ் கூட்டம் வந்து கேறிட்டு கேட்டியா. அம்பது பேர் உண்டு. சாம்பாரும் ரெசமும் கொறெ வலுதாக்கி

யிருக்கேன். செம்பு ஏத்தியிருக்கு. பத்து மினிட்டிலே சோறு ரெடியாப்போயிடும். பாயசம் குறவாக்கும். ராமனை அனுப்பி ஒரு அம்பது லெட்டு வாங்கிட்டு வரச் சொன்னேன். வந்ததும் உடச்சு பாயசத்தில போட்டு கிண்டினா சரியாயிடும்.'

'அம்பது பேரா? மொத்தம் பதினஞ்சாளுக எண்ணு சொன்னாங்க.'

'செரி வந்துப் போட்டங்க. போன்னு சொல்லுவியா? சமாளிக்கணும்டே. ஒரு அடியந்திரம்னா நாலுவிதமா இருக்கும். ஒரு வாழைக்குலை சொல்லியிருக்கு.'

சைக்கிளில் ராமன் லட்டுடன் வந்து இறங்கினான். 'மைசூர் பாகு ஒரு அம்பது வாங்கினேன் போத்தியே.'

'அத ஒத்தய்க்கு வை. சோறு வெந்தாச்சா?'

'மணம் வருது.'

'சூடு சோறயும் ஆறினதையும் கலந்து வெளம்பச் சொல்லு. சுப்பனிட்ட பக்கத்து தோட்டத்தில போயி நாலு வாழையிலை கொண்டு வரச் சொன்னேன்.'

உள்ளே பந்தி தொடங்கியது. பண்டாரம் எட்டிப் பார்த்தார். பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

'கறியெல்லாம்...' என்றார் போத்தியிடம்.

'பாயசத்துக்கு தேங்காய் பால் பிழிஞ்ச கொத்து எல்லாத்தையும் வாரிக் கலந்து உப்பும் மிளகும் சேத்து கடுகு வறுத்து செரியாக்கினதாக்கும்.'

'வாயில வய்க்க கொள்ளாதே.'

'வந்தவனுகள்ல பாதிப் பேருக்கு காலு தரையில நிக்கல்ல பாத்துக்கோ. வரும்போதே கேற்றிக்கிட்டு வந்திருக்கானுக. மண்ண வாரிக் குடுத்தாலும் திம்பானுக.'

ஏக்கியம்மை வந்து அழைத்தாள். பண்டாரம் ஒதுங்கினார். 'இஞ்சேருங்க, ஒரு வாய் சோறு சாப்பிடுங்க. வயிறு காயுமில்ல?'

'எனக்கு எறங்காதுட்டி. நீ சாப்பிட்டியா?'

'எங்க? எனக்கும் எறங்கல்ல. அப்பனே முருகா... இது ஒண்ணு நடந்து கிட்டினா மதி. முருகா... பழனிக்கு வந்து மொட்ட போடுதேன்...'

மாப்பிள்ளை வீட்டார் ஒவ்வொருவராக வந்து கை கழுவி னார்கள்.

'ஒருத்தனுக்கும் கால் உறய்க்கல்ல' என்றாள் ஏக்கியம்மை.

'மாப்பிள்ள குடிக்கமாட்டான்னு சொன்னாங்க. பின்ன முருகன் விட்ட வழி.'

'இப்பிடி கேறி வாறானுக. சோறு மிச்சமில்லைன்னு சொன் னாங்க. உருக்களுக்கு கொண்டு குடுக்கணும்னு சொன் னேனே.'

'சொன்னே. நானும் சொல்லியிருந்தன். இப்பம் ஒண்ணும் மிச்சமில்லியே.'

'பாவம் சவங்க கெடந்து ஏங்கும்.'

'ஆமா. அதுக கெடக்க கெடைக்கு வடயும் பாயசமும்லா வேணும். நீ உன் சோலியப் பாருட்டி.'

போத்தி வந்தார். 'எல்லாம் மங்களமாட்டு முடிஞ்சதுடே பண்டாரம். நான் இப்பம்தான் பழமும் எளநீரும் சாப்பிட்டேன். நீ வல்லதும் சாப்பிட்டியா?'

'இல்ல, சாப்பிடணும்.'

'உனக்கு பிரஷர் உண்டு பாத்துக்க. நல்ல டாக்டர்கிட்ட காட்டணும்.' போத்தி திண்ணையில் உட்கார்ந்தார். 'நடுவு விட்டுப்போச்சு பாத்துக்கோ. மூணரைக்குப் பெண்ணைக் கொண்டு போறாக.'

'முருகா' என்றார் பண்டாரம்.

வடித்த கஞ்சியும் ஊறுகாய் கறியும் கொஞ்சம் இருந்தது. பண்டாரமும் ஏக்கியம்மையும் சமையலறையில் போய் ஆளுக்கு இரண்டு டம்ளர் குடித்தார்கள். பண்டாரத்திற்கு வயிறு நிரம்பியபோது பெரிய ஆறுதல் ஏற்பட்டது.

'இம்பிடு ருசியா இருக்கு!' என்றார் பண்டாரம்.

'தெளிவால்ல இருக்கு?' என்று ஏக்கியம்மை சொன்னாள்.

‘உருளிச் சோற வடிக்கமுடியுமா? இது கோரி எடுத்த கஞ்சி வெள்ளம்.’ பண்டாரத்திற்கு வியர்த்துவிட்டது. ‘நீ போயி குட்டி பக்கத்தில இரு. அந்த உண்ணியம்மை வல்லதும் கிண்டிப் போடுவா. நஞ்சவிஞ்சவளாக்கும்.’

மூன்று மணிக்கு காரில் நகையும் பட்டும் வெள்ளிச் சாமான்களும் ஏற்றப்பட்டு முன்பக்கம் சாமந்திப்பூ மாலை சூட்டப்பட்டது. பண்டாரம் நிலைகொள்ளாமல் நின்றார்.

‘மூர்த்தம் ஆவுது’ என்றார் ராமன் பிள்ளை பாட்டா.

சுப்பம்மை குனிந்த தலை நிமிராமல் இறுகிய முகத்துடன் ஏறி பின் இருக்கையில் கணவன் அருகே அமர்ந்தாள். கழுத்தில் பெரிய மாலையும் தலை நிறையப் பூவுமாக தலையே மறைந் திருந்தது. ஏறி அமர்ந்ததும் மலர்ச் செண்டை கையில் கொடுத் தார்கள்.

‘குட்டி பேயாம கேறி இருக்கே? குட்டி, அம்மைக்கும் அப்பனுக்கும் நமஸ்காரம் பண்ணுட்டி. அனுக்ரகம் வேங்கு குட்டி’ என்றாள் ஒரு கிழவி.

சுப்பம்மை இறங்கினாள். முகம் கல் மாதிரி இருந்தது.

‘அதுவும் செரிதேன். சின்னவ அனுக்ரகம் வேங்கிட்டா போனா?’ என்றாள் உண்ணியம்மை ஆச்சி.

சுப்பம்மை கனத்த மாலை இழுக்க குனிந்து பண்டாரத்தை சேவித்தாள். பண்டாரம் கை நீட்டி அனுக்ரகம் செய்தார். வாயில் ஒருசொல்கூட வரவில்லை.

‘வல்லதும் சொல்லுடே பண்டாரம். தாலி கெட்டிட்டு வந்தப்பம் உனக்கு போதமில்லை. சும்மா பெண்ணும் பய்யனும் உனக்க காலை தொட்டுட்டு போனாவ’ என்றார் போத்தி. ‘இன்னொரு நமஸ்காரம் சுப்பம்மே.’

சுப்பம்மை மறுபடியும் நமஸ்காரம் செய்தாள். பண்டாரத்திற்கு ஒருசொல்கூட கிளம்பவில்லை.

‘செரி. அம்மையெ கும்பிட்டுக்கோ.’

சுப்பம்மை ஏக்கியம்மையைக் கும்பிட்டபோது உண்ணியம்மை ‘பாத்து நடந்துக்கோ குட்டி. உனக்க பழைய சுபாவம் ஒக்கெ விட்டுப்போடு’ என்றாள்.

சுப்பம்மை எழுந்ததும் ஏக்கியம்மை அழ ஆரம்பித்து விட்டாள். 'மக்கா சுப்பம்மா... மக்கா' என்று விசும்பினாள். மீனாட்சியும் 'அக்கா அக்கா' என்று அழுதாள்.

'நீ வண்டில கேறு குட்டி. அவளுக்கு சின்னவளுக்க நினைப் பாக்கும்' என்று உண்ணியம்மை சொன்னாள்.

'நேரமாகுல்லா' என்றார் தாணுப் பண்டாரம்.

சுப்பம்மை காரில் ஏறப்போகும்போது ஏக்கியம்மை 'போத்தி அங்கத்தய கும்பிட்டுட்டு போ குட்டீ' என்றாள்.

சுப்பம்மை போத்தியை மண்டியிட்டுக் கும்பிட்டாள். போத்தி அவள் தலையில் கை வைத்து 'சர்வமங்களம் பவது' என்று ஆசீர்வதித்தார். 'குட்டி சுப்பம்மா... உன்னை நான் பெத்த மூணாம் நாள் கைல எடுத்திட்டுண்டு. உனக்கு சகல சடங்கும் செய்து வச்சது நானாக்கும். இப்பம் நான் சொல்லுயத கேட்டுக்கோ. எந்த ஒரு விஷயம் வந்தாலும் ஒரு காரியம் நினைச்சுக்கோ. அந்த நிமிசத்தில அந்த நேரத்தில அது பெரிய காரியமா இருக்கும். ஒரு பத்து நாள் போனா எல்லாம் சின்னக் காரியமா மாறிப்போகும். அந்த பத்து நாளை பல்லக் கடிச்சிட்டு தாண்டுயதுக்குப் பேராக்கும் மனோபலம். கேட்டியா, உனக்கு மனோபலம் வேணும். அது இருந்தா பிறவு ஒண்ணும் வேண்டாம். மங்களமா போ குட்டி. உனக்கு ஒரு குறயும் வராது' என்றார்.

சுப்பம்மை வண்டியில் ஏறினதும் ஏக்கியம்மை 'மக்கா சுப்பம்மை' என்று கதறினாள்.

'செரி ஏக்கி. எங்க போறா. இஞ்சதானே இருக்கப் போறா' என்றார் போத்தி.

வண்டி குலுங்கி நகர்ந்த அசைவில் பண்டாரம் திடுக்கிட்டு அதிர்ந்தார். வண்டி ஓட ஆரம்பித்ததும் சட்டென்று உயிர் கொண்டு 'மக்கா குட்டி சுப்பூ மக்கா...' என்று வீரிட்டபடி ஓடினார். தொப்பை குலுங்கியது. துண்டு கீழே விழுந்தது. போத்தி பின்னால் ஓடிவந்து பிடித்துக்கொண்டார்.

# 22

பண்டாரம் உடைகளை அணிந்தபடி வந்து அமர்ந்ததும் டாக்டர் 'இப்ப மறுபடியும் ஊசி போட்டிருக்கேன். ஒரு மூணு ஊசிகிட்ட போடணும். இதுக்கு இது போதும். ஆனா இப்ப பல புதிய நோய்கள் வந்திருக்கு. கேள்விப்பட்டிருப்பீங்க' என்றார்.

பண்டாரம் 'எங்க, நம்ம பொழைப்பு அது கணக்குக்கு போவுது...' என்றார்.

'எய்ட்ஸுன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?'

'ஆமா. அது இப்படி வாறதாக்குமா?'

'பேப்பர் படிக்கிற பழக்கமே இல்லியா?'

'எங்க நேரம்?' என்றார் பண்டாரம்.

'ஒரு சின்ன புக் தாறேன். வீட்டில உக்காந்து படிச்சுப் பாருங்க. அதில உள்ள ஏதாவது பிரச்சினை உங்களுக்கு இருந்தா வாங்க. சரியா படிச்சுப் பாக்கணும்...'

பண்டாரம் பீதியுடன் 'அது நமக்கு வந்திருக்கோ?'

'இல்லை. அதுக்கான லெட்சணம் இல்லை. ஆனா உங்களைச் சொல்லிக் கட்டுப்படுத்த என்னால் முடியலயே. இது எத்தனை தடவை. எங்கியாம் போய் விழுவுறது. பிறகு ஊசி...'

பண்டாரம் ஆறுதலுடன் 'இனிமே இல்லை' என்றார்.

'பாத்து நடந்தா உமக்கு நல்லது. பழைய காலம் இல்லை, ஊசியில சரியாப் போறதுக்கு.'

'செரி பாத்துக்கிடுதேன்.'

ஆஸ்பத்திரியிலிருந்து நேராக நாகராஜா கோயிலுக்குத்தான் போனார். கல்யாணம் மறுவீடு என்று எல்லாம் ஓய்ந்து அவர் அப்போதுதான் வெளியே இறங்கியிருந்தார். உருப்படிகள் மீண்டும் பழைய இடங்களுக்குத் திரும்பி விட்டதாக பெருமாள் தகவல் அனுப்பியிருந்தான். முத்தம்மையை சவேரியார் கோயிலில் கொண்டு போடச் சொல்லியிருந்தார். பத்துநாள் உண்ணாவிரதமிருந்து அவள் எலும்பும் தோலுமாக ஆகி விட்டாள். சவேரியார் கோயில் முகப்பில் வேறு உருப்படிகள் உண்டு. பேச்சும் சண்டையும் சிரிப்பும் சிறிது சிறிதாக அவளை மாற்றி விடும். குமரேசன் கூட இருந்தான்.

இளவெயில் சாய்ந்துகொண்டிருந்தது. அகமது செய்தித்தாளை விரித்து தன் நிழலை அதன்மீது விழவைத்து கூர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அருகே ராமப்பன் அவனை பக்திப் பரவசத் துடன் பார்த்தபடி இருந்தார். குய்யன் தன் திருவோட்டில் தாள மிட்டு பாடியபடி எருக்குவைப் பார்த்து கண்களை சிமிட்ட அவள் 'பேதில போக' என்று சிரித்து வாழ்த்தினாள்.

'வாங்க மொதலாளி. வரூ' என்றான் அகமது.

'பேப்பரில என்னடே விசேஷம்?'

'எந்து விசேஷம்? கேரளம் நாசமாச்சு. எப்பம் வனம் வெட்டி அழிக்க ஆரம்பிச்சோ அப்பம் கேரளம் நசிக்க ஆரம்பிச்சு. பேசிப் பிரயோஜனம் இல்லை. நாசகாரப் பயல்களாக்கும். நாயனாரும் செரி கருணாகரனும் செரி, அந்தோணியும் செரி. போட்டு. மொதலாளி ஒரு டேப் ரிக்கார்டர் வந்திட்டுண்டு கேட்டோ? கைவிரல் நகம் அளவுக்கு. கையில் வச்சிருந்தால் தெய்வம் போலும் அறியில்ல.'

'ஒரு பேப்பரை சுமாராட்டு எம்பிடு தடவடே மக்கா படிக் கணும்?' என்றார் ராமப்பன்.

'அது ஒவ்வொருத்தனுக்க கணக்குல்லா மாமா. பலரும் தலைக் கெட்டு நியூஸ் மட்டும் படிப்பாங்க. சிலர் அவங்களுக்கு பிரியமுள்ள நியூஸ் படிப்பாங்க. நான் அப்படியில்ல. அச்சடிச்

சிருக்க அம்பிடயும் படிப்பேன். நியூஸ், கோர்ட் விளம்பரம், சினிமா விளம்பரம், கட்டுரைகள் எல்லாம். ஒரு வரி, ஒரு எழுத்து விட மாட்டேன். அச்சடிச்சிருக்கது படிக்கத்தானே? மூணு ரூபா பேப்பர்னா அதில உள்ள எல்லா எழுத்துக்கும் அடக்கம் விலையாக்கும். படிக்கலேன்னா நஷ்டம் நமக்குத்தான், அவனுக்கு இல்லை. ஒரு சாய வாங்கினா அடிமண்டிவரெ நக்கி குடிக்கமில்லியா?'

'பின்ன? உள்ளதாக்கும்' என்றார் ராமப்பன்.

'பின்ன, பேப்பர் படிக்கவன் எம்மே பிஎச்டி ஒரு மண்ணும் படிக்கவேண்டாம். பேப்பரில் சகல விஷயமும் உண்டு. கிருஷி, வைத்தியம், வெளையாட்டு, ஜோசியம், சர்க்கார் காரியங்கள் எல்லாம் உண்டு மாமா.'

'பின்னே பேப்பர்ணா சரஸ்வதியில்லா?' ராமப்பன் பண்டா ரத்தை சவாலாகப் பார்த்தார். 'பேப்பர் படிக்கவனாக்கும் மனு ஷன். மத்தவனெல்லாம் ஆடுமாடு மாதிரியாக்கும். அதுக் கொண்டுல்லா பேப்பருக்கு மாறுபூமிண்ணு பேரு வச்சி ருக்கு.'

பண்டாரம் பேச்சை மாற்ற விரும்பினார். 'பெருமாளு எங்கடே குய்யா?'

'வருவாரு. பீடி வாங்கப் போனாரு' என்றான் குய்யன். 'மொலாளியெ தேடி ஒருத்தன் வந்தான். இண்ணைக்கு வரு வாருண்ணு பெருமாளு சொன்னான்.'

'ஆரு?'

'ஆரு? இங்க பாருங்க ஒடயோரே. எனக்க பேரு குய்யன் இல்லை. முனியசாமி. அது ஆருக்கெங்கிலும் தெரியுமா? ஒருத்தனுக்கும் தெரியாது. அதுமாதிரி எனக்கும் வேற காரியங்க தெரியாது. இப்பம் மோலாளி கேக்கிய என்னடே குய்யா, எம்பிடுடே வசூலு? நான் சொல்லுகேன், மோலாளி நான் நிரபராதியாக்கும்.'

'அடிடே அவனை' என்றார் ராமப்பன். 'இனி ஒருக்கா அவன் நிரபராதீன்னு சொன்னா சவத்துப் பயல அங்கிணயே வெட்டிப் போடுவேன்.'

குய்யன் பயந்த நாய்போல விழியைத் தாழ்த்தி 'பேசவும் விடமாட்டானுவ' என்றான்.

சிண்டன் நாயர் காற்றில் சுழன்றாடி வந்தான். பெரிய பற்களைக் காட்டியபடி சிரித்து 'முதலாளி வந்நோ. முதலாளி வந்நப்போள் ஒரு வெளிச்சமுண்டு' என்றான்.

'ஏன் அவரு துணியில்லாமலா வாறாரு?' என்றார் ராமப்பன்.

குய்யன் 'ஹெக் ஹெக்' என்று சிரித்தான்.

'பெருமாள் எங்கே?'

'தொம்மன் வந்திட்டுண்டு மொதலாளி.'

'தொம்மனா... அதாரு?'

'கொச்சன் சகாவுக்க ஆளு. சகாவு இப்பம் இங்க உண்டு. முதலாளியை காணணமெந்நு பறஞ்ஞு.'

'என்னையோ?'

'அதெ.'

'சரசதியே, சாய வேணுமாடீ?'

எருக்கு சிரித்து 'பின்ன வேண்டாமா? இப்பம் மணி பத்தாக்கும். பத்து மணிக்கு சாய குடிக்கலேண்ணா எனக்க சீவன் கெடந்து எளகும்.'

சிண்டன் நாயர் எருக்குவின் அருகே அமர்ந்தான். இருவரும் சாயாவை ஊதிக் குடிக்க ஆரம்பித்தனர்.

'இவிக எப்பம்டே எணங்கினாவ?' என்றார் பண்டாரம்.

'மோலாளி அவன் இப்பம் எருக்குக்க சக்களத்தியில்லா? சக்களத்தன்!'

பண்டாரம் திரும்பிப் பார்த்தார். சிண்டன் நாயரின் தோளில் அடித்துச் சிரித்தாள் எருக்கு.

'அப்பம் கதைக்க போக்கு அப்பிடி. இந்த பய பெருமாளு இந்த ஏற்பாடுண்ணு தெரியாம போச்சே.'

'மண்டையனுக்கு பேசத் தெரியாதுல்லா' என்றார் ராமப்பன்.

திடீரென்று ராமப்பன் நினைத்துக்கொண்டு 'மோலாளிக்க மகளுக்க கல்லியாணம் எப்பம்?' என்றார். 'வைகாசி முடியப் போவுதுல்லா?'

பண்டாரம் 'கலியாணம் முடிஞ்சு ஏழுநாள் ஆவுதுல்லா. இப்பம் கேக்கே?' என்றார். 'பெருமாளு எங்கடே? எனக்கு சோலிக கெடக்கு.'

அங்கே ஒரு அமைதி ஏற்பட்டிருப்பதை பண்டாரம் உணர்ந்தார்.

'என்னடே ஒரு வாட்டம்? உங்களையெல்லாம் விளிச்சு இருத்தி சல்க்காரம் செய்யல்லண்ணா?'

அகமது 'இருந்தாலும் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்' என்றான்.

'அய்யா ராஜவம்சம்லா. வார்த்தை சொல்லுயதுக்கு.'

ராமப்பன் மெல்ல 'மோலாளி இங்க அம்பிடுபேரும் எலை போட்டு சோறு திங்கணும்னு காத்து கெடந்தாவ பாத்துக்கிடுங்க' என்றார்.

மெதுவாக குய்யனுக்கு நிலவரம் பிடிபட்டது. 'அப்பம் சோறு? மொதலாளி, சோறு?'

'சோறு ஏழுநாள் புளிச்சுப் போட்டுடே குய்யா. வேணுமா?' என்றான் அகமது.

'மோலாளி பாயசம்?'

'இவன் ஒருத்தன். லே, நீ செத்தா அடியந்தரத்துக்கு மொதலாளி பாயசம் வப்பாரு. ஆத்மாவாட்டு வந்து மோந்திக் குடி... போடே...'

பெருமாள் தூரத்தில் வந்தான். பண்டாரம் கையசைத்து அவனைக் கூப்பிட்டார்.

குய்யனின் முகம் மாறிவிட்டது. அவன் தூணோரம் ஒடுங்கி அமர்ந்துவிட்டான்.

'ஏம்லே சடஞ்சு இருக்கே?' என்றார் ராமப்பன்.

குய்யன் துணி கிழிபடும் ஒலி எழுப்பி அழ ஆரம்பித்தான்.

'இவன் என்னத்துக்கிட்டே கெடந்து செலைக்கான்?' என்றார் பண்டாரம்.

'மோலாளி அவனுக்கு முத்தின மூலரோகம். பாயசம் குடிச்சாத்தான் அது எளகும். அதாக்கும்' என்றார் ராமப்பன்.

'கெடக்கியது குப்பயில. கொப்பளிக்கது பன்னீரு. எளவெடுத்தானுக்கு ஆத்துதா பாரு... வாடே பெருமாளு. என்னவாக்கும் விசேஷம்?' என்றார் பண்டாரம்.

'மோலாளி மத்தவரு கொச்சன் இப்பம் இங்க உண்டு. உங்களை கட்டாயமாட்டு பாக்கணுமின்னு சொல்லி அனுப்பினாரு.'

'என்னவாக்கும் சங்கதி?'

'அது சொல்லல்ல பாத்துக்கிடுங்க.'

'கணக்குகள் இருக்காடே? பாத்துட்டு போனா பிறவு இங்க வரண்டாம்லா.'

பெருமாளும் பண்டாரமும் நாகராஜா கோயில் வராண்டாவுக்குச் சென்றனர்.

குய்யன் தேம்பி அழுதான். ராமப்பன் கம்பை ஓங்கியபடி 'எரணம் கெட்ட பயலே. நீயோ புளுத்து சாவுதே. உனக்கு எதுக்குலே பாயசம்?' என்றார்.

'நான் சாவுதேன். நான் சாவுதேன்.'

'பாயசம் கிட்டலண்ணா சாவுதேன்னு சொல்லுதான். நல்ல கூத்துதேன்.'

குய்யன் திடீரென்று வெறிகொண்டு 'நான் சீவிக்க மாட்டேன். நான் சாவுதேன். எனக்க அம்மோ எனக்க அம்மோ' என்று பயங்கரமாகக் கத்தி மண்டையை சுவரில் முட்டினான்.

'பாவம் ஏங்கிப் பெய்யிட்டான். சின்னப்பயவ மாதிரியாக்கும்' என்றார் ராமப்பன்.

'குய்யா டேய், நினக்கு பாயசமாடே வேண்டது?' என்றான் அகமது.

குய்யன் 'நான் சாவுதேன்' என்றான்.

'நிறுத்துடே. நினக்கு பாயசமும் பப்படமும் கூட்டி சாப்பிடணும். அதல்லே காரியம்?'

ராமப்பன் 'மக்கா இவனை ஒரு இடத்திலயும் கேற்ற மாட்டாக பாத்துக்கோ. மத்த ரோகமாக்கும். கல்லியாண வீட்டிலகூட வெளியில இருத்தி புளிச்ச சாதனம்தான் குடுப்பாவ' என்றார்.

'நீரு பாத்துக்கிடும். உம்மட்ட எத்ர காசு உண்டு? ஒரு பத்து ரூபா எடுக்கான் உண்டோ?'

'பத்து இல்ல. அஞ்சுதான். எளவு இப்பம் வசூலு இல்லல்லா.'

'என்றெ கையில் இருபது ரூபா உண்டு. இனி ஒரு இருபது ரூபா வேணும்' என்றான் அகமது.

'அயமதே நான் ஒரு அஞ்சு ரூபா தாறேன்' என்றாள் எருக்கு.

'அப்பம் சரி. பத்து ரூபா நம்ம தாணு பிள்ளைட்ட கேக்கலாம்.'

சிண்டன் நாயர் 'ஞான் தராம் பத்து ரூபா' என்றான்.

'குய்யன்றெ கையில் எத்ர உண்டு?' என்றான் அகமது.

எருக்கு பர்ர்... என்று சிரித்துவிட்டாள். ராமப்பனும் சிரித்தார். 'அவனுக்க கையில பைசாயா? அந்தப் பேச்சே இல்லை. அம்பது பைசா இருந்தால் அதுக்கு என்ன கிட்டுமுண்ணு அலைவான்.'

எருக்கு 'பைசாவ வச்சிட்டு என்ன செய்ய? அதக் குடுத்தா ஓட்டலில பைசாவ வாங்கிட்டு புளிச்சு நாறினதத்தான் கொண்டு வந்து போடுவாவ' என்றாள்.

'வழியுண்டு சுந்தரியே' என்றான் அகமது. 'தாணு பிள்ளை வரட்டு.'

குய்யன் தயாராகிவிட்டான். துணியால் முகத்தை அழுந்தத் துடைத்து அழுக்குச் சட்டையை கழற்றி பயங்கரமான ஒலியுடன் உதறித் திரும்ப அணிந்தான். 'ராமப் பண்ணோ, உம்மட்ட விபூதி இருக்கா?'

'ஏம்டே?'

'விபூதி போட்டாக்க ஒரு இதுவா இருக்குமில்லா?'

'சாம்பல் குழியில விழுந்த பெருச்சாளி மாதிரி இருப்பே. அடங்குடே குய்யா. எளகாதே.'

'தாணு பிள்ளை வரட்டு' என்றான் அகமது.

குய்யன் சுற்றிச்சுற்றி வந்தான். 'எளவு வெயிலுல்லா கேறுவு. இந்த போலீசுகாரன் எங்கே போயி கெட்டி எடுத்தான்? நாசமத் துப் போவான்...'

'ஒடயோரே ஒடயோரே பிச்ச போடுங்கய்யா சாமி சாமி... பாவங்களுக்கு கண் பாருங்கய்யா...'

'லேய் குய்யா நீ விருந்தாக்கும் திங்க போற. பிறவு என்னத்துக் குடே இப்பிடி பாடுகே?'

'அண்ணா இது நம்ம தொழிலுல்லா?'

தாணு பிள்ளை டி.வி.எஸ். பிஃப்டியில் பிள்ளையார் போல வந்தார்.

'வந்திட்டாரு. ராமப்பண்ணா நான் பெய்ட்டு வாறன்' என்றான் குய்யன்.

'இருடே.'

'என்ன காரியம்? அயமதே நீ சொன்னது கரெக்டாக்கும். அக்யூஸ்டு குடும்பப் பேர சேக்க விட்டுப் போட்டான். அது எவிடென்ஸ் இல்ல. பயக்களுக்க புத்தியப் பாத்தியா?' என்றார் தாணுபிள்ளை.

அகமது 'தாணு பிள்ளை சார், நம்ம குய்யனுக்கு ஆரிய பவன்லே ஒரு ஸ்பெஷல் மீல்ஸ் வேங்கி குடுக்கணும். பைசா வச்சிருக் கான்.'

'ஆரிய பவனா? போட்டு தீட்டிப்பிடுவானடே.'

'நாப்பது ரூபா இருக்கு. ஸ்பெஷல் மீல்ஸ் எம்பிடு ரூபா? பாயசம் வடை பப்படம் எல்லாம் இருக்கணும். தும்பெலை போட்டு வெளம்பணும்.'

'உப்பேரி! உப்பேரி வேணும்' என்றான் குய்யன் ஆவேசமாக. 'புளிசேரி எரிசேரி ரெண்டும் வேணும். ஆனாக்க புளிசேரியில

ரசம் கலக்கப்பிடாது. ஒண்ணும் கலக்கப்பிடாது. எல்லாம் வேற வேறயா வேணும். கலந்து குடுத்தா பைசா இல்லை. பைசா வாபஸ். எனக்கு மோர் வேண்டாம்.' குய்யன் கிரீச்சிட்டபடி சுற்றி வந்தான். 'வேணுமானா அந்த மோருக்கு உண்டான பாயசத்தை கூட்டிக்கிட்டணும். இல்லாட்டி மஞ்சளாட்டு இருக்க நல்ல வாளைப்பளம்...'

'இவனுக்கு எளகியில்லா போச்சு' என்றார் ராமப்பன்.

'இங்க பாருங்க தாணுபிள்ளை சார். இவனை ஏமாத்திப் போடுவானுக. இவன் ஒரு முக்கிய சாட்சின்னு ஓட்டலில சொல்லணும். இவனுக்கு ஸ்பெஷல் சாப்பாடு வாங்கிக் குடுக்க எஸ்.ஐ எஜமான் பணம் குடுத்து அனுப்பினதா சொல்லிட்டு இவன் சாப்பிடும்பம் நீங்க பக்கத்தில இருக்கணும். எந்திரிக் கவே பிடாது. ஒரோ ஐட்டமும் சொல்லி வருத்தி குடுக்கணும். இல்லாட்டி குடுக்க மாட்டான். புறவாசலில இருத்தி குடுத்தா போரும். ஆனா உங்க கண் முன்னாலே இருந்து இவன் சாப்பிடணும்.'

'ஸ்பெஷல் மீல்ஸ் அம்பது ரூபாயாக்குமே.'

அகமது யோசித்தான். 'செரி என் கையில குறெ பழைய பேப்பர் உண்டு. அதை குடுத்தனுப்புதேன். அதை பழய பல சரக்கு கடையில போட்டா பத்து ரூபா கிட்டாம போகாது.' தான் அமர்ந்திருந்த கள்ளிப் பெட்டியை திறக்க முனைந்தான்.

'செரிடே. அது உனக்க கித்தாப்புல்ல? அது கிடக்கட்டு. பத்து ரூபாய்க்கு நான் வழி பாக்கேன். ஏம்டே குய்யா, அம்பது ரூபாய்க்கு நீ அஞ்சு நாளு மாட்டிறைச்சியும் சோறும் திங்கலாம். உனக்கு என்னத்துக்குடே?'

குய்யன் மனம் மாறி 'அப்பம் செரி. அயமதே நானு போகல்ல. ரூபாய கைல குடு' என்றான். 'எனக்கு மாட்டிறச்சி போரும். அதில நீரு பங்குக்கு வரமாட்டேருல்லா' என்றான் ராமப்பனிடம்.

'போயி திண்ணுட்டு வாலே நாய்க்குப் பிறந்த பயலே' என்று ராமப்பன் ஓங்கி தரையில் அடித்தார்.

குய்யன் 'செரி வாறேன்' என்றான்.

'குய்யா பாயசம் எப்பிடி இருந்ததுண்ணு சொல்லணும் பாத்துக்கோ.'

'கிட்டிச்சுடேண்ணு வாரி மோந்திப்பிடாதே. இஞ்சேரு இப்பிடி மொள்ளமா கோரி துள்ளி துள்ளியா ஊதி ஊதிக் குடிச்சணும்.' ராமப்பன் மிக மெதுவாக கையை வாய் வரை கொண்டுபோய் நடித்துக் காட்டினார். 'ஆக்ராந்தம் காட்டி சாப்பிடப்பிடாது. மொள்ளமா சாப்பிடணும்.'

'செரி அண்ணா.'

'செரி போ' என்றான் அகமது.

தாணு பிள்ளை தொப்பியைக் கழற்றி சரி செய்து வைத்தார். 'வாடே குய்யா.'

'ராமப்பண்ணோ நான் வாறேன். எருக்கு, சின்டன் நாயரே நான் வாறேன். அயமதே வாறன் கேட்டியா?'

சிண்டன் 'குய்யன் யுத்தத்தினா போணது' என்றான்.

'பறயான் பற்றில்லா சிண்டா. வீரமரணம் கிட்டியாலும் ஆயி' என்றான் அகமது.

தாணு பிள்ளைக்குப் பின்னால் குய்யன் துள்ளிப் போனான். போகும் வழியில் சந்துப் பிள்ளையாரை நின்று கண்மூடி கும் பிட்டு கன்னத்தில் போட்டுக்கொண்டான்.

ராமப்பன் 'கேட்டியாட்டி எருக்கு, சோறு விக்கி செத்தவனுக உண்டு. அதாக்கும் மோட்சம். நேரா சொர்க்கம். அங்க எப்படீண்ணா அங்க உள்ள எல்லாத்தயும் திங்கலாம். கல்லு, மண்ணு, மரம், மட்டை அம்பிடும் ருசியா இருக்கும். ஒருக்கா நான் அதை சொப்பனத்தில கண்டிருக்கேன்.'

'குய்யன் திரும்பி வாற லெட்சணம் இல்ல. நேரா மேலதான்.'

'பாவம் பய ஆசப்படுதான். ஆனா அவனுக்கு நாளைக்கு இருக்கு களி. குட்டி இந்த ஏமான்மாரு திங்குத சோறும் பருப்பும் நெய்யும் திண்ணா நமக்கு வயித்துக்குப் புடிக்காது கேட்டியா? திண்ணு திண்ணு வயிறு பதம் வரணும் அதுக்கு. இந்தப் பய ராத்திரி வயிறப் புடிச்சிட்டு அய்யோ ஆத்தான்னு கிடந்து நிலவிளிப்பான் பாத்துக்க.'

‘சிண்டா பேனு கடிக்கே’ என்றபடி எருக்கு தன் கூந்தலை அவிழ்த்தாள்.

சிண்டன் நாயர் அவள்பின் அமர்ந்து பேன் பார்க்க ஆரம்பித்தான்.

‘அவிக எங்க போனாஹ?’

‘கணக்கு நோக்கணு. வசூலு கணக்கு’ என்றான் சிண்டன் நாயர் ‘ஊஸ்’ என்று பேனை நசுக்கியபடி.

# 23

*பண்டாரம் கோமதி டிராவல்ஸ் கடையை அணுகி அங்கேயிருந்த பெண்ணிடம் 'சகாவு இருக்காரா?' என்றார்.*

*'மாடியில இருக்காரு. நீங்க ஆரு?'*

*'அவருக்க பிரண்டு.'*

*'உள்ள போங்க. இந்தால படி இருக்கு.'*

*சிறிய படிகளின் வழியாகப் பண்டாரம் ஏறி மேலே போனார். மாடியில் சாலையைப் பார்த்தபடி ஒரு தையல் கடை. பின்பக்க அறையில் கட்டில் மேஜை. கட்டிலில் அமர்ந்து மேஜைமீது எதையோ வைத்து கொச்சன் எழுதிக் கொண்டிருந்தார்.*

*'வரணும் வரணும் பண்டாரமே. பின்னெ எந்துண்டு காரி யங்கள்?'*

*'போவுது.'*

*'மகள்டே கல்யாண காரியம் அறிஞ்னு.'*

*'சின்ன லெவலிலேயாக்கும். சின்னவ ஒரு புத்தி மோசம் காட்டிப்போட்டா.'*

*'தெரியும். உக்காருங்க.'*

*பண்டாரம் ஸ்டூலில் அமர்ந்தார்.*

*'மகளெ விளிச்சு நோக்கியோ?'*

'அவ வரமாட்டா. அவளுக்கு அப்பிடி இருக்கது பிடிச்சுப் போச்சு.'

'கேட்டோ பண்டாரம், ஆத்ம பிரகாசம்னு ஒண்ணு உண்டு. ஆத்மா தன் வெளிச்சத்தை வெளிப்படுத்துற விதம் அது. இ.எம்.எஸ்ஸுக்கு ராஷ்ட்ரீயம் ஆத்மபிரகாசம். சார்லஸ் சோப் ராஜுக்கு திருடினா ஆத்மபிரகாசம். ஓரோருத்தருக்கு ஓரோந்நு. ஒராள்ட காரியம் மற்றவர்க்கு புரியாது. அதான் மனுஷனுக்க காரியம்.'

'கொச்சன் இப்பம் வேதாந்த மார்க்கம்ணு தோணுதே.'

'பின்ன இப்ப லைன் அதாக்குமே. தொம்மா... ரெண்டு சாய. மருந்து சாப்பிட்டேரா?'

'எதுக்கு?'

'மத்ததுக்கு.'

'ஊசியில்லா.'

'ஊசி பழைய காலம். நல்ல மாத்திரை உண்டு.'

'கொச்சனுக்கு இங்க என்ன காரியம்?'

'எங்க பார்ட்டி மாநாடு. நான் ஒரு பேப்பர் கொடுக்கேன்.'

'அகமது படிக்கான் படிக்கான்... அப்பிடி படிக்கான் பேப்பரு.'

'அந்தப் பேப்பரில்ல. இது கட்டுரை. எழுதின பிரசங்கம். பின்ன அயமதுக்க காரியம். அவன் விஷப் பார்ட்டி. நம்மகிட்ட சில வேலைகள் காட்டினான். கெட்டிடத்தில வளருத ஆலமரம் முளையிலயே வெட்டாட்டி பிளந்துபோடும். அதுதான் வித்தது. ஆல் கேரளா டௌன்ட்ரேடன் பீப்பிள்ஸ் அசோசியேஷனில் அவன் செகரட்டரியா போட்டி போடுவானாம். நடக்க கதையா?'

'சாமி எப்படி இருக்கு?'

'அதைப் பத்திப் பேசத்தான் விளிச்சது' என்றார் கொச்சன்.

'சாமி இப்பம் வலிய தெய்வம்லா.'

'உலக்க மூடு. வோய், அது அன்னைக்கு பாடின பாட்டைக் கேட்டாக்கும் ஸ்ரீகண்டன் அதை வேங்கினது. அங்க வந்தா

அதுக்கு என்னமோ எளகிப்போச்சு. இப்பம் மாசம் எட்டாகுது. ஒரு வரி பாடணுமே. ம்ஹூம். ஆரைப் பாத்தாலும் ஒரே வரிதான். அய்யா சாமி பிச்ச போடுங்கய்யா சாமி... நாறிப் போச்சு. நாறிப் போச்சுண்ணா அப்பிடி நாறிப்போச்சு. ஒரு பத்ரக்காரன் வந்தான். அவன் கிட்டே இது 'சாமி தர்மதொர பிச்ச போடு'ன்னு பாடி அவன் பிச்சைக்காரனை பிடிச்சு வச்சு ஊர ஏமாத்து தான்னு பேப்பர்ல எழுதுவேன்னுட்டு நில நிக்கான். விடமுடியுமா? பத்திரிக ஓனரைப் பிடிச்சு பணம் குடுத்து அத தடுத்தோம். ஆசிரமம் கெட்டினது, பரஸ்யம் குடுத்தது எல்லாமாட்டு எட்டு லெட்சம் வேஸ்டு. செரி அது வேற வழியா முதலாச்சு. அது ஸ்ரீகண்டனுக்க சாமர்த்தியம். அது வேற கதை.'

'சாமியா?' என்றார் பண்டாரம்.

'ஆமடே உம்ம சாமிதான்.'

'உம்மாணை ஓய், நானறிஞ்சு அது ஓராள்ளட்டயும் ஒரு சொல்லு பேசினதில்ல. ஓராள்ட்டயும் பிச்ச கேட்டது இல்லை. பாட்டுக்கு மட்டும்தான் வாய் திறக்கும். பின்ன சிரிப்பு.'

'நல்ல அடி குடுத்தோம். கரண்டு ஷாக்கு குடுத்தோம். பட்டினி போட்டம். குண்டியில வத்தல் மிளகா அரச்சு தேச்சம். நகத்தில ஆசிட்டு விட்டம். ஒண்ணும் நடக்கல்லே. ஒரே பாட்டுதான், அய்யா சாமி பிச்ச போடு.'

'எனக்கு ஒண்ணும் மனசிலாகேல்ல' என்றார் பண்டாரம். 'சாமி களிக்குது.'

'சாமிக்க அடப்பை உருவத் தெரியாம இல்ல. பின்ன அதனால பிரயோசனம் இல்லை. ஸ்ரீகண்டன் இப்பம் ஆஸ்ரமத்தில ஒரு மாதாவ இருத்தியியிருக்கான். ஊட்டியில பிடிச்ச கேஸு. மந்தபுத்தி. சுக்ரியா சுக்ரியான்னு மட்டும் சொல்லும். பீடியும் தினம் ஒரு இட்டிலியும் போரும். நல்ல கிரீடமும் காவியும் எல்லாம் கெட்டி வச்சு இருத்தியிருக்கு. பச்ச புடிச்சு வருது. இப்பம் வசூல் கொறவுதான். ஆனா பத்து வருஷத்தில கையில புடிக்க முடியாது.'

'அப்பம் சாமி?'

'சாமி சமாதியாயாச்சுண்ணாக்கும் வய்ப்பீ. ஆசிரம வளைப்பில சாமிக்கு சமாதி கெட்டியிருக்கம். மாதா சாமிக்க சிஷ்யை. சாமிய

நான் இங்க கொண்டு வந்திருக்கேன். ஸ்ரீகண்டன் தீத்துப்போட லாம்னு சொன்னான். நான்தான் வேண்டாம் ஸ்ரீகண்டா, வித்தா பைசான்னு கொண்டு வந்தேன். சாமிக்கு இங்க நல்ல வசூலுன்னு சொன்னீரே.'

'ஆமா. ஆனா சாமிக்க பாட்டு வேணும். பண்டாரம் பரதேசியா கைய நீட்டினா ஆரு போடுவா? அருள் வேண்டாமா?'

'செரி. நீ சரக்க எடுத்துக்கிட்டு என்ன தருவே?'

'பத்து.'

'அறுபதுக்கு வேங்கியது.'

'அப்பம் சாமி பாடிச்சே. பணம் பாட்டுக்கில்லா. பாட வைச்சி குடுங்க. இருபது தாரேன்.'

'பாட வைக்க இது என்னடே டேப் ரிக்கார்டரா?'

'ஊசி மொனை ஒடிஞ்சு போச்சுல்லா?'

'செரி. பத்துண்ணா பத்து.'

'சரக்கு எங்க இருக்கு?'

'இங்கதான். எங்க பார்ட்டி ஆபீஸ் பக்கம் ஒரு ஷெட்டில.'

'இதுக என்னத்துக்கு பார்ட்டிக்கு?'

'ஊர்வலத்தில நாலு உருப்படிக கோஷம் போட்டு வந்தா ஒரு சேலுல்லா? தொம்மனை அனுப்புறேன். போயிப் பாருங்க. பணம் உடனே கிட்டணும்..'

'பணத்துக்கு என்ன... பறந்தா போகுது?'

'மத்த உருப்படி எப்பிடிடே? முத்தம்மை... அவளை குடுக் கிறியா?'

'அது காமதேனுல்லா. இப்பம் அடுத்த ஈனுக்கு அணைய வய்க்கணும். முத்தி நிண்ணு கனைக்குது. இப்பம் கொச்சனுக்கு ஆஸ்ரம வேலை இல்லியா?'

'நாம வேற பார்ட்டில்லா. அது வேற இது வேற. அது மதவாதம், பிற்போக்கு. இது புரட்சி, முற்போக்கு.'

'பிராந்தி விஸ்கி எல்லாம் ஒரே பட்டைதான்னு பெருமாளு சொல்லுகான்.'

கொச்சன் உரக்கச் சிரித்தார். பிறகு 'ஒன்றேயான அதை கவிஞர்கள் பல பேரிட்டு துதிக்கிறார்கள்' என்றார்.

'என்னவாக்கும் அது?'

'வேதம்.'

'நாலாம் வேதமா?'

'அல்ல. அசல் சுயம்பு ரிக் வேதம்' கொச்சன் சிரித்தார்.

பண்டாரம் விடைபெற்று ஆட்டோவில் நேராக நாக ராஜா கோயில் போனார். அங்கே ஒரே கோலாகலமாக இருந்தது. விபூதி குங்குமம் வைத்து, குய்யன் துள்ளி துள்ளிப் பேசிக் கொண்டிருந்தான்.

'சாம்பாரு வேணுமாங்கியான். வேணுமாங்காதே, ஊத்து மக்காண்ணேன். சாம்பாறு சில்லற சாம்பாரில்லே. தேவலோக சாம்பாரு. மணத்துப்பாரு, சாம்பாரு மணம்.'

எருக்கு அவன் கையை முகர்ந்து 'நல்ல மணம்' என்றாள்.

'களுவாம வந்தேன். மணம் இருக்கணும்லா?'

'என்னடே?' பண்டாரம் கேட்டார்.

'மோலாளி இந்த கையில சாம்பாரு மணம், இந்தக் கையில பாயச மணம். மோந்து பாக்கேளா?'

'சவம் நீங்கி நில்லுடே. எங்க போயி தின்னலே?'

'முதலாளி அவனுக்கு தாணுபிள்ளை சார் ஸ்பெஷல் சாப்பாடு வாங்கிக் குடுத்தார்.'

'எதுக்குடே?' என்றார் பண்டாரம் சந்தேகமாக.

'இவனாக்கும் சாட்சி. கொலைக்கேசு சாட்சி.'

'எளவு இவனை ஆருடே கோர்ட்டுல ஏத்தியது?'

'சும்மா மொதலாளி. ஒரு பேச்சுக்கு.'

குய்யனின் கையை சிண்டன் நாயர் முகர்ந்து, 'பருப்பு பாயசமாணு' என்றான்.

'நல்ல மைசூர் பருப்பு. நான் சொன்னேன்; பாயசம் போடுடே பட்டரே, நான் நிரபராதியாக்கும். நிரபராதிய பட்டினிக்கு போடப்படாதுன்னு. நிரபராதி பாவமாக்கும்.'

'பெருமாள் எங்கடே?' என்றார் பண்டாரம்.

பெருமாளைக் கூட்டிக்கொண்டு ஆட்டோ ரிக்ஷாவில் பண்டாரம் வடிவீஸ்வரம் போனால் அங்கே கொட்டகையில் ஐம்பது உருப்படிகள் கிடந்தன. ஒரு கிழவர் மலம் கழித்து அதன் மேலேயே அமர்ந்துகொண்டு யாரையோ கெட்ட வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார்.

தொம்மன் இருந்தான். 'முதலாளி பறஞ்ஞு' என்றான்.

'இவன் தந்தி பாஷைலதான் பேசுவான்' என்றார் பண்டாரம் பெருமாளிடம். 'எங்கேடா சாமி?'

சாமி ஒரு ஓரமாகக் கிடந்தது. மெலிந்து கன்ன எலும்புகள் புடைத்து விகாரமாக இருந்தது.

'காக்கிலோ தேறாது போல இருக்கே' என்றான் பெருமாள்.

'சாமி வாறியளா? உங்களை நான் வேங்கியாச்சு' என்றார் பண்டாரம்.

சாமியின் முகம் சிரிப்பில் செய்த தசைகளுடன் அசைவற்று இருந்தது.

'தூக்குடே.'

'மோலாளி அந்த கூனனைப் பாத்தியளா?'

'ஏம்டே?'

'அது பிறவிக்கூனல். குருடு. பஸ்டு சரக்காக்கும். எளம் சரக்கு. வயது பதினேழு தேறினா கூடுதல்.'

'ஆனை வெலை சொல்லுவான்.'

'இப்பம் நமக்கு ஒண்ணு வேணும்லா. முத்தம்மைக்கு அணைய ஆள் இல்லியே.'

'ஆமாம்ல' என்று பண்டாரம் கூனனை அணுகி அவனைத் தொட்டுப் பார்த்தார். தொட்ட இடம் நோக்கி அவன் சீறினான்.

'நல்ல உசாராக்கும்' என்றார் பண்டாரம்.

பெருமாள் அவனது கால் நடுவே கையைவிட்டு பரிசோதித்தான். கூனனின் கைகளும் கால்களும்தான் சூம்பியிருந்தன.

'மோலாளி பஸ்டு சரக்காக்கும். தொட்டா பத்தி நிமிருது. அம்மாதிரி உருப்படி.'

'வேங்கிப்போடலாமா?'

'பின்ன மறுயோசனை உண்டா?'

'செரி. டேய் தொம்மா. நான் இதையும் எடுக்கேன். நாயரிட்ட நான் பேசிக்கிடுதேன். இவன் ரெண்டையும் தூக்கிட்டு போட்டு.'

'செரி' என்றான் தொம்மன்.

'இது பேசுமா?'

'பேச்சில்ல.'

'அப்பம் செரி. பெருமாளு, நான் போயி கொச்சனிட்ட பேசிட்டு வாறன். நீ கொண்டுட்டு போ. சாமிய நாகராஜா கோவிலிலே எறக்கு. கழுத்தில ஒரு மாலைய போட்டு விடு. நல்ல நாளுல்லா.'

பண்டாரம் போன பிறகு பெருமாள் சாமியை ஆட்டோவில் ஏற்றினான். கூனனை ஏற்றமுடியவில்லை. வெறியும் தினவுமாக கூனனின் உடல் அலைந்தது. முனகினான். தொம்மன் ஒரு துணியால் கூனனின் கையையும் இன்னொரு துண்டால் காலையும் சேர்த்துக் கட்டினான். இருவருமாக அவனை சதைப் பொட்டலமாகத் தூக்கி ஆட்டோவில் வைத்தனர்.

'நல்ல மதம்' என்றான் தொம்மன்.

'பிராயம் அதுல்லா?' என்றான் பெருமாள்.

இரவு ஏறிவிட்டது. சாமியை கொண்டுபோய் நாகராஜா கோயில் முகப்பில் விட்டு விட்டு இதே ஆட்டோவில் கூனனை சவேரியார் கோயில் பக்கம் கொண்டுபோய் இறக்கினான்.

நேராகப்போய் ஒரு குப்பி சாராயம் குடித்துவிட்டு ஒரு குப்பியில் சிறிது வாங்கிக்கொண்டான். முத்தம்மை சாலையோரம் மண்ணில் கிடந்தாள். பக்கத்து கூனிக்கிழவியிடம் ஏதோ பேசிக்

கொண்டிருந்தாள். பெட்டிக்கடை முன் லாரிக் காரர்களுடன் குமரேசன் இருந்தான்.

'குமரேசா இவளைத் தூக்குடே' என்று பெருமாள் அழைத்தான்.

இருவருமாக முத்தம்மையை தூக்கினார்கள். 'சரக்கு மெலிஞ்சு போட்டே குமரேசா' என்றான் பெருமாள்.

'இனி சதை பிடிக்கும். நல்ல தீனியில்லா?'

'எங்க கொண்டு போறிய?' என்றாள் முத்தம்மை பதறி.

'மணியறைக்கு. இன்னைக்கு உனக்கு பஸ்ட் னைட்டாக்கும்.' என்றான் குமரேசன்.

'அய்யோ எனக்கு வய்யாமே. அய்யோ.'

'உனக்கு நாளு மாறுத கணக்கு நம்ம கைல உண்டு கேட்டியோ?' என்றான் குமரேசன். 'இன்னைக்கு பவுர்ணமியாக்கும். தொட்டா போரும். செனை கேறிப்போடும். காவிலயும் வாவிலயும் சேரணும்னு இருக்கே.'

முத்தம்மை விசும்பி விசும்பி அழுதாள்.

'புதுப்பெண்ணுல்லா அளுவுது' பெருமாள் சொன்னான்.

சாலைக்கு அப்பால் நல்ல இருட்டு. ரயில்நிலையம் வழியில் இரு பக்கமும் சதுப்பு. அங்கே சீவிடுகளும் தவளைகளும் சேர்ந்து இரைந்துகொண்டிருந்தன.

முத்தம்மையை இறக்கி கல்வெர்ட் பாலத்துக்குக் கீழே கொண்டு சென்றனர். அப்பகுதி முழுக்க மலம் குவிந்து கிடந்தது. நிறையப் பன்றிகள் முட்டிமோதி உறுமின. பெருமாள் கால்களால் பன்றிகளை உதைத்து விரட்டினான். அவை அலறியபடி இடித்துத் துள்ளி ஓடின.

'போடு...'

'ஒடயோரே பீயாக்கும்.'

'பீயில்லாத எடம் இங்க எங்கிண இருக்கு. கெடத்துடே.'

அவளைத் தரையில் போட்டுவிட்டு பெருமாள் 'நின்னுக்கோ. நான் போயி சரக்க கொண்டு வாரன்' என்றான்.

'தூக்கணுமா?'

'அம்பிடு வெயிட் இல்ல.'

பன்றிகள் மீண்டும் வந்து முட்டி மோதின. மேலே ஒரு மொபட் வண்டி போனபோது ஒளியில் பன்றிக் கண்கள் ஒளி விட்டன.

பெருமாள் கூனனை கட்டை அவிழ்க்காமலேயே தூக்கி வந்தான். சாராயப் புட்டியைத் திறந்து அவனுக்கு ஊட்டினான்.

பாலத்துக்கு அடியில் முத்தம்மை 'ஒடயோரே கூனனா வேண் டாம், ஒடயோரே' என்றாள்.

'ஏம்ட்டி இவன் மம்மதன்லா... பேரு கமலஹாசன். சிரிச்சா ஏழழகாக்கும்' என்றான் பெருமாள்.

'ஒடயோரே...'

'சும்மா கெடட்டி.'

உடலில் வருடிவிடப்பட்டபோது கூனன் திமிறி முனக ஆரம்பித்தான். போதையும் ஏறி வந்தது.

அவன் கட்டுகளை அவிழ்த்து இருவருமாக தூக்கி முத்தம்மை மீது விட்டார்கள். முத்தம்மையின் விசும்பலும், கூனன் பன்றிபோல் எழுப்பிய ஒலியும் கேட்டன. மேலே ஒரு கார் ஒளி வீசியபடி போயிற்று. இன்னொரு கார் எதிரே வந்து சென்றது.

முத்தம்மை திடீரென்று 'ஒடயோரே ஒத்த வெரலு... ஒடயோரே ஒத்த வெரலு... இவன் வேண்டாம் ஒடயோரே. இவன் மட்டும் வேண்டாம் ஒடயோரே...' என்று வீரிட்டாள். அவள் திமிறிப் புரள்வதும் கூனன் அவளை அழுத்திப் பிடிப்பதும் தெரிந்தது.

'என்னட்டி?' என்றான் பெருமாள்.

முத்தம்மை 'ஒடயோரே இவன் வேண்டாம். ஒத்த வெரலாக்கும் ஒடயோரே...' என்று கூவினாள். ஆனால் கூனன் அவளை முழுதாக ஆக்ரமித்துவிட 'என்றெ பொன்னு தெய்வமே' என்று மனமுடைந்த குரல் எழுப்பி விசும்பி விசும்பி அழுதாள்.

'சவத்து மூதிக்கு வட்டெளகியில்லா போச்சு' என்றான் பெருமாள்.

# 24

நிலா நன்றாக மேலே ஏறிவிட்டது. இளம் ஆரஞ்சு நிறத்தில் மிகப் பெரிதாக மேகமே இல்லாமல் வானில் நின்றது. இரண்டாம் ஆட்டம் விட்டு கும்பல்கள் போன பிறகு நகரம் முற்றிலும் அடங்கிவிட்டது. வெகு தொலைவில் ஒரு ஒலி பெருக்கி 'நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்' என்று பாடியது.

குய்யன் தூங்கிவிட்டான். உண்ட களைப்பு. சிண்டன் நாயர் ஆடியாடி வந்தான்.

'கிட்டிச்சாடே?'

'கிட்டி கிட்டி.'

கஞ்சாவைப் பிரித்து பீடிக்குள் சாமர்த்தியமாக திணித்து சுருட்டிய ராமப்பன் 'நல்ல சோறு திண்ணா இதுக்க அவசியம் இல்ல கேட்டியா? சோறு ஒரு மப்புல்லா? இன்னைக்கு பாத்தியா குய்யனுக்கு மப்பு கேறிப்போட்டு. பாட்டென்ன, டான்ஸென்ன, இங்கிலீஸ் பேச்சென்ன?' என்றார்.

கஞ்சா பீடியை சாமிக்கு காட்டி வந்த சிண்டன் நாயர் எருக்குவுக்கு கொடுத்தான். பீடி சுழன்று வந்தது.

'இல்ல சாமி, கேக்கேன் அங்க என்னத்துக்கு கொறவு? சப்பர மஞ்ச கட்டிலில்லா. பழம் பாலு. ஆணிப்பொன்னுல சேரு...' என்றார் ராமப்பன்.

'அத எம்பிடு தடவ கேப்பே. சாமிக்கு பிடிக்கல்ல. வந்துப் போட்டு...' என்றான் வட்டன்.

'சாமிக்கு வயறு காய்ஞ்சா பாட்டு வரும். அவனுக பாலும் நெய்யுமா குடுத்தா சாமிக்கு குசுதான் வந்தது. கொண்டுவந்து விட்டுப் போட்டான்' என்றார் ராமப்பன்.

கிரீச் என்ற ஒலியுடன் ஒரு பைக் போயிற்று. தொடர்ந்து ஒரு கார்.

'பேய் ஒறங்க நேரம். இந்தப் பெயகளுக்கு உறக்கம் இல்லியா? அலையுதானுக' என்றார் ராமப்பன். 'இல்ல இந்த சாமிக்கு என்னத்துக்கு குறவு? இங்க வந்து கெடக்கு?'

'அதை விடு மாமா. நாட்டில் ஆயிரம் பிரஸ்னம். சாமி என்ன சத்திய சாய்பாபாவா? சாதாரண சாமிதானே?'

'சாமி பாவிங்களுக்க சாமி. பிச்சக்காரனுகளுக்கும் ஒரு சாமி வேணுமே. திருடனுக்கும் தேவிடியாளுக்கும் தோட்டிக்கும் சாமி வேணுமே. இஞ்ச இருந்துட்டு போட்டு' என்றாள் எருக்கு.

'இல்ல, இந்த சாமிக்கு என்னத்துக்க குறவு?'

குய்யன் தூக்கத்தில் எழுந்து உட்கார்ந்து 'அய்யா சாமி தர்மதொரை மகராசீ பிச்ச போடுங்கம்மா' என்று கூவி பரட் பரட் என்று தலையை சொறிந்து மீண்டும் படுத்தான்.

'இப்பிடி விளிக்கது அவனில்ல, அவனுக்க ஆத்மாவாக்கும்' என்றார் ராமப்பன்.

'ஆத்மாவுக்க பிச்சக்காரன், மகராஜன் அப்டீன்னு உண்டுமா?' என்றாள் எருக்கு.

'ஆத்மாவில எறும்பு ஆனைன்னு இருக்கே?'

எருக்கு 'உறக்கம் வருகு' என்றாள்.

சாமி ஒரு கல்லை எடுத்து சுவரைத் தட்ட ஆரம்பித்தது. முகம் நிலவை நோக்கி நிமிர்ந்திருந்தது. சிரிப்பே நிலையான முகம்.

தாளம் வேகம் பிடிக்க ஒரு கணத்தில் மாங்காண்டி சாமியின் குரல் எழுந்தது.

‘வெண்ணிலா அறியாதோ

வெந்துருகும் எம்மனசை?

விண்ணுக்குப் போகாதோ

விம்மி அழுவதெல்லாம்?

சொன்ன சொல்லை மறப்பாரோ

சொந்தமிதை விடுவாரோ

என்னவென்று எண்ணியெண்ணி

ஏங்கிடுவேன் வெண்ணிலாவே’

*கைத்தடியை மடியில் போட்டு அதன் மீது தாளமிட்டார் ராமப்பன். அகமது தன் பெட்டியில் தாளமிட்டான்.*

*நிலவொளியில் முகம் படும்படி குய்யன் புரண்டு படுத்தான். தலையைச் சொறிந்துகொண்டு இருமுறை சப்பு கொட்டிய குய்யன் திடீரென்று முகம் மலர்ந்து சிரித்தான்.*

# ஆறுகள் - கழிவுஓடைகள்

**சு.வேணுகோபால்**

தமிழில் நாவல் முயற்சிகள் குறுகிய எல்லைகளுக்குள்தான் நிகழ்ந்திருந்தன. அவை மதிக்கத்தக்கவை என்றாலும் நாவல் வடிவத்தின் பெரும் சவாலை எதிர்கொண்டவை அல்ல. ஜெய மோகனின் விஷ்ணுபுரம் அந்த வகையில் தமிழ் நாவல் உலகத்தைப் புதிய திசையில் திருப்பியது. பிறகு, பின்தொடரும் நிழலின் குரல், காடு. பெரும் நாவல்களை எழுதுகிற தமிழ்ப் படைப்பாளிக்கு தமிழ்ச்சூழல் அவ்வளவு உகந்ததாக இல்லை. அதற்குப் பற்பல காரணங்கள் - முக்கியமாகக் கூர்ந்து படித்து அதன் எல்லாக் கூறுகளையும் கவனத்தில் தொகுத்துக்கொள்ளும் வாசகர்கள் குறைவாக இருப்பதே. ஆனாலும் கூர்மையான படைப்பாளிகளின் பெரும்பாலான படைப்புகள் சோடை போவது கிடையாது. இதற்கு உதாரணமாக புதுமைப்பித்தனைச் சொல்லலாம். காரணம் சிறந்த படைப்புகள் உருவாவது காலம், சூழல் சார்ந்த விஷயமல்ல. அது படைப்பாளியின் குணாம்சம் சார்ந்த விஷயம்; அவனது பார்வை, கலை ஆற்றல் சார்ந்த விஷயம். ஏழாம் உலகம் ஜெயமோகனின் ஆறாவது நாவல். அவரின் ஒவ்வொரு நாவலும் ஒவ்வொரு திசையில் ஊடறுத்துச் செல்லக்கூடியது. இந்நாவல் நமது சூழலில் நாம் அறிந்தேயிராத இருண்ட பகுதிக்குள் போகிறது.

சிலவருடங்களுக்கு முன் தமிழில் இனிமேல் யதார்த்தவாதத் துக்கு இடமில்லை, அது செத்துவிட்டது என்ற குரல் எழுந்தது. மேலைநாடுகளில் அதைப் புதைத்துவிட்டார்கள் என்று சொன் னார்கள். ஆனால் இப்போது யதார்த்தவாதம் மீண்டும் வீச்சுடன் அங்கே எழுந்துள்ளது. நுட்பமான சித்தரிப்பும் வரிதோறும்

சொல்லப்படாத ஆழங்களும் கொண்ட இந்த நாவல் அத்தகைய புது யதார்த்தவாத படைப்பு. என்னைப் பொருத்தவரையில் படைப்பு எந்த இஸத்தைக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறது என்று அளப்பதில்லை. வாசக மனசை முழுமையாகத் தன்னில் ஈர்த்துக் கொள்ளும்படியாக இருக்கிறதா என்றுதான் முதலில் கவனிக்கிறேன். ஜெயமோகன் எந்நிலையிலும் மேலை இலக் கியப் போக்குகளை மாதிரிகளாகக் கொண்டு படைப்பை உரு வாக்குவதில்லை. ஒருபோதும் தன் நிலத்தின் தன்மையை இழந்துவிடாத வீரியம் அவருடையது.

இந்நாவல் தேர்ந்திருக்கிற உலகம் குறைப்பிறவிகளான, முட மான, பெருநோய்வாய்ப்பட்ட பிச்சைக்காரர்களின், அவர் களைச் சுரண்டி மேய்ப்பவர்களின் உலகம். தெய்வ சந்நிதா னத்தைச் சுற்றி இதுவரை நாம் கவனிக்காத ஒரு அடியுலகம் பேருருக் கொண்டு நாவலில் இயங்குகிறது. பக்தி பிரவகிக்கும் அதே இடத்தில் வைத்து நம் அபத்தங்களைப் பேசுகிறது. இதை வேறொருவரால் கலாபூர்வமாக எழுதமுடியாது. நாம் எதில் விரும்பி பயணமாகிறோமோ அதே பாதையில் நாம் அரு வருக்கும் எச்சில்கள் நம்மீது காறித் துப்பப்பட்டபடியே இருக் கின்றன. கும்பிட்டு கண் திறந்தால் கருவறையில் பேய் உட்கார்ந் திருக்கிறது. உயர்ந்த படைப்பாளி அந்த ஏமாற்றங்களை அவ மானங்களை, அசிங்கங்களை, ஏளனங்களை, சீரழிவுகளை ஒருபோதும் மறைக்க மாட்டான். உதிரிகளாக எங்கெங்கிருந்தோ வந்து மோதியிருக்கும் அவை ஒன்று திரண்டு இந்நாவலில் புனை வாகியிருக்கிறது. நாவலை வாசிக்க வாசிக்க மனித இருப்பின் அவலமும், அதை மீறி எந்நிலையிலும் வாழத் துடிக்கும் முனைப் பும், மனித மனங்களின் வக்கிரமும் நெகிழ்வும் நம்மை வந்து தாக்கியபடியே இருக்கின்றன.

பெருங்கோயில்களின் முன் அமர்ந்திருக்கிற முடப் பிச்சைக்காரர் கள் தங்கள் எஜமானர்களின் கொக்கிகளில் வதைபட்டுக் கொண் டிருக்கின்றனர். அது நாமறியாத வேறொரு உலகம். படுபயங்கர மான போக்கிரித்தனங்களின் உலகம். அத்தனை குரூரங்களும் எழுந்து பேயாட்டம் ஆடுகின்றன. தாஸ்தாவெஸ்கிதான் 'மரணவீட்டின் குறிப்புகள்' எழுதமுடியும். ஜெயமோகனால் தான் இதை எழுதமுடியும். ஜெயமோகனை நினைத்தால் வியப்பாக இருக்கிறது. எனக்கு பழநி பண்டாரங்களின் உலகம் கொஞ்சம் தெரியும் என்றாலும் அதனை இப்படி சீழும் நாற்றமும்

படிக்கட்டுகளில் வழிந்து வரும்படி உக்கிரமாகப் படைத்திருக்க முடியாது. ஜெயமோகன் துணிந்து அதற்குள் புகுந்து போகிறார். ஒவ்வொரு படிகளிலும் கிடக்கும் உருப்படிகள் அற்பப்புழு விலும் கேவலமான நிலையிலும் அத்தனை ஆசாபாசங் களுடனும் உயிர் பெற்று நம்மைப் போலவே வாழத் துடிக்கின்ற சித்திரத்தை சாதாரணமாக உருவாக்கிச் செல்கிறார். வன்மை யான எழுத்தாற்றல் உள்ள கலைஞனுக்கு மட்டுமே இது சாத்தியம். மனிதர்களை வைத்து நடக்கும் பெரும் வியாபாரத் தில் நம் பக்திமார்க்கம் நாறி நாற்ற மெடுக்கிறது. எல்லா நிறுவனங்களும் முடிந்தமட்டுமான கொள்ளையை அடித்துக் கொண்டு நைசாக மறைந்து கொள்கின்றன. ஆன்மீக நிறுவனங் கள், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள், வியாபாரிகள், சுற்றியிருக்கும் குடும்பங்கள் எல்லாம் எல்லாம் கொள்ளை அடித்துக் கொள்ளும் ஒரு முடிவற்ற திருவிழா நிகழ்வதாகத் தோன்றுகிறது.

அறம், கருணை, மனிதாபிமானம் என்றெல்லாம் நாம் காலங் காலமாக வளர்த்து வந்த நம்பிக்கைகளை இந்நாவல் வேரோடு பிடுங்கி விடுகிறது. இந்நாவலில் கடவுள் ஒரு கேலிப் பொருளாக மாறிவிடுகிறார். தங்கள் உள்ளே உறையும் அக்கடவுளால் கைவிடப்பட்ட மனிதர்கள் இன்னமும் 'அரோகரா' என்று நெருக்கியடித்துக்கொண்டு படிகளில் ஏறுகின்றனர், இறங்கு கின்றனர். தங்களை அலங்கோலப் படுத்திக்கொண்டு கடவுள் முன் பிச்சை கேட்கிறார்கள். எந்தவித தயக்கமோ, மனக் கூச்சமோ இல்லாமல் பொருளுக்கும் சுகபோகத்திற்கும் அடிமை யாகிப்போன இந்த நவீன உலகின் மனிதர்கள் வாழும்பொருட்டு கடவுள் என்றும் அறம் என்றும் பலவற்றை பிடித்துக்கொண்டு தொங்குகிறார்கள். ஆனால் வாழ்வதற்கான எந்தவிதமான பற்றுக்கோடும் அற்றவர்கள் இந்தப் பிச்சைக்காரர்கள். பந்தங் கள் அற்றவர்கள். எந்த உடைமையும் அற்றவர்கள். இவர்களில் யாரையும் கொல்லலாம். எந்த அரசும் கடவுளும் அதைத் தடுக்கப்போவது இல்லை. அவர்களை விற்கலாம். புணர வைத்து பெற்றுப் பெருகச்செய்யலாம். இவர்களின் வேதனைகள் சிரிப்பிற்குரியன, ஆசைகள் கேலிக் குரியன. உயிர் வாழ்வதற்கு எந்த முகாந்தரமும் இல்லாத இந்த ஜீவன்கள் தற்கொலை செய்து கொள்வார்களானால் அதற்கு அர்த்தம் உண்டு. ஆனால் அவர்களால் முடியாது. வாழும் உலகின் அனைத்து உயிர்ராசி களையும் போல கடைசித்துளி வரை வாழ்ந்து விடவே துடிக்

கின்றனர். விற்கப்பட்ட குழந்தைக்காக ஏங்கி பீழை தள்ள கண்மூடிக்கிடக்கும் முத்தம்மையின் பிடிவாதம் தளர்ந்து மீண்டும் சகஜமாகி பிச்சை எடுக்கப் போகிற இடம் இதில் ஒன்று. குழந்தையின் பிரிவுத்துயரம் கொடூரமானதுதான். மிச்சமிருக்கும் வாழ்க்கை அதைவிடக் கொடூரமானது, ஆயினும் வாழ்க்கை கவரத்தான் செய்கிறது.

ஏழாம் உலகத்தில் எழுத்தின் மூர்க்கம் முழுமையாக வெளிப் பட்டிருக்கிறது. புறச்சூழலின் சித்திரத்தை ஆழமாகப் பேசுவதால் மட்டும் ஒரு படைப்பு மேலான படைப்பு என்றாகிவிடாது. படைப் பின் அந்தரங்க கதி என்று ஒன்று இருக்கிறது. அது இந்நாவலில் மிகச்சிறப்பாக உருவாகியிருக்கிறது. அதுதான் வாசகனை நம்ப வைக்கிறது. கலையை நிஜமாக்குகிறது. மேலும் நம் மனதில் விரிய வைக்கிறது. நாம் நாகரீகம் என்று நம்பக்கூடிய இந்த இருப தாயிரம் வருட வளர்ச்சிப் பாதையில் பின்னோக்கிக் கதறியபடி ஓடுகிறது இந்நாவல். முத்தம்மையை மலக்காட்டில் பன்றிக் கூட்டங்க ளிடையே கிடத்தி கூனனை அணைய விடுகிறபோது 'ஐயோ வேண்டாம்! ஒத்த வெரலு!' என்று திரும்பத்திரும்பச் சொல்லி கதறும் குரல் மனித நாகரீகத்தின் மறு எல்லையிலிருந்து எழுவது. ஏழாம் உலகம் வேறெங்கும் இல்லை. நிஜத்திலேயே நம்மைச் சுற்றிலும் இருக்கிறது. நாமும் அதில் பங்கு பெறுகிறவர்கள்தாம்.

மனிதர்கள் பண்டமாகிப் போனகாலம் இது. இந்த நுகர்வு கலாச் சாரத்தில் மதிப்பீடுகளுக்கு இடமில்லை. நேர்மைக்கு இட மில்லை. சான்றாண்மைக்கு இடமில்லை. வாய்மைக்கு இட மில்லை. பணமே ஆகப்பெரிய கடவுள். அதுவே வணங்கத் தக்கது. எல்லாம் பொருள் குறித்தனவே என்ற பார்வையை இவ்வளவு உக்கிரமாக சொன்ன நாவல் தமிழில் வேறொன்றும் இல்லை. பணத்திற்காக எந்த அசிங்கத்தையும் செய்கிற இந்த வியாபார உலகம் ஆத்மாவைப் புதைத்துவிட்டு மிருகங்களாக உலவுவதைக் குறிப்பால் வெளிப்படுத்துகிறது நாவல். அதிகாரத் துக்கும் ஆன்மீகத்துக்கும் இடையே உள்ள நுட்பமான மோதலை நாம் மாங்காண்டி சாமியில் காண்கிறோம். நம் ஊரில்தான் எத்தனை சாமிகள்? எத்தனை நிறுவனங்கள்? பண்டாரம் சொல்வது போல 'அப்படிப் பார்த்தால் யார்தான் எரப்பாளி இல்லை?'

ஒரு பக்கம் அழுகிய மதமும் கடவுளும். மறுபக்கம் எல்லா இழிவுகளையும் எங்கும் சிக்காத ஆன்மீகம் தாண்டிச்செல்கிறது. காய்ந்த பீயில் எரிந்தாலும் தீ தீதான் என்கிறார் ராமப்பன்.

நாவலில் இத்தகைய முரண்பாட்டியக்கம் அரசியல், குடும்பம், என பல தளங்களையும் நுட்பமாகப் பிளந்து செல்கிறது. மனிதர் களை எங்குமே அடையாளப்படுத்த முடிவதில்லை. ரௌடி லாரன்சுடன் ஓடிவிட்ட மகள் வடிவம்மையை நினைத்து ஏங்கும் பண்டாரம் முத்தம்மையின் குழந்தைப் பாசத்தை பொருட்படுத்து வதேயில்லை. மனிதனின் அடிப்படை உணர்வான காமத்தில் முளைக்கும் கற்பனைகள் எந்த ஆழம்வரை வேர்விட்டுச் செல் லும் என்பதற்கு முதியவரான அர்ச்சகர் போத்தி, முத்தம்மை குறித்து சொல்லுமிடமே உதாரணம். உளவியல் துறையை கலை வெற்றி கொள்ளும் இடம் அடுத்த வரியிலேயே வந்துவிடுகிறது. 'இல்லாட்டி வேண்டாம். நான் சொன்னதை மறந்திடு பண்டாரம். நான் அதைச் சொல்லல்ல. நீ கேட்கல்ல. நம்மளப் பத்தி அவ ளுக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் இருக்கு. அதை நாம களையப் பிடாது.' வாசகன் மனதில் உறைவு கொள்ளும் ஒரு முடிவை உடைத்து உடனே வேறொரு இடத்துக்கு மேலும் நகர்த்துவது பெரும் கலைப் படைப்புகளுக்கு மட்டும் இருக்கும் பண்பு. அதா வது அந்த உணர்வு ஒரு கணத்தின் முனை மட்டும்தான். மனித னுக்குள் உள்ள அவனே அறியாத சிறிய துளி. மனித வாழ்க்கை யின் சொல்லிவிடமுடியாத விதத்தை நல்ல படைப்புகள் நம்மை நம்பவைத்து சொல்லிக் காட்டும். ஆத்மா இல்லாத சீவன்கள் என்று முதலாளிகளால் உதாசீனப்படுத்தப்படும் சிறுமைப் படுத்தப்படும் இந்த குறையீனர்களிடையேதான் உறவுகள் மனி தார்த்தமாக இருக்கின்றன. ஆனால் இழப்பதற்கு எதுவுமில்லாத இந்த உருப்படிகளிடம் கூட சமூகத்தில் உள்ளுறைந்தும் வெளித் தெரிந்தும் இயங்கும் சாதிய மனோபாவங்கள் எதிரொலிக்கின் றன. இது இந்திய மண்ணின் மற்றுமொரு வாசனை.

தேர்ந்த நெசவுக்காரன் ஊடுபாவு இழுத்து நெய்வதுபோல பலநிற நூல்களும் சரிகையுமாக இந்நாவல் பல கோடுகளினால் ஆனதாக உள்ளது. உருக்கள் வாழும் பழனி படிக்கட்டுகளில் உள்ள கீழ்மை ஒருவகை. பண்டாரத்தின் சமையலறை இன் னொரு வகை கீழ்மை. ஒற்றைக்கை குழந்தையை வைத்து பொம்மைபோல விளையாடுகிறார்கள். வம்புக்கார உண்ணி யம்மை ஆச்சியும் அழுகிய நோயாளிதான், அழுகியிருப்பது அவள் மனம். அப்படி எத்தனை வகையான நோயாளிகள். மிகக் குரூரமான சித்தரிப்புகள் வழியாக செல்லும் இந்த நாவலில் கூர்மையான நகைச்சுவை சரிகை ஓட்டம்போல கூடவே பின்னிச் சென்றபடியே உள்ளது. ஒன்றை இன்னொன்று ஈடுசெய்து

காட்டுகிறது. எந்த இடத்தில் தர்மத்தின் குரல் ஒலிக்கும் என்று சொல்லிவிடமுடியாது. உருப்படிகளுக்கு சமானமான வாழ்க்கை கொண்ட பகடை எதனாலும் அசைக்கமுடியாத தார்மீக குரலாக ஒலிக்கிறான். முதல் வரியிலேயே சின்னவள் வடிவம்மையின் குணச்சித்திரம் அறிமுகமாகிவிடுகிறது. அவளை பண்டாரம் நினைவுகூரும் இடங்களை மட்டும் கவனித்தால் அவரது உள் மனசு அவளை எப்படிப் பார்த்தது என்று தெரியும். இப்படிப் பட்ட பல நூறு சிறிய புள்ளிகளை கவனம் கொடுத்து படித்தால் தான் இந் நாவல் நமக்கு கிடைக்கும்.

ஒரு படைப்பாளியைப் பெருங்கலைஞன் என எப்படி மதிப்பிடு வது? எனது அனுபவத்திலிருந்து சொல்கிறேன். வேறொரு எழுத்தாளனால் எழுதவே முடியாத அபூர்வமான இடங்களை இலகுவாக எழுதிச் செல்கிறபோதுதான். மற்றவர்கள் நின்று விடும் இடத்திலே மேலே செல்லும்போதுதான். போத்திவேலு பண்டாரம் பெரிய மோசடிப் பேர்வழிதான். துஷ்டன்தான். ரோகி களை வைத்துச் சுரண்டிய பணத்தோடு நாயக்கர் கையாளுக்குப் போக்குக் காட்டிவிட்டுத்தான் பேருந்தில் ஏறித் தப்பிக்கிறார். ஆனால் 'பேருந்தில் கண்களை மூடியபடி சாய்ந்து முருகா என் றார். முருகா உன்னைப் பாக்காம போறன். மறுகணம் அவரால் கட்டுப்படுத்த முடியாதபடி அழுகை வந்து உடம்பு உலுக்கியது.' இதுதான் கலையின் உயிர்த்துடிப்பு. தைப்பூச வசூல் முடிந்து ஊர்திரும்பிய பண்டாரம் பணத்தை உண்டியலில் திணிப்பதும் அப்படியொரு இடம். கதவுக்குப் பின் மறைந்து பேசும் சம் பந்தக்கார அம்மணியின் உருமாற்றம் இன்னொரு இடம். 'நாம ஆருக்கும் ஒரு பாவமும் செய்யல்ல' என்று ஏக்கியம்மை முழு ஆத்மார்த்தத்துடன் சொல்லுமிடம் இன்னொரு உதாரணம்.

அதேபோல குஷ்டரோகி தன் மூளிக்குழந்தையைத் தொடும் போது வேகாலப்பட்டுத் திட்டுகிற சப்பை முத்தம்மை இந்நாவ லில் உயிர்ப்புள்ள பாத்திரம். குழந்தை மீதான தாயின் பெருங் காதலை இந்நாவலில் வாசித்தபோது நான் எழுதிக்கொண்டிருக் கும் கதையையும் சேர்த்து எழுதிவிட்டாரே என்று ஒரு நாள் இரவு முழுக்கத் தூங்காமல் அவதிப்பட்டேன். நல்லவேளையாக அது வேறொரு பாதையில் போகிறது என்று ஆறுதல்பட்டுக் கொண் டேன். தொரப்பன் தன் மகனைத் தொடுவதற்கு முன் கொள்ளும் பரபரப்பு மேலான இலக்கியத்தில் அபூர்வமாகவே காணக்கூடிய ஒன்று. கடைக்குட்டி மீனாட்சிக்கு வாக்களித்தபடி வளையல்கள்

வாங்கமுடியாது வந்துவிடும் பண்டாரத்துள் பொங்கும் அன்பை நம் மண்ணின் அனுபவதளத்தில் வைத்துதான் புரிந்துகொள்ள முடியும். சரி. ஏன் பண்டாரம் இந்த இழிதொழிலை கைக்கொண்டார்? பொருளுக்கு அடிமையானார்? அவர் கண்களுக்கு குறையுடம்பு ஜீவன்கள் ஏன் மனிதர்களாகப் படவில்லை? சமூகம் நிர்பந்திக்கிறது. மூன்று பெண்பிள்ளைகளை வைத்திருப்பவர்களுக்குத் தெரியும் மாப்பிள்ளைகளை விலைக்கு வாங்க வேண்டிய பாரம் எத்தகையது என்பது. இந்தக் காட்டில் சிறிதை தின்னும் மிருகத்தை அதைவிடப் பெரிது தின்னுகிறது.

மனிதர்கள் விற்பனையானபடியே இருக்கிறார்கள். தங்களைத் தாங்களே விற்கிறார்கள், பிறரை விற்கிறார்கள், விற்று வாங்குகிறார்கள். திருவிழாக்களில் உருப்படிகள் விலைபோகின்றன, கல்யாண மார்க்கெட்டில் பெண்கள், மாப்பிள்ளைகள். கண் தெரியாத கூனனின் உடலுறுப்பை மருத்துவர்கள் மலிவாக வாங்குகிறார்கள். குளத்தில் கொலை செய்யப்பட்ட அன்னக் காவடிப்பண்டாரத்தின் தங்கப்பல் நகை கடுக்கன் எல்லா உடைமைகளையும் போலிஸ், முனிசிபாலிட்டி வேலையாள், டாக்டர்வரை திருடிக் கொள்கிறார்கள். தன்னையும் பிறரையும் சாமர்த்தியமாக விற்கும் வியாபாரத் தந்திரம் மட்டுமே உலகை ஆளும் என்ற வெறுமையை வாசகன் இந்நாவலில் கண்டடைகிறான். வியாபாரப் பேச்சை விதவிதமான நுட்பங்களுடன் அமைத்திருக்கிறார் ஜெயமோகன். கம்யூனிஸமும் நாராயண குருவும் இந்த வியாபாரிகளுக்கு வெறும் போர்வை மட்டுமே.

பல தமிழ் நாவலாசிரியர்களுக்கும் ஜெயமோகனுக்கும் உள்ள இடைவெளியை உணர்கிறேன். முத்தம்மையை ஒருவரால் தெருவிலிருந்து கண்டுபிடித்து சொல்லமுடியும்தான். ஆனால் உயிருள்ள மனுஷியாக படைப்பில் நிறுத்த முடியாது. ஜெயமோகன் மிக இலகுவாக மனித குணாம்சங்களின் ரகசிய வாசல்களைத் தாண்டித் தாண்டி மேலே சென்றுகொண்டே இருக்கிறார். முத்தம்மை என்றில்லை, சுப்பம்மை, வடிவம்மை, மீனாட்சி, எருக்கு என வரும் பெண்களும் தங்களளவில் அசலான பெண்கள். கணந்தோறும் நாம் சந்திக்கிற மனுஷிகள். இச்சிறுநாவலில் வரும் ஏராளமான கதாபாத் திரங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்குரிய குணங்களுடன் உள்ளனர். முரண்பாடுகளுடன் அழகுகளுடன் உள்ளனர். ஒவ்வொருவரிடமும் நாம் கண்டு புன்னகைக்கும் அல்லது வியக்கும் நுட்பமான தன்மைகள் உள்ளன. ஓரிரு

வரிகளில் வரும் போலிஸ்காரர் தாணுபிள்ளை இந்த குரூரமான நாவலில் வரும் ஒரு வெள்ளைமனம்.

ஏதாவது இஸங்கள் சார்ந்து இந்நாவலில் அர்த்தம் தேடுகிற வர்கள் ஏமாறக்கூடும். பெரும் படைப்பாளி எப்போதும் வடி வம்மை அக்கணத்தில் என்ன நினைக்கிறாள் என்றுதான் பின் தொடர்வான். அவளை பெண் என்று டைப் ஆக்கி பெண்ணியம் பேச வைக்கமாட்டான். அதில் சிருஷ்டிகரம் இருக்காது. அரட்டைதான் இருக்கும். இந்நாவலை எந்தக் கோட்பாட்டு அடைப்புக்குள்ளும் சிக்கவைக்க முடியாது. இதில் மனிதர்கள் தான் இருக்கிறார்கள். ஒரு ரௌடியைப் பற்றி எழுதுகிறபோது ரௌடியாகவும் ஒரு விபச்சாரியைப் பற்றி எழுகிறபோது விபச்சாரியாகவும் மாறாத படைப்பாளிகளின் படைப்புகளை கலை பொருட்படுத்தாது. தமிழ் எழுத்தாளர்கள் அநேகம் பேர் 'கண்டு' சொல்கிறார்கள். 'மதிப்பீடு' செய்கிறார்கள் . அப்படி சுய மதிப்பீடுகளுக்கு சற்றும் இடம் கொடாமல் ஆழமான படைப் பாற்றலைத் தன் போக்கில் தேட விட்டுப் பின்தொடரும் எழுத் தாக்கம் இந்த நாவல் முழுக்க விரிந்தபடியே இருக்கிறது.

கதாபாத்திரங்களைப் பேச வைப்பது என்பது ஒரு கலை. வித விதமான குரல்கள் நாவலெங்கும் வட்டார வழக்குடன் கணீ ரென்று ஒலிக்கின்றன. இவை நம் மண்ணின் குரல்கள். திட்ட மிட்டே இந் நாவலை எளியநடையில் ஜெயமோகன் எழுதி யிருக்கிறார். குமரி வட்டார மக்களின் பேச்சுமொழி நம்பகத் தன்மைக்கு மட்டுமல்ல; உணர்ச்சிகளின் வெளிப்பாட்டுக்கும், நாவலின் வளர்ச்சிப் போக்கிற்கும் துணை செய்கிறது.

> ஒத்தச் செருப்ப உங்கப்பன் நாணப்பன் போடுவான். சவத்து மிண்டைக்க தலையில மயக்குன மரச்சீனி கிளங்குல்லா?
>
> வேய் பெருமாளு. படியில என்னை குழந்தை பக்கத்தில போடும்வே. எட்டு நாளெங்கி எட்டு நாள் மனியனா இருந்து சாவுதேன் !
>
> தரகன்மாரு பலதும் சொல்லுவாக. உம்ம கெட்டினவள வேலிக்குப் பொறத்தால போறவன் மலத்திக் கெடத்தி னான்னு சொன்னாவ. உள்ளதாவோய்?

இந்த நடை சாதாரணமாக ஒரு சூழலை நம்பகமாக உருவாக்கி விடுகிறது. ஆனால் எல்லா உரையாடல்களிலும் பின்னணியில் மனம் சூட்சுமமாக செயல்படுவதன் அடையாளம் உள்ளது. சில

இடங்கள் புரிந்து கொள்ளக் கடினமான இருந்தாலும் பிரதேச மணம் ஈர்ப்பாக இருக்கிறது. வர்ணனைகளையும் ஆசிரியன் கூற்றையும் கதாபாத்திரங்களின் மன ஓட்டத்தையும் முழுக்கவே தவிர்த்துவிட்டு நேரடியான, எளிமையான எழுத்து வகையை தேர்ந்து கொண்டிருக்கிறது இந்நாவல். என்றாலும் நெகிழ்வான இடங்களில் மொழி உருகுகிறது. வன்மம் மிகும் இடங்களில் மூர்க்கமாக எழுகிறது, மனதின் இருண்ட பகுதிகளுக்குள் போகிறபோது புதிராகிறது. அதிலும் பலதரப்பட்ட வாழ்நிலை களில் உள்ள பெண்களின் ஆழ்மன ஓட்டங்களை அவர்களின் வாய்மொழியிலேயே துல்லியமாகக் காட்டிவிடுகிறது. உண்ணி யம்மை சமத்காரமாக பேசும்போது ஏக்கியம்மை வெள்ளந்தி யாகப் பேசுகிறாள். வடிவம்மை பேசும்போது கிராமத்து இளம்பெண்ணின் குறும்பும் ஏக்கமும் தெரிகிறது.

'மனுசனை மனுசன் விக்காம முதலாளித்துவம் உண்டா மக்கா?'

'அடித்தொண்டையில் பேசுறவன் பாரு அவன் எப்படியும் முன்னுக்கு வந்திருவான்.'

போன்ற நக்கல் மிக்க இடங்களும்,

'பக்தன்ட்ட இருந்து சாமி தப்ப முடியுமா?'

'எந்த மனிதன் ஆனாலும் அவனுக்கு வாழ்வில் மிகவும் மகிழ்ச்சி யான காலம் குழந்தைகள் வளர்ந்துவரும் காலகட்டம்தான்'

போன்ற உயிர்த்துடிப்பான தெறிப்புகளும் திணிப்புகளாக இல்லாமல் நாவல் தன் பயணத்தில் வெளிப்படுத்தும் அனுபவ சாரமாக இருக்கின்றன.

நாவல் சட்டென்று முடிந்தபின் எழுதப்படாத பகுதிகள் நம் மனதில் தொடர்கின்றன. போத்திவேலு பண்டாரத்தையும் வண்டிமலையையும் பெருமாளையும் கொச்சனையும் திடீ ரென்று வெளி உலகத்தில் நம்மால் பார்க்கக் கூடும். போத்தி வேலு எய்ட்ஸ் வந்து சாகலாம் அல்லது திருவண்ணாமலையில் புழுதி மண்டிய தெருவில் திருவோடு ஏந்திப் பாடலாம்.

'சாவான பாவம் மேலே
வாழ்வெனக்கு வந்ததடி
நோவான நோவெடுத்து
நெஞ்செரிஞ்சு வாழுறண்டி'

பாவ புண்ணியங்கள் வெளியிலிருந்து வருவதில்லை; உன் மனத் திற்குள்ளேயே, நீ செய்யும் காரியங்களிலேயே இருக்கிறது என் பதை இந்நாவல் எனக்கு உணர்த்துகிறது. வாசகர்கள் தங்கள் அனுமானங்களைச் சகல திசைகளிலும் மேலெடுத்துச் செல்ல லாம். மனிதன் தன் நெஞ்சுக்குப் பயப்படும் ஒரே இடமான கோயில்களே உண்மையில் மல்லிகைச்சரம் சுற்றி பேருந்து நிறுத்தங்களில் நிற்கும் மௌசு போன கிராக்கிகள் போல் இந் நாவலில் வெளுத்துத் தெரிகின்றன. தீமையைத்தான் மனிதன் உண்மையில் கொண்டாடிக் கொண்டிருக்கிறான். தீமையே அனைத்தையும் வெற்றிகொள்ளும் சக்தி வாய்ந்த தெய்வமாகப் போற்றப்படுகிறது. தன்னைத் தவிர எதையும் பொருட்படுத்தாத ஒரு பெரு உலகமும் சக மனிதர்கள் மீது நேசம் வைக்கிற ஒரு மிகச் சிறிய உலகமும் இந்நாவலில் மோதியபடியே இருக்கின்றன. பிற மனிதர்களை நேசிக்க உண்மையில் ஆன்ம பலம் வேண்டும். அது எதையும் விற்று வாங்காத இந்தக் குறைப்பிறவிகளிடமே இன் னும் மிச்சமிருக்கிறது. அப்படியானால் அது உடமை, பற்று பற்றிய ஆழமான கேள்விகளுக்கு இட்டுச் செல்கிறது.

இந்த உக்கிரமான நாவலைப் படித்தபின் தெய்வம் இருக் கட்டுமே என என் மனசு ஏங்குகிறது. பிறகு மனிதன் எதை நம்பி வாழ்வான்?

ஜெயமோகன் படைப்புகளில் எது சிறந்தது என எடைபோடும் நேரம் இதுவல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு உலகத்தைப் புதிய கோணத்தில் பேசுகிறது. ஆனாலும் ஏழாம் உலகம் தமிழ் நாவல் வரலாற்றில் வித்தியாசமான சாதனை, தமிழுக்கு ஒரு கொடை என்றே சொல்கிறேன். அவரது படைப்புகளுக்கான எதிர்வினை கள் சமகாலச் சூழலில் எப்படியிருப்பினும், பாரதி, புதுமைப் பித்தன் என இன்று நாம் பேசுகிற தளத்தில் ஜெயமோகனுக்கு நாளை இடம் உண்டு.

---

| | |
|---|---|
| பட்டி | நாய் |
| கேற்றுதல் | ஏற்றுதல் |
| சங்கு | இதயம் |
| சக்கரம் | நாணயம், பணம் |
| வட்டு | பைத்தியம் |
| ஆமக்கன் | கள்ளக்காதலன் |
| வெப்ராளம் | பதற்றம் |
| கோட்டிக்காரி | பைத்தியம் |
| அனக்கம் | அசைவு |
| கழகம் | கோயில் துப்புரவு |
| எரப்பாளி | பிச்சைக்காரன் |
| வர்த்தமானம் | பேச்சு |
| சுண்டு | உதடு |
| தெற்று | தவறு |
| கூம்பு | நுரையீரல் |
| கச்சவடம் | வியாபாரம் |
| பிடுக்கு | விதை |
| குண்டணி | புறம் கூறதல் |
| வல்ல | ஏதாவது |
| சீண்ட்ரம் | சிக்கல் |

| | |
|---|---|
| வய்யா | முடியவில்லை |
| சவிட்டு | உதை |
| சடவு | சோர்வு |
| அறுதலி | விதவை |
| ஒடயோர் | உடைமையாளர் |
| ஆதாளி | கலாட்டா |
| அனந்தரவன் | மருமகன் |
| தீனம் | நோய் |
| பெறுமாணுதல் | புழங்குதல் |
| குறெ | கொஞ்சம் |
| கறக்கு கம்பெனி | சூதாட்டம் |
| கறக்குதல் | சுழற்றுதல் |
| களி | விளையாட்டு |
| செறுக்கன் | பையன் |
| திவசம் | தினம் |
| நல்லுவாதி | மாப்பிள்ளை வீடு |
| செலைத்தல் | ஓசையிடுதல் |
| தும்பெலை | நுனிவாழையிலை |
| உப்பேரி | வறுவல் |
| பத்ரம் | பத்திரிகை |
| சேலு | அழகு |
| பொட்டன் | மந்தபுத்தி |
| அகத்தம்மை | ராணி |
| அலம்பு | அலட்டல் |
| மதி | போதும் |
| கரைச்சில் | அழுகை |
| ஓர்மை | நினைவு |
| பதிவுகாரி | வழக்கம் உள்ளவள் |
| வெட்டம் | வெளிச்சம் |
| சக்கரம் | பணம் |
| ஒரு பிராவசியம் | ஒரு தடவை |

| | |
|---|---|
| கொள்ளாம் | நல்லது |
| வையுமட்பம் | சாயங்காலம் |
| ஆழ்ச்ச | கிழமை |
| கேற்று | ஏற்று |
| தூறும் | மலங்கழிக்கும் |
| அங்களம் | மங்களம் |
| எரம்புதல் | இரைதல் |
| பெடயுதல் | துடித்தல் |
| எரப்பாளி | இரப்பவன் |
| தீனம் | நோய் |
| உறப்பு | உறுதி |
| சாம்பிட்டு | சீவிட்டு |
| பதிவு | வழக்கம் |
| கரைச்சில் | அழுகை |
| வயத்தாட்டி | மருத்துவச்சி |
| நக்கம்பு | வயிற்றுப்போக்கு |
| வய்ய | முடியலை |
| சிலப்போள் | சிலபொழுது |
| வலித்தல் | இழுத்தல் |
| பூந்தி | புதைத்து |
| அமறுதல் | உறுமுதல் |
| ஏலா | வயல் |
| பிரஸ்னம் | பிரச்சினை |
| பட்டி | நாய் |
| வெளுத்தேடன் | சலவைக்காரன் |
| அடியந்திரம் | கொண்டாட்டம் |
| சல்க்காரம் | உபசரிப்பு |
| செலக்கான் | சளசளப்பு |
| பத்ரம் | பத்திரிகை |
| சேல் | நல்ல |

0150 978 81 8493 441 0 JE02



நாம் வாழும் மண்ணுக்குக் கீழே ஏழு உலகங்கள் உள்ளன என்பது புராண நம்பிக்கை. ஏழாவது உலகம் பாதாளம். ஆனால் புராணத்தில் மட்டும்தான் அப்படியா? நிஜவாழ்க்கையில் இல்லையா என்ன? நாம் வாழும் இந்த சமூகத்துக்குக் கீழே நம்மால் மிதிக்கப்பட்டு அமுக்கப்பட்ட எத்தனை சமூகங்கள் நம் கவனத்துக்கு வராமலேயே இருந்துகொண்டிருக் கின்றன!

'ஏழாம் உலகம்' அந்த ஒடுக்கப்பட்ட உலகத்தின் நுண்ணிய சித்தரிப்பு. அங்கும் மக்கள் வாழ்கிறார்கள். சிரிக்கிறார்கள், நேசிக்கிறார்கள், காதலிக்கிறார்கள், குழந்தை பெறுகிறார்கள். மனிதன் எந்த பாதாளத்திலும் மானுடனாகவே இருக்கிறான். எந்த இருளும் எந்தச் சாக்கடையும் அவனை மிருகமாக்கிவிடுவதில்லை.

சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது பெற்ற 'நான் கடவுள்' திரைப்படத்தின் மூலவடிவமாக அமைந்த நாவல் இது.

ரூ.150

ISBN 978-81-8493-441-0

9 788184 934410

Fiction / Novel

கிழக்கு
For free SMS alerts on our new titles, send START NHM to 575758

www.nhm.in/kizhakku